# கையில்லாத பொம்மை



ரா.கி.ரங்கராஜன்

# முன்னுரை

எப்படி இந்த நாவலைக் கற்பனை செய்து, சம்பவங்களைப் பின்னினேன் என்று இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு இப்போது நினைத்துப் பார்க்கையில் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. அகதா கிறிஸ்டியன் நாவல்களைப் படித்ததால், வெவ்வேறு களத்தில், வெவ்வேறு பாத்திரங்களைக் கொண்டு கதையை ஆரம்பித்து, ஏதோ ஒரு கட்டத்தில் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு இதை எழுத முடிந்தது.

எனக்குச் 'சென்னை பாஷை' சரிவர எழுதவராது. எனவே, மருதய்யன் சம்பந்தப்பட்ட இடங்களில் சம்பாஷனைகளை எழுதத் திணறினேன். என் அருமை நண்பர் புனிதன் அவ்வப்போது திருத்தித் தந்தார். எழுதியும் தந்தார். நன்றியுடன் அவரை நினைத்துக் கொள்கிறேன்.

சிறந்த முறையில் இந்த நாவலை வெளிக் கொணர்ந்துள்ள அல்லயன்ஸ் பதிப்பகத்திற்கு என் நன்றி.

சென்னை - 40
26.4.03

**ரா. ரங்கராஜன்**

## எஸ்.வி.வி.
எழுதிய நூல்கள்

1. ராமமூர்த்தி
2. கோபாலன் ஐ.ஸி.எஸ்.
3. உல்லாச வேளை
4. சம்பத்து
5. ராஜாமணி
6. சௌந்தரம்மாள்
7. வசந்தன்
8. பொம்மி
9. தீபாவளிக் கதைகள்
10. வாழ்க்கையே வாழ்க்கை
11. செல்லாத ரூபாய்
12. சிவராமன்
13. புதுமாட்டுப் பெண்
14. சபாஷ்! பார்வதி!
15. ஹாஸ்யக் கதைகள்
16. ரமணியின் தாயார்
17. *Thirty years a lawyer*
18. *Much Daughtered*
19. *Soap Bubbles & More Soap Bubbles*
20. *The Marriage*
21. *Mosquitoes at Mambalam*
22. *Holiday Trip*
23. *Chaff and Grain*
24. *At a Dinner*
25. *Laugh with S.V.K. (S.V.K.)*

(மேலும் பல...)

# கையில்லாத பொம்மை

## ஒன்று

**ப**ளீரென்ற புதிய சட்டையையும் கிழிசலான அழுக்கு வேட்டியையும் ஒரே சமயத்தில் அணிந்திருக்கும் நபரைப் போல, குடிசைகளும், ஓட்டு வீடுகளும் மாறி மாறி இடம் பெற்றிருந்தன அந்தத் தெருவில்.

யாரையோ தேடியபடி தயங்கித் தயங்கிச் சென்று கொண்டிருந்தார் அவர். எதிர்ப்படுபவரைக் கேட்கலாமா என்று நினைப்பார். உடனே கூச்சப்பட்டுக்கொண்டு பேசாதிருப்பார். அவருடைய சங்கடம் அவர் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

கையில் கெரசின் புட்டியுடன் வந்த ஒரு கிழவி, ''இன்னா பெரியவரே, இங்கே சிமெண்ணெய் வண்டி வந்திச்சாமே, பார்த்தீங்களா?'' என்று கேட்டாள்.

''எனக்குத் தெரியாதம்மா. நானே ஒருத்தரைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறேன்.''

''யாரைத் தேடறீங்க?''

''மணிகண்டன் என்று பெயர். போர்ட் டிரஸ்டிலே ஆபீசராய் இருக்கிறான்.''

''தெரியாதுங்க,'' என்று கூறிவிட்டு அந்தக் கிழவி போய்விட்டாள். அவர் முகம் ஏமாற்றத்தால் வாடியது.

கவட்டுக் கல்லை டிராயரில் செருகிக் கொண்டிருந்த ஒ
சிறுவன் அவருடைய கையில் இருந்த பையைத் தொட்டு
பார்த்து, விஷமத்தோடு, ''என்ன விற்கறீங்க?'' என்
கேட்டான். எதிர்ச் சாரியில் டீக்கடை வாசலில் நிறுத்த
பட்டிருந்த சைக்கிள் ரிக்ஷாவில், குறுக்கே கால் நீட்டி
படுத்திருந்த ரிக்ஷாக்காரன், ''செவப்பா, உயரமா இருப்பாரே
அவரைக் கேட்கறீங்களா சார்?'' என்று குரல் கொடுத்தான்.

சார்!

அப்படி ஒருவர் மரியாதையாகக் கூப்பிடுவதைக் கேட்டு
எத்தனை நாளாயிற்று! அவருக்கு என்னவோ போலிருந்தது.

''ஆமாம்பா, ஆமாம்பா,'' என்றார்.

''ஆறேழு வயசிலே ஒரு பொட்டைப் பிள்ளைகூட
இருக்குமில்லே?''

''ஆமாம்பா.''

''அவங்க இந்த வட்டாரமேவாணாண்ணு வேறே நல்ல
இடத்துக்குப் பூட்டாங்க. நீங்க அந்த ஐயாவுக்கு என்ன
வேணும்?''

அவர் பதில் தரவில்லை. சுருக்கம் விழுந்த அந்த
முகத்தில் பொடிப்பொடியாய் வியர்த்தது. வெற்றிலை பாக்கு
கடை வாசலில் இருந்த கள்ளிப்பெட்டியின் மீது தள்ளாடி
உட்கார்ந்து கொண்டார். ஒரு சோடா கேட்டு, வாங்கி
அருந்தினார்.

''ஒண்ணு செய்யுங்க, பெரியவரே,'' என்றான்
ரிக்ஷாக்காரன்.

''என்னப்பா?''

''இப்படியே நேர்க்காபோங்க. லெஃப்டிலே திரும்பி
னீங்கன்னா ஒரு பிள்ளையார் கோவில் வரும். அதுக்குப்
பக்கத்துச் சந்திலே ஒரு ஸ்கூல் இருக்குது. அந்தக் குழந்தை



அங்கேதான் படிச்சிட்டிருந்திச்சு. பாதி வருசத்திலே வேற ஸ்கூல் மாத்தியிருக்க மாட்டாங்க. அங்கே விசாரிச்சிங்கன்னா சொல்வாங்க.''

''ரொம்ப நன்றியப்பா. ஸ்கூல் விடுகிற நேரம். போகிறேன்,'' என்று புறப்பட்டார் அவர்.

''வண்டியிலே குந்திக்கயேன், பெரியவரே.'' என்று கேட்க நினைத்தான் ரிக்ஷாக்காரன். ஆனால், 'இவரெங்கே ரிக்ஷா வைச்சுப்பார்! சாவுக் கிராக்கி!' என்ற எண்ணம் ஏற்படவே பேசாமலிருந்துவிட்டான்.

ஙணஙணவென்று மணியடித்த ஓசையும், குபுகுபு வென்று குழந்தைகள் வெளிப்பட்ட சந்தடியும் அவரைப் பிரமிக்க வைத்தன. கள்ளங்கபடமற்ற அந்தச் சிரிப்பொலிகள், பைகளும், நோட்டுகளும், புத்தகங்களும், பென்ஸில்களும் கலந்து உறவாடும் கலகலப்புக்கள், ஸாக்ஸ்களும், செருப்புக்களும், ரிப்பன்களும், சட்டைகளும் வாரி வழங்கிய வண்ணங்கள் - அவர் கண்ணில் நீரை வரவழைத்தன. உலகம் அப்படியொன்றும் செத்துச் சுண்ணாம்பாகிவிடவில்லை என்பதை எண்ணுகையில் அவர் மனக் குகையில் டார்ச் அடித்த மாதிரி வெளிச்சம் பரவியது.

அந்தக் குழந்தையை எப்படி அடையாளம் கண்டு பிடிக்கப் போகிறோம் என்று திகைத்துக்கொண்டிருந்தார். ஓர் இளைஞனைப் பார்த்ததும், திடீரென்று தன்னையும் மீறி, ''மணிகண்டா! மணி!'' என்று கூவிவிட்டார்.

குழந்தையை வீட்டுக்குக் கூட்டிப் போவதற்காக ஸ்கூட்டருடன் காத்திருந்த அவன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

''அப்பா!''

அவனும் தன்னை மறந்துதான் சொல்லிவிட்டான் போலும். வேறொன்றும் பேசாமல் நிறுத்திக் கொண்டான். அந்தத் தர்மசங்கடமான நிசப்தத்தை அவர் குரல் கலைத்தது.

"நீ பழைய வீட்டைக் காலி பண்ணிவிட்டாயாமே? அங்கேதான் சொன்னார்கள், இங்கே விசாரிக்கும்படி... நான் லெட்டர் போட்டேனே, வந்ததோ?"

அவருடைய மகிழ்ச்சியிலும், துடிப்பிலும் நூற்றில் ஒரு பங்குகூட அவர் மகனிடம் காணப்படவில்லை.

"நீங்கள் நேரே கிராமத்துக்குப் போய் விடுவீர்கள் என்று நினைத்தேன்," என்றான்.

அவர் தலையைக் குனிந்துகொண்டார். "கிராமத்துக்கு... போக வேண்டியவன்தான்... ஆனால் அங்கே எப்படிப் போய் இருப்பேன், மணீ? எல்லாரும் தெரிந்தவர்கள்... கேள்வி மேல் கேள்வி கேட்பார்கள்..."

அவருடைய பேச்சின்மீது இடிக்கிறமாதிரி, "டாடி" என்று குழந்தைக் குரலொன்று ஒலித்தது. "என்ன டாடி, இன்னிக்கு நீங்களே வந்துட்டீங்க?"

மணிகண்டன் அந்தச் சிறுமியின் ஸ்கர்ட்டில் படிந்திருந்த சிறு தூசியைத் தட்டினான்.

"ரேகா, நீ அம்மாகிட்டே சொன்னாயாமே, தினம் ஆயாவோடு வருவது காலை வலிக்கிறதென்று? இனிமேல் சாயந்தரம் ஆபீஸிலிருந்து சீக்கிரமாய் வந்து, உன்னை ஸ்கூட்டரிலேயே அழைத்துப் போய் விடுகிறேன். ரைட்டா?"

"ரைட் ரைட்!"

ரேகாவையே வைத்த கண் எடுக்காமல் பார்த்தவாறிருந்தார் பெரியவர். இவள் என் பேத்தி! அரை நிமிடம் கூடத் தரையில் கால் பாவாத இந்தச் சின்னஞ்சிறு உற்சாக மூட்டை, என் சொந்தப் பிள்ளையின் சொந்தப் பெண்!

"டென்னிஸ் மெனேஸ் ஸ்டிக்கர் வாங்கிக்கிட்டு வந்தீங்களா, டாடி?" என்று அதிகாரம் செய்தாள் அவள்.

"ஓ! வீட்டிலே வைத்திருக்கிறேன்."



"சோல்ஜர் பொம்மை ஒடிஞ்சு போயிருந்ததே, அது?"

"அது ரேகா.... புதிதாகவே வாங்கிவிடலாம்.. பழசை ரிப்பேர் பண்ணுவதென்றால்...."

"போங்க டாடி!" என்று கையை உதறினாள் ரேகா. அது பெரியவர் மீது பட்டுவிட்ட பிறகே, அப்படியொருவர் தன் தந்தைக்கு அருகில் நிற்பதை அவள் கவனித்தாள்.

"யார் டாடி இந்த மாமா?"

"நான் மாமா இல்லேடி கண்ணே! தாத்தா! உன் அப்பாவுக்கு அப்பா!" அவர் வாரியணைத்து அவளைத் தூக்கி முத்தமிட்டுவிட்டுக் கீழே இறக்கினார்.

அந்தக் காட்சியை அவளுடைய சிநேகிதிகள் பலர் சூழ்ந்து நின்று கவனித்து கொண்டிருந்ததால் அவள் முகம் சிவந்துவிட்டது.

அவளுடைய இரு சிறிய தோள்களையும் அழுந்தப் பிடித்துக் கொண்டு, தன்னிடமிருந்து அவளை எட்ட நிறுத்தியபடி, "உன் வயதில் உன் அப்பா இப்படியேதான் இருப்பான்," என்றார் அவர்.

மணிகண்டன் ஸ்கூட்டரை உதைத்தான். "வந்து உட்கார் ரேகா. நேரமானால் அம்மா கவலைப்படுவாள்."

மருமகளைப்பற்றி விசாரிக்காமல் இருந்துவிட்டோமே என்பது அவருக்கு ஞாபகம் வந்தது. "சாரதா சௌக்கியமாயிருக்கிறாளா?" என்றார்.

"ஊம், ஊம்... நீங்கள் ஓட்டலில் போய் இருங்கள்.. நான் அப்புறம் வந்து பார்க்கிறேன்..." என்று கூறிக் கண் ஜாடை காட்டினான் மணிகண்டன். ஆனால் ரேகா, "என்ன டாடி நீங்க தாத்தாவை எங்கேயோ போகச் சொல்றீங்களே? வீட்டுக்கு வாங்க தாத்தா," என்று அவர் கைகளை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டுவிட்டாள்.

மணிகண்டனின் வீட்டின் முன்புறம், வேலி கட்டி இருந்த சிறிய தோட்டத்தில் உலவியபடி கல்லூரிப் பாடத்தைப் படித்துக் கொண்டிருந்தாள் மனோ. நடுநடுவே தெருக் கோடியைத் துழாவியது அவள் பார்வை.

ஸ்கூட்டர் திரும்பிட்டதும் எட்டிப் பார்த்தவள், "அக்கா! அத்தான் யாரோ விருந்தாளியை அழைத்துக்கொண்டு வருகிறார்! குக்கரைத் தூக்கி ஸ்டவ்வில் வை!" என்று உட்பக்கம் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

"யாரை அழைத்துக்கொண்டு வருகிறார் சொல்லாமல் கொள்ளாமல்?" என்று முணுமுணுத்தபடி உள்ளேயிருந்து வந்தாள் சாரதா - மணிகண்டனின் மனைவி. அதற்குள் ஸ்கூட்டர் இன்னும் சமீபித்துவிட்டதால், கணவனின் பின்னால் உட்கார்ந்திருந்தவரின் முகம் அவளுக்கு நன்கு புலப்பட்டது. "இவரா! எப்படி வந்தார்?"

"யார் அக்கா?" என்று மனோ கேட்டாள்.

"நீ உள்ளே போ, சொல்கிறேன்," என்று தங்கையை அனுப்பி வைத்தாள் சாரதா.

தாத்தாவின் மடியில் உட்கார்ந்திருந்த ரேகா குதித்துக் கொண்டு இறங்கினாள். "வாங்க தாத்தா," என்று அவருடைய கையைப் பற்றிக் கொண்டவள், "நம்ம தாத்தாம்மா! உனக்குத் தெரியுமோ இவரை?" என்றாள்.

சாரதா கணவனைப் பார்த்தாள். அவன் ஸ்கூட்டரின் எஞ்சின் பகுதியைத் திறந்து, எதையோ பரிசோதிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தான்.

கொல்லைப்புறத்து நடையில் ஒரு கயிற்றுக் கட்டில் போடப்பட்டிருந்தது. ஜனார்த்தனம் ஒரு போர்வையை உதறி விரித்துக் கொண்டிருந்தார். கட்டிலின் கயிறுகள் ரொம்பத் தொய்வாக இருந்தன. பேசாமல் தரையிலேயே படுத்து விடலாமோ என்று யோசித்தார். கொடுத்த இடத்தை



அவமதிப்பதாக மருமகள் சாரதா எண்ணக்கூடும்.. கட்டிலிலேயே போர்வையை விரித்தார்.

ரேகா தாத்தாவையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

தற்செயலாகத் திரும்பிய ஜனார்த்தனம், "யார்? ரேகாவா?" என்று குனிந்து அவளைத் தூக்கிக் கொண்டார். "தூங்கப் போகவில்லையாம்மா? நேரமாகிறதே? இத்தனை நேரம் படித்துக்கொண்டிருந்தாயா?"

ரேகா அவர் வினாக்களுக்குப் பதில் சொல்லவில்லை. இருட்டும் கூளமும் நிறைந்திருந்த அந்த இடத்தை ஆராய்ந்தாள். அவள் முகம் சுருங்கியது. "ஐயய்யா! என்ன தாத்தா இங்கே வந்து படுத்துக்கிட்டீங்க?"

"ஏன், இந்த இடத்துக்கென்ன? பிரமாதமாய்க் காற்று வருகிறதே? நான் வயசானவன் இல்லையா? அடிக்கடி பாத்ரூமுக்குப் போக வேண்டியிருக்கும். இதுதான் சௌகரியம்."

"மாடியிலே நல்ல ரூம் இருக்கு. தாத்தா! பாத்ரூமும் அங்கேயே இருக்கு. உம், எழுந்திருங்க தாத்தா!"

"சரி, நாளைக்கு அங்கே போகிறேன். இப்ப எல்லாரையும் தொந்தரவு பண்ணிக்கொண்டு படுக்கையை மாற்றுவானேன்." என்றவர், குழந்தையை அணைத்தாற்போல் தன் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டார்.

"இத்தனை நாளா நீங்க எங்கே இருந்தீங்க தாத்தா?" என்றாள் ரேகா.

அவர் கண்கள் கலங்கின.

"ஏன், பம்பாயிலே இருந்தேன்."

"ஆபிசிலே வேலை பார்க்கறீங்களா?"

"ஆமாம்."

"பெரிய ஆபீசா?"

''ரொம்பப் பெரிசு.''

''அங்கே உங்களுக்கு லீவே கொடுக்கமாட்டாங்களா?''

''ஏன், கொடுப்பாங்களே?''

''பின்னே இதுக்கு முன்னாலே ஒரு வாட்டிகூட நீங்க லீவு எடுத்துக்கிட்டு இங்கே வந்ததில்லையே?''

அவர் பெருமூச்சு விட்டார்.

''அது என் சொந்த ஆபீசாச்சே? முதலாளி அடிக்கடி லீவு எடுக்கலாமா?''

''எடுக்கக் கூடாது,'' என்று ஒப்புக்கொண்டாள் ரேகா.

ஜனார்த்தனம் குனிந்து, மறுபுறத்திலிருந்து எதையோ எடுத்தார்.

அவளுடைய கையொடிந்த சோல்ஜர் பொம்மை.

பறித்துப் போட்ட தாமரை மாதிரி ரேகாவின் முகம் கூம்பியது அதைக் கண்டதும். ''வீடு மாத்தி வர்றப்போ ஒடிச்சுட்டாங்க தாத்தா.''

''சாயந்தரமே பார்த்தேன். ரிப்பேர் செய்து தரலாம் என்றுதான் எடுத்து வைத்திருக்கிறேன். நாளைக்கு கோந்து போட்டு ஒட்டித் தருகிறேன்.''

''ஐயய்ய! என்ன தாத்தா நீங்க! பெரிய ஆபீஸ் முதலாளிங்கறீங்க. பொம்மையெல்லாம் ஒட்டறேங் கறீங்களே?'' என்று ரேகா சிரித்தாள்.

''முதலாளியாயிருந்தால் என்ன? இந்த மாதிரி வேலையெல்லாம் கற்றுக்கொள்ளக்கூடாதா? நான் வேலை பார்த்த ஆபீசில் கற்றுத் தந்தார்கள். கற்றுக்கொண்டேன்,'' என்றார் ஜனார்த்தனம்.

**க**ட்டிலின் தலைமாட்டில் எரிந்து கொண்டிருந்த மேஜை விளக்கு, மணிகண்டனின் மார்புவரை ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தது. அதற்கப்பால் நிழல் கவிந்திருந்தது.



அண்டை அயல் வீடுகளில் கதவுகள் சாத்தப்படும் ஓசையும், ராப்பிச்சைக்காரனொருவன் டொக் டொக்கென்று கைத்தடியைத் தட்டிக்கொண்டு செல்லும் ஒலியும் கேட்டன. பக்கத்து அறையில் மனோ ஸ்விட்சைத் தட்டி விளக்கை அணைப்பது தெரிந்தது.

படுக்கையில் படுத்தபடி ஓர் ஆங்கில நாவலை வாசித்துக் கொண்டிருந்தான் மணிகண்டன். அவனுக்கருகே தூங்கிக்கொண்டிருந்தாள் ரேகா. பின்கையைக் கட்டியபடி குறுக்கும் நெடுக்கும் நடை போட்டுக்கொண்டிருந்தாள் சாரதா, கோபமாக.

''இப்படியொரு முட்டாள்தனம் பண்ணுவீர்களென்று நான் எதிர்பார்க்கவேயில்லை! எதற்காக அவரை அழைத்து வந்து தொலைத்தீர்கள்?''

''ஆமாம்! வெற்றிலை பாக்கு வைத்துக் கூப்பிட்டேன். போதாது, தேங்காயும் வை என்றார். வைத்து அழைத்து வந்தேன்! மனிதர் தானாகவே ஸ்கூட்டரில் ஏறி உட்காருகிறார், கீழே பிடித்துத் தள்ளச் சொல்கிறாயா என்ன?''

''தள்ள வேண்டாம். உறைக்கிறமாதிரி நாலு வார்த்தை சொல்வதுதானே?''

''நாலாயிரம் வார்த்தை சொன்னாலும் அவருக்கு உறைக்காது. அப்புறம்?''

மணிகண்டன் வெறுப்புடன் நாவலை விட்டெறிந்தான். கட்டிலின் மறுகோடியில் அது பக்கங்களைப் பரப்பிக் கொண்டு குப்புற விழுந்தது.

மோடாவில் உட்கார்ந்து கொண்டு தலையில் கை வைத்துக் கொண்டாள் சாரதா. ''ஸ்லம் ஏரியாவில் இருக்கிறோமே, குழந்தைக்கு மட்டமான பழக்க வழக்கங்கள் தொற்றிக் கொள்ளப் போகிறதே என்று நடுங்கிக் கொண்டு இங்கே ஓடிவந்தோம். இனி மேல் கவலையில்லை, ரேகா

நல்லபடி வளருவாள் என்று சந்தோஷப்பட்டோம். அவ்வளவும் கெட்டுவிட்டது..''

மேலே கிர்க் கிர்க் கிர்க் என்று மின்விசிறி ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. அவரவர் எண்ணங்களே அவரவர்க்குத் தாலாட்டாகவும் அரையும் குறையுமான திட்டங்களே தலையணைகளாகவும் உதவ, மெல்ல மெல்லத் துயில் அவர்களை ஆட்கொண்டது.

தெருவிலே இரண்டு பூனைகள் கூச்சலிட்டதாலோ என்னவோ திடீரென விழித்துக் கொண்டாள் சாரதா. எல்லா இளந் தாய்களையும் போல அவள் கரமும் பக்கத்திலே குழந்தையைத்தான் தேடியது.

திடுக்கிட்டு எழுந்து, உட்கார்ந்து கொண்டாள். ''என்னங்க, உங்களைத்தானே? ரேகா எங்கே?''

மணிகண்டன் கண்ணைக் கசக்கிக் கொண்டான். படுக்கையறைக் கதவு திறந்திருப்பது தெரிந்தது. ''பாத்ரூமுக்குப் போயிருக்கிறாளோ என்னவோ?''

''என்னைக் கூப்பிடாமல் போக மாட்டாளே?''

இருவருமாக வெளியே வந்தார்கள். படிக் கட்டில் ஒற்றைக் கதவு திறந்திருந்ததால் கீழிறங்கிப் போயிருக்கிறாள் என்று ஊகிக்க முடிந்தது. கீழே வந்தார்கள்.

ஜனார்த்தனத்தின் கயிற்றுக் கட்டிலில், அவர் மீது ஒரு காலைப் போட்டாற்போல் அணைத்துக்கொண்டு படுத் திருந்தாள் ரேகா.

சாரதாவுக்கு வெடித்துக் கொண்டு வந்தது ஆத்திரம்.

''விடிந்ததும் முதல் வேலையாக உங்கள் அப்பாவை வெளியே அனுப்பிவிட்டு மறுவேலை பாருங்கள். ஆமாம்! இல்லாவிட்டால் என் கண்மணியைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடுவார்! ஆறு வருஷம் ஜெயிலில் இருந்துவிட்டு வந்திருக்கிறவராச்சே!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கிசுகிசுத்தாள்.



## இரண்டு

**கா**ப்பி சாப்பிட்டானதுமே தன் ஸ்கூல் பையைத் தூக்கிக்கொண்டு ஜனார்த்தனத்திடம் ஓடி வந்துவிட்டாள் ரேகா. பூப்போன்ற அந்த உதட்டின் விளிம்புகளில் காப்பியின் நுரை பொடித்துக் கொண்டிருந்தது. மேல் துண்டினால் அதை ஒற்றிவிட்டு, அந்த முகத்தையே கண் கொட்டாமல் பார்த்தார்.

''என்ன தாத்தா பார்க்கிறீங்க?''

''நீ யார் ஜாடை என்று பார்க்கிறேன்.''

''ஜாடைன்னா என்ன தாத்தா?''

''ஒருத்தரைப் போல இன்னொருத்தருக்கு முகம் இருக்கிறதில்லையா, அதுதான் ஜாடை,'' என்று ஜனார்த்தனம் விளக்கினார்.

''ட்வின்ஸுங்ககூட அப்படித்தான் தாத்தா. ஒருத்தி மாதிரியே இன்னொருத்தியும் இருக்காள். ஃபோர்த் ஸ்டாண்டர்டிலே மேரி - ரோஸின்னு ரெண்டு ஸிஸ்டர்ஸ்...''

அவள் பேசப் பேச, அந்த முகத்திலேயே பார்வையைப் பதித்திருந்தார் அவர். அந்த மேட்டு நெற்றி. மேல் மடலில் லேசாய் வளைந்திருக்கும் அந்தச் சிறிய காது - அமிர்தத்தின் ஜாடைதான்!

'எங்கள் குடும்பத்தில் எல்லாருக்கும் முதல் குழந்தை பெண்தான். நான் என் அம்மாவுக்குத் தலைச்சன். என் அம்மா அவள் அம்மாவுக்குத் தலைச்சன். நம்ம மணிகண்டனுக்கும் முதல் குழந்தை பெண்ணாகத்தான் இருக்கும். பார்த்துக் கொண்டேயிருங்கள்,' என்று வாய்க்கு வாய் சொல்வாயே, அமிர்தம்! நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். நீ தான் பார்க்காமல் போய்விட்டாய்! நீ ரோஷக்காரி. மருமகள்

கையால் ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்க மாட்டேன் என்றாய், குடிக்காமலே போய்விட்டாய்...

''மாமா!'' என்ற குரல் அவரை எழுப்பியது. மனோதான் - சாரதாவின் தம்பி - கையில் ஒரு கட்டுக் கீரைத் தண்டுடன் வந்தான். நேற்று மாலை அவர் வந்து சேர்ந்தது முதல் அவரை 'மாமா' என்றுதான் அவன் கூப்பிட்டு வந்தான். தன்னை அப்படியொன்றும் கிழவனாக அவன் நினைக்கத் தயாராயில்லை என்று எண்ணுகையில் ஜனார்த்தனத்துக்கு வேடிக்கையாக இருந்தது.

''என்னம்மா மனோ?''

''யாவருக்கும் என் அக்கா கம்மா சாப்பாடு போடமாட்டாள், மாமா! வேலை செய்தால்தான் சோறு!''

''எந்த வேலை வேண்டுமானாலும் செய்கிறேனம்மா,'' என்றார் ஜனார்த்தனம் சிரித்தபடி.

''இந்தக் கீரைத் தண்டைக் கட்டுக்கு நறுக்க வேண்டும். இதோ கத்தி,'' என்று அதையும் கொண்டு வந்து வைத்தவன் ரேகாவிடம், ''அம்மா திட்டுகிறாள் அப்போபிடித்து. ஹாலில் வந்து உட்கார்ந்து கொண்டு படிக்கிற மாதிரி வேஷமாவது போடு,'' என்று கூறி, அவளைத் தன்னுடன் இழுத்துச் சென்றுவிட்டான்.

ரேகா முனகிக் கொண்டே சென்றாள். கீரைத் தண்டையும் தன் வலது கைப் பெரு விரலையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டார் ஜனார்த்தனம். ஜெயிலில் இரண்டு கைதிகளுக்குள் ஒரு நாள் சண்டை மூண்ட போது, இவர் தலையிடப் போய், இவர் கையிலும் ஒரு வெட்டு விழுந்தது. ஜெயில் டாக்டர் உடனே சரியாகச் சிகிச்சை தரவில்லை. காயம் ஆறினாலும், அந்தப் பெரு விரல் அப்படியே மரக் கட்டைமாதிரி ஆகிவிட்டது. வளையாது, மடியாது. அதை அழுத்திக் கொண்டு ஒரு வேலை செய்வதென்றால் வலி உயிர் போகும்.



அவர் தயங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டாள் சாரதா. வேகமாய் வந்தவள் கீரைத் தண்டையும், கத்தியையும் எடுத்துக் கொண்டு போய்விட்டாள், ''சாரதா, இதோ நான் நறுக்கித் தருகிறேனம்மா,'' என்று அவர் கூறுவதைப் பொருட்படுத்தாமலே.

ஜனார்த்தனம் மௌனமாகத் தனது கட்டிலில் படுத்துக்கொண்டார்.

சமையலறையில் சந்தடிகள் கேட்டன. அவரைக் கூப்பிடாமலே மற்றவர்கள் சாப்பிட அமர்ந்துவிட்டார்கள் என்று தெரிந்தது.

''என்னப்பா நீங்க! என் மார்க் ஷீட்டிலே இன்னும் ஸைன் பண்ணித் தராமலே இருக்கிறீங்க? டீச்சர் தெனந்தெனம் கேட்கிறாங்க,'' என்று ரேகா சொல்வது அவருக்குக் கேட்டது.

''நான் ஸைன் பண்ணப் போவதில்லை!'' என்றான் மணிகண்டன் செல்லமான கோபத்துடன். ''இங்கிலீஷில் நீ ரொம்பப் புவர் மார்க். அதில் கையெழுத்துப் போட்டால் எனக்குத்தான் அவமானம்!''

''போடாட்டி போங்களேன்! நான் தாத்தாகிட்டே வாங்கிக்கிறேன்!''

''உன் தாத்தாதானே? கையெழுத்து அருமையாகப் போடுவார்!''

பளீரென்று ஓர் அறை ஜனார்த்தனத்தின் நெஞ்சில் விழுந்தமாதிரி இருந்தது.

அதன் பிறகு வெகு நேரம்வரை ஒரு பெரிய மௌனம் அந்த வீட்டின் எல்லாப் பகுதிகளிலும் எதிரொலிப்பது போல் அவருக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. எழுந்து நிற்கக்கூட முடியாமல் அவர் கால்கள் தொய்ந்தன. தலைக்குள் கிர்கிர்ரென்று ஒரு சுழற்சி ஏற்பட்ட வண்ணம் இருந்தது.

உடனேயே வேறு எதிலாவது மூளையைச் செலுத்தாவிட்டால் புத்தி பிசகி விடுமோ என்று அஞ்சினார்.

சமையலறைக்கு வெளியில் இருந்த நடையில், பழைய மரப் பெஞ்சு போடப்பட்டிருந்தது. அதில் அமர்ந்து காலைத் தினசரியைப் புரட்டலானார்.

பரிமாறிக் கொண்டே சாரதா, மணிகண்டனிடம், ''கிராமத்துக்கு ஒரு நடை போய்வர வேண்டுமென்று எத்தனை நாளாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்றாள்.

மணிகண்டனிடமிருந்து பதில் பேச்சு வரவில்லை. சாரதாவே தொடர்ந்தாள்: ''உங்களால்தான் முடியவில்லை. அப்பா வந்திருக்கிறாரே, அவரிடம் சொல்லக்கூடாதா? அவருக்கென்ன, லீவு வேண்டுமா, வேலை ஒழிய வேண்டுமா? ஒரு வாரமோ பத்து நாளோ, இருந்து பார்த்துவிட்டு வரட்டுமே? கேட்டால் மாட்டேனென்றா சொல்லப் போகிறார்?''

அப்போதும் மணிகண்டன் பேசாதிருப்பதை ஜனார்த்தனத்தினால் மன்னிக்க முடியவில்லை. பேப்பரை மடித்து வைத்துவிட்டு, ''ஏன் மணி தயங்குகிறாய்? சாரதா சொல்கிறமாதிரி நான் சும்மாதானே இருக்கிறேன்? அங்கே இங்கே போக வேண்டுமென்றால் சொல்லப்பா,'' என்றார்.

பாதி மறைந்தாற் போலக் கதவினருகே வந்து நின்று கொண்டாள் சாரதா. ''வேறு ஒன்றுமில்லை... பதினைந்து இருபது வருடத்துக்கு முன்னால் மணமேடு கிராமத்தில் மூன்று ஏக்கர் நிலம் வாங்கிப் போட்டீர்களாமே?''

''ஆமாம்... அதை ஒரு குத்தகைக்காரரிடம் விட்டிருந்தேன்...''

''அவன் குத்தகைப் பணமும் அனுப்புவதில்லை. அரிசியும் தருவதில்லை. நம் சொத்தை எவனோ வழியோடு



போகிறவன் எதற்காக அனுபவிப்பது? ஒரு தரம் அங்கே போய், எல்லாவற்றையும் செட்டில் பண்ணிவிட்டு வாருங்கள் என்று உங்கள் பிள்ளையிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்...''

''அதற்கென்ன, நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேனே?'' என்று தானாகவே முன் வந்தார் ஜனார்த்தனம். எப்போதோ ஒரே ஒரு தடவை ஆபீஸ் நண்பர்களுடன் பிக்னிக்குக்காக அந்தக் கிராமத்துக்குப் போனதும், தோப்பும் துரவுமாய்க் குளுகுளுவென்ற சூழ்நிலையில் மனம் பறிகொடுத்ததும் அவர் நினைவில் எழுந்தன. 'இவ்வளவு வர்ணிக்கிறீர்கள், இரண்டு மூன்று ஏகரா நிலம் வாங்கிப் போடுவது தானே?' என்று நண்பரொருவர் - அது, நமச்சிவாயமா? சுப்பிரமணியமா? - சொன்னதும், வாங்கினால் போச்சு என்று கூறி நிலம் வாங்கியதும் அவருக்கு நினைவு வந்தன. அந்த இடத்தை இன்னொருதரம் கண்ணால் பார்ப்போம் என்றுகூட அவர் நினைத்ததே யில்லை...

சாரதாவின் நிம்மதி அவள் பேச்சில் வெளிப்பட்டது. ''அவ்வளவுதான். இன்றைக்கே நீங்கள் புறப்பட்டால் சரியாயிருக்கும். அங்கே போய்க் குத்தகையையாவது மாற்றுங்கள். அல்லது வேறு யாருக்காவது விற்றாலும் போச்சு...''

உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்த மணிகண்டன் முணுமுணுத்தான். ''மணமேடு சுத்தக் குக்கிராமம். அப்பா அங்கே எப்படித் தங்குவார்?''

''ஏன், என் பெரியம்மா வீடு பூட்டித்தான் கிடக்கிறது. சிவன் கோவிலுக்குப் பக்கத்து வீடு. கோவில் குருக்களிடம் சாவி இருக்கிறது. கேட்டால் கொடுப்பார்.''

''அது போதும். ஓட்டல் கீட்டல் வேண்டாம். நானே சமையல் செய்து கொள்வேன்,'' என்றார் ஜனார்த்தனம்.

மணிகண்டன் அவரைத் தாண்டிக் கொண்டுதான் கை கழுவச் சென்றான். திரும்பி வந்தான். டவலில் கை துடைத்துக் கொண்டான். அவரெதிரிலேதான் டிரெஸ் செய்து கொண்டான். ஆனால் கிராமத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்று எதுவும் சொல்லவில்லை.

கடைசியில் ஆபீசுக்குக் கிளம்பும்போது, "உங்களிடம் நல்லதாய் ஷர்ட் எதுவும் கிடையாது இல்லையா?" என்றான் சுவரைப் பார்த்துக்கொண்டு.

"அதனாலென்ன... பரவாயில்லை..."

"என் பழைய ஷர்ட்டு இரண்டு இதோ வைத்திருக்கிறேன். இதோ-" அவர் கவனிக்க வேண்டுமென்பதற்காகவே அந்த 'இதோ'வை அழுத்திச் சொல்கிறான் என்று தோன்றியது. ஜனார்த்தனம் கவனித்தார். ஸ்டாண்டில் இரண்டு சட்டைகள் மாட்டப்பட்டிருந்தது மட்டுமல்ல.

ஒரு சட்டையின் பாக்கெட்டுக்குள் ஏதோ காகிதம் போன்ற ஒன்றை அவன் அவசரமாகச் செருகுவதையும் கண்டார் ஜனார்த்தனம். சாரதா உள்ளே வேலையாயிருக்கும் இரண்டொரு நிமிடங்களுக்குள் அதைச் செய்துவிட வேண்டுமென்று அவன் அவசரப்படுவது அவருக்குப் புரிந்தது.

அவளுக்குத் தெரியாமல் பத்து ரூபாயோ, இருபது ரூபாயோ வைக்கிறான் போலிருக்கிறது. தான் ஆடா விட்டாலும் சதை ஆடும். மருமகளுக்குப் பாசமில்லாதிருக்கலாம். வெறுப்புக்கூட இருக்கலாம். பெற்ற மகன் அதேபோல் இருக்க முடியுமா? ஜனார்த்தனம் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

சற்றுப் பொறுத்து அவர் தன் வேட்டியைக் குழாயடியில் கசக்கிக் கொண்டிருக்கையில், ஒரு பையுடன் அவர் முன்னே வந்து நின்றாள் சாரதா. முகத்தில் கனிவு கொஞ்சியது. "துணிமணிகளை ரெடியாய் எடுத்து வைத்துவிட்டேன்.



நேரமாகிறது உங்களுக்கு. வேட்டி துவைத்து உலர்த்த இப்போது என்ன அவசரம்?"

அவர் திகைத்தார். "வந்து.. இப்பவே புறப்படணுமா? சாயந்தரம் குழந்தை வந்ததும் சொல்லிக்கொண்டு புறப்படலாமே என்று பார்த்தேன்."

"மணமேட்டுக்கு ஒரே ஒரு பஸ்தான் இருக்கிறது. பன்னிரண்டே காலுக்கு என்று ஞாபகம். சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டால் சரியாயிருக்கும்."

சரத் துணிகளை அப்படியே சுருட்டிக் கொண்டு எழுந்தார் ஜனார்த்தனம். 'தாத்தா! என்கிட்டே சொல்லிக்காம போறீங்களே?' என்று ரேகா கேட்பது போலிருந்தது. 'இல்லையடி, கண்ணு. இதோ நாலு நாளில் ஓடி வந்து விடுவேன்,' என்று மானசீகமாகவே அவளுக்குப் பதில் தந்தார்.

நாலு நாள் அல்ல.

ஏழு நாளாகியும் ஜனார்த்தனம் ஊருக்குத் திரும்ப முடியவில்லை.

அவரை அங்கேயே பிடித்து வைத்துக் கொண்டிருந்தது மணமேடு கிராமத்தின் வனப்பு அல்ல.

திருக்குளத்துப் படித்துறையில், அழுக்குப் பையைத் தலையணையாகக் கொண்டு, வெறும் தரையில்படுத்திருந்தார். குளத்திலிருந்து வந்த காற்றில் பாசியின் நெடி வீசிக் கொண்டிருந்தது.

பதினைந்து இருபது வருடத்துக்கு முன்னால் அழகுத் தேவதை கொஞ்சி விளையாடிய பூமியா இது? இல்லை. காலில் நெருஞ்சி முள் தைத்ததோ என்னவோ, அந்தத் தேவதை ஓட்டம் பிடித்துவிட்டாள்! பிழைப்பைத் தேடிப் பட்டணம் செல்பவர்களின் எண்ணிக்கை வளர வளர, துடைக்க மறந்து போன விளக்காகக் கிராமம் தூசி படியலாயிற்று.

சாரதா சொல்லியிருந்தபடி சிவன் கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு இடிந்த வீடுதான் இருந்தது. குருக்களிடம் விசாரித்தார்.

''அது ஒரு பழைய ஓட்டுவீடு. நாலு வருஷம் முந்தி ஒரு பெரிய மழை அடித்தபோது விழுந்துவிட்டது. உங்கள் மருமகளுக்குக் கூடத் தெரியப்படுத்தினோம். மெட்ராஸிலிருந்து வந்து பார்த்துவிட்டுப் போனார்களே?'' என்றவர், ''சாவி என்னிடம்தான் இருக்கிறது. தரட்டுமா?'' என்றார்.

குத்தகைக்காரனைப் பற்றிக் கேட்டார்.

''பாண்டியனா? கிடக்கிறான் குடிகாரப் பயல். நாலு நாள் ஊரில் இருப்பான். நாற்பது நாள் வெளியே சுற்றுவான். இப்போது அவனிடம் யார் நிலமும் கிடையாதே?'' என்றார் கர்ணம்.

''எதற்கும் இரண்டு நாள் தங்கி அவனை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்,'' என்று சொன்னாரே, தவிர, எங்கே தங்குவது என்று சொல்லவில்லை. இந்த மண்டபம்தான் கதி... அவருக்கெதிரே, ஆனால் சற்று மரியாதையாகத் தள்ளிஒரு நாய் வந்து படுத்துக் கொண்டது. நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு இரைக்க இரைக்க அவரைப் பார்த்தது. கையிலிருந்த கடைசிப் பைசாக்கள் செலவழிந்துவிட்டன என்று ஜனார்த்தனத்துக்கு ஞாபகம் வந்தது.

குபுக்கென்று மண்டபத்தில் எழுந்து உட்கார்ந்தார் ஜனார்த்தனம். மூட்டையாக மடங்கியிருந்த பையைப் பரபரவென்று அவிழ்த்தார். மணிகண்டன் தந்த ஷர்ட்டுகளை இதுவரை அவர் அணியச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அன்று ஏதோ ஜாடை காட்டிப் பையில் வைத்தானே...

சட்டையை எடுத்தார். சட்டைப் பையைத் துழாவினார். ஒரு காகிதம். ஆனால் கரென்ஸி நோட்டல்ல. ஒரு கடிதம்.

''அப்பாவுக்கு,



அமைதியாயிருந்த என்னுடைய சிறு குடும்பத்தில் உங்கள் வருகையால் புயல் வீசும் போல் இருக்கிறது. அப்புறம் உங்கள் இஷ்டம்.

மணிகண்டன்.'

திரும்பத் திரும்ப அந்த வரிகளையே படித்தார் ஜனார்த்தனம். அவர் கண்களில் நீர் பெருகி, சொட்டுச் சொட்டாகக் காகிதத்தின் மீது விழுந்து, எழுத்துக்களை மசமசக்க வைத்தது.

பல பல நாட்களுக்கு முன்னால், சிறையில்-

''இத பார், சார். விடுதலையாகி வெளியே போனப் பாலே நமக்கு ஆயிரம் சோதனை வரும். ஆனால் மனச தளராமல், ஒருத்தருக்கொருத்தர் துணையா நின்னுக்கணும். இல்லையா சார்?'' என்று மருதய்யன் சொன்னது இப்போதுதான் போல் அவர் செவியில் எதிரொலித்தது-

'மருதய்யா! நீ எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய்?'' என்று ஜனார்த்தனத்தின் உள்ளம் ஓலமிட்டது.

## மூன்று

சென்டிரல் ஜெயிலின் மேடான சாலையில் ஏறி, பாடிகார்டு ரோடின் பாலத்தை அடைந்து, ஒன்றரை ஆள் உயரத்தில் போலீஸ்காரர் போக்குவரத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கும் சந்தியினருகே, நடைபாதையின் ஓரமாக நின்று கவனித்தபோது, சென்னை நகரம் சென்ற ஆறேழுமாதங்களில் அப்படியொன்றும் மாறியிருப்பதாக மருதய்யனுக்குத் தோன்றவில்லை. மாலை ஐந்து மணி வெய்யிலில் சென்ட்ரல் மணிக்கூண்டு கடியாரத்தின் வெள்ளைப் பரப்புப் பளபளத்தது. நிமிட முள்ளைத் தொட்டாற் போல் விளிம்பில் உட்கார்ந்திருந்த காக்கை

யொன்று ஜிவ்வென்று வானத்தை நோக்கித் தாவுகையில் அவன் பெற்றிருக்கும் விடுதலையின் சிறப்பை அது உணர்த்துவது போலிருந்தது மருதய்யனுக்கு.

''வத்திப் பெட்டி இருக்கிறதா தம்பி?''

தாட்டியான குட்டையான ஒரு நபர், வாயில் பீடியைத் தொங்கவிட்டபடி மருதய்யனைக் கேட்டான். மருதய்யன் எடுத்துத் தந்தான். அவன் ஒரு குச்சி கிழித்து, பீடியின் நுனிக்குக் கொண்டு செல்கையில் விர்ரென்று அதற்காகவே வந்த மாதிரி ஒரு காற்று அதை அணைத்துவிட்டு ஓடியது. அந்த ஆள் மருதய்யனிடம் அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு இரண்டாவது குச்சியைக் கிழித்து, இம்முறை பத்திரமாகப் பற்ற வைத்துக் கொண்டு பெட்டியைத் திருப்பிக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

வத்திப் பெட்டி கேட்டுவிட்டுப் போகிறான்! ரொம்பச் சாதாரணமாய் கேட்டு, ரொம்பச் சகஜமாய் பீடி பற்றவைத்துக் கொண்டு, எதுவும் நேராத மாதிரி செல்கிறான்! இவனுக்கு மட்டும் தெரிந்திருந்தால்? இதே போல ஏழு மாதங்களுக்கு முன்னால் நான் ஒரே ஒரு குச்சியைக் கிழித்து...

வேண்டாம். அந்தக் கசப்பான நினைவுகள் இப்போது ஏன்? பழைய காகிதத்தைக் கிழித்துப் போடுகிற மாதிரி, தன் பழைய வாழ்க்கையைச் சுருட்டித் தூர எறிந்துவிடுவது என்று தீர்மானம் செய்து கொண்டல்லவா வெளியே வந்திருக்கிறோம்?

சரி, செங்கம்மா?

அவளும்தான். கடந்துபோன வாழ்வில் அவளும் ஒரு பகுதிதான். கட்டாயமாக மறந்தாக வேண்டிய பகுதி.

என்றைக்கு அவளுக்குக் கல்யாணமாகிவிட்டது என்ற சேதி காதில் விழுந்ததோ, அன்றோடு போய்விடவில்லையா அவளுக்கும் தனக்கும் உள்ள உறவு? ஜெயிலில் முழுசாக ஒரு



வாரம் - இரவும் பகலுமாக - புலம்பினானே போதாதா? சோறும் தண்ணீரும் தூக்கமும் இல்லாமல் பைத்தியக்காரன் போல் திரிந்தானே, அத்துடன் முடிந்து விடவில்லையா? 'ஏம்பா, விடுதலையாகி வெளியே போகிறதாய் எண்ணமில்லையா? இந்த ஜெயிலுக்குள்ளாரவா மண்டையைப் போடப் போறே?' என்று மற்றக் கைதிகள் பரிகாசம் பண்ணும் அளவுக்குத் துடித்துத் தீர்ந்தாகிவிட்டது. அப்புறம் என்ன?

'செங்கம்மா யாரோ, நான் யாரோ,' என்று அவன் வாய் சொல்லிக் கொண்டது காதுக்குக் கேட்கவில்லையா? அது மூர்மார்க்கெட்டின் பக்கமே அவனை இழுத்துச் சென்றது.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அவன் ஒரு தொழிலாளியாக இருந்ததும், செங்கம்மா ஒரு சாப்பாட்டுக் கூடைக்காரியாக இருந்ததும், எல்லாம் இதோ ஏழெட்டு மாதங்களுக்கு முன்புதானே?

எடுப்புச் சாப்பாடுகளில் மிஞ்சியதை அவள் வழங்கும் போதெல்லாம் அந்த வாலிபமும் வழவழப்பும் நிறைந்த கைகளைத் திருட்டுத்தனமாக அவன் வருடிக் கொடுப்பான்..

''உக்கும். இதிலே ஒண்ணும் குறைச்சலில்லை. டவுனுக்கு அடிக்கடி போறியே? எனக்கு ஒரு கவரிங் வளை வாங்கிட்டு வரக்கூடாதா?'' என்று ஒருநாள் அவள் சிணுங்கினாள்.

''வாங்கிட்டு வர்றேன். கைக்கு ஒரு வளையல் கழட்டிக்கொடு,'' என்று அவளுடைய கண்ணாடி வளையல அவன் உருவ முயன்றதும், 'இருக்கிறதையும்கொடுத்திட்டால் எப்படி?' என்று கூறிய செங்கம்மா, வளையலைக் கழற்றி ஒரு வெள்ளை அட்டையின் மீது வைத்து, அவன் பாக்கெட்டிலிருந்து பென்ஸிலை எடுத்து அந்த வளையலின் சைஸை வரைந்து கொடுத்ததும், 'அடுத்த வாட்டி டவுனுக்குப் போறப்போ கண்டிஷனா வாங்கிவரேன்' என்று அவன் வாக்களித்ததும், நேற்றுத்தான் நடந்த மாதிரி இருக்கிறது..

அதுதான் அவன் அவனைக் கடைசியாகப் பார்த்தது.

வளையல் வாங்குவதற்காக மூர் மார்க்கெட்டுக்கு வந்தவன், வெளிப்புறம் இருந்த டீக் கடைகளிலொன்றில் டீ குடித்துக் கொண்டிருந்த போது பிடிபட்டுவிட்டான்.

தொலைவில் வரும் போதே - அவன் மப்டியில் இருந்த போதிலும் - அவன் ஒரு ஸி.ஐ.டி. என்று மருதய்யனுக்கு விளங்கிவிட்டது. உடனே கையிலிருந்த பர்ஸைச் சட்டென்று அந்த டீக்கடையின் மேற்கூரையில் செருகி வைத்தான். அதொன்றும் திருட்டுப் பர்ஸ் அல்ல. அதை ஏன் ஒளித்து வைக்கத் தோன்றியது என்று சிறையில் பல நாட்கள் அவன் எண்ணி ஆச்சரியப்பட்டதுண்டு.

'உன்கிட்டே ஒரு விஷயம் விசாரிக்கணும். கொஞ்சம் வருகிறாயா?' என்று அழுத்தமான பிடியில் அவன் முழங்கையை ஸி.ஐ.டி. பிடித்தபோது, தான் அகப்பட்டு விட்டோம் என்பது அந்த நொடியிலேயே மருதய்யனுக்குப் புரிந்துவிட்டது.

அதற்கப்புறம் அவன் திரும்பி வரவேயில்லை. வருவதற்கு அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

ஏழு மாதத்துக்கு முன்பு வைத்துவிட்டுப் போன அந்தப் பர்ஸ் இன்னும் அதே டீக்கடையின் கூரையில் அப்படியே இருக்குமா என்ன? சொன்னால் சிரிப்பார்கள். இருந்தாலும்... ஒரு நப்பாசை...

மருதய்யன் இடப்பக்கம் திரும்பி, புகாரி ஓட்டலை நோக்கி நடந்தான். பார்க் ஸ்டேஷனுக்குப் போகும் சந்நிகருகே சென்ற போதுதான் மெட்ராஸ் மாறவில்லை என்று சற்றுமுன் நினைத்தது தப்பு என்பது அவனுக்குப் புலப்பட்டது.

சுரங்கப் பாதை போடுவதற்காகச் சாலையை இரண்டாகப் பிளந்திருந்தார்கள். மூர் மார்க்கெட்டுக்கு



வெளிப்புறமாக நடைபாதையில் இருந்த கடைகளை இப்போது காணோம்.

அரை நம்பிக்கையுடன் சாலையைக் கடந்து எதிர்ச் சாரியை அடைந்தான்.

அந்த டீக்கடை அங்கே இல்லை. அந்தக் கடையின் கூரையிடுக்கில் செருகி வைத்த அந்தப் பச்சைப் பிளாஸ்டிக் பர்ஸை இனி கண்டுபிடிக்க முடியாது. அதற்குள்ளே செங்கம்மா ஆசையாய்க் குறித்துத் தந்திருந்த அட்டை - அதுவும் போனதுதான்.

''பேனா வாங்கறியா சார்? அம்பதே பைசா,'' என்று ஒருவன் நச்சரித்தான். அவனிடமிருந்து நகர்ந்து சென்று, காம்பவுண்டிலிருந்து ஒரு பிளவின் வழியே மூர் மார்க்கெட்டுக்குள் நுழைந்தான் மருதய்யன். அப்பா! எவ்வளவு செருப்புக் கடைகள்! எத்தனை துணிக் கடைகள்! பிளாஸ்டிக் நகைக் கடைகள்! வெளியே இருந்த பல கடைகள் உள்ளே வந்திருப்பதை அப்போதுதான் புரிந்துகொண்டான்.

மருதய்யன் நிதானித்து நாற்புறமும் பார்த்தான். மூன்று நாலு டீக்கடைகள் இருந்தன. ஏழு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள், சில நிமிட நேரம் டீ குடித்த கடை எது என்று எப்படி இப்போது அடையாளம் கண்டு பிடிப்பதென அவனுக்கு மலைப்பு ஏற்பட்டது. ஒவ்வொரு கடையையும் ஆராய்ந்தான். ஆனால் சில நொடிகளுக்கு மேல் செலவழிக்கத் தேவையில்லை. அதோ அவன்தான் என்று உடனேயே அடையாளம் தெரிந்துவிட்டது. அந்த ஒறறைக் கையன்தான். இடது கை மட்டும் இளம்பிள்ளை வாதத்தினால், வெய்யிலில் காய்ந்த குருத்துப்போல தொங்கிக் கொண்டிருந்தது. அப்படியும் முழங்கையால் கிளாசை விலாவில் இடுக்கிக் கொண்டு வேகமாய் அவன் டீ ஆற்றுவதை அன்று அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது நன்கு நினைவிருக்கிறது.

கடையை நெருங்கினான்.

"இங்கினா?" என்று மருதய்யனை அவன் கேட்டபோது, பாய்லரிலிருந்து வந்த ஆவி அவன் முகத்தை மறைத்தது. அது விலகிய போது, தன்னைப் போல் அவனும் வயதில் சிறியவன்தான் என்பதை உணர்ந்தான் மருதய்யன். ஆனால் அவன் முகத்தில் இடையறாது இருந்து வரும் அந்தப் புன்சிரிப்புப் போலத் தன்னால் தொடர்ந்து எந்தச் சந்தர்ப்பத்திலும் இனிமையான முகபாவத்துடன் இருக்க முடியாது என்று தோன்றியது.

"போடுங்க," என்றான். ஜெயிலில் கொடுத்த கூலி பதினேழுமுக்கால் ரூபாய் டிரௌசர் பாக்கெட்டில் இருந்தது.

தன்னுடைய அற்பமான பர்சைப் பற்றி எப்படிக் கேட்பது? அவனுக்கு முதலில் கூச்சமாயிருந்தது. யோசனையிலேயே பாதிக்கு மேல் டீ காலியாகிவிட்டது.

"என்னங்க, கடைக்காரரே! ஒரு தகவல் தெரிஞ்சுக்கணும்?" என்றான் கடைசியில்.

"கேளுங்களேன்."

"ஏழெட்டு மாசத்துக்குமுன் இங்கே டீ குடிச்சிட்டுப் போனேன். அப்ப ஒரு பர்ஸ் இதோ இந்தக் கூரையிலே வச்சிட்டுப் போனேன்.. கடையை அங்கிருந்து மாத்தறப்போ... ஒரு வேளை.."

"உன்னுதுதானா அது?" அவன் சிரித்தான். "கடையை அங்கிருந்து பிரிச்சு இங்கே போடறப்போ இருந்திச்சு."

"இருந்திச்சா!" மெய்யாகவே மருதய்யனால் நம்ப முடியவில்லை.

"ஆமாம். ஏழெட்டு மாசம் முன்னே வச்சிட்டுப் போன பொருள் இப்பத்தான் உனக்கு நினைப்பு வந்திச்சா?"

"வந்து... ஊருக்குப் போயிட்டேன். மறுபடி இப்பத் தான் மெட்றாஸ் வரச் சந்தர்ப்பம் கிடைச்சுது... வந்து.. அந்தப் பர்சை எடுத்து வைச்சிருக்கீங்களா?"



"வூட்லே இருக்குது."

"விசாட்டி எறியாமல் வைச்சிருக்கீங்களோ?"

"அதுக்குள்ளாற ஒரு ரூபாயும் சில்லறையும் இருந்திச்சு. நமக்கு எதுக்கு இன்னொருத்தன் சொத்துன்னு எடுத்து வைச்சேன்."

"ரூபாயைத் தவிர...."

"ஒரு சின்ன அட்டைத் துண்டுகூட இருந்திச்சு. அதிலே ரவுண்டா ஒரு வளையம் வரைஞ்சிருந்தது."

"அதேதாங்க," என்றான் மருதய்யன் ஆவலுடன். "நமக்கு வூடு எங்கேங்க?"

"ஒன்பதுக்கெல்லாம் கடையைப் பூட்டிடுவேன். என்னோடவே வாங்க. எடுத்துத் தரேன். இங்கேயே இருக்கிறதுன்னாலும் இருங்க. இல்லே, எங்கியாச்சும் போயிட்டு வரணும்னாலும் போயிட்டு வாங்க."

"நான் எங்கேங்க போகப் போகிறேன்?" என்று சொல்லிவிட்டுக் கடை வாசலில் ஒரு பெஞ்சில் உட்கார்ந்திருந்தபோது, செங்கம்மாவுக்கும் தனக்கு மிடையேயுள்ள ஆழ்ந்த காதலின் பலமல்லவா, இத்தனை காலத்துக்குப் பிறகும் அந்த வளையம் வரைந்த அட்டையைக் கெட்டுப் போக்காமல் காத்துக் கொடுத்திருக்கிறது என்று மருதய்யனுக்குத் தோன்றியது.

பொறுமையாய்ச் சில மணி நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தான். அந்த நேரத்துக்குள், டீக் கடைக்காரனின் பெயர் கோவாலி என்பதும், சமீபத்தில்தான் கல்யாண மானவன் என்பதும் தெரிந்து கொள்ள முடிந்தது.

"இதாங்க, நம்ம வீடு," என்று கோவாலி. அந்தக் குடிசையின் கதவைத் திறந்தான்.

சென்ட்ரலுக்கும் சிந்தாதிரிப் பேட்டைக்கும் நடுவே, ஒரு சாக்கடை வாய்க்காலின் கரையில் அந்தக் குடிசைகள்

வரிசையாய் நின்று கொண்டிருந்தன. சற்றுத் தள்ளி, குடிசை மாற்று வாரியத்தின் நான்கு மாடி அடுக்குக் கட்டிடம் எழும்பிக் கொண்டிருந்தது. அதன் பிளானைக் காட்டும் நீலப் பலகை கோவாலியின் குடிசைக்கு வெளியேதான் நடப்பட்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குடிசைக்குள் மினுக் மினுக்கெனச் சிமினி வெளிச்சம் வந்து கொண்டிருந்ததைத் தவிர வேறெவ்விதத் தெரு விளக்கும் அந்தப் பகுதியில் இல்லை என்பதைக் கண்டான் மருதய்யன். எதிர்ச்சாரியில் ஒரு சிறிய பள்ளிக்கூடம்.

குடிசைக்குள் யாருமில்லை. மூலையில் இரண்டு பழைய டிரங்குப் பெட்டிகள் இருந்தன. அவற்றுள் ஒன்றைக் கோவாலி தன் ஒற்றைக் கையினால் சிரமத்துடன் திறந்தபோது, இடுப்பு முறிகிற மாதிரி பெட்டி மடமடவென்று ஓசையிட்டது.

''இதுதானே?'' என்று மருதய்யனிடம் பிளாஸ்டிக் பர்சைக் கொடுத்தான் அவன். பிறகு, ''எங்கே போயிட்டாள் இவள்? செங்கம்! ஏய் செங்கம்!'' என்று கூவினான்.

''செங்கம்?'' என்று தானும் அதிர்ச்சியுடன் வாய்விட்டே கூவிவிட்டோம் என்பது, அவன், ''ஆமாங்க, செங்கம் - என் பெண்சாதியைக் கூப்பிட்டேன்,'' என்று பதிலளித்த பிறகுதான் மருதய்யனுக்குப் புலப்பட்டது.

வெளியேயிருந்து அவள் வந்தாள்.

அவளேதான்.

அவளுக்குக் கல்யாணமாகிவிட்டது என்பது அவன் ஏற்கெனவே கேள்விப்பட்ட சங்கதிதானென்றாலும், இவ்வளவு சீக்கிரமாக, இவ்வளவு அருகாக அவளைச் சந்திப்போம் என்று மருதய்யன் எதிர்பார்க்கவில்லை. அப்படி எதிர்பார்க்காத காரணத்தால், அந்த நிலைமையில் என்ன செய்வது, என்ன சொல்வது என்றும் அவனுக்குத் தெரியவில்லை.



ஆனால் செங்கம்மாவிடம் அப்படிப்பட்ட மனப் போராட்டம் எதுவுமே நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

தன்னை அவளுக்கு அடையாளம் தெரியாமல் போய்விட்டதோ என்றுகூட மருதய்யன் நினைத்தான். பின்னே அவள் கண்களில் ஒரேஒரு நொடி நேரத்துக்குப் பளிச்சிட்ட ஆச்சரியத்துக்கு வேறென்ன அர்த்தம்?

''என்ன நீ, விருந்தாளி வருதுன்னு முன்னாலேயே சொல்றதில்லையா?'' என்று அவள் கணவனைச் செல்லமாய்க் கடிந்து கொண்டாள். ''போய்ப் பக்கடா பொட்டலமாக்கும் வாங்கியா!''

''இதோ,'' என்று கோவாலி வெளியேறினான்.

'நான் ஒரு முட்டாள்' என்று மருதய்யன் நினைத்துக் கொண்டான். கட்டின கணவனுக்கு எதிரில் அவள் தன்னை வெளிப்படுத்திக் கொள்வாள் என்று எப்படி எதிர்பார்க்கப் போயிற்று? இதோ அவன் வெளியே போய்விட்டதால் இனி...

புயலாக ஓடிவந்து தன் மார்பில் சாய்ந்துகொண்டு தன் கழுத்தில் கைகளைக் கோத்துக் கொள்வாள் என்றும், தன்னுடைய முதுகை அவள் கைகள் பிசைந்தெடுக்கு மென்றும், தன் மார்பில் அவள் கண்களும் உதடுகளும் புரண்டு புரண்டு ஈரப்படுத்துமென்றும், 'இதோ பார் செங்கம்மா, உனக்குக் கல்யாணமாகிவிட்டது. இனிமேல் நாம் பழசையெல்லாம் மறந்துவிட வேண்டியதுதான்,' என்றுகூறி, அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு விடைபெற வேண்டியிருக்குமென்றும் அவன் கற்பனை செய்துகொண்டு காத்து நின்றான்.

எதுவும் நேரவில்லை. அவள் தன் பாட்டுக்குத் தென்னங் குச்சிகளை எடுத்து வைத்துக் கொண்டு துடைப்பம் கட்டினாள்; ஊசி நூலெடுத்துச் சேலையிலிருந்த கிழிசல்களைத் தைத்தாள்; அடுத்த குடிசைப் பெண்ணை வலியக் கூப்பிட்டு

வைத்துக்கொண்டு தலைசீவி விட்டாள்; சிமினி விளக்குக்குக் கெரசின் ஊற்றினாள்.

அவனைப் பார்க்கவில்லை, பேசவில்லை, அடையாளம் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

திகைப்புற்றவனாக நின்றிருந்தபோது, அவன் கையிலிருந்த பர்ஸ் கீழே விழுந்தது. உள்ளேயிருந்த அந்த அட்டையும் வெளிப்பட்டது.

அவன் அதைக் கையிலெடுத்தான். ''செங்கம், உனக்கு இதை நினைவிருக்கிறதா? வளையலுக்காகக் குறிச்சுக் கொடுத்தியே?'' என்று மன்றாடும் குரலில் கேட்டான்.

அப்போதும் அவள் ஒன்றும் சொல்லக் காணோம்.

இன்னும் கொஞ்ச நேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தால் தன் இதயம் வெடித்துவிடக்கூடும் என்று அச்சம் ஏற்பட்டது அவனுக்கு. வெறுப்புடன் வாசலுக்கு வந்தான்.

பகோடா பொட்டலத்துடன் வந்து கொண்டிருந்த கோவாலி, ''என்னங்க கிளம்பிட்டீங்க? சாப்பிட்டுட்டுப் போகலாமே?'' என்றான்.

''இல்லீங்க.. வயித்தை என்னவோ செய்யுது. நான் போய்ப் படுத்துக்கிறேன் அங்கே,'' என்று எதிரிலிருந்த பள்ளிக்கூட வராந்தாவைக் காட்டிவிட்டு நடந்தான்.

சிமெண்ட் தரையில் இரு கைகளையும் கோத்துத் தலையணையாக்கிக் கொண்டு மல்லாந்து படுத்தான்.

ஆனால் தூக்கம் வரவில்லை. வானத்தில் பிறை நிலா கிடுகிடுவெனக் கீழிறங்குவதையும், எண்ண முடியாத அளவுக்கு நட்சத்திரங்கள் கூட்டம் கூட்டமாக முளைத்துக் கொண்டிருப்பதையும், சாக்கடை வாய்க்காலின் நாற்றத்தோடு சிலுசிலுவென்ற குளிர்க்காற்று உடம்பைக் குத்துவதையும்,



செங்கம்மாவின் அசைவற்ற அதரங்களையும், முன்னொரு காலத்தில் அவள் தன்மீது மோதி மோதிப் புரண்டபோதெல்லாம் ஏற்பட்ட திண்மையான ஸ்பரிசங்களையும், இன்றைய நரக வேதனைகளுடன் ஒப்பிடுகையில் ஆறு மாத ஜெயில் வாழ்க்கை எவ்வளவோ மேலாயிருந்ததே என்பதையும் மாறி மாறியும் சுதம்பமாயும் முன்னும் பின்னுமாயும் ஆசையாயும், அருவருப்பாயும் எண்ணி எண்ணி அவன் தவித்துக் கொண்டிருந்த வேளையில்-

யாரோ தனக்கு மிக அருகே வந்து படுப்பது தெரிந்தது. வெற்றிலை பாக்கின் போதையான நெடியும், உஷ்ணமான மூச்சும், அவள் யாரென்பதை அவனுக்குப் புரிய வைத்தன.

## நான்கு

''ம்.. நான்தான.'' என்றாள் அவள்.

''தெரியுதே,'' என்றான் அவன். தாபம் என்பது ஓர் உயிருள்ள பிராணி போல அவளுக்குள்ளிருந்து புறப்பட்டு ஊர்ந்து வந்து அவனுக்குள் புகுகிற மாதிரி இருந்தது. அவளுடைய வெப்பம் நிறைந்த பெருமூச்சு அவனுடைய கட் பனியனில் தோள் பக்கமிருந்த பிசிறு நூல்களை அசைப்பதை அவனால் உணர முடிந்தது. சாயந்தரப் பொழுது மொத்தமும் தான் ஆசைப்பட ஆசைப்பட அவள் விலகிக் கொண்டே போனதென்ன, இப்போது அவளாகவே நெருக்கத்தில் வந்து அணைக்க முயல்வதென்ன என்று அவன் தனக்குள் பிரமித்தான்.

''ஏன் பேச மாட்டேங்கறே?'' என்ற வண்ணம் அவன் கையை எடுத்துத் தன் கன்னத்தோடு ஒட்ட வைத்துக் கொண்டாள் செங்கம்மா. அவனை நோக்கி ஒருகளித்துப் படுத்திருந்ததால், அவள் முகத்தின் ஒரு பாதி நிலா வெளிச்சத்திலும் மறுபாதி அதன் நிழலிலுமாகக் காட்சி தந்தது.

செக்கச் செவேலென்றிருந்த கைத்தறிப் புடவை, அவன் உடம்போடு படியாமல் முரட்டுத்தனமாகத் தூக்கி யிருந்ததால் அவனுடைய யௌவனம் பின்னும் கவர்ச்சி மிக்கதாகத் தோன்றியது.

மருதப்பனுடைய உதடுகள் உணர்ச்சி கொண்டு துடித்தன. ''செங்கம்..'' என்று சொன்னபடி அவள் நெற்றி முனைகளில் நடுங்கும் விரல்களால் கோலமிட்டான். இரண்டொரு அடங்காப்பிடாரி முடிச்சுருளை ஆட்காட்டி விரலால் சுற்றிக் கொண்டு இழுக்கியபோது அவள் 'ஸ்..' என்று மகிழ்ச்சியுடன் சிணுங்குவது கேட்டது. விரலை விடுவித்துக்கொண்டு, புருவத்தின் வழியே அதை ஒட்டி, பொட்டில் குழி ஏற்படுத்துகிற மாதிரி அழுத்தி, காதுமடலின் விளிம்பில் விளையாடி, ஜிமிக்கியை மெல்லத் திருகிவிட்டு, தாடையின் ஓரமாக மோவாயை அடைந்து, கூரிய நுனியைச் செல்லமாகக் கிள்ளிய பின் ஆர்மோனியத்தின் சுரங்களைத் தடவுகிற மாதிரி அவள் உதடுகளை மேலும் கீழுமாகத் தடவிவிட்டு, சிறிய பல் வரிசையின் நடுவே புகுந்து ஈரத்தை ஸ்பரிசித்தபோது, விம்மும் நாசியின் வழியே வந்த சூடான மூச்சுக் காற்று விரலிலே வீச, கையை நகர்த்தி, தந்தம்போல் வழுவழுத்த கழுத்தைத் தொட்டவன் -

நெருப்புத் துண்டத்தை மிதித்துவிட்டவன் போல் விதிர்த்துப் போனான்.

கைக்குத் தட்டுப்பட்ட அவளுடைய தாலிக் கயிறு அவள் யார் என்பதையும், தான் யாரென்பதையும், தனக்கும் அவளுக்குமிடையே எப்பேர்ப்பட்ட முள் வேலி போடப் பட்டாகிவிட்டது என்பதையும் ஒரு கணத்தில் உணர வைத்தது. 'சட்! எத்தனை இழிந்த காரியத்தைச் செய்ய விருந்தோம்!' என்று தன்னைத் தானே அவன் நிமிர்த்திக்கொண்டு விட்டானானாலும், அவளிடம் எவ்வித மாறுதலும் தென்படக் காணோம் என்பதை உணர்ந்தான். முகத்திலே அவன் விரல்



விளையாடிய ஒவ்வொரு நொடியும் அவள் மெழுகுப் பதுமையாகக் குழைந்து கொண்டிருந்தாளாகையால், அவன் உள்ளத்தில் ஏற்பட்டுவிட்ட மாறுதலை அவளால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

தெருவெங்கும் நிசப்தம் ஆட்சி புரிந்தது. துவாலை யளவு இருந்த ஒரு மேகம் சந்திரனைப் போர்த்துக் கொண்டது. எங்கிருந்தோ வந்த தெரு நாயொன்று அவர்கள் தலைமாட்டில் நின்று சிறிது வேடிக்கை பார்த்த பின்னர் தள்ளிச் சென்று சுருண்டு படுத்துக் கொண்டது.

''மருது, அந்த ஆள் எதிரிலே உன்னைத் தெரிஞ்ச மாதிரி காட்டிக் கொள்ளக் கூடாதேன்னு என் மனசை எப்படிக் கட்டுப்படுத்திக்கிட்டேன் தெரியுமா?'' என்று கேட்கும் போதே அவள் கை அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டது. அவள் குரல் கிசுகிசுப்பாக அவன் செவியருகே ஒலித்ததால் இரவின் அந்தரங்கம் மேலும் அதிகப்பட்டது போலிருந்தது. அவள் கால்கள் அவன் கால்களை மிதித்துக் கொண்டிருந்ததால் சரேலென்று அவளைப் புறக்கணித்துவிட்டுப் போவது முடியாத காரியம் என்று அவன் புரிந்து கொண்டான். ஆசை வார்த்தையாலும் ஆசைப் பேச்சாலும் அவளைத் தன் பால் ஈர்த்த பிறகு, திடீரென ஞானோதயம் பெற்றாற் போல் அவளைத் துரத்தியடிப்பது நியாயமல்ல என்றும் அவன் எண்ணிக் கொண்டான்.

கொஞ்சம் கொஞ்சமாகப் பேச்சுக் கொடுத்தே அவளைத் திருப்பியனுப்ப வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டவனாக, ''செங்கம், ஒரு ஆறு மாச காலம் உன்னாலே காத்திருக்க முடியாமப் போச்சுதா?'' என்று கேட்டான். கேட்ட வண்ணமே அவள் கையைத் தன் கழுத்திலிருந்து விலக்கவும் முயற்சி பண்ணிப் பார்த்தான்.

அவள் கையை நகர்த்திக் கொள்ளாதது மட்டுமல்ல. அப்படி அவன் முயற்சி செய்கிறான் என்பதையும்

உணராதவளாக இருந்தாள். விலக்கிவிட வந்த கையையே பிரியத்துடன் வருடிக் கொடுத்தாளே தவிர, அவன் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. என்னென்ன கட்டாயத்தினால் இன்னொருவனுக்கு மாலையிட நேரிட்டது என்பதை அவள் விளக்கப் போகிறாள் என்று அவன் எதிர்பார்த்தது வீணாயிற்று. ''அதெல்லாம் இப்ப எதுக்கு மருது?'' என்றவள், அவன் தலையைக் கோதிவிட்டு, அவன் கண்களை ஆழத்துடன் பார்த்துச் சிரித்தாள்.

மருதய்யனுக்கு முதன் முறையாகத் திகிலேற்பட்டது. அவளுடைய அணைப்பின் தீவிரமும் நெருக்கமும் வினாடிக்கு வினாடி அதிகரித்ததால், தன் மன உறுதி அதிக நேரம் நீடிக்காது என்ற பயம் உதித்தது. நாசுக்காக அவளிடமிருந்து விடுபடுவது இனி அசாத்தியம் என்று தோன்றிவிட்டதால், அவளுடைய நிலையை அழுத்தந்திருத்தமாக ஞாபகப்படுத்த வேண்டியது அவசியம் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். இந்த அழகிய முகம் சுருங்குமே, இந்த அகன்ற கண் ஓரங்களில் நீர் முனைக்குமே என்று அவனுக்கு வருத்தமும் ஏற்பட்டது. எனினும் அந்த எண்ணத்தை உதறிவிட்டு, ''செங்கம்.. இது ரொம்பத் தப்பு...'' என்றான்.

''எது?'' என்று திருப்பி வினவுகையில் அவள் கை விரல்கள் அவனுடைய பிடரியில் ஏறி இறங்கித் தாளமிட்டன.

''இப்படி நாம்... தனியா இருப்பதைத் தான் சொல்றேன். முன்னே மாதிரியா நீ?.. இப்ப கல்யாணம் ஆனவள்... இன்னொருவனோட பெண்சாதி...''

செங்கம்மா கடகடவென்று சிரித்தாள். ''அந்த ஆளையா நீ சொல்றே? அந்த டீக்கடைக்காரனா? ஒரு நாளும் நான் அவனோட பெண்டாட்டியா இருந்ததில்லை. இருக்க மாட்டேன், மருது. தாலி கட்டிட்டால் சரியாப் போச்சா? நான் உனக்காகத்தான் காத்துக் கிணு இருந்தேன் இத்தினி நாளும்...''



மருதய்யன் குழம்பிப் போனான். என்னதான் பச்சையாக உடைத்துப் பேசினாலும் செங்கம்மா மனம் மாறத் தயாராயில்லை என்பது அவனுக்குப் புலப்பட்டுவிட்டது. ஆனால் அப்புறமும்கூட, 'சீ! விடு என்னை!' என்று கடுமையாகச் சீறிவிட்டு எழுந்து செல்ல அவனுக்கு மனம் வரவில்லை.

செங்கம்மா அவன் கையை எடுத்துத் தன் இடுப்பை வளைத்தாற் போல் போட்டுக் கொண்டாள். அவன் முதுகுக்கு மறுபுறம் தரையைத் தொட்டபோது ஒரு சிறிய கல் அவனை கைக்கு அகப்பட்டது. மெதுவே அதை உருட்டிக் கொண்டிருக் கையில், ஒரு யோசனை தோன்ற, தலையை லேசாய் உயர்த்திப் பார்த்தான்.

அந்த நாய் இன்னும் சுருண்டு படுத்தபடிதான் கிடந்தது.

செங்கம்மா உணராத வண்ணம் அந்தக் கல்லை நாயின் மீது எறிந்தான்.

வாள் வாளென்று அது குரைத்தது. மறுகணமே மருதய்யன் எதிர்பார்த்த பலனும் கிடைத்தது.

அது குடிசைப் பகுதியாகையால் எங்கிருந்தோ இன்னொரு நாய் பதில் குரல் கொடுத்தது. பிறகு மூன்றாவது நாய், நான்காவது நாய் என்று - ஒரு நிமிடத்துக்குள் பல குரைப்புக்கள் ஒரு சேர எழுந்தன. 'ஏய்! சீ! சும்மா கெட!' என்று இரண்டொருவர் தூக்கம் கலைந்து அதட்டுவதும் காதில் விழுந்தது.

''செங்கம்! எழுந்திரு! எழுந்திரு!'' என்று பதறியவன் போல அவள் கையைப் பற்றி எழுப்பிவிட்டான் மருதய்யன். ''அங்கே யாரோ வர்றாங்க. உன் புருசன் மாதிரி இருக்குது. வா, வா. நாளைக்கு மறுபடி பேசிக்கலாம்...''

செங்கம்மா ஆங்காரமும் ஏமாற்றமும் ஜொலிக்கும் கண்களால் தன்னைப் பார்ப்பதை அவன் உணர்ந்த போதிலும் அப்போதைக்கு அதைப் பொருட்படுத்தவில்லை.

எதிர் வரிசையிலிருந்த அவள் குடிசையினருகே அவனைக் கொண்டு போய்விட்டு, ''போ! போ! அப்பாலே பேசிக்கலாம்,'' என்று அவன் சொன்னபோது அவள் பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னாள்.

''மருது, நீ நினைச்சிருக்கிற மாதிரி நான் ஏமாளியில்லை. தூங்கிட்டிருந்த நாயைக் கல்லடிச்சுக் கிளப்பினியே, பார்த்துக்கினுதான் இருந்தேன்.''

வரும்போது கதவைத் திறந்தே வைத்துவிட்டு வந்திருந்தாள் போலும். புயல்போல உள்ளே நுழைந்து மறைந்து போனாள். குடிசையின் கதவு மட்டும் மெல்ல முன்னும் பின்னுமாகச் சிறிது ஆடிவிட்டு ஓய்ந்தது.

நாய்கள் தொடர்ந்து குரைத்துக்கொண்டேயிருந்தன. மருதய்யன் தன் உடம்பு வியர்த்திருப்பதை அப்போது தான் உணர்ந்தான். பனியனைக் கழற்றி அதனாலேயே முதுகையும், மார்பையும், கழுத்தையும் துடைத்துக் கொண்டு நடந்தான். பொழுது விடிந்தது.

பவர் கட் என்றார்கள் சிலர். ஸ்டிரைக் என்றார்கள் வேறு சிலர். கவர்மெண்ட் ஏற்று நடத்தப் போகிறது என்றார்கள் இன்னும் சிலர். எதுவானால் என்ன? முன்னர் மருதய்யனுக்குப் பிழைப்புக் கொடுத்துக் கொண்டிருந்த பிஸ்கெட் பாக்டரி இப்போது மூடியிருந்தது.

கிட்டனைக் கேட்டால் ஏதாவது வழி சொல்வான் என்று தோன்றியது. சைக்கிள் தொழிற்சாலையில் வேலைக்கு அமருமுன் அந்த நண்பனுக்கு மருதய்யனின் சுகத்திலும் துக்கத்திலும் சம பங்கு உண்டு.

குறுக்குத் தெருவில் இருந்த அவனுடைய வீட்டை நோக்கி நடந்தபோது, ''தம்பி, இந்த மாட்டைக் கொஞ்சம் துரத்திட்டுப் போப்பா,'' என்று ஒரு குடிசை வாசலில் உட்கார்ந்திருந்த கிழவி அவனைக் கூப்பிட்டாள்.



வெய்யிலில் அவள் உட்கார்ந்து கொள்ள இடையூறாக, ஒரு பெரிய எருமை மாடு படுத்திருந்ததே காரணம். மருதய்யன் அதை இரண்டு தடவை அடித்து, வாலை முறுக்கிப் பார்த்தான். அது மசியாமற் போகவே தலையை இரு கைகளாலும் பற்றித் தரதரவென்று இழுத்து நகர்த்திவிட்டுத் தன் வழியே செல்கையில்.

கிராமத்து வீட்டு வாசலில், உலர்த்தியிருக்கும் கேழ்வரகுக்குக் காக்கை வராதவாறு குச்சியை ஆட்டிக் கொண்டிருக்கும் தன் சொந்தத் தாயை அவன் எண்ணிக் கொண்டான். தொண்டையில் எதுவோ அடைத்துக் கொள்வது போலிருந்தது.

கிட்டனுக்கு அன்று இரவு ஷிப்டாகையால், பகல் நேரமானாலும் வீட்டில்தான் இருந்தான். மருதய்யன் குரல் கொடுத்ததுதான் தாமதம், முகம் மலர வெளியே வந்து அவனைக் கட்டிக் கொண்டவன், ''போன தபா நான் அங்கே வந்திருந்தப்போ இவ்வளவு சீக்கிரம் விடுதலையாகப் போறதா நீ சொல்லவேயில்லையே? சொல்லியிருந்தால் நான் வந்திருப்பேனில்ல?'' என்றான்.

''ஆமாம்! மாலை வாங்கிட்டு வந்திருப்பியாக்கும்! அது போகுது. என் அம்மாகிட்டேயிருந்து கடுதாசி ஏதாச்சும் வந்திச்சா?''

கிட்டன் உள்ளே சென்று மூன்று கார்டுகளை எடுத்து வந்து கொடுத்தான். எல்லாம், அவன் அம்மா, பக்கத்து வீட்டுப் பையனைக் கொண்டு பென்ஸிலால் எழுதியவை.

''உங்கம்மா உன்னைத் தேடிக்கிட்டு நேராவே வந்திடுவாங்க போலிருந்திச்சு. பத்து ரூபாய் பணம் அனுப்பிச்சு, 'உங்க மகனை முதலாளி பம்பாய்க்கு அனுப்பி யிருக்காரு. ரெண்டு மூணு மாசம் ஆகும் அவரு திரும்பி வர' அப்படீண்ணு நானே ஒரு கார்டும் போட்டுட்டேன்,'' என்றான் கிட்டன்.

''இட்டா, உன்னண்ட முப்பத்தஞ்சு ரூபாய் இருக்குமா? என் கையிலே பதினைஞ்சு இருக்குது. அம்மாவுக்கு அம்பது ரூபாய் அனுப்பலாம்னு பார்க்கிறேன்.''

''அடுத்த மாசம் தர்றதானால் சொல்லு. செங்கம் கொடுத்திட்டுப் போன பணம் இருக்குது. அவளோட அப்பன்காரனுக்காக டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய பணம்...''

தன்பனைத் திகைத்து நோக்கினான் மருதய்யன். ''என்ன சொல்றே நீ?''

செங்கம்மாவின் தகப்பன் ஒரு பஸ் விபத்தில் சிக்கி, மூளை பிசகியிருக்கிறானாம். மின்சார ஷாக் சிகிச்சைக்கு ஐந்நூறு ரூபாய் தேவையென்று செங்கம்மா கையைப் பிசைந்து கொண்டு தவிக்கையில் அந்த டீக்கடைக்காரன் கோவாலிதான் பணம் கொடுத்து உதவினானாம். அந்தப் பணத்தைக் இட்டனிடம் கொடுத்து அவ்வப்போது டாக்டருக்குத் தரும்படி செங்கம்மா ஒப்படைத்திருக்கிறாளாம்.

அந்த டீக்கடைக்காரனை அவள் மணந்து கொண்டது இதனால்தானா!

செங்கம்மாவை மறுபடி பார்க்க வேண்டும்போல் மருதய்யனின் இதயத்தில் ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் ராத்திரி வேளையில் மட்டும் போகக்கூடாது என்று ஞாபகப்படுத்திக் கொண்டான்.

ஊர்ப்பருக்கும் பாக்டரிகளுக்கும் அடிக்கடி போய் வந்து கொண்டிருந்த ஒரு லாரிக் கம்பெனியில் மருதய்யனுக்காகச் சிபாரிசு செய்தான் இட்டன். டிரைவருக்கு உதவியாக வேலை கிடைத்தது.

பதினைந்து நாட்கள் வரை அவன் தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருந்தான்.



பதினாறாம் நாளன்று சாயந்தரம் ஐந்து மணி சுமாருக்கு ஒரு நெடுஞ்சாலையில் மக்கர் செய்து நின்றுவிட்டது லாரி.

லாரியின் அடியில் படுத்துக்கொண்டு பழுது பார்க்கலானான் டிரைவர்.

சுற்றுமுற்றும் நோக்கியபோது மருதய்யனுக்கு அந்த எண்ணம் வந்தது. ''அட, இது செங்கத்தின் குடிசை இருக்கிற ஏரியால்லவா?'' என்று சொல்லிக்கொண்டவன், ''இதோ வந்திடறேண்ணே,'' என்று டிரைவரிடம் கூறிவிட்டு அந்தக் குடிசையை நோக்கி நடந்தான்.

வீட்டில் கோவாலி இருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றியது. ஆனால் டீக் கடையில் சரியான கூட்டம் இருக்கும் நேரம் இது.. பள்ளிக்கூட வாசலில் கயிறு திரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ஓர் ஆளிடம், ''டீக் கடைக்காரர் இருக்கிறாரா?'' என்று விசாரித்துப் பார்த்தான். ''செங்கம் மட்டும்தான் இருக்குது,'' என்றான் அவன்.

குடிசைக்குள் எட்டிப் பார்த்து, ''செங்கம்!'' என்று மெதுவே குரல் கொடுத்தான்.

அம்மியில் அரைத்துக் கொண்டிருந்தவள் திரும்பினாள்.

மெல்ல அவள் இதழ்கள் பிரிந்து, அங்கே ஒரு புன்னகை பிறப்பதைக் கண்டான். அன்று செய்த அலட்சியத்தினால் அவள் கோபமாயிருப்பாள் என்று எண்ணியிருந்தவனுக்கு அது ஆறுதலளித்தது.

''நீ மறுபடி வருவேன்னு தெரியும்,'' என்று ஒலிலாகச் சிரித்துக் கொண்டே எழுந்து வந்தாள்.

''இட்டன் எல்லா விசயமும் சொன்னான் செங்கம்... உன் அப்பாவுக்காக, பாவம் நீ...''

''அதனாலே என்னைப் பார்த்து பேசணும்னு உனக்கு மனசு மாறிச்சாக்கும்?'' சிரிக்கச் சிரிக்க அருகில் வந்து

இழந்தவள், திடீரென வேங்கைபோல் சிலிர்த்துக் கொண்டாள். "ஆனால் நான் எதையும் மறக்கல்லே!" என்றாள் அடுத்த வினாடி. அவள் குரல் வீரிட்டெழுந்தது.

"ஐயய்யோ! அண்டை அசல்லே ஆம்பிளைங்க யாரும் இல்லியா? இந்தப் பாவி என்னைக் கையைப் பிடிச்சு இழுக்கிறானே! அண்ணே! ஓடியாங்க! ஓடியாங்க!" என்று ஓவென அலறி, புடவையின் முந்தானையைத் தரையில் நழுவவிட்டாள்.

கயிறு திரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஆள் ஒரே பாய்ச்சலாய் ஓடி வந்தான். அருவியாய்க் கண்ணீர் விடுத்தபடி இருக்கும் செங்கம்மாவையும், திகைத்து நின்றுவிட்ட மருதய்யனையும் மாறி மாறிப் பார்த்தான்.

இரும்புக் குண்டு போன்ற அவன் முஷ்டி இடியெனப் பாய்ந்தது மருதய்யனின் தாடையில்.

பீறிக் கொண்டு வந்தது சீற்றம் மருதய்யனுக்கு. இந்தச் சாதாரண ஆளா நம்மை அடிப்பது? ஒரே அறையில் அவனைச் சட்டினி செய்துவிட வேண்டாமா என்று துடித்தெழுந்தவன், உடனே ஏனோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். தள்ளாடி எழுந்திருக்க முயன்றபோது அந்த ஆள் மருதய்யனின் மார்பில் இரண்டு காலாலும் தாவி உதைத்து மறுபடி தள்ளினான்.

மின்னல் வேகத்தில் எதிர்த்துத் தாக்கி அந்த ஆளைப் பந்தாடியிருக்கக் கூடிய மருதய்யன், அவ்வளவையும் பொறுத்துக்கொண்டான். பல்லைக் கடித்துச் சகித்துக் கொண்டான்.

"சாமி, ஆளவந்தார்! அன்னைக்கொரு நாள் ஜெயில்லே நான், நீங்க, அந்தப் பெரியவர் ஜனார்த்தனம் மூணு பேருமாய்ப் பேசிக்கினு இருந்தப்போ, என்ன சோதனை நேர்ந்தாலும் சரி, மறுபடி வம்பு தும்பிலே மாட்டிக்கினு



ஜெயிலுக்குத் திரும்பிடக் கூடாதுன்னு நீங்க சொன்னீங்களே, அதுக்காக வேண்டி இத்தனையையும் பொறுத்துக்கிறேன். யார் என்ன செய்தாலும் சரி, அடி உதை வழிக்கு நான் போகக்கூடாதுன்னு திருப்பித் திருப்பிச் சொன்னீங்க இல்லே, அந்த வார்த்தைக்குக் கட்டுப்பட்டு இவ்வளவு அடியையும் தாங்கிக்கிறேன்," என்று அவன் முனகியது. அந்த ஆளுக்கோ செங்கம்மாவுக்கோ கேட்டிருக்க முடியாது.

அந்த ஆணின் கை தன் முதுகைப் பிளந்த அதே தருணம், உப்புக் கரிப்பான ரத்தம் வாய்க்குள் குபுகுபுவென்று பெருகுவதையும் மருதய்யன் உணர்ந்தான். புறங்கையால் வாயை வழித்தபோது கன்னத்திலும் நெற்றியிலும் ரத்தத்தின் கொழகொழப்புப் பரவிக் குமட்டல் வந்தது. அதற்குள் மீண்டும் அந்த கள் மருதய்யனின் கால்களைப் பிடித்திழுத்துத் தட்டாமாலை சுற்றி, இடுப்பை முழங்காலால் ஓர் அழுத்தத்துடன் முறித்து, நசுங்கிய வாழைத் தண்டை எறிகிற மாதிரி வீசிப் போட்டுவிட்டான்.

"நிறுத்துங்க, நிறுத்துங்க! ரொம்ப அடிச்சிட்டீங்களே?" என்றபடி செங்கம்மா ஓடி வந்து அவனைத் தாங்கிக் கொண்டாள்.

## ஐந்து

இதழ்கள் உதிர்ந்து விடாதபடி நாசூக்காக அந்த ரோஜா மாலையைச் சுருட்டினாற்போல் வைத்துக் கொண்டு காத்திருந்தார் அந்த செக்ரட்டரி. மொற மொறவென்ற வெள்ளை யூனிபாரம் அணிந்த டிரைவர் பின் கையைக் கட்டிக்கொண்டு ஆடாமல் அசையாமல் பதுமைபோல் அட்டென்ஷனில் நின்றிருந்தார். பழைய மாடல்தான் என்றாலும் அந்தக் செவர்லே கார் மெருகும் கவர்ச்சியும் கொண்டதாக மின்னிக் கொண்டிருந்தது.

இழைந்தவன், திடீரென வேங்கைபோல் சிலிர்த்துக் கொண்டான். ''ஆனால் நான் எதையும் மறக்கல்லே!'' என்றான். அடுத்த வினாடி. அவன் குரல் வீரிட்டெழுந்தது.

''ஐயய்யோ! அண்டை அசல்லே ஆம்பிளைங்க யாரும் இல்லியா? இந்தப் பாவி என்னைக் கையைப் பிடிச்சு இழுக்கிறானே! அண்ணே! ஓடியாங்க! ஓடியாங்க!'' என்று ஓவென அலறி, புடவையின் முந்தானையைத் தரையில் நழுவவிட்டாள்.

கயிறு திரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஆள் ஒரே பாய்ச்சலாய் ஓடி வந்தான். அருவியாய்க் கண்ணீர் விடுத்தபடி இருக்கும் செங்கம்மாவையும், திகைத்து நின்றுவிட்ட மருதய்யனையும் மாறி மாறிப் பார்த்தான்.

இரும்புக் குண்டு போன்ற அவன் முஷ்டி இடியெனப் பாய்ந்தது மருதய்யனின் தாடையில்.

பிரிக் கொண்டு வந்தது சீற்றம் மருதய்யனுக்கு. இந்தச் சாதாரண ஆளா நம்மை அடிப்பது? ஒரே அறையில் அவனைச் சட்டினி செய்துவிட வேண்டாமா என்று துடித்தெழுந்தவன், உடனே ஏனோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். தள்ளாடி எழுந்திருக்க முயன்றபோது அந்த ஆள் மருதய்யனின் மார்பில் இரண்டு காலாலும் தாவி உதைத்து மறுபடி தள்ளினான்.

மின்னல் வேகத்தில் எதிர்த்துத் தாக்கி அந்த ஆளைப் பந்தாடியிருக்கக் கூடிய மருதய்யன், அவ்வளவையும் பொறுத்துக்கொண்டான். பல்லைக் கடித்துச் சகித்துக் கொண்டான்.

''சாமி, ஆளவந்தார்! அன்னைக்கொரு நாள் ஜெயில்லே நான், நீங்க, அந்தப் பெரியவர் ஜனார்த்தனம் மூணு பேருமாய்ப் பேசிக்கினு இருந்தப்போ, என்ன சோதனை நேந்தாலும் சரி, மறுபடி வம்பு தும்பிலே மாட்டிக்கினு



ஜெயிலுக்குத் திரும்பிடக் கூடாதுன்னு நீங்க சொன்னீங்களே, அதுக்காக வேண்டி இத்தனையையும் பொறுத்துக்கிறேன். யார் என்ன செய்தாலும் சரி, அடி உதை வழிக்கு நான் போகக்கூடாதுன்னு திருப்பித் திருப்பிச் சொன்னீங்க இல்லே, அந்த வார்த்தைக்குக் கட்டுப்பட்டு இவ்வளவு அடியையும் தாங்கிக்கிறேன்,'' என்று அவன் முனகியது. அந்த ஆளுக்கோ செங்கம்மாவுக்கோ கேட்டிருக்க முடியாது.

அந்த ஆணின் கை தன் முதுகைப் பிளந்த அதே தருணம், உப்புக் கரிப்பான ரத்தம் வாய்க்குள் குபுகுபுவென்று பெருகுவதையும் மருதய்யன் உணர்ந்தான். புறங்கையால் வாயை வழித்தபோது கன்னத்திலும் நெற்றியிலும் ரத்தத்தின் கொழகொழப்புப் பரவிக் குமட்டல் வந்தது. அதற்குள் மீண்டும் அந்த கள் மருதய்யனின் கால்களைப் பிடித்திழுத்துத் தட்டாமாலை சுற்றி, இடுப்பை முழங்காலால் ஓர் அழுத்தத்துடன் முறித்து, நசுங்கிய வாழைத் தண்டை எறிகிற மாதிரி வீசிப் போட்டுவிட்டான்.

''நிறுத்துங்க, நிறுத்துங்க! ரொம்ப அடிச்சிட்டீங்களே?'' என்றபடி செங்கம்மா ஓடி வந்து அவனைத் தாங்கிக் கொண்டாள்.

## ஐந்து

இதழ்கள் உதிர்ந்து விடாதபடி நாசூக்காக அந்த ரோஜா மாலையைச் சுருட்டினாற்போல் வைத்துக் கொண்டு காத்திருந்தார் அந்த செக்ரட்டரி, மொற மொறவென்ற வெள்ளை யூனிபாரம் அணிந்த டிரைவர் பின் கையைக் கட்டிக்கொண்டு ஆடாமல் அசையாமல் பதுமைபோல் அட்டென்ஷனில் நின்றிருந்தார். பழைய மாடல்தான் என்றாலும் அந்தக் செவர்லே கார் மெருகும் கவர்ச்சியும் கொண்டதாக மின்னிக் கொண்டிருந்தது.

சென்டிரல் ஜெயிலின் கதவு திறந்தது.

படிய வாரிய தலையும், ட்ரிம்மான பான்ட் ஸ்லாக்கும் கொண்டவனாக ஆளவந்தார் வெளிப்பட்டான். அவனை அனுப்பி வைப்பதற்காகக் கூடவே வந்த குட்டி அதிகாரியை, அவர் எதிர்பார்க்காத முறையில் கையைப் பற்றிக் குலுக்கி, "தாங்க்யூ", என்று விடைபெற்றுக் கொண்டு காரை நோக்கி வந்தான்.

டிரைவர், நின்றிருந்த இடத்திலிருந்து ஓரடி முன்வந்து மிடுக்கான ஒரு சல்யூட் அடித்துவிட்டுப் பழையபடி பின்னே நகர்ந்து கொண்டு கதவைத் திறந்தார். செக்ரட்டரி, "குட் மார்னிங்," என்று கூறி, மாலையுடன் நெருங்கினார்.

"இருங்கள்," என்று அவரைத் தடுத்தான் ஆளவந்தார். "சொல்லியிருந்தேனே, எடுத்து வந்திருக்கிறீர்களா?"

"காருக்குள் இருக்கிறது, சார்," என்றார் டிரைவர்.

"அப்படியானால் ஒரு நிமிடம் இருங்கள்," என்ற அவன் காரின் அகன்ற பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டு, கதவை மேலாகச் சாத்திக் கொண்டான். ஸீட்டின் முதுகுப் புறத்தில் காலர் வைத்த சில்க் ஜிப்பாவும் டைட் பாண்ட்ஸூம் வைக்கப்பட்டிருந்தன. வண்டிக்குள் அமர்ந்தபடியே உடைகளை மாற்றிக் கொண்டான். பழைய உடைகளைச் சுருட்டிப் பந்தாக்கி டிரைவர் ஸீட்டில் எறிந்துவிட்டு, தலையை இன்னொரு முறை நன்கு சீவிவிட்டுக் கொண்டு, முன்புறமிருந்த சிறு கண்ணாடியில் தன்னைப் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டான். பின்னர் காருக்கு வெளியே வந்து, தோரணையாக நின்று கொண்டு, "இப்போது போடுங்கள்," என்றான்.

செக்ரட்டரி பணிவோடும் பயத்தோடும் ரோஜா மாலையை அணிவித்தபோது, அவன் முகத்தில் பெருமிதம்



ஜொலித்தது. "போட்டோகிராபர் யாரும் வரவில்லையா?" என்றான்.

புகைப்படக்காரரை அழைத்து வராதிருந்துவிட்டோமே என்று அப்போதுதான் செக்ரட்டரிக்கு ஞாபகம் வந்தது. "இல்லை.. வரக் காணோம்.." என்று மென்று விழுங்கினார்.

"ஏன்? கேஸ் நடந்துகொண்டிருந்தபோது விழுந்து விழுந்து விழுந்து படம் பிடித்தார்களே? இப்போது தேவையில்லாமல் போய்விட்டதாமா?" என்று அவன் சிரித்தான். சிறை வாசலை ஏறிட்டுப் பார்த்தபோது, எட்டத்தில் சில பார்ட் டைம் சிப்பந்திகளும் அன்றாடக் கூலிகளும் கையைக் கட்டிக் கொண்டு நின்றிருப்பது தெரிந்தது.

பணம் கொண்டு வந்திருக்கிறீர்களல்லவா?" என்று செக்ரட்டரியைக் கேட்டான்.

"இதோ சார்," என்று கனமான பர்ஸை நீட்டினார் அவர். "சில்லறையாகவே ஆயிரம் இருக்கிறது."

அவன் கை தட்டி, எட்ட நின்றிருந்தவர்களை அருகில் அழைத்தான். ஐந்தும் பத்துமான நோட்டுக்கள் கிடுகிடுவென விநியோகமாயின. சில தாய்மார்களின் இடுப்பிலிருந்த குழந்தைகள்கூட அந்தத் தர்மத்துக்குத் தப்பவில்லை.

"புறப்படலாமா டாக்-" என்று கேட்க வாயெடுத்த செக்ரட்டரி சட்டெனத் தம்மைத் திருத்திக் கொண்டு, "புறப்படலாமா சார்?" என்று கேட்டார்.

அவன் புருவங்கள் நெற்றிக்கு ஏறின. "என்ன கேட்டீர்கள்?"

"புறப்படலாமா என்று கேட்டேன்."

"அது காதில் விழுந்தது. அதற்கப்புறம் ஏதோ சொன்னீர்களே?"

செக்ரட்டரி நெளிந்தார்.

"சொல்லுங்கள் தைரியமாய்."

"புறப்படலாமா டாக்டர் என்று கேட்க நினைத்தேன். வாயில் வந்துவிட்டது."

"அதைத் தாராளமாய்க் கேளுங்கள். டாக்டர் என்று வாயில் வந்து விட்டதற்காக உம்மை யாரும் ஜெயிலில் போட்டுவிட மாட்டார்கள். புரிகிறதா?"

"புரிகிறது - டாக்டர்."

"தட்ஸ் குட்."

**தூ**ரத்தில் காரின் ஹாரன் கேட்டதுமே வாட்ச்மேன் இரண்டு கேட்டுகளையும் அகலத் திறந்துவிட்டு விறைப்பாக நின்று கொண்டான். கறுப்பு ஹோஸ் பைப் மூலம் தோட்டத்துச் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தோட்டக்காரன், குழாயை நிறுத்திவிட்டு, கை கட்டிக் கொண்டு ஒதுங்கி நின்றான்.

சாலையிலிருந்து மிக உள்ளடங்கி, தட்டையாக, ஆனால் நீளமாக இருந்தது அந்தப் பங்களா. மாடி கிடையாது. தோட்டத்திலிருந்து பார்த்தாலே மாடிப் பரப்பின் கான்கிரீட் தளம் தெரியும்படி இருந்தது. கார் பாதித் தோட்டத்தைக் கடக்கையில், "கொஞ்சம் நிறுத்து," என்றான் ஆளவந்தான். வண்டி ஒரு குலுங்கலுடன் நின்றதும் இறங்கி, தோட்டத்தை ஒரு நோட்டம் பார்த்தவன், "முனுசாமி! இப்படி வா," என்று தோட்டக்காரனைக் கூப்பிட்டான்.

"இதோங்க," என்று ஓடி வந்தான் தோட்டக்காரன்.

"அடுத்த வாரம் ரோஜா எக்ஸிபிஷன் இல்லை? பதினெட்டாம் தேதி?"

"ஆமாங்க."

"பாத்தி போடுவதற்கு முன்னாலே டிடிடி ஸ்ப்ரே நன்றாய்ச் செய்திருக்கிறாயா?"



"செய்தேங்க, எஜமான்."

ஆளவந்தாரின் பார்வை மீண்டும் ரோஜாக்களின் மீது சென்றது. "ஜட்ஜுகள் வருகிற போது, கனகச்சிதமாய் இருக்க வேண்டும். தெரிகிறதா? அதோ பார், இலைகளெல்லாம் ஒரே தூசி. அழுக்கு. கந்தல் துணி எடுத்து வந்து ஒவ்வொரு இலையையும் துடைத்துவிடு. வாடி உலர்ந்து கொண்டிருக்கிறது பார், மூன்று நாலு மொட்டு. அவ்வப்போது கிள்ளி எறிந்து விடு. என்ன?"

"ஞாபகம் வைக்கக்கிறேங்க, எஜமான்."

அவன் மறுபடி காருக்குள் ஏறிக்கொள்ளவில்லை. "ஷெட்டில் விட்டு விடு," என்று டிரைவருக்குக் கட்டளை விட்டுவிட்டு, தோட்டத்தின் பாதையோரமாக மற்றச் செடிகளையும் ஆராய்ந்தவாறு போர்ட்டிகோவை அடைந்தான். படியேறப் போனவன், சுவரைக் கண்டதும் கீழுதட்டைக் கடித்துக் கொண்டு நின்றான்.

பின்னாலேயே வந்த செக்ரட்டரி, அவன் எதைக் கவனிக்கிறான் என்பதைக் கண்டு கொண்டு, தர்ம சங்கடப் பட்டவராக, "வந்து.... கேஸ் நடந்து கொண்டிருந்தபோது போலீசில் கழட்டிக் கொண்டு போய்விட்டார்கள் டாக்டர் என்று போட்டிருந்த போர்டை...." என்று தயங்கித் தயங்கித் தெரியப்படுத்தினார்.

"அதைப் பற்றிக் கவலையில்லை. போர்டைப் பெயர்த்த இடம் எத்தனை விகாரமாய் இருக்கிறது. கவனித்தீர்களா? அந்தப் பொக்கையைச் சிமெண்ட் பூசி, பெயிண்ட் பண்ணியிருக்கக் கூடாது?"

"இன்றைக்கே கவனிக்கிறேன், சார்."

ஹாலில் சம்பிரதாயமான சோபா நாற்காலி போடப் படாமல், பிரம்மாண்டமான வட்ட வடிவத்தில் ஒரு மெத்தை போடப்பட்டிருந்தது. அதன்மீது பூ வேலைப்பாடுள்ள ராஜஸ்தான் கதர் விரிக்கப்பட்டு, ஓரங்களில் பெரும் திண்டுகள்

போடப்பட்டிருந்தன. திண்டுகளிலொன்றை அணைத்தாற் போல் கையை ஊன்றிக் கொண்டு அவன் உட்கார்ந்ததும், நுரை ததும்பும் ஓவல்டின் எடுத்து வந்த சமையற்காரன், ''வணக்கம் எஜமான்,'' என்றான்.

ஆளவந்தார் செக்ரட்டரியை நோக்கினான். ''ஹவுஸோல்ட் ஸ்டாஃபில் யாரையும் அனுப்பிவிட வில்லையே?''

''இல்லை சார். க்ளினிக்கில் தான் பார்மஸிஸ்ட் ரத்தினவேலுவும் ஆபீஸ் பாய் ரஷீதும் வேலையிலிருந்து நின்று கொள்வதாகச் சொன்னார்கள். மூன்று மாதச் சம்பளம் கொடுத்து அனுப்பிவிட்டேன்.''

''கழுதைகளுக்கு ஒரு பைசாகூடக் கொடுத்திருக்க வேண்டாம். நமக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்களாயிற்றே? போகட்டும், க்ளினிக் சுத்தமாயிருக்கிறதா?''

''பத்திரமாய்ப் பூட்டிவைத்திருக்கிறது. வாரத்துக்கொரு முறை போய் கன்ஸல்டிங் ரூம், டிஸ்பென்ஸரி இரண்டையும் ஒழுங்கு பண்ணிவிட்டு வருகிறோம். மருந்துகளை அப்போதே ஸீல் பண்ணிவிட்டார்கள்...''

''ஓ.கே. இன்றைக்கு என்ன எங்கேஜ்மெண்ட்?''

''லாயர் வரலட்சுமி அம்மாள் பதினொரு மணிக்கு வருகிறார்.''

''வரட்டும்.'' ஹாலின் மூலையில், அளவெடுத்தாற் போல் செய்த அலமாரியில் ஒரு வீணை செங்குத்தாக நிறுத்தப்பட்டிருந்தது. அவன் எழுந்து சென்று ஆசையுடன் ஒரு வினாடி பார்த்தபடி நின்றவன் வீணையை அணைத்து எடுத்துக் கொண்டான். பக்கத்து ஷெல்பிலிருந்து, 'வீணா சுப போதினி' என்ற சிறிய புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு மெத்தைக்குத் திரும்பினான்.



''கடைசியாகச் சாதகம் பண்ணிக்கொண்டிருந்தது சாரங்கா கிருதி இல்லை?'' என்று செக்ரட்டரியைக் கேட்டதற்கு, அசட்டுச் சிரிப்பொன்றுதான் பதிலாக வந்தது.

''உங்களுக்கு நினைவில்லாவிட்டாலும் எனக்கு நினைவிருக்கிறது,'' என்றவன் பிருகடைகளை முறுக்கிச் சுருதி சேர்த்துக் கொண்டான். மெட்டுகள் கலைந்திருந்ததால் அவ்வளவு விரைவாகவோ, எளிதாகவோ சுருதி சேரவில்லை. ஓரளவுக்குச் சரி செய்து கொண்டபின், 'நீவாட நே கான' என்ற கிருதியை வாசித்துக் கொணடே, ''டிரைவரைக் காரை எடுத்துக் கொண்டு டவுனில் ஆண்டர்ஸன் தெருவுக்குப் போகச் சொல்லுங்கள். அழகான இன்விடேஷன் கார்டு நூறு வாங்கிவர வேண்டும். கோல்ட் லெட்டர்ஸில் எம்பாஸ் செய்ததாக வாங்கச் சொல்லுங்கள்,'' என்றான்.

''என்ன இன்விடேஷன் சார்?''

அனுபல்லவியையும் வாசித்து முடித்த பிறகே அவன் பதில் கூறினான்: ''என்னுடைய முன்னாள் பேஷண்டுகள் - டாப் க்ளையண்ட்டுகள் - நூறு பேருக்குப் பார்ட்டி அழைப்பு அனுப்ப வேண்டும். பேப்பரும் பென்சிலும் எடுத்து வாருங்கள். இன்விடேஷனுக்கான விஷயத்தைச் சொல் கிறேன்.''

செக்ரட்டரி பென்சில், பாக்கெட் நோட்டுடன் திரும்பி வந்தார். 'சத்யம்பு நித்யம்பு...' என்ற சரணத்தை நிரவல் செய்து கொண்டே, அவன் டிக்டேட் செய்தான்; ''எனதன்புள்ள நண்பருக்கு, நான் சிறையிலிருந்து விடுதலையாகி வந்ததைக் கொண்டாடும் பொருட்டு, வருகிற ஞாயிற்றுக்கிழமை 6 மணிக்கு என் இல்லத்தில் ஒரு தேனீர் விருந்து அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். தாங்கள் தவறாமல் வந்து கலந்து கொண்டு என்னைக் கௌரவிக்க வேண்டும். ஆளவந்தார்.''

''அவ்வளவுதானா சார்?''

''அவ்வளவுதான். கார்டுகள் வந்ததும் நல்ல பிரெஸ்ஸில் கொடுத்து, மாடர்ன் டைப்பில் பிரிண்ட் பண்ணச் சொல்லுங்கள். நூறே நூறு போதும்.''

போர்ட்டிகோவில் கார் நிற்க, லாயர் வரலட்சுமி அம்மாள் இறங்கி வந்தாள்.

வயது நாற்பது நாற்பத்தைந்துதான் இருக்கு மென்றாலும், முகத்தின் சுருக்கமும், மூக்குக் கண்ணாடியும் இரட்டை நாடி உடம்பும் அவளை அறுபது வயதுக்காரியாகக் காட்டின.

''இன்றைக்குத்தான் வந்தீர்களா?'' என்று, ஏதோ ஊரிலிருந்து வந்தவரை விசாரிப்பது போலக் கேட்ட வண்ணம் மெத்தையின் இன்னொரு கோடியில் அமர்ந்து கொண்டு உஸ் எனப் பெருமூச்செறிந்தாள் அவள்.

குறிப்பறிந்த செக்ரட்டரி. மின்சார விசிறியை இதமாகச் சுழல விட்டுவிட்டு, ''நான் அந்த இன்விடேஷன் விஷயம் கவனிக்கிறேன் சார்.'' என்று கூறிவிட்டு அகன்றார்.

''லாயர், கோபித்துக் கொள்ளாமல் இருந்தால் ஒன்று சொல்கிறேன்,'' என்றான் ஆளவந்தார் வீணையை மடியிலிருந்து இறக்கி வைத்துவிட்டு.

''என் உடம்பைப் பற்றித்தானே?''

''ஆமாம். யோகாசனம் தான் உங்களுக்கு பெஸ்ட். முக்கியமாக. பத்ராசனம் செய்யுங்கள். எப்படித் தெரியுமோ, இல்லையோ? இரண்டு பாதங்களும் ஒன்றோடொன்று சேர்த்து குவிந்து நமஸ்தே செய்கிற மாதிரி - இப்படி..'' தரையில் உட்கார்ந்து பத்ராசனம் போட்டுக் காட்டினான் அவன்.

''ஆகட்டும், தொழிலையெல்லாம் மூட்டை கட்டி வைத்த பிறகு யோகாசனத்தில் இறங்குகிறேன்,'' என்று சிரித்துக்கொண்டே பதில் கூறிய வரலட்சுமி அம்மாள், தோல்



பையிலிருந்து சில தஸ்தாவேஜுகளை வெளியெடுத்தாள். ''இந்தப் பேப்பர்களில் கையெழுத்துப் போடுங்கள்.''

கையெழுத்தை வரிசையாகப் போட்ட வண்ணம், ''எஸ்டேட்டெல்லாம் அப்படியேதானே இருக்கிறது?'' என்றான் அவன்.

''நீங்கள் சொல்லிவிட்டுப் போயிருந்தபடியே பேமெண்ட்கள் செய்து வந்திருக்கிறேன். உங்கள் செக்ரட்டரியைக்கூட நம்பி அதிகப்படியாய் ரொக்கம் கொடுப்பது கிடையாது. கோர்ட் அபராதம்தான் ஒரு பெரிய தொகை. அப்போதே கட்டியாகிவிட்டது.''

15624

''அது போதாதென்று இம்ப்ரிஸன்மெண்ட்டையும் நான் அனுபவித்துவிட்டு வந்தாயிற்று,'' என்று குரலில் சிறிதும் வெறுப்புக் காட்டாமல் புன்னகையுடன் சொன்னான் அவன்.

''அடுத்தபடி என்ன செய்வதாக உத்தேசம்?''

''யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

**ஞா**யிற்றுக்கிழமை ஐந்தே முக்கால் மணி.

போர்ட்டிகோவின் மேல்படியை ஒட்டி, வெராந்தாவில் போடப்பட்டிருந்த கிராதியில் கையை ஊன்றிக்கொண்டு தோட்டத்தை ஆராய்ந்த ஆளவந்தார் தனக்குள் மர்மமாகச் சிரித்துக் கொண்டான்.

பிலியர்ட்ஸ் மேஜை மாதிரி சீரான பச்சைப் பரப்பாக விரிந்திருந்த புல் வெளியில், புறாக்களின் நடமாட்டத்தைப் போல ஸர்வர்கள் மேஜைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர். இருவர் இருவராக அமரக்கூடிய ஐம்பது மேஜைகள். ஐஸ் வாட்டர் கிளாஸ்கள். பூச்சாடிகளில் கொத்தோடு பறித்து வந்து செருகப்பட்ட மலர்கள். தூரத்தில் நிறுத்தியிருந்த சிற்றுண்டி வண்டியிலிருந்து சூடான காப்பியின் மணமும் ஜில்லென்ற ஐஸ்கிரீமின் வாசனையும் கலந்து வீசின.

மணி ஐந்து ஐம்பத்தெட்டு.

தயங்கித் தயங்கி எதிரில் வந்து நின்றார் ஓட்டல் சூப்பர்வைசர்.

''என்ன?'' என்றான் ஆளவந்தார்.

''மணி ஆறாகப் போகிறது. இன்னும் ஒருத்தர்கூட வரக் காணோமே? கொஞ்சம் நேரம் ஆகுமோ?''

''இல்லையில்லை, ஆகாது.''

சூப்பர்வைசரின் முகம் மலர்ந்தது. கர்சீப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டார். ''டயப்படி வந்து விடுவார்கள் என்கிறீர்கள்?''

''இல்லை. வரவே மாட்டார்கள் என்கிறேன்.''

சரியாய்க் காதல் விழவில்லை என்பது போல் அவனைப் பார்த்தார் சூப்பர்வைசர்.

''யாருமே வரமாட்டார்கள் என்கிறேன். அது எனக்குத் தெரிந்ததுதான்,'' என்று மறுபடியும் அமைதியாகப் பதில் வந்தது.

''பின்னே...''

''எத்தனை பேருக்கு முதுகெலும்பு இருக்கிறது என்பதைக் கணக்குப் பார்த்தேன்.'' ஆபீஸ் ரூம் வாசலில் நின்றிருந்த செக்ரட்டரியிடம் கேட்டான் அவன். ''நமது இன்விடேஷனுக்குப் பதிலோ போனோ செய்தவர்கள் எத்தனை பேர்?''

''மூன்று பேர் சார் - வருவதற்கில்லை, வேறு எங்கேஜ் மெண்ட் இருக்கிறது என்றார்கள்.''

''நூறு பேரில் மூன்று பேருக்கு வாழைக் குருத்தளவாவது முதுகெலும்பு இருக்கிறது.'' சிரித்தான் ஆளவந்தார். சூப்பர்வைசரை நோக்கித் திரும்பினான்.



''சரியாய் ஆறு பத்துவரை பாருங்கள். பிறகு மேஜைகளைக் கலைத்து வண்டியில் ஏற்றிவிடலாம்.''

அந்த ஆள் திடுக்கிட்டுப் போனார். ''பார்ட்டி ஐட்டம்கள்... ஸ்வீட், ஐஸ் கிரீம்...''

''பக்கத்திலே நிறைய ஏழைக் குடும்பங்கள் இருக்கிறது. கார்ப்பரேஷன் காலனி இருக்கிறது. எல்லாருக்கும் வழங்குங்கள். சந்தோஷமாய்ச் சாப்பிடுவார்கள். என்ன முழிக்கிறீர்? செக் நான் தந்து விடுவேன்.''

ஆறு பத்து.

மேஜை விரிப்புக்கள் மடிக்கப்பட்டன. தண்ணீர் டம்ளர்கள் காலி செய்யப்பட்டன. சாடிப் பூக்கள் தோட்டத்தின் மூலையில் குவிந்தன.

49' வது மேஜை மடக்கப்பட்ட சமயம், கேட்டுக்குள் ஒரு கார் நுழைந்தது. அதில் ஓர் இளம் பெண் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

''ஒரு மேஜை இருக்கட்டும்,'' என்று ஆளவந்தார் கட்டளையிட்டான்.

## ஆறு

ஆறடித்துப் பத்து நிமிடமான உடனேயே இனிமேல் எந்த விருந்தாளியையும் வரவேற்கத் தேவையிருக்காதென்று ஆளவந்தார் தன் விருந்து உடைகளைக் களைந்துவிட்டு, டென்னிஸ் விளையாடப் போவதற்கான ஷார்ட் அணிந்திருந்தான். அந்தக் கோலத்தில் அவனைப் பார்த்ததால் அடையாளம் தெரியவில்லையோ அல்லது நாளாகிவிட்டதால் முகம் மறந்துவிட்டதோ, அவள் தயங்கி நின்று... ''நீங்கள்தானே.. டாக்டர் ஆளவந்தார்..'' என்று இழுத்தாள்.

''ஆளவந்தார்,'' என்று மட்டுமே ஒப்புக் கொண்டவனாக அவனை மேலும் கிழுமாக நன்கு பார்த்தான். காரிலிருந்து இறங்கும்போதே அவள் கவர்ச்சியான பெண்ணாகத் தான் தோன்றினாளென்றாலும் அதற்குக் காரணம் அவள் உடுத்திருந்த உடையோ செய்து கொண்டிருந்த மேக்கப்போ அல்ல என்பதை இப்போது கண்டான். உண்மையில் சொல்லப் போனால் அவள் சாதாரணமான டிரெஸ்ஸில்தான் இருந்தாள். ஆனாலும் அவளுடைய முகத்திலும் தோற்றத்திலும் ஒரு மறைக்க முடியாத ஈர்ப்பு இருப்பதைக் கண்டான்.

காம்பவுண்டுக்கு வெளியே ஏகப்பட்ட சிறுவர்கள் கூட்டம்... பார்ட்டிக்காக வரவழைக்கப்பட்ட பண்டங்களை அவன் கட்டளைப்படி சர்வர்கள் இலவச விநியோகம் செய்து கொண்டிருந்தார்கள். ''உட்காருங்கள்,'' என்று ஒரு நாற்காலியை அவளுக்குக் காட்டிவிட்டு, ''ஐஸ்கிரீம் மிச்சமிருந்தால் எடுத்துவாப்பா,'' என்று ஒரு வெயிட்டருக்கு உத்தரவிட்டான்.

''மன்னிக்கணும் டாக்டர், நான் பார்ட்டிக்காக வரவில்லை,'' என்றாள் அவள்.

''கடைசியில் நீங்களும் அவ்வளவுதானா?'' என்று விரக்தியுடன் சிரித்தான் ஆளவந்தார்.

''என்னை நினைவில்லையா டாக்டர்? என் பெயர் அனுபமா. என் அத்தைக்கு நீங்கள் ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கொண்டிருந்த போதுதான்..''

அவள் நிறுத்தியதை ஆளவந்தார் பூர்த்தி செய்தான். ''...போதுதான் என்னை அரெஸ்ட் செய்து அழைத்து சென்றார்கள். நன்றாய் நினைவிருக்கிறது. ஊசி மருந்தை அப்போதுதான் உடைத்து ஸிரிஞ்சில் ஏற்றிக் கொண்டிருந்தேன். இன்ஸ்பெக்டர் வரதராஜன் என்னைத் தோளில் தட்டி ஜீப்புக்கு அழைத்துச் சென்றார். பிறகு நான் உங்கள் வீட்டுக்கும் வரவில்லை. என் வீட்டுக்கும் திரும்பவில்லை. உட்காருங்கள்.''



''என் அத்தையை நீங்கள் இப்போதே பார்த்தாக வேண்டும் டாக்டர்,'' மன்றாடினாள் அனுபமா. ''உங்களிடமிருந்து இன்விடேஷன் வந்ததுமே நான் அத்தையிடம் என்ன சொன்னேன் தெரியுமா? 'இனிமேல் துளிகூடக் கவலையில்லை, அத்தை. நம்ம டாக்டர் ஆளவந்தார் விடுதலையாகி வந்து விட்டார். படுத்த படுக்கையாகக் கிடந்த உங்களை உட்கார வைத்தவராயிற்றே! உங்களை ஜம்மென்று நடமாடும்படியும் பண்ணி விடுவார் பாருங்கள்' என்றேன். வாருங்கள்.''

''நான் வருவதோ வராததோ இருக்கட்டும். முதலில் நீ சாப்பிடு,'' என்று ஐஸ்கிரீம் கோப்பையை அவளிடம் கொடுத்தான் அவன். நேரம் தாண்டிவிட்ட காரணத்தினால் காகிதக் கோப்பை கொளகொளத்துப் போயிருந்தது.

அனுபவமா வெளியே பார்வையை ஓட்டினாள். ''பார்ட்டி இவ்வளவு சீக்கிரமாகவா முடிந்துவிட்டது?''

''அழைப்பை ஏற்றுக் கொண்ட ஒரே கெஸ்ட் நீதான்,'' என்று சிரித்தான் ஆளவந்தார். ''பழைய டாக்டர் ஆளவந்தாராக இருந்தால் இந்த 'லான்' போதுமானதாயிருந்திருக்காது. நான் நீ என்று வந்திருப்பார்கள். ஜெயிலுக்குப் போய்வந்த ஆளவந்தார் என்றால் யாருக்கும் சுவாரஸ்யமில்லை. ஏன், இங்கே வந்து என் முகத்தில் விழிக்கவே அவர்களுக்கு வெட்கமாயிருக்கிறது போலிருக்கிறது. நான் ரொம்பப் பிரமாதமாய்த்தான் ஏமாற்றிவிட்டேன் அவர்களை? இல்லை? நீ என்ன நினைக்கிறாய் அனுபமா?''

''நான் உங்களை டாக்டராக, அதுவும் டாக்டர்களில் ஒரு ஜீனியஸாக நினைக்கிறேன், நம்புகிறேன்,'' என்றாள் அவள்.

ஆளவந்தார் ஐஸ் கிரீம் ஸ்பூனைப் பல்லில் கவ்வியபடி காலை நீட்டிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

அவன் முகத்தில் ஒரு திருப்தி பரவியிருந்தது. பாதி மூடிக் கொண்டிருந்த கண்களில் ஒரு கர்வம் பளபளத்தது.

டாக்டர்களில் அவன் ஒரு ஜீனியஸ்! எவ்வளவு கரெக்டாய் வர்ணித்து விட்டாள் அனுபமா!

'டேய் குட்டி டாக்டர்' என்று ஒரு குரல் அவனுக்குள் ஒலித்தது. எவ்வளவோ முறை ஒலித்து அவனைச் சிலிர்த்தெழ வைத்தது போல் இன்றும் ஒலித்தது.

அது - அந்தக் குட்டி டாக்டர் பட்டம் - வேடிக்கையாகச் சூட்டப்பட்டது. பதினாறு பதினேழு வருடங்களுக்கு முன்பு. அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டோ, பதின்மூன்றோ இருக்கும்.

செங்கோட்டையில் - ஆம். எஸ்.ஜி. கிட்டப்பாவின் பிறந்த ஊரான செங்கோட்டையில்தான் - செம்மண் புழுதி வீசும் பஸ் ஸ்டாண்டுக்குக் கொஞ்ச தூரத்தில் அவனுக்கு வீடு. பக்கத்திலே ஒரு பிள்ளையார் கோவில். அங்கே அவன் அப்பா குருக்களாக இருந்து வந்தார். ஆளவந்தார் ஒருவனைத்தான் பெற்றெடுத்தாள் அவன் தாய். இருந்தாலும் என்னவோ இருபது குழந்தைகள் பெற்றவளைப் போல் படுக்கைதான். ஆஸ்துமா நோயாளி.

பிள்ளையார் கோவில் சிறியதானாலும் மகிமை பெரிது. வெள்ளிக்கிழமையோ சதுர்த்தியோ வந்துவிட்டால் கூட்டம் பிளந்து தள்ளும். அப்பளக் குடுமியும் முழங்கால்வரை கட்டிய செட்டிக்கரை வேட்டியுமாக அவன்தான் அப்பாவுக்குப் பிரதம அஸிஸ்டெண்ட். தேங்காய் உடைத்துத் தருவான். குடலில்லைப் பொட்டலங்களைப் பிரித்துத் தட்டில் வைப்பான். சமயத்தில் திருநீறு விநியோகமும் நடத்துவான்.

சனிக்கிழமை காலை அவனுக்கு ஒரு ட்யூடி உண்டு. கடை கடையாய்க் குவிந்திருக்கும் தேங்காய் மூடிகளை ரகம் வாரியாய்ப் பிரித்து, அவசியமானால் சில்லுகளாகவும்



பெயர்த்து, அண்டை அசல் வீடுகளில் விற்று விட்டு வர வேண்டும். கடை விலையைக் காட்டிலும் குறைவாகையால் தாராளமாக எல்லாரும் வாங்கிக் கொள்வார்கள்.

அவனுடைய கஸ்டமர்களில் முக்கியமானவர் டாக்டர் சந்தானம். வாரத்துக்கு இருபது மூடிக்குக் குறைச்சலில்லாமல் அங்கே வியாபாரம் ஆகிவிடும். அம்மா கொடுத்த கித்தான் பையில் தேங்காய் மூடிகளுடன் அவன் அவர் வீட்டில் நுழையும்போது முன் வெராந்தாவில் யாருடைய வாயிலிருந்தாவது தர்மாமீட்டரை உருவி எடுத்துக் கொண்டிருப்பார் டாக்டர். அல்லது எவருடைய முழங்கால் மூட்டிலாவது தட்டி, 'இங்கே வலிக்கிறதா?' என்று கேட்டுக் கொண்டிருப்பார். ஆளவந்தார் நுழைந்ததும் 'என்னடா, தேங்காய் மண்டி! உள்ளே மாமிகிட்டே கொண்டு போய்க்கொடு,'' என்று அவனை விரட்டி விடுவாராயினும், அவருடைய திறந்து கிடக்கும் மேஜை ஆளவந்தாரின் கண்ணில் படத் தவறாது. அங்கேயும் சரி, இஸ்திரிப் பெட்டியையே பார்த்திராத டாக்டரின் தொளதொளத்த டிரௌசர் பாக்கெட்டிலும் சரி, நோட்டுக்களும் சில்லறைக் காசும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும்.

'அடேயப்பா! டாக்டராக ஆனால் இந்த அளவுக்குச் சம்பாதிக்க முடியுமா?' என்று சிறுவன் ஆளவந்தார் பிரமிப்பது உண்டென்றாலும் அதிலே மட்டும் அவன் மயங்கி விடவில்லை. பணத்தைக் காட்டிலும் பளபளப்பானது நாணயத்தின் ஓசையைக் காட்டிலும் இனிமையானது இன்னொன்றும் உண்டு ஒரு டாக்டரின் வாழ்க்கையில் என்று அவன் அந்த வயதிலேயே அறிந்து கொண்டான்.

''டாக்டர்! நீங்கள்தான் வந்து காப்பாற்றணும்...'' என்று கெஞ்சுகிறவர்கள். ''டாக்டர், நீங்கள் மனிதரில்லை. தெய்வம். பெரியவரைப் பிழைக்க வைத்து எங்கள் வீட்டில் விளக்கேற்றி வைத்தீர்களே...'' என்று நாத் தழுதழுக்க நன்றி சொல்பவர்கள்.

ஏன், ஒருமுறை ஒரு கிராமத்து ஆள் தன் குழந்தை பிழைத்தது என்பதற்காக டாக்டர் சந்தானத்தின் கால்களை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு தரையில் புரண்டு மகிழ்ந்த மறக்க முடியாத காட்சி -

இவையத்தனையும் ஆளவந்தாரின் இதயத்தில் ஒரு புரட்சியை நிகழ்த்திக் கொண்டிருந்த சமயம், அவன் தாய் நோய்ப் படுக்கையில் வீழ்ந்தாள். டாக்டரின் வீட்டுக்குப் போய் வருவதுகூட முடியாது என்ற நிலை வந்தபோது, டாக்டர் சந்தானம் தானே அவர்கள் வீட்டுக்கு வாரம் ஒருமுறை வந்து வைத்தியம் பார்க்கலானார். அப்போதெல்லாம் அவர் வாயிலிருந்து உதிரக்கூடிய சொற்களைத் தட்டில் ஏந்துகிற மாதிரி வாங்கிக் கொள்வான் ஆளவந்தார். அப்பாவுக்குப் பிள்ளையார் கோவிலில் எப்படி ஒத்தாசை செய்வானோ அதுபோல் பத்து மடங்கு பயபக்தியாக டாக்டருக்குப் பணிவிடை செய்வான். சிரிஞ்சை ஸ்டிரைலைஸ் செய்து தருவான். ஸ்டெதஸ்கோப்பை மடித்து அவருடைய தோல் பையில் பத்திரப்படுத்துவான். மருந்துச் சீட்டெழுதும்போது பேனாவில் இங்க் இல்லையென்றால் அரை நொடியில் போட்டுக் கொடுப்பான்.

அப்போதுதான் ஒருமுறை அவர், ''போன மாசம் ஒரு மாத்திரை எழுதித் தந்தேனே? ரொம்ப எஃபக்டிவ்வாக இருந்தது. பெயர் நினைவு வரவில்லை,'' என்று நெற்றிப் பொட்டைத் தட்டிக் கொண்டிருந்தபோது, ''கார்டோஸனா சார்?'' என்று அரை வினாடியே சொல்லி விட்டான்.

''டேய் குட்டி டாக்டர்! இனிமேல் நான் ரொம்ப ஜாக்கிரதையாயிருக்கணும். போட்டி பலமாயிருக்கே!'' என்று சிரித்தார் அவர்.

எப்படியும் டாக்டருக்குப் படித்துத்தான் தீருவது என்ற உறுதி அவனுக்கு ஹைஸ்கூல் பிராயத்திலேயே ஏற்பட்டு விட்டதால், பத்தாம் வகுப்புப் படிக்கையிலேயே அதற்கேற்ற



மாதிரி 'பயாலஜி' க்ரூப் மேற்கொண்டான். பி.யூ.ஸி.க்கு வந்தபோது, பொதுவாக நல்ல மார்க்குகள் வாங்கியிருந்த போதிலும், அவனுக்கு இடம் கொடுத்த பிரின்ஸிபால், ''ஏன் அனாவசியமாக ஸெகண்ட் க்ரூப் எடுக்கிறாய்? மெடிக்கலுக்குப் போவதென்றால் எக்கச்சக்கமாய்ச் செலவழிக்க வேண்டியிருக்கும். உன்னால் முடியுமா? பேசாமல் மூன்றாவது க்ரூப் எடுத்துக்கொள்.'' என்று அறிவுரை கூறினார். ஆளவந்தார் அதை ஏற்கவில்லை. பிடிவாதமாக இரண்டாம் க்ரூப்தான் எடுத்துப் படித்தான்.

ஆனால் பி.யூ.ஸி.க்கான எல்லாப் பாடங்களையும் ஒழுங்காகப் படித்தான் என்று சொல்வதற்கில்லை. அக்கம் பக்கத்திலுள்ள டாக்டர்களின் கிளினிக்குகளில் பழியாய்க் கிடப்பான். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தானாகவே செய்வான். எந்த மாதிரி நோயாளிக்கு எந்தமாதிரி மருந்து கொடுக்கிறார்கள் என்பதைக் கவனித்து வைத்துக் கொள்வான். டாக்டரைத் தேடிக்கொண்டு வருகிற மெடிக்கல் ரெப்ஸென்டேடிவ்களிடம் அலுப்பு சலிப்பில்லாமல் பேசுவான்...

சர்ஜரிதான் அவனுக்குத் தெரியவில்லை - நேரிடையான அனுபவம் தேவையாகையால். ஆனால் அரைப் பிஸிஷியனாகிவிட்டான். பி.யூ.சி முடிவுகள் வந்தபோது, மற்றப் பாடங்களில் அக்கறை செலுத்தாதல் இரண்டாம் வகுப்பில்தான் அவன் பாஸ் பண்ணியிருந்தான். நேசுரல் சயன்ஸில் ஏதோ கொஞ்சம் சுமாராய் மார்க் வாங்கியிருந்தான். ஆனால் அதுவும் கவைக்குதவாது என்று சொல்லிவிட்டார்கள். பத்து ரூபாய் பணம் கட்டி மருத்துவக் கல்லூரிகளின் விண்ணப்பத் தாள்களை வரவழைக்கவே அவனுக்குத் தகுதி போதாதென்றாகிவிட்டது.

வேறு வழியில்லாமல், பி.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி எடுத்துப் படிக்கலானான்.

தந்தை இறக்கும்போது கொஞ்சம் ரொக்கமும் அம்மா காலமானபோது கொஞ்சம் நகைகளும் வைத்துவிட்டுச் சென்றிருந்தார்கள். தன்னை ஏமாற்றிவிட்ட உலகத்துக்கு அசட்டுப் பட்டம் கட்டாமல் விடுவதில்லை என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாய் அவன் மனத்தில் வளரலாயிற்று.

ஒருநாள் பேப்பரில் தற்செயலாக ஒரு செய்தியும் புகைப்படமும் வெளியாகியிருப்பது கண்ணில் பட்டது. டாக்டர் ஆளவந்தார் என்ற ஒருவருக்கு அறுபதுக்கறுபது விழா நடைபெற்றதாம் எங்கேயோ திருவனந்தபுரத்தில்.

டாக்டர் ஆளவந்தார் டாக்டர் ஆளவந்தார் சொல்லிச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். நாக்கெல்லாம் இனிக்கிற மாதிரி இருந்தது.

அதன்பின் மிகவும் பொறுமையாக, எச்சரிக்கையாக, திறமையாகக் காரியத்தை ஆற்றலானான்.

மதுராந்தகத்துக்கும் திண்டிவனத்துக்கும் நடுவே ஒரு சிறிய கிராமத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டான். மதறாஸிலேயே தயார் செய்து வந்திருந்த பலகையை வீட்டு வாசலில் மாட்டினான்: ''டாக்டர் ஆளவந்தார், எம்.பி.பி.எஸ்.'' பேடண்ட் மருந்துகளையும் மாத்திரைகளையும் காப்ஸ்யூல் களையும் வரவழைத்துக் கொண்டான். 'என்னால் எந்த உயிருக்கும் தீங்கு ஏற்படாமல் காப்பாற்று' என்று மட்டும் ஆண்டவனிடம் முன்னதாக ஒரு வேண்டுகோள் விடுத்து விட்டு, 'பிராக்டிஸ்' ஆரம்பித்தான்.

ஏழை மக்களிடம் பணம் வாங்குவதில்லை என்பது அவன் ஏற்படுத்திக் கொண்ட முதல் நல்ல ஏற்பாடு. பிறகு அவனுடைய மிடுக்கு, தோரணை, கண்டிப்பு, தாராளம் முதலிய பலவகைக் குணங்கள் அவனுக்குக் கைகொடுத்தன.

'ஆளவந்தாரு ஒரு புது டாக்டர் வந்திருக்கார் பாரு...' என்று பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள். பின்னர்



திண்டிவனத்திலேயே மெயின்ரோடில் க்ளினிக் தொடங்கினான். தன் கீழே இரண்டு அசல் எம்.பி.பி.எஸ்.களை அமர்த்திக் கொண்டான்.

சென்னை மண்ணிலிருந்து புறப்பட்டுச் சென்ற ஒன்பதாவது வருடம் அவன் சென்னைக்கே திரும்பி வந்து, 'ஆளவந்தார் நர்ஸிங்ஹோம்' இந்திரா நகரில் ஆரம்பித்த போது, அவனுடைய பூர்வாசிரமத்தை ஆராயும் துணிவு எவருக்கும் ஏற்படவில்லை. அவனது கன்ஸல்ட்டிங் அறைக்கு வெளியில், வரிசையாகப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில், டஜன் கணக்கான பெரிய மனிதர்கள், கையில் பிளாஸ்டிக் டோக்கன்களுடன் எத்தனை நேரம் வேண்டுமானாலும் காத்திருப்பது சாதாரணக் காட்சியாகிவிட்டது.

அப்படி வந்தவர்களில் ஒருத்திதான் அனுபமா. நோயாளிகளின் வீட்டுக்கு 'விஸிட்' செல்வது அவனுக்குப் பிடிக்காதென்றாலும், அனுபமாவின் வற்புறுத்தலை மீறமாட்டாமல் ஒருநாள் அவள் அத்தையைப் பார்க்கச் சென்றான்.

அதைத் தொடர்ந்து மொத்தம் ஏழு விஸிட்டுகள் சென்றிருந்தபோது, நோயாளி கிடுகிடுவென்று குணமடைந்து கொண்டிருந்த சமயத்தில் ஒரு நாள் திடீரென்று அவனுடைய குட்டை உடைத்துவிட்டான், காத்திருந்த பல விரோதிகளில் ஒருவன்... அதெல்லாம் பழைய கதை.

''ஐஸ்கிரீம் சாப்பிட்டு முடித்துவிட்டேன்,'' என்று குரல் கொடுத்தாள் அனுபமா. ''இன்னும் ஏதாவது சாப்பிடச் சொன்னாலும் சாப்பிடுகிறேன். ஆனால் சாப்பிட்டு முடித்ததும் என்னுடன் நீங்கள் புறப்பட்டு வரவேண்டும் டாக்டர்.''

தோட்டத்தை வெறித்து நோக்கியவாறு மௌனமாயிருந்தான் ஆளவந்தார். எல்லா மேஜை நாற்காலிகளும் வண்டியில் ஏற்றியாகி விட்டது.

வெளியே சாலையில் ஒரு காரின் ஹாரன் ஸ்டக் அப் ஆகிவிட்டதால் நீண்ட அவல ஓசை ஒலித்து, ஒருவாறு ஓய்ந்தது.

''உலகம் உங்களை என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும் டாக்டர். நீங்கள் ஒரே ஒருமுறை வந்து, ஒரே ஒருமுறை வைத்தியம் செய்யுங்கள். என் அத்தையின் உயிரை அப்புறம் எந்த எமனாலும் பறிக்க முடியாது.'' என்றாள் அனுபமா.

''இன்னும் ஒரே ஒருமுறை, ஒரே ஒரு வைத்தியம் செய்தாலும் சரி - சட்டப்படி அது குற்றம். மறுபடியும் ஒருமுறை நான் ஜெயிலுக்குப் போக நேரிடும். என்ன வந்தாலும் சரி - அதற்கு மட்டும் இடம் ஏற்படுத்துவதில்லை என்று எனக்குள் ஒரு உறுதி,'' என்று சொல்லிவிட்டு, அவளைப் பார்த்தான் ஆனந்த். அனுபமாவின் முகத்தில் எத்தனை ஏமாற்றம்! அவனுக்கு மனதைப் பிசைந்தெடுத்தது வேதனை.

## ஏழு

''**தா**த்தா'' என்று குதித்தோடிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்த ரேகா, புத்தகக் கட்டுடன் நேரே பின்கட்டுக்குத்தான் சென்றாள்.

முந்தின இரவு தாத்தா படுத்திருந்த கயிற்றுக் கட்டிலை கவிழ்த்துச் சுவரோடு சாய்த்திருந்தார்கள். அதன் கால்கள் நான்கும் எறும்புக் குச்சி போல விகாரமாக நீட்டிக் கொண்டு நின்றன.

சமையலறையில், காப்பி ஃபில்டரின் துவாரங்களை ஹேர்பின்னினால் ஒவ்வொன்றாய்க் குத்திச் சுத்தப் படுத்திக் கொண்டிருந்த சாரதாவுக்கு, ரேகாவின் குரல் காதில் நன்றாக விழுந்தது. அந்த விளையாட்டே அவள் உச்சந்தலையில்



ஓர் எரிச்சலும் அடிவயிற்றில் ஒரு பொருமலும் உதித்தன. ஒரே ஒரு நாள் - முழுசாக இருபத்து நாலு மணி நேரம் கூட - ஆகவில்லை. வழக்கமாய், 'அம்மா!' என்று கூப்பிட்டுக் கொண்டு ஓடி வருகிற குழந்தை, 'தாத்தா' என்று கூவிக் கொண்டு வாசலைத் தாண்டி, நடையைத் தாண்டி, கூடத்தைத் தாண்டி, சமையலறையைத் தாண்டி, கொல்லைப்புறத்துக்கு ஓடுகிறது!

''தாத்தா எங்கேம்மா?'' என்று ரேகா கேட்டாள்.

சாரதா மீண்டும் தன் கோபத்தை அடக்கிக் கொண்டாள். ''டிரெஸ்ஸைக் கழட்டிப் போட்டுவிட்டு டிபன் சாப்பிட வாடாம்மா. பூரி பண்ணியிருக்கிறேன். தொட்டுக்க என்ன தெரியுமா? உனக்கு ரொம்பப் பிடித்தது - உருளைக் கிழங்கு! எப்படி?''

''போம்மா,'' புத்தகப் பையை மூலையில் போட்டு விட்டு, முழங்காலைக் கட்டிக் கொண்டு அங்கேயே உட்கார்ந்துவிட்டாள் ரேகா. ''தாத்தாகிட்டே காட்டணும்னு எவ்வளவு ஆசையா கொண்டாந்தேன்? அவரை எங்கேயோ அனுப்பிட்டியே?''

'எங்கேயோ அனுப்பிவிட்டாயே' என்பதன் முழு அர்த்தத்தையும் உணராமல் சும்மா ஒரு வார்த்தைக்காகத்தான் ரேகா சொன்னாளென்றாலும், அவள் தாய்க்கு அது சுட்டு விரலை நீட்டிக் குற்றம் சாட்டுவதாகத் தோன்றியது.

''எல்லாம் தாத்தா உன் வேலையாகத்தான் போயிருக் கிறார்!'' என்றாள் போலியான அன்புடன். ''அந்தப் பொம்மையை ரிப்பேர் பண்ணிக் கொடு என்று நேற்று நீ அவரைக் கேட்கலை?''

''ஆமாம்?''

''அதைத்தான் எடுத்துக் கொண்டு பஜாருக்குப் போயிருக்கிறார். இருக்கிறதுக்குள்ளே பெரிய ஷாப்பாய்ப்

பார்த்துக் கொடுக்கப் போகிறாராம். பரவாயில்லை. உன் பாடு கொண்டாட்டம். எதுவானாலும் டாண்டாவென்று செய்து கொடுக்க ஒரு தாத்தா கிடைத்து விட்டார்.''

ரேகாவின் ஆழமான கண்கள் அம்மாவைத் துழாவுகிற மாதிரி பார்த்தன. ''தானேயில்லை ரிப்பேர் பண்ணப் போறேன்று சொன்னார்? அவர் முதலாளியாயிருந்த ஆபிஸ்லே பொம்மை ஒட்டக் கத்துக் கொடுத்தாங்கன்னு கூடச் சொன்னாரே?''

''அப்படியா?'' கொஞ்சம் அயர்ந்து போனாலும் சாரதா சமாளித்துக் கொண்டாள். ''அதென்னவோ எனக்கென்ன தெரியும்? இன்று பகல் பூரா அந்தப் பொம்மையை வைத்துக் கொண்டுதான் மன்றாடிக் கொண்டிருந்தார். என்னைக்கூடக் கொஞ்சம் பசை காய்ச்சித் தரச் சொன்னார். தந்தேன். அதோ பார், கொட்டாங்குச்சிகூடக் கிடக்கிறது.''

அரை மனதாக எழுந்துகொண்டு ரேகா டிபன் சாப்பிட உள்ளே வந்தாள். உண்மையிலேயே உருளைக்கிழங்கென்றால் அவளுக்குக் கொள்ளை ஆசை. ஒரு பெரிய கிழங்கை வாயில் அடக்கிக் கொண்டவள், ''இன்னிக்கு எங்க ஸ்கூல்லே...'' என்று ஆரம்பித்தாள்.

''உங்க ஸ்கூலிலே? என்ன நடந்தது?''

''ஊகூம். நான் தாத்தாகிட்டேதான் முதல்லே சொல்லப்போறேன்.''

''எதுவோ ஆசையாய்க் காட்டப் போகிறேனென்று சொன்னாயே, என்ன அது?''

''அதுவும் தாத்தாகிட்டேதான் முதல்லே.''

''அவருக்கு உன்பொம்மை விஷயம் ஒன்றுதானா? பஜாரிலே இன்னும் எத்தனை வேலை இருக்கிறதோ? ரொம்பநாள் கழித்து ஊருக்கு வந்திருக்கிறார். ஃபிரண்ட்ஸ் களையெல்லாம் பார்த்துப் பேசிவிட்டு வருவார்...''



''எத்தனை மணியானாலும் நான் முழிச்சுக்கிட்டுத்தான் இருக்கப் போகிறேன். உருளைக்கிழங்கு இன்னொன்று போடும்மா.''

எப்போதுமுள்ள வழக்கப்படி மனோதான் முதலில் வீடு திரும்பினாள். ''ஹலோ ரேக்!'' என்று அக்கா மகளின் சின்னக் கைகளைப் பிடித்துக் குலுக்கியவள், ''ஹலோ!'' என்று அவள் திருப்பிக் குலுக்காததைக்கண்டு ஆச்சரியமடைந்தாள். அவள் பார்வை தன்னைக் கடந்து தெருவை நோக்குவதைக் கவனித்ததும், ''அடி ரேக்! உனக்கு மட்டும் வயசு இன்னு மொரு பத்து அதிகமாக இருந்ததோ, போச் போச்! நீ இப்படி வாசலை வாசலைப் பார்க்கிறதைக் கவனிக்கிறவர்கள் கன்னாபின்னாவென்று உன்னைப்பற்றிக் கதைகள் கட்டி விடுவார்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!'' என்று ரேகாவின் மூக்கின் முன்னால் சுட்டு விரலை ஆட்டி எச்சரித்தாள்.

தங்கையின் குரலைக் கேட்டு மீண்டும் உள்ளேயிருந்து வந்தாள் சாரதா. கிழவரை வெளியூருக்கு அனுப்பிவிட்ட சமாசாரம் தங்கைக்குத் தெரியாதென்றாலும், ஏதேனும் ஒன்று கிடக்க ஒன்று சொல்லி ரேகாவைக் கிளப்பிவிட்டு விடப்போகிறாளே என்ற அச்சம் ஏற்பட்டது. ''அவளோட சோல்ஜர் பொம்மையை ரிப்பேர் செய்துகொண்டு வருவதாகத் தாத்தா போயிருக்கிறாரில்லையா? அவர் எப்போது வருவாரென்று துடித்துக் கொண்டிருக்கிறாள்,'' என்று சொன்னதோடு லேசாய்க் கண் ஜாடையும் காட்டினாள்.

மனோவுக்கு அக்காவைப் பற்றித் தெரியும். ஜனார்த்தனம் விரட்டப்பட்டுவிட்டார் என்பதை ஊகித்துக் கொள்ள அவளுக்கு அதிக அவகாசம் தேவைப்படவில்லை. ''ஓகோ! பொம்மை! சோல்ஜர் பொம்மையா! கை இல்லாமல் இருந்ததே, அது! அதை ரிப்பேர் பண்ணி வரத் தாத்தா போயிருக்கிறார்! அதுதானே பார்த்தேன்!''

''நீ ஒன்றும் ராகம் இழுக்க வேண்டாம். முகத்திலே கலம் எண்ணெய் வழிகிறது. காலேஜில் படிக்கிற பெண்ணா

நீ! போய் முகம் கழுவிக்கொண்டு பவுடர் பூசிக் கொண்டு பளிச்சென்று இரு.'' என்று கடுகடுத்துத் தங்கையை அங்கிருந்து விரட்டி விட்டாள் சாரதா.

ஏழு மணிக்கு, வாசலில் கீய் கீய் என்று ஸ்கூட்டர் ஒலித்தது. மணிகண்டன் வந்துவிட்டான். ஸ்கூட்டரை வீட்டுக்குள் ஏற்றித் தள்ளுவதற்காக, மரப்பலகையை எடுத்துக் கொண்டு வாசலுக்குப் போனாள் சாரதா. படிகளின் குறுக்காகப் பலகையை வைக்கும்போதே, மெதுவான குரலில், ''ஸ்கூலிலிருந்து வந்தது முதல் தாத்தா தாத்தா என்று நச்சரித்துக் கொண்டேயிருக்கிறாள் ரேகா. அந்தப் பொம்மையை ரிப்பேர் செய்யப் போயிருப்பதாகச் சொல்லி வைத்திருக்கிறேன்,'' என்று எச்சரித்தாள்.

மணிகண்டன் அவளை ஏறிட்டு ஒருமுறை நோக்கிப் பெருமூச்சொன்றை வெளியேற்றிய பின்னர், ஸ்கூட்டரை உள்ளே கொண்டு வந்து நிறுத்தினான். ஒரோர் சமயம் விளையாட்டுத்தனமான குழந்தையாகவும் ஒரோர் சமயம் சதி செய்யும் சூழ்ச்சிக்காரியாகவும் சாரதா தோற்றம் தருவது அவனுக்கு வழக்கமாகிவிட்டது. எப்படித் தோன்றினாலும் அவளை எதிர்த்துக் கொண்டு நிற்காதிருப்பதில்தான் தன் மனச் சாந்தி இருக்கிறது என்பதையும் மண வாழ்வின் ஆரம்ப நாட்களிலேயே அவன் தெரிந்து கொண்டிருந்தான். அப்பா எப்படியும் ஒருநாள் விடுதலையாகித் தன்னுடன் வந்து இருக்கப் போகிறார் என்பதை அறிந்திருந்த போதிலும், அப்போது என்ன சிக்கல்கள் ஏற்படும் என்றோ, அவற்றை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்றோ அவன் யோசித்து வைத்திருக்கவில்லை.

''தாத்தா வரலியாப்பா?'' என்று ரேகா கேட்பது காதில் விழாதது போல அவளை நாற்காலியோடு தூக்கிக் கழுத்துப் புறத்தில் முத்தம் கொடுத்தான். தலைப் பின்னலின் எண்ணெய் வாசனையும் விளையாட்டுக் குழந்தையின் வியர்வையின்



மணமும் கலந்த ஒரு கதம்பமான நெடி அவனுடைய ஆயிரம் மன உளைச்சல்களைப் போக்கிவிடுவது வழக்கம். இன்றைக்கு அதையும் மீறி, பேத்திக்கும் தாத்தாவுக்கும்உள்ள இந்த விசித்திர பந்தத்தைச் சாரதா எப்படித்தான் முறிக்கப் போகிறாளோ என்ற கவலை எழுந்தது.

சாரதாவின் பின்னாலேயே சமையலறைக்குச் சென்றவன், ''ஹும்... அப்பாவினால் பிரச்னைதான்...'' என்றான் அவளுக்கு ஆறுதலாக.

''ச்சு'' என்று உதட்டைச் சுழித்தாள் சாரதா. ''இன்றைக்குத்தானா என்ன? என்றைக்கு என் கல்யாணம் நடந்ததோ அன்றைக்கே அவரால் கஷ்டமும் அவமானமும் ஆரம்பித்தாயிற்று.''

மாலையும், கழுத்துமாய் நின்றது இப்போதுதான் போலிருக்கிறது. ஜேஜே என்று கல்யாண மண்டபம் முழுவதும் அவளுடைய கல்லூரித் தோழிகள் நிறைந்திருந்தது இப்போதுதான் போலிருக்கிறது. 'என்னடி சாரதா, நீபாட்டுக்குப் பட்டாளம் பட்டாளமாய்க் கூப்பிட்டு விட்டாய்?' என்று பாட்டி கோபித்துக் கொண்டது இப்போது தான் போலிருக்கிறது. இரண்டும் கெட்டான் வயதில் இருந்த மனோ, அக்காவுக்கு வாங்கியிருக்கிற மாதிரியே தனக்கும் நிறையச் சரிகை போட்டதாகப் பாவாடை வாங்கவில்லை என்று அழுது புரண்டு ஆர்ப்பாட்டம் செய்தது இப்போதுதான் போலிருக்கிறது. கிராமத்து மாமா ஒருத்தர் ஸென்ட்ரலி லிருந்து ஜட்கா வண்டியில் வந்து இறங்கிவிட்டுக் கூலிக்குத் தகராறு செய்து கூட்டம் சேர்த்தது இப்போதுதான் போலிருக்கிறது.

அதிகாலையில் முகூர்த்தம். இன்னும் தூக்கம் முற்றும் கலையாத நிலையில், மணப் பெண் கோலத்தில் உட்காருவதும் எழுந்திருப்பதும் நமஸ்கரிப்பதுமாய் இருந்த நேரம். தகதகவென்று மின்னிய கூறைப்புடவையும் பூவும்

வைத்த தட்டை அவளிடம் தந்து, ''மாமனார்கிட்டே கொடுத்து நமஸ்காரம் செய்து வாங்கிக் கொள்ளம்மா,'' என்கிறார்கள். மாமனார் ஜனார்த்தனத்திடம் கொடுக்கிறாள். அம்மா படித்துப் படித்து ஒரு மாதமாகச் சொல்லித் தந்திருந்தபடி கைகளை இணைத்துக் குவித்து, தலை தலையில் பட நான்கு முறை நமஸ்காரம் செய்கிறாள்.

நாலாம் முறை செய்து முடித்துவிட்டுத் தலை நிமிர்கையில் -

ஐயோ! என்ன இது!

அவள் மாமனாருக்கு இருபுறத்திலும் இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். கையில் ஒரு காகிதத்துடன் ஓர் அதிகாரி, ''வெரி ஸாரி... இப்போதுதான் வாரண்ட் கிடைத்தது. உடனே கைது செய்ய வேண்டியது எங்கள் கடமை...'' என்கிறார் சங்கடச் சிரிப்புடன்.

பரபரப்பு. அமளி. கிசுகிசுப் பேச்சு. தடதடவென்று நடைகள், கேள்விகள், பதில்கள், ஜீப் புறப்படும் ஓசை, பரிகாசச் சிரிப்புக்கள், அதைவிடக் கொடுமையான அனுதாபச் சூள்கள்...

மணமகன் மணிகண்டன் மலங்க மலங்க விழித்தக் கொண்டு நின்றதும், முகூர்த்தத்தை நடத்துவதா நிறுத்தி விடுவதா என்று விவாதங்கள் நடைபெற்றதும், மணி கண்டனுக்குப் பெரியப்பா முறையுள்ள ஒரு பெரியவர், பந்தலில் சம்பந்தி ஸ்தானத்தில் இருந்து கொண்டு தொடர்ந்து திருமணம் நடைபெற உத்தரவுகள் பிறப்பித்ததும் - எல்லாம் இப்போது போல்தான் இருக்கின்றன. கும்மாளமும் குஷியுமாய் நடைபெற வேண்டிய கல்யாணக் கோலா கலங்கள், ஏதோ செய்யக்கூடாத தவற்றைச் செய்கிற மாதிரி ரகசிய ரகசியமாய் நடைபெற்ற கேவலம்; காலையில் அப்படியொரு கூட்டம் போட்டிருந்த தோழிகள் சாயந்தரம் ரிஸப்ஷனின்போது கூண்டோடு மறைந்துவிட்ட ஆச்சரியம்; ''உன் மாமனார் ஃபோர்ஜரி கையெழுத்துப் போட்டு மாட்டிக்



கொண்டாராமே? நெஞ்சழுத்தக்கார மனுஷன்! ஆனால் இன்றைக்குப் பார்த்தா கைதாக வேண்டும்?'' என்று கூச்சமின்றிப் பலர் அவளை நேரிடவே கேட்ட வெட்கக்கேடு - எல்லாம் இப்போது போல்தான் இருக்கிறது.

பிறகு அவர் ஜாமீனில்கூட வெளிவரவில்லை. நேரே கோர்ட், விசாரணை, தண்டனை, சிறைச்சாலை என்று அவள் வாழ்க்கையிலிருந்து மறைந்தே -

'இல்லை. இன்னும் மறைந்து போகவில்லை. மறைந்து போக மறுக்கிறார்' என்று தன்னுள் சொல்லிக் கொண்டே புடவையின் முனையினால் கண்களைத் துடைத்துக் கொண்டாள் சாரதா.

இப்போதைக்கு ஏதோவொரு சாக்கில் எந்தக் கிராமத்துக்கோ விரட்டியாகிவிட்டது. சொரணையுள்ள மனிதரானால், குறிப்புத் தெரிந்து கொண்டு, இந்தப் பக்கம் தலை வைத்துப் படுக்கமாட்டார். அப்படிச் சொரணை கெட்டதனமாகத் திருப்பி இங்கேயே வந்தாரானால்...

ஜனார்த்தனத்துக்குச் சொரணை இருந்தது.

பாசி நெடி வீசும் திருக்குளத்து மண்டபத்தில் எழுந்து உட்கார்ந்து கொண்டார். திரும்பித் தன் குடும்பத்துக்கு வரவேண்டாம் என்று மகன் உணர்த்தியிருந்த கடிதம் இன்னும் அவர் கையிலேதான் இருந்தது. அதைக் கிழித்துக் கசக்கிப் பந்தாக்கித் தூர எறிந்தார்.

தெருவைப் பார்த்தார். செல் பழசாகிவிட்ட டார்ச் விளக்கின் ஒளிபோல் சாயந்தர வெய்யில் சோகை பிடித்து உலவிக் கொண்டிருந்தது.

'எனக்கு என்ன குறைவு?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டார். 'படிப்பு இருக்கிறது. அனுபவம் இருக்கிறது. ஒரு மளிகைக் கடையில் கணக்கு எழுதினால்கூட நம் வயிற்றை நாமே நிரப்பிக் கொள்ள முடியுமே? காலையில்

அதுதான் முதல் வேலை. இந்தக் கிராமத்திலேயே எப்படியாவது...'

மண்டபத்தை விட்டு இறங்கி நடந்தார். அந்தத் தெருவின் கடைசி வீடு, வாசலில் அகன்ற திண்ணையுடன் அவரை வா வா என்றழைத்தது. இணை பிரியாதிருந்த பையைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்தார்.

ஒரு நிமிடம் ஆகியிருக்காது.

யாரோ விசும்புகிற மாதிரி சத்தம் கேட்டது. அசலா, பிரமையா? எழுந்து உட்கார்ந்தார். திண்ணையை ஒட்டினாற் போலிருந்த அறைக்குள்ளிருந்து தெளிவாகக் கேட்டது ஒரு பெண்ணின் விம்மல்.

பிறகுதான் கவனித்தார் - அந்த அறை வெளிப் புறம் பூட்டுப் போட்டுப் பூட்டப்பட்டிருப்பதை. வீட்டுக்குள் செல்லும் பிரதான வாசல் கதவும் பூட்டப் பட்டிருந்தது.

பேசாமல் எழுந்து வேறு இடத்துக்குப் போய் விடலாம் என்றுதான் முதலில் நினைத்தார். ஆனால் ஏதோ நேர்ந்திருக்கிறது என்று தெரிந்த பின்னர் நழுவ அவரது இரக்க சுபாவம் இடம் கொடுக்கவில்லை. ஜன்னல் கதவைத் தள்ளி விலக்கி, ''யாரம்மா அங்கே?'' என்று குரலும் கொடுத்தார்.

உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தரையில் ஜமுக்காளம் விரிக்கப்பட்டு அதில் இளவயதுப் பெண் ணொருத்தி படுத்திருந்தாள். ஆனால் நோயாளி அல்ல. தலையை நன்றாக வாரி முடித்துப் பொட்டிட்டு, கௌரவ மாயும் கண்ணுக்கு நன்றாயும் புடவை உடுத்திருந்தாள்.

ஜன்னலுக்கு வெளியே ஜனார்த்தனத்தின் முகத்தைக் கண்டதும் அவள் பீதி வசப்பட்டாள். ''யார் நீங்கள்? போய் விடுங்கள். அவர் வருகிற நேரம்...'' என்று பதைத்தபடி எழுந்து உட்கார்ந்தாள்.



ஜனார்த்தனம் போகவில்லை.

''இரு, முதலில் இந்த அறையைத் திறக்க வழி பார்க்கிறேன்,'' என்று கீழே ஏதாவது ஆணி, கம்பி கிடைக்கிறதா என்று பார்த்தார் ஜனார்த்தனம்.

''அவர் வந்தால் உங்களைக் கொலையே பண்ணி விடுவார். என் புருஷனைச் சொல்கிறேன். மகா சந்தேகக்காரர்...''

''சே! அப்படிக் கூடவா ஒரு மிருகம் இருப்பான்? உன்மீது சந்தேகப்பட்டா பூட்டியிருக்கிறான்? கேட்கவே அருவருப்பா யிருக்கிறதே?'' என்றவர் தீவிரமாக நாற்புறமும் தேடினார். ஒரு பழைய ஆணி கிடைத்தது. பூட்டை நெம்பினார். சடக்கென்று திறந்து கொண்டு விட்டது.

''இப்படி வாம்மா வெளியே. நான் கிழவன். என்னதான் உன் கணவன் முட்டாளானாலும் என்மீது சந்தேகப்பட மாட்டான்,'' என்று தைரியம் கூறி அவளை அழைத்தார். தயங்கித் தயங்கி அவள் வந்து நிலைப்படியருகே நின்றபோது அவள் முழு உருவமும் தெரிந்தது.

''காலையிலிருந்து அடைந்து கிடக்கிறேன்... கொஞ்சம் இருங்கள்...'' என்று கூறி, சங்கடத்துடன் தலையைக் குனிந்து கொண்டு, வீட்டைச் சுற்றினாற்போல் பின்பக்கம் போனாள்.

இரண்டு நிமிடத்துக்கெல்லாம் காலடியோசை கேட்டது... நிமிர்ந்து பார்த்தார். அந்தப் பெண் அல்ல. அவருடைய தாயார் மாதிரி ஒரு பெண்மணி தெரு வழியே வந்து படியேறினாள்.

ஜனார்த்தனத்தைக் கண்டதும் சிறிது திகைத்து, ''யார் நீங்கள்?'' என்றவள், அறைக் கதவு திறக்கப்பட்டிருப்பதைப் பார்த்ததும் பதறியவளாக, ''யார் திறந்தது? பாக்யா! பாக்யலட்சுமி!' என்று கூவினாள்.

இதற்குள் அக்கம் பக்கத்திலிருந்து இரண்டொருவர் கூடி விட்டார்கள். ''நீங்களா கதவைத் திறந்தீர்கள்!'' என்று ஒருவர் ஜனார்த்தனத்தை அதட்டினார்.

''ஆமாம்... ஏன்...''

''அந்தப் பெண்ணுக்குச் சித்தப்பிரமை. அதனால் அவள் அம்மா அவளை உள்ளே பூட்டி விட்டுக் கோவிலுக்குப் போயிருந்திருக்கிறார்கள். நீங்கள் பாட்டுக்குத் திறந்து விட்டீர்களே?''

## எட்டு

சித்தப் பிரமை பிடித்தவள்! பச்சையாகச் சொல்வ தென்றால் அரைப் பைத்தியம்! பாதுகாப்பாக அவளை வீட்டுக்குள் பூட்டி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்! நாம் போய் அவளை விடுவித்திருக்கிறோம்!

ஜனார்த்தனத்துக்குத் திகைப்பாயிருந்தது. சுற்று முற்றும் பார்த்தார். இரண்டு நாளாக வெறுமையாயக் காட்சியளித்து வந்த கிராமத்தில் இப்போது எப்படி இத்தனை கூட்டம் சேர்ந்தது என்று பிரமிப்பேற்பட்டது. ஆளுக்கு ஆள் சளசளவென்று பேசியதால், யார் என்ன சொல்கிறார்கள் என்று அவரால் விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை.

''எங்கேயிருந்து வந்தான் இந்தப் பாவிக் கிழவன்! என் கோகிலா எங்கே போனாளோ, என்ன ஆனாளோ தெரியவில்லையே!' என்று வீடு பூரா தேடிவிட்டுத் திரும்பி வந்து அந்தப் பெண்ணின் தாயார் புலம்பிக் கொண்டிருப்பது மட்டும் காதில் விழுந்தது. முன்பின் தெரியாத இடத்தில் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்துவிட்டோமே என்ற கலகத்துடன் கூடவே, அத்தனை ஜோடிக் கண்களின்



பார்வைக்கு இலக்காகி நிற்கிறோமே என்ற கூச்சமும் அவரை அரித்தெடுத்தது.

''பார்த்தால் பெரிய மனுசனாட்டம் இருக்கிறே. ஏனய்யா இந்த வேலையெல்லாம் செய்யறே?'' என்று ஒரு முரட்டு ஆள் அவர் முகத்தில் இடித்தான்.

''எனக்கு... எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அந்தத் திண்ணையிலே படுத்துக் கொள்ளலாம் என்றுதான் போனேன். உள்ளே அந்தப் பெண் அழுகிற சத்தம் கேட்டது...''

''உடனே உனக்கு இரக்கம் பொங்கிக்கினு வந்திச்சாக்கும்?''

''என்னம்மா என்று கேட்டேன். புருஷன்காரன் இப்படி அடைத்து வைத்துவிட்டுப் போயிருப்பதாகச் சொன்னாள் அவள்...''

யாரோ உரக்கச் சிரித்தார்கள்.

''உடனே பூட்டை உடைச்சிட்டே?''

''உடைக்கவில்லை. ஒரு ஆணியை எடுத்துக் குடைந்தேன். உடனே திறந்து கொண்டு விட்டது...''

''அந்தப் பொண்ணு உடனே உன் காலிலே விழுந்து கும்பிட்டாளாக்கும்?'' என்ற அந்த ஆள், ''இதபார், மரியாதையா உண்மையைச் சொல்லிவிடு,'' என்று அவருடைய சட்டையைப் பிடித்து உலுக்கினான். ''அந்தப் பெண் ரூமிலிருந்து வெளியே வந்ததும் அவ கழுத்திலே கையிலே போட்டுக்கினு இருக்கிறதைக் கழட்டிக்கினியா இல்லியா?''

''ஆமாம், நடராசா! இருக்கும் இருக்கும்! அதுதான் பைத்தியமாச்சே! இவர்தான் கழட்டிக்கினார் என்று சொல்லவா போவுது?'' என்று இன்னொரு ஆசாமி அவனுக்கு ஒத்துப் பாடினான். அந்த இரைச்சலில், ''ஐயையோ! சத்தியமாய் நான் அப்படி எதுவும் பண்ணவில்லை!'' என்று

ஜனார்த்தனம் பதறியது யார் காதிலும் விழவில்லை. அப்படிச் சொன்னவன் சொன்னதோடு நிற்காமல், ''சோதனை போட்டால் தெரிகிறது!'' என்று கூறி ஜனார்த்தனத்தின் சட்டைப் பைகளைக் குடைந்து, மடியையும் தடவிப் பார்த்தான்.

ஜனார்த்தனத்தின் கண்ணுக்குள் வெள்ளமாய்ப் பொங்கிக் கொண்டிருந்தது கண்ணீர். மன உறுதியுடன் அதைத் தடுத்து நிறுத்திக் கொண்டார். அன்றொரு நாள் தன பிள்ளையின் திருமணத்தின்போது, ஜேஜே என்று மண்டபமெங்கும் நிறைந்திருந்த உற்றார் உறவினர்கள் அப்படியே ஸ்தம்பித்து நிற்க, காதைச் செவிபடுத்திய மேளத்தின் ஓசைகளும் குழந்தைகளின் கோலாகலங்களும் ஒரே விநாடியில் ஒடுங்கி மடிய, தான் ஒருவன் மட்டும் நிர்வாணமாக ஆயிரம் வாட் பல்பின் நட்ட நடுவே நிற்பது போன்ற சிறுமையை அனுபவித்தாரே, அதைக் காட்டிலும் கொடுமையானதாக இந்தச் சந்தர்ப்பம் அவரை வதைத்தெடுத்தது. அன்றைக்கு யாரும் அவரைக் கேள்வி கேட்கவில்லை. உறுத்துப் பார்க்கவில்லை. சோதனை போடவில்லை. மணக் கோலத்தில் இருந்த பிள்ளையையும் மருமகளையும் ஒரே ஒரு பார்வை பார்த்துவிட்டு, அந்தப் பார்வை மூலமே மன்னிப்பும் கேட்டுக் கொண்டுவிட்டு, மறு கணமே போலீஸ் வண்டியில் ஏறிப் போயே போய்விட்டார்...

ஆனால் இன்று...!

''ஐயா! கடவுளுக்குப் பொதுவாய்ச் சொல்கிறேன். நான் அந்தப் பெண்ணிடமிருந்து எதுவும் எடுக்கவில்லை. எடுத்திருந்தால் எல்லாரும் வருகிற வரையில் இங்கேயே நின்றிருந்திருப்பேனா? என்னை நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று கூறி, தானாகவே வேட்டியை உதறிக் காட்டினார். ''அதோ திண்ணையில் என் பை இருக்கிறது. அதையும் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்றார்.



திடீரென்று கூட்டத்தை முண்டி விலக்கிக் கொண்டு, ஒரு கட்டை குட்டையான ஆள் வேகமாக முன்னே வந்தான். ''விடுங்களய்யா அவரை! இளைத்தவன் அகப்பட்டான் என்று சதாய்க்கிறீங்களே?'' என்று அனைவரையும் திட்டியபடி அவன் முன்னே வந்தபோது, அவனை எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்று ஜனார்த்தனத்துக்கு ஒரு விநாடி தோன்றியது.

''நீ சும்மா இரப்பா, தெரியும்! பார்த்தால் பெரியவராட்டம் இருக்குறாருன்னு பார்க்கிறியா? இந்த ஆள் செஞ்ச வேலையைக் கேட்டியானால்...'' என்று கூட்டத்தில் ஒருவன் அவனை நிறுத்தப் பார்த்தான்.

அந்தக் குட்டைப் பேர்வழி அவன் கையை உதறினான். ''அடச்சீ போங்கடா, போக்கத்த கழுதைங்களா! ஒரு பைத்தியக்காரப் பொண்ணு எந்தப் பக்கமா போயிருக்கும்னு தேடிக் கண்டுபிடிக்க யோக்யதை இல்லே. வாய் மட்டும் கிழியுது!''

ஜனார்த்தனத்தின் நெஞ்சுப் பட்டியைப் பிடித்துக் கொண்டிருந்தவன் அவரை விட்டுவிட்டு, ''ஏன், நீதான் அறிவுக்கொழுந்து, கண்டு பிடிக்கிறது தானே?'' என்றான்.

''பிடிச்சிருக்கிறேனா இல்லையா, போய்ப் பாரேன்!'' என்று அவன் பதிலளித்தானோ இல்லையோ, அந்தப் பெண்ணின் தாய் எல்லோரையும் தள்ளிக் கொண்டு ஓடிவந்து, ''கோகிலா இருக்கிறாளா? எங்கே தம்பி, எங்கே?'' என்று கையைப் பிசைந்து கொண்டு பதறினாள்.

''புளியந் தோப்புக்குப் போய்ப் பாருங்க. டான்ஸ் ஆடிக்கினு இருந்தது. தோப்புக்கார மாரிகிட்டம் ஒப்படைக்க, அவனோட குடிசையிலே பிடிச்சு வைச்சிருக்கச் சொல்லிவிட்டு வந்தேன். இங்கே என்னடான்னா வயசான மனிதரைப் போட்டு வறுத்தெடுத்துக்கினு இருக்கிறீங்க! வெட்கமாயில்லை?''

அவன் பேசி முடிப்பதற்குள்ளேயே கூட்டம் மெல்ல மெல்லக் கரையலாயிற்று. மாபெரும் ஆபத்தொன்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிய அந்த ஆளுக்கு நன்றி தெரிவித்தார் ஜனார்த்தனம்.

''சார்! என்னைத் தெரியலியா சார்??'' என்றான் அவன்.

''தெரியவில்லை அப்பா,'' என்று அவன் முகத்தை இன்னும் உற்றுப் பார்த்தார். ''நீ யாராயிருந்தால் என்ன? இப்போது உன்னைப் பார்க்கத் தெய்வம் போலிருக்கிறாய்.''

''என்ன சார், என்னென்னவோ சொல்றீங்க... சரி, வாங்க, என் வீடு பக்கத்தில்தான். நீங்களெல்லாம் எங்கே எப்படி இருக்க வேண்டியவங்க, இந்தக் கிராமத்துக்கு வந்து...''

''நீ யாரென்று சொல்லவில்லையே?''

''அது கிடக்கட்டும்,சார். இரண்டு நாளாய் இந்த ஊரிலேதான் அலைஞ்சுட்டு இருக்கீங்களாம். எனக்குத் தெரியாமல் போச்சு, பாருங்களேன். அன்னைக்கே உங்களை என் வூட்டுக்குக் கூட்டிக்கினு போயிருப்பேனுங்களே?'' என்று அங்கலாய்த்தபடி அவன் முன்னே நடந்தான். ''உங்க கீழே மூணு மாசம் பியூனாய் வேலை பார்த்தேன் சார், அந்தப் பாழாய்ப்போன கம்பெனியிலே. என் பேர் கண்ணன்...''

''அட, ஆமாம்! இப்போது ஞாபகம் வருகிறது.'' என்றார் ஜனார்த்தனம். ''ஒரு தடவை டைப்பிஸ்ட்டுக்கு ரிப்பன் கொண்டுவர மாட்டேனென்று நீ சண்டை போட்டதற்காகப் பத்து ரூபாய் அபராதம் கூடப் போட்டேனில்லை?''

''அதையெல்லாம் ஏன் சார் ஞாபகம் வைச்சிருக்கீங்க?'' என்று வெட்கப்பட்டுக் கொண்டான் அவன். ''உங்களைப் போல நல்லவங்க பாவத்தைக் கொட்டிக்கிட்டால் நல்லாவாயிருப்பாங்க? உங்களை ஜெயிலுக்கு அனுப்பி



னாங்களே, அப்புறம் கம்பெனியிலே என்னென்னவோ தகராறு. கலாட்டா எல்லாம் ஏற்பட்டுப் போச்சு.''

நெருக்கடியின் போது, கை கொடுத்தக் காப்பாற்றிய - இன்னும் காப்பாற்றக்கூடிய - ஒருவனைச் சந்திக்க மகிழ்ச்சி ஜனார்த்தனத்தின் மனத்தினின்றும் மறையலாயிற்று. தலைகுனிந்து கொண்டு அவனைப் பின்தொடர்ந்து நடந்தார்.

அந்த அரைப் பைத்தியப் பெண்ணைப் பிடித்துக் கொண்டு அவள் தாயும் மற்றவர்களும் எதிரில் வருவதை அவர் காணவில்லை. 'பொண்ணு அகப்பட்டுப் போச்சுங்க!' என்று ஒருவன் உற்சாகமாக அவரிடம் தெரிவிப்பதையும் அவர் கேட்கவில்லை. எந்த அவமானக் கதையை அவர் மறக்க முயன்று கொண்டிருந்தாரோ அதை நன்கு தெரிந்து வைத்திருந்த ஒருவனை சந்தித்து விட்டோமே என்ற புழுக்கத்தில் முழுகிப் போயிருந்தார்.

திருக்குளத்தைச் சுற்றிக் கொண்டு சென்று, கோவிலுக் குள் புகுந்து மறுவாசல் வழியே வெளிப்பட்டு, சிறிய கடைத் தெருவின் குறுக்காகப் புகுந்து ஒரு சந்தில் நடக்கலானான் கண்ணன். ''நானும் அந்த ஆபீஸ்லே இருக்க வேண்டாம்னு வந்திட்டேன் சார்... ஏன் சார் என்னவோ போல் ஆயிட்டீங்க? நான் ஏதாச்சும் தப்பா சொல்லிட்டேனா சார்?''

''இல்லையப்பா இல்லை,'' என்றார் அவர், சுதாரித்துக்கொண்டு. அவனுக்கு ஆறுதலாக இன்னும்கூட இரண்டு வார்த்தை சொல்லியிருப்பார், அந்தக் காட்சி அவருக்குத் தன் பேத்தியை ஞாபகப்படுத்தியிராவிட்டால்.

வேறொன்றுமில்லை. ஒரு கிராமவாசி, தோள்மீது தன் பெண் குழந்தையை உட்கார்த்தி வைத்துக் கொண்டு ஒரு கடை வாசலில் நின்றிருந்தான். அவனுடைய முதுகுப்புறம் ஒரு காலும், மார்பின் மீது ஒரு காலும் தொங்கப் போட்டுக் கொண்டு வீற்றிருந்த அந்தக் குழந்தை. எதுவோ வாங்கித் தரும்படி தகப்பனின் தலைமுடியை இழுத்து இம்சித்துக் கொண்டிருந்தது.

ரேகா இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பாள்? இரவு ஏழு மணியாகப் போகிறது. அவளுக்கென்றே உள்ள அந்தக் குட்டி மேஜையில் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். பென்சில் நுனியினால் உதட்டை வருடியபடி பாடம் படித்துக் கொண்டிருப்பாள். அம்மாவிடம் சந்தேகம் கேட்பதற்காக முகத்தை உயர்த்தும்போது அந்த அகன்ற விழிகள் ஒய்யாரமாகச் சுழலும். என்ன கேட்கப் போகிறாள்? 'தாத்தா எங்கேம்மா?' என்று கேட்பாளோ? நினைக்கும்போதே ஜனார்த்தனத்துக்குப் புல்லரித்தது. ஒரே ஒரு நாள் - இல்லை, சிலமணி நேரங்கள்தான் - பழகினாலும் குழந்தை என்னமாய் ஒட்டிக் கொண்டு விட்டாள்! அந்தப் பொம்மையைத்தான் சரி செய்து தராமலே வந்து விட்டோம்... ரேகா, உன்னை வேண்டுமென்றே நான் ஏமாற்ற வில்லையம்மா...

விசாரணை, அப்பீல் எல்லாம் முடிந்து ஜெயிலுக்குப் போய் மூன்று மாதங்கள் ஆகியிருந்தபோது ஒருநாள் மணிகண்டன் வந்து குழந்தை பிறந்திருக்கிற செய்தியைச் சொன்னது அவருக்கு ஞாபகம் வந்தது. வேண்டா வெறுப்பாக அவன் இரண்டு மாதத்துக்கு ஒருமுறை அவரைப் பார்க்க வருவான். ''எனக்குப் பேத்தி பிறந்திருக்கிறாளா?' என்று அவர் பூரித்துப் போனவராய், ''என்ன பெயர் வைத்திருக்கிறாய்?'' என்று மகனை வினவியதும், 'ரேகா' என்று அவன் சொன்னதும், அன்று பூரா அந்தப் பெயரைச் சொல்லிச் சொல்லிச் சந்தோஷப்பட்டுக் கொண்டதும் இன்று அவருக்கு நினைவுக்கு வந்தன.

''இதான் சார் நம்ம வூடு. குனிஞ்சு வாங்க சார். தலை இடிக்கப் போகுது,'' என்று கண்ணனின் குரல் ஒலித்த பிறகே, நாட்டு ஓடுபோட்ட ஒரு சிறிய வீட்டை அடைந்திருக்கிறோம் என உணர்ந்தார் அவர். ''கொஞ்சம்அப்படியே இருங்க, சார். விளக்கைக் கொளுத்தறேன்,'' என்ற கண்ணன், இருட்டில் துழாவியபடி தீப்பெட்டியையும் சிம்னி விளக்கையும்



தேடிப்பிடித்து ஏற்றினான். ஒரு கிழிசல் பாயை நன்கு உதறித் தரையில் விரித்து, ''உட்காருங்க சார்,'' என்றான்.

சுவரில் சாய்ந்தாற் போல் அமர்ந்து கொண்டபோது ஜனார்த்தனத்துக்குத் தான்பட்ட துன்பமெல்லாம் ஓடி விட்டாற்போன்ற நிம்மதி ஏற்பட்டது. ''என்னவோ அப்பா, என் கீழே நீ வேலை பார்த்தபோது, உனக்கு நான் ஒரு சிங்கிள் டீக்குக்கூடக் காசு கொடுத்ததாக நினைவில்லை. நீ என்னடாவென்றால் இவ்வளவு பிரியம் காட்டுகிறாய் என்னிடம்,'' என்றார்.

''டீக்குத் துட்டுக் கொடுத்தால்தான் பிரியம்னு அர்த்தமா சார்? எத்தினியோ வாட்டி நீங்க என்னண்டை அன்பா, ஆதரவாய் பேசியிருக்கீங்க. அதெல்லாம் உங்களுக்கு மறந்திட்டாலும் எனக்கு மறக்கலே சார்,'' என்றான் கண்ணன். ''என்ன சார் சாப்பிடறீங்க? டீ போடவா?''

''சே சே, அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்ப்பா,'' என்ற ஜனார்த்தனம், ''ஆமாம், உன் குடும்பத்திலே மற்றவர்களெல்லாம் எங்கே?'' என்றார்.

''என் ஒய்ஃப் ஊருக்குப் போயிருக்குது, சார்... வந்து... முழுகாம இருக்குது...''

''பலே பலே,'' என்றார் அவர். ''நீ இந்த ஊரிலே இப்போது என்ன பண்ணுகிறாயென்று சொல்லவே யில்லையே?''

''நீங்க போனப்பாலே எனக்கு அங்கே இருக்கவே மனசு பொறுக்கலே சார். வேலையை விட்டுட்டேன்.''

''சே, சே வேலையை விடலாமா? இந்தக் காலத்திலே வேலை கிடைக்கிறது குதிரைக் கொம்பாச்சே''

''நீங்க ஒண்ணு! அந்தப் பிச்சாத் வேலையை விட்டால் உசிரா போயிடும்? ஆயிரம் பொழப்பு சார்!'' என்று

சொன்னவாறே, குமட்டி அடுப்பைப் பற்ற வைத்தான் கண்ணன். "நானேதான் சார் சமைச்சுக்கிறேன். முதல்லே டீ போடறேன். குடியுங்க. அரை அவர்லே சோறும் குழம்பும் ஆக்கிடுவேன். சாப்பிடலாம்... சார், என் கையாலே சமையல் செய்யறேனேன்னு ஒருவேளை நீங்க..."

"நாக்கு அழுகி விடுமப்பா அப்பிடி நான் ஏதாவது சொன்னால்," என்றார் ஜனார்த்தனம். "உனக்கேன் சிரமம் என்று பார்த்தேன். சரி, டீ காப்பி எதுவும் வேண்டாம். சமையலே செய்துவிடு." உண்மையிலேயே பசியின் வேதனை அவரைப் புரட்டி யெடுத்துக்கொண்டிருந்தது. "இப்போது என்ன வேலையில் இருக்கிறாய்?"

"பக்கத்து டவுனில் விவசாய உதவி செய்யக்கூடிய வேலையாயிருந்தால் சரிதான்..."

"உதவியாவது, மண்ணாவது சார்! எங்க அண்ணாத்தை பாவம், அஞ்சு மூட்டை உரம் வேணும்னு ஒரு மாசமாய் நடையாய் நடக்கிறார். பயிரு அப்படியே வாடி வதங்கிப் போகுதாம். கெஞ்சறார். ஒண்ணும் நடக்கலியே?"

"அடப் பாவமே, அதற்கு யார் சாங்க்ஷன் செய்யணும்?"

"எங்க ஆபீசர்தான், சார். பலான ஆளுக்குப் பலான மூட்டை கொடுக்கவும்னு எழுதிக் கொடுத்தாரானால் போதும். கோடவுன்லே போய் வாங்கிக்கலாம். ரொம்ப ஸிம்பிள்." கண்ணன் எழுந்து சென்று வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு, ஆணியில் மாட்டியிருந்த சட்டையிலிருந்துஒரு கடிதத்தை எடுத்து வந்தான். "நீங்க ரொம்ப நல்ல சமயத்துக்கு வந்தீங்க சார்."

அவன் பேச்சில், குரலில், அருகில் வந்து உட்கார்ந்த நெருக்கத்தில் ஏதோ வித்தியாசம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தார் ஜனார்த்தனம். "என்னப்பா சொல்கிறாய்?"



அவன் ஒரு கடிதத்தைப் பிரித்து அவர் முன்னே வைத்தான். அவனுடைய ஆபீஸ் லெட்டர் ஹெட்டில் அழகாக டைப் செய்யப்பட்டிருந்தது. அவன் சொன்ன மாதிரியேதான் - பலான ஆளுக்கு, பலான மூட்டை உரம் தரும்படி.

ஆனால், கடிதத்தின் கீழே கையெழுத்து மட்டும்தான் இல்லை.

"எல்லாம் தயார் செய்திட்டேன் சார். அந்தக் கையெழுத்துதான் போட்டுப் போட்டுப் பார்க்கிறேன் நாலு நாளாய். வர மாட்டேங்குது." இன்னொரு காகிதத்தையும் பிரித்தான். அது வேறு எதற்கோ எழுதப்பட்ட கடிதம். அதில் அவனுடைய ஆபீசரின் அசல் கையெழுத்து இருந்தது. "இதுதான் சார். நீங்கள் மனசு வச்சால்..."

## ஒன்பது

மூட்டுக்கு மூட்டு விண் விண்ணென்று தெறிக்க, புருவமும் கன்னமும் கிடுகிடுவென அப்பம்போல் வீங்கிக் கொண்டதால் பார்வை பாதி மறைய, வாய்க்குள் பற்களின் இடுக்குகளிலிருந்து இன்னும் ரத்தம் ஊறி ஊறிப் பெருகிக் கொண்டேயிருந்ததால் துப்பும் போதெல்லாம்செக்கச் சிவந்த உமிழ்நீர் தெருப் புழுதியில் உருண்டு கரடு தட்ட, சிராய்ப்புப் பட்ட இடங்கள் பச்சை மிளகாய் விழுதைப் பூசிக் கொண்டாற்போல் ஜிவுஜிவுவென எரிச்சல் கொடுக்க, லாரியை விட்டுவிட்டு வந்த இடத்தை ஓர் உத்தேசமாக ஊகித்துக்கொண்டு மருதய்யன் திரும்பி வந்தபோது, டிரைவர் லாரியின் அடியில் படுத்துக்கொண்டு தொடர்ந்து பழுது பார்த்தவாறிருந்தான்.

"அண்ணாத்தை, வண்டியை எப்பத்தான் எடுக்கப் போறீங்க?" என்று சாதாரணமான குரலில் கேட்கத்தான் முயன்றான் மருதய்யன். ஆனால் வீங்கிப் போன உதடுகளின்

வழியே அந்த வார்த்தைகள் விநோதமாகச் சிதைந்து வெளிப்படுவது அவனுக்கே தெரிந்தது.

''இதோ ஆயிப் போச்சே,'' என்று டிரைவர் வெளியே வந்தான். முதுகுக்காக விரித்திருந்த துண்டை உதறிவிட்டுத் தோளில் போட்டுக்கொண்டு, டிரைவர் சீட்டண்டை இருந்த கதவைத் திறக்கும் வரை மருதய்யனைக் கவனிக்காதவன், படியில் ஒரு காலை வைத்து எம்பப் போனபோதுதான் பார்த்தான். உடனே டபக்கென்று கீழே குதித்தவன், ''என்னப்பா இது கோராமை? என்ன ஆச்சுது உனக்கு? அரை அவர் முன்னே நல்லாத்தானே இருந்தே? எங்கே போயிருந்தே? எப்ப இந்தக் காயம் பட்டுது?'' என்று அடுக்கடுக்காய் வினவியதோடு, அவனைச் சுற்றிச் சுற்றி வந்து, ''இங்கே அடி! இங்கே காயம்! இதோ கிழிஞ்சிருக்குது!'' என்று மருதய்யனின் சேதாரங்களைக் கணக்கெடுக்கலானான்.

''அது ஒண்ணுமில்லே அண்ணாத்தே. நீ வண்டியைக் கிளப்பு,'' என்று கூறி, மறுபுறமாக வந்து பக்கத்து சீட்டில் அமர்ந்து கொண்டான் மருதய்யன். ''சிகரெட் வாங்கலாம்னு கடையண்டை போனேன், ஒரு சைக்கிள்காரன் மோதித் தள்ளிட்டு ஓட்டமாய் ஓடிட்டான்...''

லாரியின் பின்னே சூரியன் மறைந்து கொண்டிருக்க, நேர் எதிரே பௌர்ணமியின் முழு வடிவம் செங்கோளமாய்த் தகதகத்து எழுந்து கொண்டிருந்தது. கதவுக்கு வெளியே கையைத் தொங்கப் போட்டுக்கொண்டதோடு முகத்திலே காற்று மோதுகிற மாதிரி தலையையும் வெளிப்புறம் துருத்திக் கொண்டான். உரையாடியபடி கூடவே ஓடிவரும் தோழனைப்போல, படபடவென்ற காற்று அவன் முடியைச் சிலுசிலுக்க வைத்தது. பாதையின் வளைவுகளில் வண்டி திரும்பும்போதெல்லாம் இப்படியும் அப்படியுமாகச் சில்லென்ற காற்று அவன் முகமெங்கும் தவழ்ந்து, ஒருபுறம் குளிர்ச்சியும் மறுபுறம் எரிச்சலுமாக மாறி மாறி வதைத்தது.



ஐந்து அல்லது பத்து நிமிட நேரத்துக்குள் என்னவெல்லாம் நிகழ்ந்து விட்டது! அத்தனையும் ஒருவேளை கனவோ? கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டான். எல்லாம் உண்மை, உண்மை, உண்மை! செங்கம்! நீ ஒரு புதிர்தான். நீயே கூச்சல் போட்டு, பக்கத்துக் குடிசைக்காரனை வரவழைத்த பிறகு, நீயே பரிதாபப்பட்டுக் குறுக்கே புகுந்து அந்த அடி மழையைத் தடுத்து நிறுத்தினாயே!... புரிகிறது. உனக்குள்ளிருந்த காதலின் வேகம்தான் நான் அடிபடுவதைக் காணப்பொறாதபடி உன்னை மாற்றியது போலும்.

''விடுங்க, தொலையறான். என்னவோ அறிவு கெட்டதனமா நடந்துக்கிட்டான்,'' என்று சமாதானப் படுத்தி மற்றவர்களை அனுப்பிவிட்டாய்...

அந்த சோனிப் பேர்வழி — எவனை எதிர்த்துக் கை நீட்டிவிடக் கூடாது என்று மருதய்யன் பல்லைக் கடித்துக் கொண்டு போனால் போகட்டுமென்று பேசாதிருந்தானோ அந்த ஆள் - ''செங்கம் சொல்லுதேன்னு இத்தோடு விடறேன்! போடா சீ!'' என்று மருதய்யனைப் பிடரியில் ஒரு நெட்டு நெட்டித் தள்ளி விட்டான்...

''நாளைக் காலை ஆறுக்கெல்லாம் பந்தர் தெருவிலே இருக்கணும். ராஜபாளையத்துக்குப் பேப்பர் பேல் லோடு பண்றாங்க,'' என்று லாரி டிரைவர் சொல்லிக் கொண்டிருப்பதோ, சாலையில் இங்கொன்று அங்கொன்றாக விளக்குகள் கண் விழிக்கத் தொடங்குவதோ மருதய்யனின் உணர்வில் ஒட்டவில்லை. 'எனக்கு நன்றாய் வேண்டும்' என்று அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். இன்னொருவனின் மனைவியாகிவிட்டவளைப் பார்க்க வேண்டும் என்று நாம் ஏன் ஆசைப்பட்டோம்? அந்த அளவுக்கு மன உறுதி இல்லாதவனுக்கு இந்தத் தண்டனை சரிதான்......

தினம் ஒரு முறையாவது கிட்டனைச் சந்திக்கும் வழக்கமுள்ளவன் நாலு நாள் வரை அவன் வீட்டுப் பக்கமே

தலைகாட்டாமல், காயங்கள் ஆறி, வீக்கங்கள் வடியட்டும் என்று காத்திருந்தான்.

இவன் போகாமலே இருந்ததாலோ என்னவோ, அவனே தேடிக்கொண்டு வந்துவிட்டான். நல்ல வேளை, அவன் வந்த சமயம், தண்ணீர் பீய்ச்சி லாரியைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்ததால் முகத்திலும் உடம்பிலும் திட்டு திட்டாய்க் கறை படிந்து, பழைய தழும்புகள் அதில் அமுங்கி விட்டிருந்தன.

''உன் கையிலே ஒரு சேதி சொல்லணுமின்னு பார்க்கிறேன். ஆளே வரலியே,'' என்றான் கிட்டன்.

''என்னப்பா அப்படி?'' இன்னும் முகத்தை முழுதும் நிமிர்த்தத் தைரியம் வராமலே பேசினான் மருதய்யன்.

''உன் அம்மாவுக்குப் பணம் அனுப்பச் சொன்னி யில்லே? என் மச்சான் போயிருந்தான் உன் ஊருக்கு. என்னவோ ஆபிஸில் வேலையாம். பணத்தைக் கொடுத்திட்டு வரச் சொன்னேன்...''

''அம்மா நல்லாயிருக்கிறாங்களாமா?''

''உன்னை உடனே பார்க்கணும்னு சொன்னாங்களாம். 'மெட்றாஸ் போனதுமே அவனைப் பஸ் ஏத்தி அனுப்பிடு தம்பி'ன்னு திருப்பித் திருப்பிச் சொன்னாங்களாம்.''

''அப்படி என்னப்பா தலைபோகிற அவசரம்?''

''இல்லாமலா அவ்வளவு தூரம் சொல்லுவாங்க?'' என்றான் கிட்டன். ''உடனே உன்னைப் பார்த்தாகணும்னு சொன்னாங்களாம். ஒரு நடை இன்னைக்கே போய் வந்திடு.''

''த்சு,'' என்று உற்சாகமற்றுச் சூள் கொட்டினான் மருதய்யன். ''நாம் நல்ல நிலைமையிலே வசதியா இருக்கணும். பெற்றவர்களை வயகக் காலத்திலே நம்மோடு வைத்துக் கொண்டு கண்கலங்காமல் பார்த்துக்கணும். அதுக்கு



யோக்கியதை இல்லாதபோது தாயாரைப் போய்ப் பார்க்கிறதிலே என்ன பெரிய பெருமை கிட்டா?''

''மெய்தான்,'' என்றான் கிட்டன் லேசாய்க் கேலி தொனித்த குரலில். ''அதைக் காட்டிலும், கண்ணாலம் ஆன பொம்பளையைப் பார்ககப் போய், அவள் சத்தம் போட்டு, அக்கம்பக்கத்து ஆளுங்க கிட்டே அடிவாங்கிக்கினு வர்றது எவ்வளவோ கௌரவமான விசயம் என்கிறே? அப்படித் தானே?''

அன்று பட்டதை விடக் கொடியதாய் இன்று சுரீலென உறைத்தது கிட்டனின் பேச்சு! ''நீ... நீ... உனக்கு...''

''டிரைவர் அண்ணாத்தை எல்லாம் சொன்னாரு,'' என்று கிட்டன் தெரிவித்தபோது, தூக்கி வாரிப்போட்டது. ''அவர் கையிலே நான்...''

''சொல்லலியேன்னு பார்க்கறியா? நீ அந்தண்டை நகர்ந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர் உன்னைக் கூப்பிட்டாராம். நீ பதில் கொடுக்காமல் இருக்கவே, எழுந்து வெளியே வந்து பார்த்தாராம். கொஞ்ச தூரம் போய்த் தேடினப்போ நீ செமத்தியாய் வாங்கிக் கட்டிக்கினு இருந்தியாம். கம்முனு திரும்பி லாரி அடியிலே படுத்துக் கினாராம். நேத்து என்னைப் பஜாரிலே பார்த்தப்போ, 'என்னப்பா உன் தோஸ்து பொம்பளை வம்பெல்லாம் விலைக்கு வாங்கறான்'னு கேட்டாரு. பொம்பளைன்னதுமே செங்கம்மா சமாசாரமாய்த்தான் இருக்கும்னு ஊகிச்சிட்டேன். சரிதானே?''

தன் திகைப்பையும் அவமானத்தையும் மறைத்துக் கொள்ள வாய்விட்டுச் சிரித்தான் மருதய்யன்.

மெயின் ரோடில் பஸ்ஸை விட்டு இறங்கி, ஒற்றையடிப் பாதை வழியே நடந்தபோது மருதய்யனின் கையில் ஒரு சிறிய பையும், அதில் அம்மாவுக்காக லாலா

கடையில் வாங்கி வந்த பூந்திப் பொட்டலமும் இருந்தன. தழையத் தழைய வளர்ந்திருந்த பயிர்கள், பள்ளிப் பெண்கள் போல வழி யெல்லாம் சளசளத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவாறே நடந்தான்.

இந்த மரத்தடியில் எத்தனை நாட்கள் விளையாடி இருப்போம், இந்த வரப்பில் எவ்வளவு தடவை தண்ணீர்ப் பாம்பை அடித்திருப்போம், இந்தப் புளிய மரத்தின் கிளைகளில் எத்தனை முறை ஏறி உலுக்கியிருப்போம் என்றெல்லாம் மனம் அசை போட்டுக்கொண்டிருந்தாலும், அவ்வளவு நினைப்புக்கும் நடுவே அவன் தாயின் வற்றி வதங்கிய முகம்தான் பிரதானமாக எழுந்து எழுந்து நின்றது.

அம்மாவின் ஆசை, அவன் பிரமாதமாய்ப் படித்து முன்னேறி, பெரிய உத்தியோகம் பார்த்து, கை நிறையச் சம்பாதித்துக் கொண்டு காரிலே வரவேண்டுமென்பது. அதை நிறைவேற்றிட வேண்டுமென்று நாள் தவறாமல், வேளை தவறாமல் அவனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி வந்தாள். கிராமத்தில் எல்லாரும்தான் அனுப்பினார்கள் - மதிய உணவு இலவசமாய்க் கிடைக்கிறதே என்று. அந்த உணவு கிடைத்தாலும், மற்ற வேளைகளில் தங்களுடன் வயல் வரப்புக்கோ, கடை கண்ணிக்கோ அழைத்துச் சென்று விடுவார்கள். 'புள்ளையும் சம்பாரிச்சாத்தானே முடியும்?' என்று வாத்தியார்களிடம் வாதம் பண்ணுவார்கள். ஆனால் அவன் அம்மா அப்படியில்லை. அவன் வேலைக்கு வந்தால் என்ன சம்பாதிப்பானோ அதற்கும் சேர்த்து, தானே வேலை செய்து சம்பாதித்தாள்.

மருதய்யனின் தகப்பன்?

அவனுக்கு வேலையென்று எதுவும் கிடையாது. ஒருநாள் வயலில் ஏர் பிடிப்பான். மறுநாள் மாட்டுக்கு லாடம் அடித்துக் கொண்டிருப்பான். இன்னொரு நாள் பண்ணை யாரின் வீட்டு வாசலில் விறகு பிளந்து கொண்டிருப்பான்.



அவ்வளவு விதவிதமான வகைகளில் சம்பாதிக்கும் காசைச் சாராயக் கடையில் கொண்டுபோய்க் கொட்டிவிட்டு நிற்பான் - கள்ளச் சாராயக் கடையில். மருதய்யன் அவனை நெருங்கிப் பேசியதே கிடையாது. எப்போதாவது நெருங்கியபோது அந்தச் சாராய வீச்சத்தை நுகராமல் இருந்ததுமில்லை.

கடைசியில் ஒரு நாள் - நன்றாய் நினைவிருக்கிறது. கரும்பலகையில் ஆசிரியர் சொல்படி தமிழ்நாடு 'மேப்'பைப் போடத் தெரியாமல் சாக்பீசும் கையுமாய் அவன் விழித்துக்கொண்டு நின்றிருந்த வேளையில் - புயல் மாதிரி கண்ணீரும் கம்பலையுமாய் ஓடி வந்தாள் அம்மா. ''சாமி! மோசம் போயிட்டேன் சாமி!'' என்று ஆசிரியரிடம் அலறிவிட்டு, மருதய்யனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தெரு வழியே ஓடினாள். ''என்னம்மா, என்ன? என்ன?'' என்று அவன் கேட்டதற்குப் பதிலே கிடைக்கவில்லை. அவன் கையை மடக்கியும் ஒடித்தும் வளைத்தும் பிசைந்தும் வெறிபிடித்தவள் போல இழுத்துச் சென்றவள், டவுன் ஆஸ்பத்திரிக்குள் கண்மண் தெரியாமல் ஓடியது அவனுக்குச் செதுக்கி வைத்தாற் போல நினைவிருக்கிறது.

வெராந்தாவில் வரிசையாய்ப் பல உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன. ஒவ்வொன்றின் முகத்தின் மீதிருந்தும் துணியை விலக்கி விலக்கி, ''இவராம்மா? இவரா? இவரா?'' என்று ஒரு போலீஸ்காரர் கேட்டுக்கொண்டே வந்தார்.

''ஐயோ! இவர்தாங்க!'' என்று அம்மா விழுந்து கதறிய பிறகுதான் கவனித்தான் அவன் - தகப்பனின் முகம் இவ்வளவு கோரமாகக் கோணிப் போய் அவன் பார்த்ததே கிடையாது. பயங்கரமாய் இருந்தது.

''வார்னிஷ் குடித்துச் சாவு' என்று பத்திரிகைகளில் பல நாள் வரை அடிபட்டுப் பொண்டிருந்தது. பதினொரு

பேரில் அவன் தகப்பனும் ஒருவன். போட்டோ கூடப் போட்டிருந்தார்கள்.

ஏற்கெனவே விருப்பமில்லாத கசப்புடன் படித்துக் கொண்டிருந்த படிப்புக்கு அத்துடன் முடிவு ஏற்பட்டுவிட்டது. கொஞ்ச நாள் ஊர் சுற்றினான். பாலம் கட்டும் வேலை நடந்தபோது சில மாதங்கள் கூலிவேலை செய்தான். பிறகு ஒரு மில்லில் இருந்தான். எதுவானால் என்ன, அன்னையின் ஆசை நிறைவேறாமலே போய்விட்டது. ஏழைக்குப் பிறந்தவன் ஏழையாய்த்தான் இருக்க வேண்டும் என்ற நியதியை நிலைநிறுத்துகிறவர்களின் அவனும் ஒருவனாகி விட்டான்...

பேட்டைத் தெருவுக்குள் நுழைந்தான். குடிசை வாசல்களில் பரப்பியிருந்த நெல்லைக் கூட்டி திரட்டிக்கொண்டிருந்தார்கள் பெண்கள். சாயந்தர நேரமாகையால், அவனுடைய நீண்ட நிழல் அவனுக்கு முன்பாகவே அந்த வாசல்களை எட்டிக் கொண்டிருந்தது.

நிமிர்ந்து பார்த்த பெண்ணொருத்தி, ''முத்தாயி, உன் பிள்ளை வருது!'' என்று குரல் கொடுத்தாளோ இல்லையோ, அந்தத் தளர்ந்த உடம்பில் எங்கிருந்து, எப்படித்தான் சக்தி ஊற்றெடுத்ததோ!

''மருது! வந்தியா தம்பி! வா, வா!''

கருக்கம் எடுத்த அந்த முழங்கைகளைப் பற்றிக்கொண்டு, கண்ணீர் வழியும் அந்த ஒட்டிய முகத்தைப் பார்த்தான் மருதய்யன். ''நல்லா இருக்கியாம்மா? உடனே என்னைப் பார்த்தாகணும்னு சொல்லியனுப்பினியாம். என்னவோ ஏதோன்னு பயந்துகிட்டே வந்தேன்...''

''கொஞ்சம் இப்படியே இரு,'' என்று குடிசைக்குள் சென்றாள் அவன் தாய். சில நிமிடங்கள் கழித்து அவள் வெளியே வந்து, பெருமை ததும்பும் குரலில், ''அம்மாடி! என் ராசாவை இப்ப நல்லா பார்க்க முடியுது!'' என்றாள்.

அவள் முகத்தில் இப்போது ஒரு மூக்குக் கண்ணாடி இருந்தது.



''எப்பம்மா போட்டுக் கிட்டே? இப்ப கண் நல்லா தெரியுதா?'' என்றான் மருதய்யன் உவகையுடன்.''

''ஆஸ்பத்திரியில் எல்லாருக்கும் ஆபரேசன் செஞ்சு, கண்ணாடி மாட்டினாங்க. நானும் மாட்டிக்கிட்டேன்,'' என்று கண்ணாடியைக் கழற்றிக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள் அவன் தாய். ''போன வாட்டி நீ வந்திருந்தப்போ, 'வர வரப் பார்வை மசமசன்னு ஆவுது தம்பி'ன்னு நான் வருத்தப்பட்டேனே, நினைவில்லை? உன்னை நல்லா பார்க்க முடியலேன்னு ரொம்பக் குறையா இருந்தது. மருது. கண்ணாடி மாட்டிக்கிட்டதும் மரம் மட்டை, கல்லு மண்ணெல்லாம் நல்லா தெரிஞ்சுது. 'இதெல்லாம் தெரிஞ்சா என்ன தெரியாட்டி என்ன? என் பிள்ளையை இல்லே கண் நெறையப் பார்க்கணும்'னு தோணிச்சு. அதான் கிட்டானோட மச்சான் கையிலே சொல்லியனுப்பினேன்.''

''ரொம்பச் சந்தோஷம், அம்மா. நல்லா நூறு வாட்டி பார்த்துக்க,'' என்று சொல்லி, முன்னும் பின்னுமாகத் திரும்பி நின்றுகொண்டு தாய்க்குப் போஸ் கொடுத்தபோது, பக்கத்து வீட்டுப் பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

அந்தச் சிரிப்பை மீறிக் கொண்டு, ''கடு தண்ணி கேட்டீங்களே, அத்தை, கொண்டு வந்திருக்கிறேன்,'' என்று இளம் குரலொன்று ஒலித்தது.

''இப்படி வச்சிட்டுப் போம்மா,'' என்றாள் அவன் தாய்.

புடவைத் தலைப்பில் அந்தப் பெண் கலயத்தைப் பிடித்து வந்ததும், கதவின் ஓரமாக வைத்ததும், உடனே திரும்பியதும் மின்னலடித்தாற் போலிருந்தன மருதய்யனுக்கு.

''காவேரின்னு பேர். தங்கமான பொண்ணு. அவள் மட்டும் இல்லேன்னா இந்த அனாதைக் கிழவி என்னைக்கோ போயிருப்பேன், தம்பி.''

## பத்து

என்றைக்கு மருதய்யன் பையில் முக்கால் ரூபாயும் மனசிலே துணிச்சலுமாக வீட்டை விட்டுக் கிளம்பி, சென்னைக்குப் பறந்து கொண்டிருந்த ஒரு பஸ்ஸைக் கைகாட்டி நிறுத்தி ஏறிக்கொண்டு, சைதாப்பேட்டை பாலத்தின் இறக்கத்தில் இறங்கி, தாலுகா ஆபீசின் அழுது வடியும் கட்டிடத்தையும், ஹோவென்று பரந்து கிடக்கும் பழைய பார்க்கையும், அடையாற்றின் ஓரமாக ஓடும் தண்ணீரில் சலவைக்காரர்கள் அலசி உலர்த்திக் கொண்டிருக்கும் வண்ண வண்ணத் துணிகளையும் பார்த்துப் பிரமித்தவாறு நின்றானோ, அன்றைக்குப் பிறகு கிராமத்துக்குத் திரும்பும் ஆசை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கடைசியில் அறவே மறைந்து விட்டது.

எப்போதாவது, ஒரு வாரம் தங்கலாமென்று கிராமத்துக்கு வருவான். ஒரே நாளில் புறப்பட்டு விடுவான். காரணம், 'ஒரு கண்ணாலம் கட்டிக்கிட்டு' ஊரோடு இருந்துவிடும்படி அம்மா நச்சரிக்கத் தொடங்குவதுதான்.

இந்தத் தடவை அந்தப் பேச்சே எடுக்கவில்லையே, ஏன் என்று ஆச்சரியப்பட்டான் மருதய்யன். ஒருவேளை சொல்லிச் சொல்லி அலுத்துப் போய், எப்படியோ ஆகட்டும் என்று விட்டு விட்டாளோ? அல்லது அதைச் சொன்னால் உடனே கிளம்பி விடுகிறானே என்பதற்காகப் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டிருக்கிறாளோ?

ஆனால் அவன் சிறிதும் எதிர்பாராத - மறந்தே போயிருந்த வேறு விஷயங்களில் அம்மா ஆர்வம் காட்டினாள்.

''ஏன் மருது, பம்பாயிலேயெல்லாம் கட்டிடங்கள் அம்பது மாடி அறுபது மாடி இருக்குமாமே? கூண்டோடே மாடிக்குத் தூக்கிட்டுப் போவாங்களாமே?'' என்று அவள் குழந்தைத்தனமாகக் கேள்விகளை அடுக்கியபோது,



அவனுக்குக் கஷ்டமாயிருந்தது. தாயை இப்படி ஏமாற்ற வேண்டியிருக்கிறதே என்று தனக்குள் கசந்து கொண்டான். 'அம்மா! ஆறு மாத காலம் நான் பம்பாயின் வானளாவிய கட்டிடங்களைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கவில்லை, அம்மா! சென்னை சென்ட்ரல் ஜெயிலின் இருண்ட ஆழங்களைப் பார்த்துத் துடித்துக் கொண்டிருந்தேன்' என்று சொல்ல முடியாமல் தவித்தான்...

''தம்பி, நேத்து ராவு நீ டீ போட்டுக் குடிக்கலியா? சொன்னியே?'' என்று அம்மா கேட்டாள்.

''வேணாம்னு இருந்து விட்டேன்,'' என்றான் அவன். ''டீ குடிச்சு கண் முழிச்சுப் பரீட்சைக்கா படிக்கப் போகிறேன்?''

மகன் சிரித்தானேயொழியத் தாய் சிரிக்கவில்லை. அவனை எப்படியெல்லாம் ஆக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு, அது எப்படியெல்லாம் வியர்த்தமாயிற்று என்பதை எண்ணுகையில் அவளிடமிருந்து பெருமூச்சுதான் வெளிப்பட்டது. ''உனக்காக வைச்சிருந்த பால் அப்படியே இருக்குது பார். நல்ல காலம், திரிஞ்சு போகல்லே. காவேரி வீட்டிலே கொண்டுபோய்க் கொடுத்திடு,'' என்றாள்.

அந்தப் பெண்ணுடன் நாம் பழக வேண்டும் என்ற நோக்கத்துடன் அம்மா செய்யும் தந்திரமோ? ஆனால் அவள் தன் பாட்டுக்கு வேலை செய்து கொண்டிருந்தாள். பால் டம்ளரை எடுத்துக் கொண்டு பக்கத்துக் குடிசைக்குள் நுழைந்தான்.

நிலைப் படியில் தலை வைத்தாற்போல் கிழவியொருத்தி குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள் - வெய்யில் நன்கு ஏறத் தொடங்கிவிட்ட அந்தக் காலை வேளையிலும், காவேரியின் பாட்டி போலிருக்கிறது. ஒரு நிமிடம் தயங்கியவன், தொண்டையைக் கனைத்துக் கொண்டு,

''அம்மா பால் கொடுத்தனுப்பியிருக்காங்க,'' என்று பொதுவாக ஓர் அறிவிப்புக் கொடுத்தான்.

அவள் உள்ளேயிருந்து வந்தாள். ''கொடுங்க,'' என்று மட்டுமே சொல்லிக் கையை நீட்டினாள். தினம் மஞ்சள் பூசிக் குளிக்கிறவள் என்பது கையிலும் முகத்திலும் பளபளப்புடன் வெளிப்பட்டது.

'இவள் மட்டும் இல்லேன்னா இந்த அனாதைக் கிழவி என்றைக்கோ போயிருப்பேன் தம்பி' என்று அம்மா சொன்னது அவன் காதில் ஒலித்தது. ''என் அம்மாவுக்கு நீ ரொம்ப உதவியா இருக்கியாம். அம்மா சொன்னாங்க. உனக்கு எப்படி... நான்... தாங்ஸ் சொல்றதுன்னே...'' மருதய்யனுக்குத் தன் மீதே கோபம் ஏற்பட்டது - ஏன்தான் இப்படி வார்த்தைகள் தடுமாறுகின்றனவோ என்று.

காவேரி வெகு சன்னமாக ஒரு புன்னகையை வெளிப்படுத்தினாள். ''நான் தாய் தகப்பனில்லாத பெண். பெற்ற அம்மா மாதிரி அவங்கதான் எனக்கு ஆதரவு காட்டறாங்க,'' என்று இரண்டு வாக்கியமானாலும் பளிச்சென்று பதில் சொல்லிவிட்டு உள்ளே மறைந்து விட்டாள். ஆனால் குரல் எத்தனை மிருதுவாயிருக்கிறது என்று அவனால் எண்ணாதிருக்க முடியவில்லை.

தூங்கிக் கொண்டிருந்த பாட்டி சொப்பனத்தில் முனகியபடி புரண்டு படுத்தாள். மேலும் தாமதிப்பது சரியில்லை என்று வெளியே வந்தவன், அப்போதுதான் உள்ளே வந்து கொண்டிருந்த ஓர் வாலிபன் மீது ஏறத்தாழ மோதிக் கொண்டு விட்டான்.

சின்ன வயதில் இவனுடன் ஓடி விளையாடி யிருக்கிறோம் என்ற ஒரு மங்கலான நினைவுதான் மருதய்யனுக்கு உதித்தது. ஆனால் அவன், ''ஓகோ, மருதுவா?



என்னைத் தெரியல்லே? கப்பு,'' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

''ஆமாம், ஆமாம். கப்பு. நல்லாயிருக்கியா?'' என்றான் மருதய்யன். அப்போதும்கூட அவனைப் பற்றித் தெளிவாக ஞாபகம் வரவில்லை.

''எங்கே இவ்வளவு தூரம்? என்னோட முறைப் பொண்ணைப் பார்த்துப் பேசிட்டுப் போறியாக்கும்?'' கப்பியின் கேள்வியில் சினம், கேலி இரண்டும் தொனித்தன.

'எனக்கு இஷ்டப்பட்டவர்களை எப்ப வேணுமானாலும் நான் பார்ப்பேன். நீ யார் அதைக் கேட்க?'' என்று பதிலளிக்க வேண்டும் போல் இருந்தது. அடக்கிக் கொண்டு, ''அம்மா ஒரு வேலையா அனுப்பினாங்க,'' என்றான்.

''உனக்கு ஒரு விசயம் தெரியுமோ மருது? மூனு நாலு மாசம் முந்தி நான் மெட்ராஸ் வந்திருந்தேன். நீ எங்கே இருக்கிறேன்னு தெரிஞ்சால், பார்த்து, உன் அம்மா கையிலேயும் சொல்லலாமே, சந்தோஷப்படுவாங்களேன்னு நினைச்சேன்...''

மருதய்யன் உதட்டைக் கடித்துக் கொண்டு காத்திருந்தான் - அவன் அடுத்தபடி சொல்லப் போகும் வார்த்தைக்காக,

வேறெதுவும் கூறாமல் அவனைக் கடந்து உள்ளே சென்றுவிட்டான் கப்பு.

மெட்றாசுக்கு வந்ததைப்பற்றி அவன் குறிப்பாகச் சொன்னதற்கு என்ன அர்த்தம்? அதிலே ஒரு அச்சுறுத்தல் ஒளிந்து கொண்டிருப்பது மருதய்யனுக்குப் புரிந்தது. அதைப்பற்றி மேலும் யோசிப்பதற்குள், ''காவேரி, கொஞ்சம் வாயேன் இப்படி,'' என்று அவன் அம்மா அங்கிருந்து அழைக்கும் சத்தம் கேட்டது.

''அது ஏதோ வேலையாயிருக்குது அம்மா. என்ன வேணும் சொல்லு. நான்தான் இருக்கிறேனே தண்டச் சோறு,'' என்றான் மருதய்யன்.

''ஒண்ணுமில்லே தம்பி. உனக்குப் புரியாது. நீ இந்த ஊர்ப்பிள்ளை இல்லையே?''

''சும்மா சொல்லு. அம்மா.''

''பெரியசாமியோட களத்திலே நேத்து வேர்க்கடலை பறிச்சது. இருட்டிப் போச்சதுன்னு எல்லாரும் அப்படியே போட்டுட்டு வந்திட்டோம். கூலி அளக்கச் சொல்லி வாங்கிட்டு வரணும்...''

''ஏம்மா...'' மருதய்யனின் குரல் தழுதழுத்தது. ''முன்னெல்லாம் இந்த மாதிரி கூலி வேலைக்கு நீ போகாம இருந்தியே...''

''எப்பவும் அப்படியே இருக்க முடியுமா, மருது. வயிறு இருக்குதே?'' என்றாள் அவன் அன்னை. ''கடலையை ஆய்ஞ்சு போட்டதிலே நகக் கண்ணிலேயெல்லாம் மண் பூந்துக்கிட்டுத் தொல்லையாயிருக்குது. அதான் காவேரியைப் போய்ப் பார்த்துக் கூலியை அளந்து வாங்கிட்டு வரச் சொல்லலாம்னு பார்க்கறேன்...''

மருதய்யன் மெதுவே வெளியே போய்விட்டான். யோக்கியதை இல்லாத மகனால் அம்மாவுக்கு எவ்வளவு கஷ்டம்! அவன் மனம் வேதனைப்பட்டது...

''எலே மருது! எப்படா வந்தே?'' என்று ஓர் அதட்டல் அவன் நடையை நிறுத்தியது.

அவனை 'டா' போட்டுப் பேசக் கூடிய ஒரே நபர் சாமிநாத வாத்தியார்தான். நாய்த் தலை வைத்த ஒரு வாக்கிங் ஸ்டிக்கை எப்போதும் அக்குகளில் வைத்துக் கொண்டிருப்பார் அவர். இன்றும் அப்படியே காட்சி தந்தார்.



''ரெண்டு நாளாச்சு சார். ரொம்ப இளைச்சிட்டிங்களே?'' என்றான் அவன்.

''வயசு ஆகுதில்லே, அறுபதுக்குக் கிட்டத்தட்ட!'' என்றவர், ''பட்டணத்திலே இருக்கியாமே? எவ்வளவு துட்டு சேர்த்திருக்கிறே?'' என்று வேண்டுமென்றே கிண்டலாகக் கேட்டார்.

''நீங்க ஒண்ணு!''

''டேய்! நான் சொல்றேன் கேண்டா!'' என்று வாக்கிங் ஸ்டிக்கினால் தரையை மூன்று தரம் தட்டினார் சாமிநாத வாத்தியார். ''கிராமத்திலே பொழைப்புக் கிடையாதுன்னு சொல்லிப் பட்டணத்துக்கு ஓடறாங்க முட்டாள் பசங்க. இங்கேயா பிழைப்பு இல்லை? மேலத் தெருவிலே மட்டும் எட்டு வீட்டிலே தறி போட்டிருக்காங்க. வேலைக்கு ஆள் கிடைக்கலேன்னு திண்டாடறாங்க. ஒரு சேலைக்கு ஒம்பது ரூபாய் கூலி. இரண்டு நாளைக்கு ஒரு சேலை போடலாம்...''

''அப்படியா சார்?''

''அத்தோடு இல்லேடா! முன்னே வருசத்துக்கு ஒரு வாட்டிதான் வேர்க் கடலை போடுவாங்க. ஆடியிலே போட்டா தையிலே பறிப்பாங்க. இப்ப? வருஷத்துக்கு மூணு தடவை போடுறாங்க. அதைத் தவிர வழக்கமான நெல், கம்பு, கேழ்வரகு இருக்கவே இருக்குது. பன்னிரண்டு மாசத்திலே பதினொரு மாசம் பிழைப்பு இருக்குதுங்கறேன்.''

''இருந்தாலும்...''

''அடேய்! ஒண்ணும் வேண்டாம்டா. இப்பவே என்னோட வா. ஒரு வேலை இருக்குது. நீயே பார்,'' என்று சாமிநாத வாத்தியார் அவனைக் கைப்பிடியாக இழுத்துக் கொண்டு சென்றபோது அவனால் மறுக்க இயலவில்லை. ஆனால் பெரியசாமியின் வேர்க்கடலைக் களத்துக்குத்தான் அவர் தன்னைக் கூப்பிட்டுக் கொண்டு போவார் என்று அவன்

எதிர்பார்க்கவில்லை. கும்பல் கும்பலாகப் பெண்கள் நின்றுகொண்டு தங்கள் கூலியை அளந்து வாங்கிக் கொண்டிருப்பதையும், அவர்களுக்கு நடுவே காவேரியின் முகம் தெரிவதையும் கண்டவுடன் அவனுக்குச் சிறிது உற்சாகம் ஏற்பட்டது. பறித்துப் போட்ட பச்சை வேர்க்கடலையின் மண் மணம் அவனைக் கிறக்கியெடுத்தது.

''கூலியைக் கணக்கெடுக்கக்கூட ஆள் கிடைக்காமல் பெரியசாமி அவதிப்படறான். போ, அதோ அந்தப் பெண் அளந்து போடறது சரிதானான்னு கவனி. எட்டுக்கு ஒண்ணு,'' என்ற சாமிநாத வாத்தியார், அவனைக் காவேரியிடம்தான் அனுப்பி வைத்தார். ஏற்கெனவே இந்த இடத்தில் அவர் மேற்பார்வைகள் செய்து கொண்டிருந்தார் போலும். இல்லாவிட்டால் இவ்வளவு உரிமையாக அவனை வேலைக்கு நியமித்திருக்க மாட்டார்.

அம்பாரமாய்க் குவிந்திருந்த கடலையின் பின்னே காவேரி நின்றிருந்தாள். அவள் முகம் மலர்ந்தது அவனைக் கண்டதும். ஆனால் அவனுடன் அதிகம் பேசக்கூடாது என்பதைக் கொள்கையாக வைத்துக் கொண்டிருப்பவள் போல, வெறுமே முறுவலிப்பதோடு நிறுத்திக் கொண்டாள்.

மருதய்யனே வலிய, ''என் அம்மாவுக்காக நீ கூலி அளந்து வாங்கிட்டுப் போக வந்திருக்கிறே, இல்லை?'' என்றான்.

''ஆமாம்,'' என்று கூறி, முந்தானையை அடக்கமாகப் போர்த்துக்கொண்டு, மரக்காலைக் கையிலெடுத்தாள் அவள்.

''நான் முதலாளி சார்பில் கண்காணிப்புக்கு வந்திருக்கிறேன். அளவெல்லாம் கரெக்டாய் இருக்கணும். அம்மாவோட கூலி என்பதற்காக அதிகமாய் அளக்க விட்டுவிட மாட்டேன்,'' என்று கறாராகத் தெரிவித்தான்.

அதற்கும் அவள் பதில் தராமல் அளக்கலானாள். 'ஒண்ணு ரெண்டு' என்று வாயால் சொல்லிக் கொண்டபடியே



எட்டு மரக்கால் அளந்ததும், தன் பங்குக்கு என்று இரண்டு போட்டுக் கொண்டாள்.

''என்னம்மா, எட்டுக்கு ஒண்ணு தானே வாத்தியார் சொன்னார்? நீ இரண்டு எடுத்துக்கிறியே?'' என்று ஆட்சேபித்தான் மருதய்யன்.

''உங்கம்மா தெரியாத்தனமா செடிகளுக்கு மொத்தம் இவ்வளவுன்னு கூலி பேசிட்டாங்க. ஆனால் பறிக்கப் போட்டப்பாலே பார்த்தால் செடிக்குப் பத்துக் கடலை கூடத் தேறக் காணோம். நான் பெரிய முதலாளி கையிலேயே போய், பாதிக்குப் பாதி தரணும்னு சண்டை பிடிச்சேன். எட்டுக்கு ரெண்டு எடுத்துக்கன்னு சொன்னார். சந்தேகமானால் போய்க் கேட்டுக்குங்க...'' என்று தன்னையும் மறந்து படபடவென்று பதில் கொடுத்தாள் காவேரி.

அம்மாவின் கூலிக்காகப் போராடினாள் என்பதைக் காட்டிலும் நியாயத்துக்காகச் சண்டை போடுகிறவள் என்ற அறிந்ததிலே மருதய்யனுக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது. ''சரி, சரி. போடு,'' என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தபோது, அவன் தோளில் யாரோ கை வைத்தார்கள்.

மறுபடியும் சுப்பு.

''வேலை இருக்கப்பா. விளையாடாதே,'' என்றான் மருதய்யன் எரிச்சலுடன்.

''உனக்கு மேலே எனக்கு வேலை இருக்குது. விளையாடறதுக்கும் எனக்கு வேறே ஆள் இருக்காங்க. கொஞ்சம் இப்படி வர்றியா?''

''இரு,'' என்று காவேரியிடம் சொல்லிக் கொண்டு அவனுடன் நடந்தான் மருதய்யன். மற்றவர்களின் காதுக்கு எட்டாத தூரத்தை அடைந்ததும் சுப்பு நின்றான். ''திருப்பித் திருப்பிக் காவேரி கையிலேயே விளையாட்டுக் காட்டறியா? வேணாம் மருது. எனக்குப் பிடிக்காது.''

கரிலென்று கோபம் எழுந்தது மருதய்யனுக்கு, சுப்புவின் அலட்சியமான திமிரைக் கண்டு. "டேய், என்னடா நினைப்பு உன் மனசிலே? ரொம்ப விரட்டறியே? இந்த ஊருக்குப் போலீஸ்காரனா நீ?"

"ஏன் மருது எப்பவும் உனக்குப் போலீஸ் நினைப்பாவே இருக்குது?" என்று சுப்பு நகைத்தான்.

"எனக்காக நீ ஒண்ணும் மரியாதை பார்க்க வேணாம். சும்மா உடைச்சுப் பேசு."

"உடைச்சே பேசட்டுமா? அப்ப சரி. பெரிய விசயம் ஒண்ணும் இல்லை, மருது. நான் மெட்றாஸ் வந்திருந்தப்போ நீ எங்கே போயிருக்கிறன்னு அங்கே இருக்கிறவங்க சொன்னாங்க. உன் அம்மா என்னடான்னா நீ பம்பாய் போயிருந்ததா சொல்லிட்டிருக்காங்க. நானும் உண்மையைச் சொல்லாமலேயே இருக்கிறேன்..."

குபீரென்று அவன் சட்டையை நெஞ்சுப் பட்டியில் இறுக்கப் பிடித்தான் மருதய்யன். "புரியுது! இதோ பார்! ஜெயில் விஷயத்தை அம்மா கையிலே சொன்னியோ, அடுத்த மினிட் உன் உடம்பிலே உயிர் இருக்காது. உஷார்!" என்று கீழ்த் தொண்டையில் உறுமியபோது, அவனையும் அறியாமல் அவன் கரங்கள் முறுக்கேறியதால், சுப்புவின் குரல்வளையில் எலும்புகள் புடைத்துக் கொண்டு நின்றன. விழிகள் வெளியே விழுந்து விடுகிற மாதிரி பிதுங்கின. சட்டென மருதய்யனுக்குச் சுய உணர்வு பிறந்தது. 'முட்டாள்! ஏதாவது தப்புத் தண்டா செய்து மறுபடியும் ஜெயிலுக்குப் போகிற நிலைமைய ஏற்படுத்திக் கொண்டு விடாதே!' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டு பிடியை விட்டான். சுப்பு உடனே ஓடவில்லை. முறைத்துப் பார்த்தபடி சிறிது நேரம் நின்றிருந்தபின், திமிராகவே நடந்து சென்றான்.

பீதியினால் வெளுத்து விட்டது காவேரியின் வதனம். மற்றவர்கள் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்ததால்



அவனும் சுப்புவும் போட்ட ஊமைச் சண்டையைக் கவனிக்கவில்லை. ஆனால் காவேரியினால் வேறு திசையில் விழிகளைத் திருப்ப இயலவில்லை போலும்.

"நீ எதுவும் கண்டுக்காதே. வேலையைப் பார்," என்றான் அவன். அவள் தொடர்ந்து அளந்தாள். வாத்தியாரைக் கூப்பிட்டு, கணக்கைச் சொல்லி, தங்கள் கூலிக்கான கடலையைக் கோணியில் கட்டி எடுத்துக் கொண்டு, இருவருமாகச் சேர்ந்தே திரும்பினார்கள்.

அன்று இரவு வெகுநேரம் வரை அவன் தூங்கவில்லை. செங்கம்மாவையும் மதறாசையும் இனிமேலும் பிடித்துக் கொண்டு தொங்க வேண்டுமா என்று அவனுக்குக் குழப்பமாயிருந்தது. இங்கே பிழைப்புக்குப் பஞ்சமில்லை என்று சாமினாத வாத்தியார் கூறிய உறுதிமொழியும் ஞாபகம் வந்தது.

தெருவில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுக் கொண்டு, வானத்தின் கண் சிமிட்டல்களைப் பார்த்தபடி கொட்ட கொட்ட விழித்துக் கொண்டிருந்தான். விடியற்காலம் மூன்று மணிக்கு, பம்ப் செட்டை இயக்கி விடுவதற்காக லாந்தர் விளக்கோடு விவசாயத் தொழிலாளிகள் செல்லத் தொடங்கினார்கள்.

"மருது, காவேரியைக் கட்டிக்க உனக்கு இஷ்டமாப்பா?" என்று அம்மா திடுப்பெனக் கேட்டாள். அவளும் தூங்காமலா இருக்கிறாள்? இது என்ன திடீர் வினா? சாயந்தரம் அவனும் காவேரியும் சேர்ந்து வந்ததைப் பார்த்தது முதல் அதைப் பற்றியே எண்ணிக் கொண்டு இருந்திருக்கிறாளோ?

# பதினொன்று

அனுபமா அவன் பதிலுக்காகக் காத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

பிரம்பு நாற்காலியின் விலாக்களில் விரல்கள் மெல்லத் தாளமிட, தரையையே பார்த்த வண்ணம் பேசாமல் உட்கார்ந்திருந்தான் ஆளவந்தார். அவனுடைய சிந்தனையைக் கலைக்க அஞ்சுவது போல இலைகளும் பூக்களும் கிளைகளும் செயலற்றுப் பேசாதிருந்தன. தூரத்தில் சாலையில் செல்லும் போக்குவரத்தின் ஓசைகள் மட்டுமே அவ்வப்போது செவியில் விழுந்தன.

''யோசிக்க வேண்டாம் டாக்டர்...'' அவள் சொல்லி முடிக்கு முன், முதன் முறையாக ஆளவந்தாரின் குறுக்கீடு கோபமாக வெளிப்பட்டது. ''அந்த வார்த்தையை மட்டும் தயவு செய்து சொல்லாதே, அனுபமா. என் நிதானத்தையே அது குலைத்து விடுகிறது.''

''ஆனால் உங்களை டாக்டராகத் தவிர வேறு ஏதாகவும் என்னால் எண்ண முடியவில்லையே?'' அவள் புன்னகை செய்துவிட்டுக் கைக்கடியாரத்தைப் பார்த்தாள். ''புறப் படுங்கள் டா - லாரி, சார். மணி ஏழாகப் போகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் உலகம் பூரா அமைதியாய், ஆனந்தமாய்த் தூங்க ஆரம்பித்துவிடும். என் அத்தை மட்டும் இருமிக் கொண்டு, மூச்சுத் திணறிக்கொண்டு, துப்பிக் கொண்டு, இரவு பூரா அவஸ்தைப்படுவாள். எத்தனை நாட்களாக அந்தத் துன்பத்தை நான் பார்த்துப் பார்த்துத் தவித்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? எப்போது நீங்கள் விடுதலையாகி வெளியே வருவீர்கள். என்று ஒவ்வொரு நாளையும் நான் கணக்கிட்டுக் கொண்டிருந்தது என் ஒருத்திக்குத்தான் தெரியும்...''



அவளுடைய வழவழப்பான நைலக்ஸ் புடவை காற்றிலே ஆடி, அவனுடைய முழங்காலை உரசி உரசித் தணிந்தது. அந்தப் பரந்த தோட்டத்தின் ஓரங்களில் ஒளி வீசிய குழல் விளக்குகளின் வெளிச்சத்தில் அவள் வதனத்தின் வேதனை எடுப்பாகத் தெரிந்தது.

15634

''எனக்கு அரை மணி நேரம் அவகாசம் தர முடியுமா அனுபமா?''

அவள் விழிகளில் மகிழ்ச்சி நிரம்பியது. ''நீங்கள் வருவதாயிருக்கும் பட்சத்தில், அரை மணியென்னடாக் - சார், அரை நாள் வேண்டுமானாலும் நான் காத்திருக்கத் தயாராயிருக்கிறேன்.''

அவன் கையைத் தட்டினான். எட்டத்தில் நின்றிருந்த தோட்டக்காரன் ஓடி வந்து கை கட்டிக் கொண்டு நின்றான். ஆளவந்தார், தன் சட்டைப் பையிலிருந்து கையகலமே உள்ள ஒரு சிறிய நோட் புத்தகத்தை வெளியிலெடுத்து, பால் பாயிண்ட் பேனாவினால் அதில் இரண்டு வரி கிறுக்கி, அந்தத் தாளைக் கிழித்து, ''செக்ரட்டரியிடம் கொடு,'' என்று அனுப்பி வைத்தான்.

நன்கு இருட்டி விட்டது. காற்றின் வீச்சில் குளிர் நிறையலாயிற்று.

ஆளவந்தார் எழுந்து கொண்டான். ''வா அனுபமா, வீட்டுக்குள் போய் உட்கார்ந்திருக்கலாம்.''

பின் கை கட்டியபடி, தலையைத் தாழ்த்தியவாறே அவன் முன்னே நடக்க, அவள், உணர்ச்சி வசப்பட்டவளாக, ''தாங்க்ஸ் சார்... உங்களுடன் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருக்கும் என்று நினைத்தேன்...'' என்று சொல்லிக்கொண்டே முன்னறைக்குள் நுழைந்தாள்.

அவள் உட்கார்ந்து கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். கண்ணாடி பதித்த ஸ்டீல் அலமாரிகளில் தடித்த புத்தகங்கள்

அடுக்கப்பட்டிருந்தன. சுழல் அலமாரிகளில் பத்திரிகைகள் நிரம்பிக் கிடந்தன. எல்லாமே வைத்திய சாத்திரம் சம்பந்தப்பட்டவை என்பதை அவள் ஊகித்துக் கொண்டாள்.

அவள் அவனைக் கூர்ந்து கவனித்தாள். ஒரு பக்கத்திலிருந்து பார்க்கையில் அவன் கூந்தல் கன்னங்கரேலென்று பளபளப்பதாகவும், வேறு புறத்திலிருந்து காணும்போது சிறிது செம்பட்டையாய் மின்னுவது போலும் இருந்து, அதுவே ஒரு விசித்திரக் கவர்ச்சியை அவனுக்குத் தந்தது.

''கொஞ்சம் குளிராயிருக்கிறதோ?'' என்றான் ஆனவந்தார். ''தோட்டத்தில் இந்தப் பக்கத்தில் மரங்கள் அதிகம்.''

''அப்படியொன்றும் குளிரவில்லை,'' என்று கூறினாளாயினும் அநுபமா தன் மார்பின் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டாள்.

அவன் தன் வார்ட்ரோபைத் திறந்து, பல ஸ்லாக்குகளையும் பாண்ட்களையும் விலக்கி விலக்கி எதையோ தேடினான். இறுதியில் ஒரு காஷ்மீர் சால்வையை எடுத்து, உரிமையுடன் அவள் தோளில் போர்த்தினான். அந்த மஞ்சள் நிறச் சால்வை அவளுடைய நீல ஸாரியை எடுப்பாகத் தூக்கிக் கொடுப்பதாயிருந்தது. ''குளிருக்கு ஒரு தாங்ஸ். இந்தச் சால்வை இதைக் காட்டிலும் அழகானதொரு மேனியை அலங்கரித்ததில்லை,'' என்றான் அவன்.

அவள் முகம் மலராமலில்லை. இருந்தாலும் கவலை உடனே அதை மறைத்தது.

''சீக்கிரம் புறப்படுங்கள். அத்தை என்னைத் தேடிக் கொண்டிருப்பாள்,'' என்றாள்.

''நான் அரைமணி நேரம் கேட்டேன். நீயும் கொடுத்தாய். இப்போது ஐந்து நிமிடம்கூட ஆகவில்லை. ஒருவேளை முப்பது நிமிடம் ஆகிவிட்ட மாதிரி உன்னைப் போரடித்து விட்டேனோ?''



''இல்லைவில்லை,'' புன்னகை பூத்த வண்ணம் தலையை ஆட்டினாள் அவள்.

''ஆனால் என் பயமே வேறு.''

''பயமா?''

''ஆமாம். உன்னுடன் இருக்கும் அரைமணி நேரமும் ஐந்து நிமிடமாக ஆகி விடுமோ என்று தோன்றுகிறது.'' பேசியபடியே அவன் தன் கைக்கடியாரத்தை ஒருமுறை பார்த்துவிட்டு, ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

அவளுக்கு அவனுடைய பேச்சும் தோரணையும் அண்மையும் மனத்துள் ஒரு பரவசத்தை ஊட்டிக் கொண்டிருந்தன. அவன் கையால் போர்த்திய சால்வை மெதுவே படபடக்கும் போதெல்லாம், அதன் நுனிகள் கன்னத்திலும் மோவாயிலும் உரசும்போதெல்லாம், ஒரு புதுமையான இன்பத்தை உணர்ந்தாள். என்றாலும், இந்தச் சந்திப்பும் இந்தப் பேச்சும் இந்தப் பார்வையும் இந்த ஸ்பரிசமும் இப்போது நிகழாமல் இன்னும் சந்தோஷமான வேறொரு சூழ்நிலையில் நேர்ந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமே என்று எண்ணிக் கொண்டாள்.

மேஜை மீதிருந்த நெயில்கட்டர் அவளுடைய கிளர்ச்சியை குறைத்துக் கொள்ள உதவிற்று. மெதுவே ஒவ்வொரு நகமாய்க் கிள்ளிக் கொண்டிருந்தாள். நெயில் கட்டரின் படக் படக் ஓசை மட்டுமே அந்த அறையெங்கும் சில நிமிடங்களுக்கு ஆதிக்கம் செலுத்தியது.

''உனக்கு வயது என்ன ஆகிறது?''

''இருபத்திரண்டு.''

''என்ன படிக்கிறாய்?''

''பி.ஏ., ஃபைனல்.''

''எஸ்.ஐ.இ.டி.யா?''

''எதிராஜ்.''

''எத்தனை வருஷமாய் உன் அத்தையுடன் இருந்து வருகிறாய்?''

''மூன்று வருஷமாய்.''

''அத்தையிடம் வருவதற்கு முன்? என்ன செய்தாய்?''

''நல்ல கிராஸ் க்வெஸ்சன்!'' என்று சிரித்தாள் அவள். ''அது ரொம்ப நீளமான துன்பக்கதை. அதைச் சொல்வதனால் சில நிமிடங்கள் போதாது.''

''எப்படிப்பட்ட கதையையும் ஓர் இஞ்செக்ஷன் ட்யூபுக்குள் அடைத்துவிட முடியும் என்று எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர் அடிக்கடி சொல்வார். கூடுமான வரையில் சுருக்கிச் சொல்லேன்.''

அவள் பெருமூச்செறிந்தாள். பிறகு கூறினாள்: ''நான் என் வயது இருபத்திரண்டு என்று சொல்லி, இப்போது பி.ஏ. ஃபைனல் படிக்கிறேன் என்றும் சொன்னபோது, நடுவில் ஏன் அத்தனை வருட இடைவெளி என்று நீங்கள் கேட்பீர்கள் என்று நினைத்தேன்.''

''கேட்காதது தப்புதான். ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருடம் உட்கார்ந்து வந்தவள் என்று உன்னைப் பார்த்தால் தோன்றவில்லை.''

''தாங்ஸ்,'' என்று முறுவலித்தபோது, அனுபமா சகஜமான மன இயல்பைப் பெற்றவளாக இருந்தாள். ''நான் வேலூரில், என் அப்பா வீட்டில் இருந்தபோது, எஸ்.எஸ்.எல்.சி.யை முடித்துவிட்டு, ஸி.எம்.ஸி. ஆஸ்பத்திரியில் வேலைக்குப் போய்க்கொண்டிருந்தேன், ஒரு டைப்பிஸ்டாக.''

''உன் அப்பா?''

''அவர் ஒரு வக்கீலிடம் குமாஸ்தாவாக இருந்தார். அதாவது, இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு



அம்மா இல்லை. அப்பாவைப் பெற்ற பாட்டியொருத்திதான் - கண் தெரியாதவள் வீட்டோடு இருந்தாள். அப்பா எனக்காக வரன் தேடுவதற்காக மாதத்தில் பாதி நாள் வெளியூர் போய்க் கொண்டிருப்பார் - அதாவது, அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தார்.''

''உண்மையில்?''

''உண்மையில் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது ஒருநாள் நாலு பேராக அவரைத் தூக்கிக் கொண்டு வந்து வீட்டில் போட்டபோதுதான் தெரிந்தது. ரம்மி ஆட்டத்தில் அடிதடி! வக்கீலுமில்லை, குமாஸ்தாவுமில்லை. வரனுமில்லை, தேடவுமில்லை. என் சம்பளத்தை வாங்கிக் கொண்டு போய்ச் சீட்டாட்டத்திலும் சூதாட்டத்திலும் தொலைத்துக் கொண்டிருக்கிறார் என்று புரிந்தது. இங்கே பட்டணத்தில் என் விதவை அத்தை வசதியாக இருப்பது எனக்குத் தெரியும். அப்பாவுக்கும் அத்தைக்கும் ரொம்பக் காலமாகப் பேச்சு வார்த்தை கிடையாது என்றும் தெரியும். அப்பாவுக்கு ஒரு சீட்டு எழுதி வைத்துவிட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன்.''

அவள் பேசுவதையே கேட்டபடி அவன் மேஜைப் பரப்பை ஆராய்ந்து கொண்டிருந்தான். அவன் உதட்டில் இளநகை அரும்பியது.

அனுபமா வெட்டிக் கொண்டிருந்த நகத் துண்டுகள், நெயில் பாலிஷின் சிவப்புடன் சின்னச் சின்ன விள்ளல்களாகப் பரவிக் கிடந்தவற்றை மெல்ல மேஜைமீது ஒன்று சேர்த்தான். வெவ்வேறு பாட்டர்னாக வைத்து வைத்து அழகு பார்த்தான்.

''கோலம் போல் அழகாயில்லை?'' என்று அவன் கேட்டதற்கு அவள் பதில் சொல்லவில்லை. சுவரிலிருந்த கடியாரத்தைப் பார்த்து, ''இருபத்தைந்து நிமிஷம் ஆகிவிட்டது.'' என்றாள்.

''இன்னொரு ஐந்து நிமிடம் தானே? சுலபமாய் ஓட்டிவிடலாம்,'' என்ற ஆளவந்தார் ஷெல்பிலிருந்து ஒரு

புத்தகத்தை எடுத்தான். ''சார்லஸ் இங்கிலியின் கவிதை யொன்றை மொழி பெயர்த்துப் படிக்கிறேன். கேள்,'' என்று அறிவித்தான். ''வாலிபனே! உலகம் மொத்தமும் இளமையாக இருக்கும்போது, மரங்களனைத்தும் பசேலென்று தோன்றும் போது, வாத்தெல்லாம் அன்னமாய்த் தெரியும்போது, பெண்ணெல்லாம் ராணியாய்க் காட்சி தரும்போது, அணிந்து கொள் காலணியை! ஏறு குதிரை மீது! சுற்றி வா உலகையெல்லாம்! ஆம், இளைஞனே! இள ரத்தத்துக்கு ஒரு வழி காண வேண்டாமா...''

யாரோ தயங்கித் தயங்கி உள்ளே வரும் காலடியோசை கேட்டது.

''டாக்டர்! நீங்கள்... நீங்கள் வந்துவிட்டீர்கள் என்று எனக்குத் தெரியாது. இப்போதுதான் நீங்கள் வரச் சொன்னதாக உங்கள் செக்ரட்டரி சொல்லியனுப்பினார்...'' என்று மிக மெல்லிய குரலில் அவர் பேசிக் கொண்டே வந்தார்.

அவருக்கு வயது ஐம்பது இருக்குமென்று அனுபமா ஊகித்தாள். பின் மண்டையில் வழுக்கை விழுந்திருந்தது. நல்ல பாங்கிப் பழச் சிவப்பு. கசங்கியதாக எட்டு முழவேட்டியும், கர்நாடகமான முறையில் ஃபுல்ஹாண்ட் ஷர்ட்டும் அணிந்திருந்தார்.

''டாக்டர், நீங்கள் போன பிறகு நான் ரொம்பக் கஷ்டப்பட்டுவிட்டேன்...'' என்று கூற முற்பட்ட அந்த மனிதரை ஆளவந்தார் தடுத்தான்.

''நான் ஒரு போலி டாக்டர். கல்விக்டாகி, ஜெயிலுக்குப்போய் வந்திருப்பவன். நீங்கள் படித்துப் பட்டம் பெற்ற குவாலிஃபைட் டாக்டர். என்னை நீங்கள் டாக்டரென்று கூப்பிடுவதே முதலில் தவறு.'' என்ற ஆளவந்தார், ''அனுபமா, இவர் டாக்டர் - அசல் டாக்டர் சிவா.'' என்று அறிமுகப்படுத்தினான் அவளுக்கு.



''வணக்கம்,'' என்றாள் அனுபமா.

''பூர்வாசிரமத்தில் என் கீழே வேலை செய்த மூன்று அசல் டாக்டர்களில் இவரும் ஒருவர். மற்ற இரண்டு பேரும் எப்படியோ பிழைத்துக் கொண்டுவிட்டார்கள். இவருக்குத் தான் அது தெரியவில்லை.

எப்போது இந்த மனிதர் புறப்படுவாரோ என்று அனுபமாவுக்கு அலுப்பாயிருந்தது.

''என்னவோ இனிமேல் எனக்குக் கவலையில்லை. பழையபடி உங்களுடன் இருந்து கொள்கிறேன். உங்கள் ஜீனியஸ் என்னைக் காப்பாற்றும்,'' என்றார் டாக்டர் சிவா.

''உஷ்! அப்படியெல்லாம் பேசாதீர்கள்,'' என்று அதட்டினான் ஆளவந்தார். ''ஆயிரம் சொன்னாலும், உங்கள் குவாலிஃபிகேஷன் குவாலிஃபிகேஷன்தான். என் போசடி மோசடிதான். ஐந்து வருடம் உங்களுக்குக் கல்லூரியில் என்ன சொல்லித் தந்தார்களோ அதை மறந்துவிட்டீர்கள். நீங்கள் மட்டுமில்லை. பெரும்பாலான டாக்டர்கள் அப்படித்தான். எப்படிப் படிப்படியாக நோயாளியைக் கவனித்து டயக்னஸ் செய்ய வேண்டுமென்று விதிகள் இருக்கிறது. அதைக் கடைப் பிடித்து, ட்ரீட்மெண்ட்டைத் தருவதற்கான பொறுமை உங்களுக்கும் இல்லை, நோயாளிகளுக்கும் இல்லை. வெறும் ஸிம்ப்டம்களை வைத்து, ஆண்டிபயாடிக் மருந்துகளைக் கொடுத்து ஏதோ குணப்படுத்தினால் சரி என்று விட்டு விடுகிறீர்கள். நான் அப்படிச் செய்யாமல், உங்களுக்குக் கல்லூரியில் கற்றுத் தந்த முறைகளின்படி நோயாளிகளைப் பரீட்சை செய்தேன். வெற்றி கிடைத்தது. அவ்வளவுதான். இதே முறையில் நீங்களும் பிராக்டிஸ் செய்துபாருங்கள். வெற்றி நிச்சயம்...''

கசப்புடன் நகைத்தார் டாக்டர் சிவா. ''கல்லூரியில் வருவது, அனுபவத்தால் வருவது இதையெல்லாவற்றையும் விட இன்னொன்று இருக்கிறது என்பதை மறந்து விட்டீர்கள்.

முகராசி. இனிமையான பர்ஸனாலிட்டி. உங்கள் வெற்றியின் ரகசியம் அதுதான். அப்படிப்பட்ட முகராசிக்கு நான் எங்கே போகட்டும்?''

''நீங்கள் எங்கேயும் போக வேண்டாம் டாக்டர்,'' என்றான் ஆளவந்தார். ''என்னுடைய முன்னாள் நோயாளிகளெல்லாம் இனி உங்களிடம் ட்ரீட்மெண்ட் செய்து கொள்ளும்படி ஏற்பாடு செய்கிறேன். இதோ முதல் கேஸ் - அனுபமாவின் அத்தை...''

அவன் முடிவுக்கு முன், சரக்கென்று நாற்காலியை பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தாள் அனுபமா. சால்வை வழுக்கிக்கொண்டு கீழே விழுந்தது. ''நீங்கள் வரப்போகிறீர்களென்றுதான் இத்தனை நேரமும் காத்திருந்தேன். வரப் போகிறீர்களா இல்லையா? இதோ இஞ்செக்ஷன் ஊசிகூட உங்கள் அலமாரியில் இருக்கிறது...''

''அந்தச் சட்ட விரோதமான வழியில் நான் போவதற்கில்லை என்பதை முதலிலேயே சொல்லிவிட்டேனே, அனுபமா?'' என்று சொல்கையிலேயே ஒரு விஷயம் திண்ணமாக அவனுக்குப் புரிந்தது.

அவனுக்கும் அவளுக்குமிடையேயான காதல், அரும்பத் தொடங்கிய வேகத்திலேயே கருகவும் தொடங்கிவிட்டது என்பதுதான்.

## பன்னிரண்டு

ஜெம் க்ளிப்புகளை ஒன்றோடொன்று கோத்து மாலையாக்கிக் கொண்டிருந்தான் ஆளவந்தார். பிறகு ஒவ்வொன்றாய்ப் பிரித்துத் தட்டில் போட்டான். அவனிடமிருந்து பதில் வரப் போகிறதென்று காத்திருந்த அனுபமாவுக்கு அவனுடைய செய்கை எரிச்சல் மூட்டியது. அவன் நிமிர்ந்து பார்த்தபோது அவள் கண்களில் கனல் தெறித்துக் கொண்டிருந்தது.



''இது ஒரு நல்ல எக்ஸர்சைஸ்,'' என்றான் அவன். ''மனம் அப்செட் ஆகிறபோது நூறு வரை எண்ணுகிற மாதிரி, ஐம்பது க்ளிப்புகளைக் கோத்துப் பிரித்துக் கொண்டிருக்கலாம்.''

''உபயோகமான குறிப்பு. ரொம்ப நன்றி,'' என்றாள் அவள் காரமாக. ''உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிற என் அத்தையிடம் சொல்கிறேன். ரொம்பச் சந்தோஷப் படுவாள்.''

''திருப்பித் திருப்பி அதையே சொல்கிறாயே, அனுபமா? உனக்கு வயது இருபத்திரண்டு ஆகிறது. பி.ஏ. படிக்கிறாய். உன் அத்தையின் நோய் என்னவென்று உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?''

''தெரியுமே? பிராங்க்கியல் ஆஸ்துமா.''

''ரைட். கண்ட கண்ட நாட்டு வைத்தியத்தைச் செய்து கெடுத்துக் கொண்டு வந்திருக்கிறார் இத்தனை காலமும். வசதியும் பணமும் இருந்தும் ஒரு நல்ல இங்கிலீஷ் வைத்தியத்தைச் செய்து கொள்ளவில்லை. நான்தான் முதல் இங்கிலீஷ் டாக்டர். என்ன மருந்து கொடுத்தேனென்று நினைக்கிறாய்?''

''தெரியாது.''

''அரை ஸிஸி அட்ரனலின். அவ்வளவுதான். இம்மீடியட் ரிலீஃப் தருகிற அந்த ஊசி, எந்தச் சாதாரண நர்சும் மெடிகல் ஸ்டூடண்டும்போட்டுவிடக் கூடிய சாதாரண விஷயம். உன் அத்தைக்கோ என்னால்தான் குணமாகிறது என்று ஒரு மூடநம்பிக்கை. வேறு யாரிடமும் வைத்தியம் செய்துகொள்ள மாட்டேன் என்று ஓர் அசடுப் பிடிவாதம்.''

''எதுவானால் என்ன? உங்களை நம்பிக் கொண்டு ஒரு வருஷமாய் அவள் துன்பத்தைச் சகித்துக் கொண்டு காத்திருக்கிறாள். உங்களுக்குப் பதில் வேறு யாரை

அனுப்பினாலும் வைத்தியம் செய்து கொள்ளவும் மாட்டாள். அந்த வைத்தியத்துக்குப் பலன் இருக்கவும் இருக்காது.''

''நீயும் உன் அத்தை மாதிரியே பேச ஆரம்பித்து விட்டாய். இன்றைக்கு டாக்டர் சிவாவை அனுப்புகிறேன். கவலைப்படாதே.''

''வேண்டாம்,'' என்று சுருக்கமாய்க் கூறிவிட்டு வெளியேறினாள் அனுபமா.

''அப்பப்பா!'' கைகளை வானை நோக்கி உயர்த்திக் கொண்டு பரிதாபமாகப் பேசினார் டாக்டர் சிவா. ''உங்கள் பேஷண்டுகள் மொத்தப் பேரும் இப்படிப்பட்டவர்கள்தான். என்னைப்போய் இவர்களை வைத்துக் கொண்டு தொழில் நடத்தும்படி சொல்கிறீர்கள்! மை காட்!''

''இந்தத் தாழ்வு மனப்பான்மையை உதறுங்கள். பிரமாதமாய் வந்துவிடுவீர்கள்,'' என்றான் ஆளவந்தார்.

''ஒரு வருஷமாய் எவ்விதப் பிராக்டிசும் பண்ணாமல் இருந்து வந்திருக்கிறேன் சார் நான்!''

''பரவாயில்லை. கிளினிக் ஆரம்பியுங்கள்.''

''அதற்கு ஒரு இடமே இனிமேல்தான் பார்க்க வேண்டும்.''

''பாருங்கள். அதற்கான செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன்.''

''இடம் தருவீர்கள். டிஸ்பென்ஸரிக்கான செலவு தருவீர்கள். நோயாளிகளும் தருவீர்கள். ஆனால் இதெல்லாம் போதாது. எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறபோது, உங்களிடம் வருவேன். அட்வைஸ் தருவீர்களா?''

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு நிமிடம் யோசித்த ஆளவந்தார், ''என்னிடம் நோயாளியை அழைத்து வரக் கூடாது. என்னையும் அழைத்துப் போகக் கூடாது. என்



கையால் மருந்துச் சீட்டுகள் எழுதித்தரச் சொல்லிக் கேட்கக்கூடாது. சம்மதமா?''

''சம்மதம்,'' என்றார் டாக்டர் சிவா. ''ஏதோவோர் ஆறாவது அறிவு உங்களுக்குத் துணை நின்று, சரியான சிகிச்சை இன்னதென்று விளக்குப் போட்ட மாதிரி எடுத்துச் சொல்கிறது. அந்த அறிவின் பயனையாவது எனக்கு வழங்குங்கள். வெற்றி கிடைக்கிறதா பார்க்கிறேன்.''

''கேம்,'' என்றான் ஆளவந்தார். ''டிஸ்பென்ஸரிக்கு நல்ல இடம் கிடைத்ததும் எனக்குத் தெரிவியுங்கள்.''

''**நா**ன்தான் வரலட்சுமி பேசுகிறேன் - அட்வகேட்,'' என்று குரல் கேட்டதும், ஆளவந்தார் ரிஸீவரைக் காதிலிருந்து கொஞ்சம் விலக்கினாற்போல் வைத்துக் கொண்டான். நேரில் இனிமையாயிருக்கும் குரல், டெலிபோனில் மட்டும் ஏன் கீச்சென்று குத்துகிறது என்பது அவன் வெகு நாளாக அடைந்து வரும் ஆச்சரியம்.

''குட்மார்னிங். ஏதோ விசேஷம் இருந்தாலொழிய இவ்வளவு காலையில் போன் பண்ண மாட்டீர்களே?''

''கரெக்ட். விசேஷம் என்று சொல்ல முடியாது. க்ரைஸிஸ். வி. ஆர் ஃபேஸிங் எ க்ரைஸிஸ் என்று தோன்றுகிறது...''

''பேஷ், பேஷ்! குட் நியூஸ் சொல்லப் போகிறீர்கள்?''

''இன்காரிஜிபிள்!'' என்று வரலட்சுமி அம்மாள் கடிந்து கொண்டாள். ''என்றைக்குத்தான் நீங்கள் வாழ்க்கையை ஸீரியஸாக எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்?''

''ஸீரியஸாய் எடுத்துக் கொண்டால் அதன் சாரமே போய்விடும்,'' என்றான் ஆளவந்தார். ''சொல்லுங்கள், அட்வகேட். என்ன நெருக்கடி ஏற்படும் போலிருக்கிறது?''

வரலட்சுமி அம்மாள் சுற்றி வளைத்துத்தான் பேசுவ தென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள் போலும். ''என் தாத்தாவொருவர் அடிக்கடி சொல்வார் ஒரு பழமொழி 'பயந்த மனுஷி பருப்பெடுக்கப் போனாளாம், இருந்தவர்களெல்லாம் எழுந்தோடிப் போனார்களாம்,' என்று. அந்த மாதிரி, 'ஜாக்கிரதை! ஜாக்கிரதை!' என்று சொல்லிக் கொண்டே ரொம்ப அஜாக்கிரதையாக இருந்திருக்கிறோம்...''

''மேடம், உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா?''

''ஓ!''

''இவ்வளவு ரவுண்டபௌட்டாகக் கோர்ட்டில் வாதம் பண்ணினீர்களானால், ஜட்ஜ் உங்கள் கட்சிக்காரரை விடுவித்துவிட்டு உங்களுக்கு இரண்டு வருஷம் நீட்டி விடுவார்!''

''இதோ விஷயத்துக்கு வருகிறேன். ஒரு வாரம் பம்பாய் போய்விட்டு, நேற்றுதான் வந்தேன். காதிலே விழுந்தது. உங்களிடம் சொல்லாமலிருக்கலாமா?''

''கூடாது, கூடாது. சீக்கிரம் சொல்லுங்கள்.''

''இன்கம்டாக்ஸ் பர்ப்பஸிற்காகப் பல பிராபர்ட்டிகளை வேறு பெயர்களில் வாங்கியிருந்தோம் இல்லையா? பார்க்கப் போனால் வாங்கியிருந்தீர்கள் என்று சொல்ல வேண்டும். பிகாஸ் ஐ அட்வைஸ்ட் யூ எகென்ஸ்ட் இட்.''

''ஆமாம். உங்கள் பேச்சைக் கேட்காமல்தான் நான் செய்தேன்.''

''அவரவர்கள் அவரவர் சொரூபத்தைக் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.''

''அதாவது?''

''எவ்வளவு ஸிம்பிள்டனாக இருக்கிறீர்கள்!'' என்று வரலட்சுமி அம்மாள் சிரித்தாள். ''பினாமி பெயரில் வாங்கிய



சொத்துக்கள் தங்களுக்கே சொந்தம் என்று பாத்தியதை கொண்டாடுகிறார்களாம். என்ஜினியர் என்ன சொல்கிறார் தெரியுமா? யாரையெல்லாம் நீங்கள் ரொம்ப நம்பினீர்களோ, அவர்கள்தான் உங்கள் நெற்றியில் சாத்த முதலில் நிற்கிறார்களாம்.''

''ரைட். நெற்றியைச் சோப்புப் போட்டுத் துடைத்துச் சுத்தமாய் வைத்துக் கொள்கிறேன்.''

''ரொம்ப முக்கியமாய் ஒரு ஷாக் சொல்லட்டுமா?''

''கோ அஹெட்.''

''டாக்டர் சிவா இல்லை.''

''சரி?'' அவனையும் மீறி ஒரு பதைப்பு உதித்துவிட்டது ஆளவந்தாருக்கு. உடனே அதை மறைத்துக் கொண்டு, ''அவருக்கென்ன?'' என்றான் சாதாரணமாய்.

''ஸ்ரீராம் நகர் ஸெகண்ட் ஸ்ட்ரீட்டில் கிருத்திகா என்ற பங்களா அவர் பெயரில்தான் வாங்கியது. அதை அவர் ஸ்வாஹா பண்ணப் பார்த்துக் கொண்டிருப்பதாய்க் கேள்வி.''

'ஃப்யூ,' என்று சீட்டி அடித்தான் அவன். ஒரு நிமிட நேரத்துக்கு டெலிபோனில் பேச்சுக் குரல்கள் ஒலிக்கவில்லை. வரலட்சுமி அம்மாளின் வீட்டு வாசலோடு மறையும் ஒரு காரின் ஹாரன் ஒலி மட்டும் கேட்டது.

''ஆர் யூ தேர்?'' என்றாள் வரலட்சுமி அம்மாள். ''ரொம்ப ஷாக்கிங்காகச் சொல்லிவிட்டேன் போலிருக்கிறது?''

''எஸ். சட்டென்று நம்பமுடியவில்லை. டாக்டர் சிவா தங்கமான மனிதர்.''

''டாக்டர் சிவா தங்கமான மனிதர். அப்பாவி. பயந்த சுபாவக்காரர். சூது வாதுக்கு இடம் கொடுக்காதவர். ஐ நோ,'' என்றாள் அட்வகேட் அம்மாள். ''அவர் சம்சாரம்

அப்படியில்லை. சரியான எமடன் என்று யாரைக் கேட்டாலும் சொல்வார்கள். கணவனுக்குத் தொழிலில்தான் வெற்றி யில்லை, இப்படிக் குறுக்கு வழியிலாவது அடிக்கலாமே என்று பார்க்கிறார் போலிருக்கிறது. இன்றைத் தேதியில் அந்த பங்களா இருபது லட்சத்துக்குக் குறையாது. ஏன் நாக்கில் ஜலம் ஊறாது?''

'ஓ கே அம்மா. நான் யோசனை செய்கிறேன்,'' என்ற ஆளவந்தார், வரலட்சுமி அம்மாள் விடை கொடுக்கும்வரை காத்திராமல் போனை வைத்தான். பிறகு ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்தாற்போல் சிறிது நேரம் நின்றிருந்தான். ஒரு வண்ணத்துப்பூச்சி படபடவென்று செடிக்குச் செடி தாவிக் கொண்டிருந்தது. அதைத் துரத்தித் துரத்திப் பிடிப்பதிலே குறியாருந்தது ஒரு குருவி. வெற்றி பூச்சிக்கா, குருவிக்கா என்று நோட்டமிட்டவாறு அவன் காத்திருந்தான். பின்னர் மேஜை மீதிருந்த ஒரு பென்ஸிலை எடுத்துக் குருவியின் மீது வீசியெறிந்து அஅதை விரட்டிவிட்டான்.

பஸ்ஸரை அழுத்தி, செக்ரட்டரியை வரவழைத்தான். ''ஒரு கடிதம் சொல்கிறேன். எழுதிக்கொள்,'' என்றதும் செக்ரட்டரி நோட்டும் கையுமாக எதிரே தயாராய் நின்றான்.

உடனே சொல்லிவிடவில்லை. அவன் கை கிறுக்கிக் கொண்டேயிருந்தது. ஒரு பெண்ணின் முகம் - அதன் மீது இன்னொன்று - அதன் மீது இன்னொன்று என்று வட்ட வட்டமாக உருவாகிக் கொண்டிருந்தன. அனுபமாவின் முகமா? அவன் முறுவல் செய்து கொண்டான். அந்த முறுவலோடு கூடவே அவன் நாவும் திறந்துகொண்டது.

''டேக் டவுன்,'' என்றான். ''டியர் டாக்டர் சிவா, உங்களுடைய புதிய டிஸ்பென்ஸரிக்காக இடம் தேர்ந் தெடுப்பது பற்றி நாம் சமீபத்தில் பேசிக்கொண்டது நினைவிருக்கும். அது சம்பந்தமாகத் தங்களுக்கு ஒரு யோசனை தெரிவிக்க எண்ணுகிறேன்.



''ஸ்ரீராம்நகர் இரண்டாவது தெருவில் 'கிருத்திகா' என்ற என் பங்களா இருப்பது தங்களுக்குத் தெரிந்ததே. அதைத் தங்களுக்கே இலவசமாகத் தந்திருக்கிறேன். அந்தப் பங்களா இரண்டு பகுதிகளாக இருப்பதால், பின்பகுதியில் தங்கள் குடும்பமும், முன் பகுதியில் டிஸ்பென்ஸரி, கன்ஸல்ட்டிங் ரூம் முதலானவையும் இருப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். தாங்கள் இந்த என் அன்பளிப்பை ஏற்றுக் கொள்வீர்களென நம்புகிறேன்.''

செக்ரட்டரி அவனை வியப்புடன் பார்க்க நினைத்தவன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு பேசாதிருந்தான். எந்தச் சந்தர்ப்பத்திலும் அதிர்ச்சியையோ ஆச்சரியத்தையோ வெளிப்படுத்தக் கூடாது என்று வெகு நாட்களுக்கு முன்பே தெரிந்து கொண்டிருந்தவன் அவன்.

''ராமன்!'' போகிறவனைக் கூப்பிட்டான் ஆளவந்தார்.

இப்போது செக்ரட்டரிக்குக் கொஞ்சம் ஆச்சரியம் - தன்னைப் பெயர் சொல்லி ஒருபோதும் இவர் கூப்பிட்ட தில்லையே என்று.

''ராமன், உனக்கு ஏமாற்றம் தரவேண்டியிருக்கிறது. ஸாரி. இன்னும் கொஞ்ச நாளில் இங்கே உனக்கோ சமையற்காரர்களுக்கோ, தோட்டக்காரர்களுக்கோ வேலை இருக்காது என்று நினைக்கிறேன்.''

''சார்!''

''இந்த வீட்டுக்கேகூட அவசியமிருக்காது என்று சொல்ல வேண்டும்.'' ஆளவந்தார் புன்னகை புரிந்தான். ''அதனால், நீ வேறு எங்காவும வேலை தேடிக்கொள்ள இப்போது பிடித்தே முயற்சி செய். நான் சிபாரிசு செய்யக்கூடிய இடம் ஏதாவது இருந்தாலும் சொல்லு - அதாவது, என் சிபாரிசு செல்லுமென்றால்.''

செக்ரட்டரி திகைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டு நின்றான்.

பதினைந்து நாட்கள் சென்றுவிட்டன.

டெலிபோன் மணி நெடுநேரமாக அடித்துக் கொண்டிருந்தது. யாருக்கும் தான் எளிதில் அகப்படக் கூடியவனாக இருக்கக் கூடாது என்று வழக்கப்படுத்திக் கொண்டிருந்ததால், எப்போதும் ஆளவந்தாரின் உதவியாளர்கள்தான் டெலிபோனை எடுப்பார்கள்; இன்று மணியடித்ததும் யாரும் விரைந்து வந்து போனை எடுக்கவில்லை. அதற்குக் காரணம், அந்த வீட்டில் பணியாள் யாரும் இல்லாமற் போய்விட்டதே. அந்த நிலையை எண்ணுகையில் ஆளவந்தாரின் உதட்டில் விரக்தியான புன்னகையொன்று பிறந்தது.

அவனே போனை எடுத்து, ''ஆளவந்தார் ஹியர்,'' என்றான்.

''வணக்கம் டாக்டர், அனுபமா பேசுகிறேன்.''

''ஹலோ,'' என்றான் அவன் உற்சாகமான குரலில். ''அத்தை எப்படி இருக்கிறார்?''

''தேவலை டாக்டர்.''

''முன்பே உனக்குச் சொல்லிவிட்டேன். ஞாபக மறதி போலிருக்கிறது.''

''என்ன டாக்டர்?''

''இப்போது சொன்னாயே, அதேதான்.''

''ஓ! டாக்டர் என்று சொல்வதைக் குறிப்பிடுகிறீர்களா?'' அனுபமா கலகலவென்று சிரித்தாள். ''நானே கேட்க வேண்டுமென்று நினைத்திருந்தேன், சார். நீங்கள் இனிமேல் டாக்டர் தொழில் பிராக்டிஸ் செய்யப் போவதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்திருப்பதாய்ச் சொல்கிறீர்களே, அது சட்டத்துக்குப் பயந்தா, தர்மத்துக்குப் பயந்தா?'+'

''இரண்டும்தான்.''

''ஊகூம். பொய் சொல்கிறீர்கள். சட்டத்துக்கு மட்டும்தான் பயந்து, கொஞ்சம் மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.''



''எதனால் அப்படிச் சொல்கிறாய்?''

''இல்லாவிட்டால், டாக்டர் சிவா என்கிற பெயரில் தொடர்ந்து தொழில் நடத்திக் கொண்டிருப்பீர்களா?''

''பாவம் அந்த டாக்டர். அவரைப் போய் நீ காயாதே,'' என்றான் அவன். ''அவருக்குத் தன்னம்பிக்கை நிறையத் தேவைப்படுகிறது. பிராக்டிஸ் வலுப்பட வேண்டியிருக்கிறது. அதற்காக அவ்வப்போது நான் யோசனைகள் வழங்குகிறேன். அதை எடுத்துக் கொள்வதும் எடுத்துக் கொள்ளாததும் அவர் இஷ்டம்ட.''

''சட்டப்படி உங்கள் காரியம் சரிதான். ஆனால் தர்மப்படி தப்பு. நேர்மையாய் அதை ஒப்புக்கொள்வீர்கள் என்று நினைத்தேன்.''

அவன் டக்கென்று டெலிபோனைத் திரும்ப வைக்கப் போனான். உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு, ''தப்புதான்,'' என்றான்.

''தர்மப்படியும் இனி தப்பு செய்யாமல் இருங்கள். ஏனென்றால், வாய் வார்த்தையாக, பேஷண்ட்டைப் பார்க்காமலே, நீங்கள் அட்வைஸ் கொடுப்பதன் விளைவு என்ன தெரியுமா? ஓர் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது டாக்டர் சிவாவின் டிஸ்பென்சரியில்!''

''அனுபமா, என்ன... என்ன சொல்கிறாய் நீ?''

''ஏழெட்டு வயதிருக்கும் அந்தக் குழந்தைக்கு. பெண் குழந்தை. பாவம். பெனிஸிலின் அலர்ஜி போலிருக்கிறது. தெரியாமல் ஊசி போட்டிருக்கிறார். நீங்கள் சொல்லித்தான் போட்டிருப்பார். இல்லையா?''

''அதிருக்கட்டும், என்ன ஆயிற்று?''

''என்ன ஆகும்? உயிருக்கு ஆபத்தான நிலைமையில், ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போயிருக்கிறார்கள். தாங்ஸ் டு யூ,'' என்றாள் அனுபமா இரக்கமில்லாமல்.

## பதின்மூன்று

**தா**ள முடியாத பசி ஜனார்த்தனத்தின் காதையும், கண்ணையும் அடைத்துக் கொண்டிருந்த போதிலும், அந்தச் சிம்னி விளக்கின் ஒளியில் தன் முன்னே பிரித்து வைக்கப்பட்டிருந்த காகிதங்களைத் தெளிவாகக் காண முடிந்தது. இரண்டு காகிதங்கள். ஒன்று, ஓர் ஆபீசரின் அசல் கடிதம்; அவரது அசல் கையெழுத்துக் கொண்டது. இன்னொன்று போலிக் கடிதம். போலிக் கையெழுத்துப் போடுவதற்கான இடம் காலியாகக் காத்துக் கொண்டிருந்தது - 'என்னைப் பூர்த்தி செய்' என்று வாய்விட்டுக் கெஞ்சுகிற மாதிரி.

ஜனார்த்தனம் பேசாமலே இருந்தார். அவருடைய முன்னாள் பியூனான கண்ணன் சற்றுமுன் ஆக்கி வைத்திருந்த குழம்பின் மணமும், சூடான சாதத்தின் ஆவியும் அவருடைய பசியை மேலும் மேலும் கிளறிக் கொண்டிருந்தன.

''என்ன சார் யோசனை செய்றீங்க?'' என்றான் கண்ணன்.

அவர் திடுக்கிட்டு விழித்து ''என்னப்பா? என்ன கேட்கிறாய்?'' என்றார்.

''சொன்னேனே சார், என்னவோ ஒண்ணும் புரியாத மாதிரி?'' என்று முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு உரிமையோடு பேசினான் கண்ணன். எழுந்து சென்று சட்டைப் பையில் செருகி வைத்திருந்த பேனாவை எடுத்து வந்து கொடுத்தான்.

தன்னை மறந்து அதை வாங்கிக் கொண்டுவிட்டார் ஜனார்த்தனம். மறுவினாடியே நெருப்பைத் தொட்டது மாதிரி கையைச் சுட்டது போலும். பேனாவைத் திருப்பி அவன் கையிலேயே தந்தார். ''இல்லையப்பா... நீ என்னென்னவோ சொல்கிறாய்... அதெல்லாம் நான் செய்ய முடியாது... மன்னித்துக் கொள்...'' என்றார்.



கண்ணன் கோபப்படவில்லை. அவரைக் குறித்து இரக்கப்படுகிறவன் போல ஒரு சிரிப்பை வெளியிட்டான். ''பரவாயில்லே சார். சும்மா போடுங்க. நான் யார் கையிலேயும் சொல்லமாட்டேன். ஒரு குருவிக்குக் கூடச் சேதி எட்டாது...''

''யாருக்கு எட்டும், எட்டாது என்பதற்காக இல்லை...... நீ சொல்வது தப்பான காரியம். என்ன நிர்ப்பந்தம் வந்தாலும் தப்புத் தண்டா செய்வதில்லையென்று உறுதி பண்ணிக் கொண்டிருக்கிறேன்...''

அவன் கபகபவென்று சிரித்தான். ''தப்புத் தண்டா வழின்னா அவ்வளவு பயமா சார் உங்களுக்கு? அடடா! ஆறேழு வருசத்துக்கு முன்னாலே இந்த பயம் இருந்திருந்தால் ஜெயிலுக்கே போயிருக்க மாட்டீங்களே?''

ஜனார்த்தனம் தலையைக் குனிந்து கொண்டார். ''ஆமாம்பா. அச்சமாகட்டும் அறிவாகட்டும், வரவேண்டிய சமயத்திலே வந்துவிட்டால் எந்த மனிதனுக்கும் கஷ்டம் ஏற்படாது. ஆனால் கடவுள் அதற்கு இடம் கொடுக்காமல் வேடிக்கை பார்க்கிறானே!''

''உங்க சாமியார் சொற்பொழிவெல்லாம் இன்னொரு நாள் விஷராய்க் கேட்கிறேன். இப்ப நான் சொன்னபடி இதிலே ஸைன் போட்டுக் கொடுங்க,'' என்று விடாமல் வற்புறுத்தினான் அவன்.

''சரி, எப்படியும் நாளைக் காலையிலே தானே உனக்கு இது வேணும்? அப்படி எடுத்து வை. இரவெல்லாம் யோசனை செய். காலையில் உனக்கே தப்பு என்று தோன்றும்.''

அவன் முகம் முரட்டுத்தனமாக மாறிற்று. ''என்னய்யா, நான் கேட்டுக்கிணே இருக்கிறேன், நீ முடியாதுன்னுகிணே இருக்கிறே? அரை அவர் முன்னாலே உன்னை நாயை அடிக்கிற மாதிரி அடிக்கக் குளத்திலே வீச இருந்தாங்க. நான் வந்து காப்பாத்தினேன். மறந்துட்டியா?''

''மறக்கவில்லை, கண்ணா. என் ஆயுளுக்கும் மறக்க மாட்டேன். ஆனால் அதற்குக் கைம்மாறாக இந்தக் காரியத்தை மட்டும் செய்யச் சொல்லாதே!''

அவன் சடக்கென்று எழுந்து கொண்டான். அந்த வேகத்தைப் பார்த்தபோது தன்னை அவன் அடிக்கப் போகிறான் அல்லது கழுத்தைப் பிடித்துத் தள்ளப்போகிறான் என்று ஜனார்த்தனம் எண்ணினார். அப்படி எதுவும் அவன் செய்யவில்லை. அந்த இரண்டு காகிதங்களையும் மடித்து, பேனாவைத் திரும்ப மூடி, சட்டைப் பையில் பழையபடி பத்திரப் படுத்திக் கொண்டான். பிறகு தன் அலுமினியத் தட்டை எடுத்துச் சமையல் கலங்களுக்குப் பக்கத்தில் போட்டுக் கொண்டான். டம்ளரில் தண்ணீர் எடுத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டான்.

ஜனார்த்தனம் அவன் செய்கைகளைக் கண் கொட்டாமல் பார்த்த வண்ணமிருந்தார். சிறுகுடலைப் பெருங்குடல் தின்று கொண்டிருந்தது என்று ஒரு பேச்சுக்குச் சொல்வதை அவர் கேள்விப்பட்டிருந்தாராயினும் இன்று அந்த வேதனை எப்படிப்பட்டது என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தார். நிமிடத்துக்கு நிமிடம் பயங்கரமாகத் தன் நாக்கு உலர்ந்து கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார். தண்ணீர் கேட்கலாமா என்று நினைத்தார். பிறகு அவனாகவே கூப்பிட்டுச் சாப்பாடு போடுவான் என்று எண்ணிக் கொண்டார். பழைய பியூன் என்பதை அவனாகவே தெரியப்படுத்த, எத்தனை மரியாதை யாகவும் பிரியமாகவும் தொடக்கத்தில் பேசினான்! அவன் கேட்டதைச் செய்யவில்லை என்று இப்போது கோபமாக இருந்தாலும் இதோ மறந்து மன்னித்துவிடுவான்... இதோ அழைப்பான்... இதோ 'வாங்க சார்' என்பான்...

இல்லை. அவர் கற்பனை செய்தபடி எதுவும் நடக்கவில்லை.



கண்ணன், தான் வடித்த சோறு மொத்தத்தையும் தன் இலையிலேயே கொட்டிக் கொண்டான். குழம்பை அப்படியே கவிழ்த்துக் கொண்டான். தொட்டுக் கொள்ள வாங்கி வந்திருந்த இரண்டு பொட்டலங்களைப் பிரித்துத் தட்டில் போட்டுக் கொண்டான்.

ஜனார்த்தனத்தின் பக்கம் திரும்பியும் பாராமல், தன் பாட்டுக்கு உரத்த சத்தத்துடன் சாப்பிடத் தொடங்கினான்.

ஜனார்த்தனத்துக்குக் கண்கள் செருகிக் கொண்டு வந்தன பசி மிகுதியினால். அவைகளைக் கசக்கிக் கொண்டு அவன் சாப்பிடுவதையே நோக்கியபடி இருந்தார். அவன் தன்னை அடித்திருந்தாலோ வெளியே பிடித்துத் தள்ளியிருந்தாலோ, அதுகூட இத்தனை கொடுமையாக இருந்திருக்காது என்று அவருக்குத் தோன்றியது.

தட்டிலே போட்டுக் கொண்ட மொத்தச் சாப் பாட்டையும் அவனால் தின்ன முடியவில்லை. மிஞ்சியதைத் தட்டில் எடுத்துக்கொண்டு வாசலுக்குச் சென்றவன் காலித் தட்டோடு திரும்பினான். அப்போதுதான் ஜனார்த்தனம் ஒருவர் இருப்பதே நினைவு வந்த மாதிரி, ''ஏனய்யா, வயசு இத்தனை ஆகுது. சூடு சொரணை கிடையாதா? ஏன் இன்னும் உட்கார்ந்திருக்கிறே! எச்சிலைக் கூட வாசலிலே கொட்டி விட்டு வந்தாச்சு! பார்த்துக்க!'' என்று காலித்தட்டை அவர் கண் முன் ஆட்டினான். தட்டில் மிஞ்சியிருந்த இரண்டொரு பருக்கைகள் அவர் மடியில் விழுந்தன.

ஏதோவொரு தன்மான உணர்வு அவரை ஈட்டியினால் குத்துகிற மாதிரி குத்தி எழுப்பியது. சாய்ந்திருந்த சுவரில் அங்குலம் அங்குலமாகக் கையை உயர்த்திப் பிடித்து எழுந்து நின்று கொண்டார். ''கண்ணா,'' என்று அழைத்தபோது அவன் எங்கிருக்கிறானென்பது கச்சிதமாய்ப் புலப்படவில்லை. ஊகத்தின் மேலேயே பேசினார். ''உன்மேல் எனக்குக் கோபம் இல்லை, கண்ணா. பெரிய ஆபத்திலிருந்து என்னைக்

காப்பாற்றினாய்... ஆனால் நீ கேட்கிற உதவியை என்னால் செய்யமுடியவில்லை...

சுவர்களையும், கதவுகளையும் ஆதாரத்துக்குப் பிடித்தபடி வாசலுக்கு வந்தார். 'கொஞ்ச நேரம் படுத்துக் கொள்கிறேனே? என்னை விட்டுவிடேன, விட்டுவிடேன்,'' என்று உருவமில்லாததோர் எஜமானிடம் அவர் உள்ளம் திரும்ப மன்றாடிக் கொண்டது.

கிராமத்துக் கரடுமுரடான மண்சாலையிலிருந்து பிரிந்து, வழவழுப்பானதும் உறுதியானதுமான பெரிய ரோடை அடைந்து விட்டோம் என்பதுதான் அவருடைய கடைசி ஞாபகம். அதற்கு மறுவினாடி அவர் தலை சுழன்றது.

மீண்டும் நினைவு வந்தபோது அவர் மல்லாந்தாற் போல் படுத்திருந்தார். வானத்தின் கோடியில் சூரிய வெளிச்சம் முகிழ்த்துக் கொண்டிருந்தது. உடம்பு ஆடும் ஆட்டத்திலிருந்தும், கடமுடா என்ற ஓசையிலிருந்தும், தான் ஒரு கட்டை வண்டியில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை அவர் அறிந்து கொண்டார். கண்களை நன்றாய்த் திறந்து பார்க்க முயன்றார். ''ஊம்... குடி இன்னும்... ஊம்... இன்னும் கொஞ்சம் குடி சாமி,'' என்று ஒரு கிராமவாசியின் குரலை அவர் செவிகள் கேட்டன. புளிப்பான மோர், ஒரு குவளையின் வழியே அவர் வாயில் இறங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு வாய் விழுங்கினார். ஜிவுஜிவுவென்று புத்துயிர் ஊறினாற்போலிருந்தது. காலியான பார வண்டியொன்றில் தான் படுத்திருப்பதையும், இன்னொரு ஆள் வண்டியை ஓட்டிக் கொண்டிருப்பதையும் கண்டார். மோர் ஊற்றிய ஆள், ''என்ன சாமி, இந்த வயசில் இப்படியா தனியாவா கிளம்புவே? ரோடு ஓரத்தில் கிடந்ததை நல்லகாலம் நாங்க பார்த்தோம். லாரிக்காரன் எவனாச்சும் போயிருந்தான்...? எங்கே போகணும் உங்களுக்கு?'' என்றான்.



''இந்த வண்டி எங்கேயப்பா போகிறது.''

''மெட்றாசுக்குங்க. கொத்தவால்சாவடிக்குப் போகிறோம்.''

மெட்றாஸ்! பேத்தியின் நினைவு குபீரென எழுந்தது. குழந்தை ரேகாவை ஏமாற்றிவிட்டு வந்ததால்தான் இத்தனை தண்டனையும்... இனி அவளைப் பிரியவே கூடாது. திருட்டுத்தனமாகவாவது தினம் அவளைப் பார்த்து...

''ஒரு ஒத்தாசை செய்கிறாயா அப்பா?'' என்றார்.

''சொல்லுங்க சாமி.''

''பாலாஜி நகரைத் தாண்டித்தானே இந்த வண்டி போகணும்? அங்கே மூன்றாவது தெருவிலே ஒரு ஸ்கூல் இருக்கிறது. என்னை அந்த இடத்திலே இறக்கிவிட்டு விடுகிறாயா?''

''அங்கேயிருந்து வூட்டுக்கு சாக்கிரதையா போயிடுவீங்களா?''

''ஓ! போய்க் கொள்றேனப்பா. உனக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு,'' என்றார் அவர்.

மாலை நாலுமணி சுமாருக்கு அவர் இறங்கிக் கொண்ட அதே நேரம், பள்ளிக்கூடத்தில் மணியடித்தது. குழந்தைகள் கூட்டமாக, ஓட்டமாக வெளிவந்தார்கள்.

அதோ என் பேத்தி ரேகா! மறைந்து நின்றிருந்த ஜனார்த்தனத்தின் இதயம் படபடத்தது குழந்தையைக் கண்டதும்.

''ஹலோ டாடி!'' என்று கூவிக்கொண்டே ரேகா ஓடினாள்.

திகைத்தவராகத் திரும்பிப் பார்த்தார் ஜனார்த்தனம். காரின் கதவைத் திறந்துகொண்டு காத்திருந்தான் அவர் பிள்ளை மணிகண்டன்.

ஸ்கூட்டரிலிருந்து காருக்கு மாறுமளவுக்கு அவன் அந்தஸ்து எப்படி உயர்ந்தது, எப்போது உயர்ந்தது என்ற யோசனையில் ஆழ்ந்தார் அவர்.

டாக்டர் சிவாவின் தவறான வைத்தியத்தினால் ஒரு குழந்தை உயிருக்கு மன்றாடுகிறது என்ற தகவலைத் தெரிவித்துவிட்டு, அனுபமா டெலிபோனை வைத்துப் பல நிமிடங்கள் ஆகிவிட்ட போதிலும், ர்ர்ர் என்று டயல் டோன் மட்டுமே ஒலித்துக் கொண்டிருந்த போதிலும், ஆனவத்தார் உடனே ரிசீவரை வைக்கவில்லை. ஒயரின் நுனியில் அதை ஊசலாட்டியபடி சிறிது நேரம் வேடிக்கை பார்த்தான். ரிசீவரை டெலிபோனின் தொட்டிலில் கிடத்தினானோ இல்லையோ, கணகணவென்று மணி ஒலித்தது. விருப்பமின்றி எடுத்தான்.

''சார்! நான்தான் சிவா பேசுகிறேன்.''

''குழந்தை எப்படி இருக்கிறது டாக்டர்?''

வியப்புடன் அவர் மூச்சுவிடுவது அவனுக்குக் கேட்டது.

''உங்களுக்கு... எப்படி உங்களுக்குத் தெரியும் சார்?''

''குழந்தையைப்பற்றிக் கேட்டேன். இருக்கிறதா, போய் விட்டதா?''

''சார், நீங்கள் என்னைத தப்பாய் நினைத்திருக்கிறீர்கள். அந்தக் குழந்தையின் தாயாரை ஒரு தடவைக்கு நாலு தடவையாய்க் கேட்டேன். அதற்கு முன்பும் பெனிசிலின் ஊசி போட்டிருக்கிறது என்று சும்மாவானும் - குழந்தையைக் காய்ச்சலிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்கிற ஆதங்கத்தில் - சொல்லிவிட்டாள். அதை நம்பி நானும்...''

''இப்போது நிலைமை என்ன?''

''ஆஸ்பிடலில் இருக்கிறது. ஆறுமணி நேரத்தில் தெரிந்துவிடும் - ஐ மீன் சரியாகிவிடும். நான் அதற்குக் கூப்பிடவில்லை சார். இங்கே வேறொரு கேஸ்...''



''ஸாரி. நத்திங் டூயிங்.''

''சார்! அந்தக் குழந்தை கட்டாயம் பிழைத்துவிடும். அதற்காகக் கோபித்துக் கொண்டு...''

''கோபமில்லை. இனி உங்களுக்கு அட்வைஸரி கெபாஸிடியில்கூட உதவுவதில்லை என்று தீர்மானம். உங்கள் முட்டாள் தனங்களில் எனக்குப் பங்கு வேண்டாம். இனிமேல் உங்கள் திறமையைக் கொண்டே நீங்கள் பிழைத்துக் கொள்ள வேண்டியது. ஓகே! ஆறு மணி நேரத்திற்குப் பிறகு போன் செய்யுங்கள்.''

''சார்! நீங்கள்...''

''ஸாரி.'' அவன் டெலிபோனை வைத்துவிட்டு, அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டான். டி.வி.யின்மீது தூசி படிந்திருந்தது - துடைப்பதற்கு ஆளில்லாததால். அதன்மீது விரலால் கோலம் போட்டுவிட்டு ஊதினான். சர்ச்சிலின் 'யுத்த நினைவு'களை எடுத்து வைத்துக் கொண்டு, இதற்கு முன் வாசித்தற்கு அடையாளமாக மடிந்திருந்த முனையைப் பிரித்துவிட்டு, சில பக்கங்கள் படித்தான். சாப்பாட்டு நேரம் கடந்துவிட்டது. புன்னகை செய்து கொண்டான். சமையலை ரெடி செய்யச் சமையற் காரனோ, சமையல் ரெடி என்று அறிவிக்க வேலையாளோ இல்லையே! மேஜைமீதிருந்த பிஸ்கெட் பாக்கெட்டைப் பிரித்து, சில வில்லைகளைக் கடித்தான். தோட்டத்தில் வாடிக் கொண்டிருந்த செடிகளுக்கு, அது அகாலம் என்று தெரிந்திருந்தும், தண்ணீர் ஊற்றவிட்டு அறைக்குத் திரும்பினான்.

டெலிபோன் மணி அடித்தது. பாய்ந்து எடுத்தான்.

''சார்! தட் சைல்ட் இஸ் ஆல் ரைட்,'' என்றார் டாக்டர் சிவா.

''தாங்க் காட்!''

"ஃபோன் வைத்துவிடாதீர்கள். வேறொரு கேஸ் விஷயமாய் உங்களைக் கேட்டு...."

"ஸாரி, நான் எப்போதுமே எடுத்த முடிவை மாற்றிக் கொள்வதில்லை."

'குழந்தை பிழைத்துவிட்டது, குழந்தை பிழைத்துவிட்டது!' என்று அவன் உதடுகள் உச்சரித்தன உற்சாகத்துடன். மன நிறைவுடன் சீட்டியடித்தான். இந்தச் சந்தர்ப்பத்தைக் கொண்டாடும் வகையில் ஏதாவது செய்ய வேண்டும் என்று கையும் காலும் பரபரத்தன. ஸ்டீல் அலமாரியைத் திறந்தான்.

"நன்கொடை கேட்டு விண்ணப்பங்கள்" என்ற தலைப்பில் பல ஃபைல்கள் இருந்தன. அவற்றிலிருந்து 'பள்ளிக் கூடங்கள்' என்ற ஃபைலை மட்டும் எடுத்துப் பிரித்தான்.

அதில் மூன்றாவது இருந்த கடிதம்- அது எழுதப்பட்டிருந்த விதம் - அவனைக் கவர்ந்தது போலும். அதை ஃபைலிலிருந்து எடுத்துப் பையில் போட்டுக் கொண்டான். போட்டுக் கொள்ளுமுன் மறுபடி அதன் விலாசத்தைப் பார்த்தான்.

'பாலாஜி நகர், மூன்றாவது தெருவில் உள்ள பள்ளிக்கூடம்' என்று தனக்குத்தானே சொல்லி நினைவிலேற்றிக் கொண்டான்.

"கேட்டேனே தம்பி?" என்று மருதப்பனின் தாய் மீண்டும் வினவினாள்.

"நீங்க என்னம்மா ஒண்ணு!" என்று சிரித்துவிட்டு, புரண்டு படுத்தான் அவன். கயிற்றுக் கட்டில் மொடமொட வென்று சப்தித்தது. விடிகாலை நேரத்துக் குளிர் பரவி யிருந்ததால் போர்வையை முகத்தின்மீது போர்த்துக்



கொண்டான். அதற்குள்ளிருந்தபடி அவன் பேசியபோது குரல் விசித்திரமாக ஒலித்தது. "வேலை வெட்டி இல்லாத புறம் போக்குப் பயல்தான். எனக்குப் போய்க் கல்யாணமா?"

அவன் தாய் எழுந்து வந்து, கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு, அவன் முகத்திலிருந்து போர்வையை நீக்கினாள். "மருது, நெசத்தைச் சொல்லு. காவேரியைக் கட்டிக்க உனக்கு இஷ்டம்தானே? அதோடு சிரிச்சுப் பேசிக்கிட்டு வந்தியே, அப்ப அப்படித்தான் தோணிச்சு."

"ஆமாம், ஆமாம். தோணும்! சும்மா கெட அம்மா."

"எனக்குப் புரிஞ்சு போச்சு. காவேரியோட முறைப் பையன் இருக்கிறானே - அந்த கப்பு - அவன் ஏதோ மிரட்டியிருக்கிறான். பயந்துபோயிட்டே!"

அதிலே ஓரளவு உண்மை இருந்ததாலோ என்னவோ மருதப்பன் போர்வையை உதறிவிட்டுச் சிலிர்த்து எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

"கப்புவானாலும் சரி, அவனுக்கு அப்பனானாலும் சரி, என்னைத் தடுத்து நிறுத்த முடியாது அம்மா!" என்று மார்பைத் தட்டிக் கொண்டான். "நம்ம பிழைப்பே லாட்டரியா இருக்கிறப்போ இன்னொரு ஆளைக் காப்பாத்த முடியுமான்னு பார்க்கிறேன்."

"எல்லாம் முடியும். இங்கேயே ஊரோடு தங்கிடு. நல்லா பிழைச்சுக்கலாம். அப்பாலே என்ன? காவேரியைக் கட்டிப்பாயில்லையா?"

"உங்க இஷ்டம்," என்று அவன் சொன்னானோ இல்லையோ, அவள் போய் மள மளவென்று ஏற்பாடுகளில் இறங்கி விட்டாள்.

அன்றைக்கு எட்டாம் நாள்.

நாட்டாண்மைக்காரர், முனிசீப், வாத்தியார் முதலிய பல பிரமுகர்களின் முன்னிலையில் மறுநாள் பரிசம் போடுவதாயிருந்தது. காவேரி இந்த எட்டு நாளாக அவன் கண்ணில் படவேயில்லை. வெட்கப்பட்டு ஒளிந்து கொண்டிருந்தாள். இன்று அவளை எப்படியும் மடக்கி விடுவது என்று மருதய்யன் தேடிக்கொண்டு செல்கையில் தபால்காரர் ''இந்தாப்பா,'' என்று கூப்பிட்டு ஒரு கார்டைக் கொடுத்தார்.

'செங்கம்மா' என்று கையெழுத்துப் போட்டிருந்ததைப் பார்த்ததும் ஒரு கணம் அவன் இதயம் நின்றுவிடுகிற மாதிரி இருந்தது. கடகடவென வாசித்தான்.

''மருது, நான் உன்னை என்ன பேசியிருந்தாலும் மன்னிச்சிடு. நீதான் என் உசிர். டீக்கடைக்காரனோடு ஒருநாள்கூட வாழ எனக்குப் பிடிக்க மாட்டேங்குது. இப்ப கொஞ்ச நாளாய் ஒரு பள்ளிக்கூடத்திலே ஆயாவாய் வேலை பார்க்கிறேன். பாலாஜி நகர் மூணாவது தெருவிலே இருக்குது. நீ உடனே புறப்பட்டு வா...''

அவனுக்கு உலகமே மறந்துவிட்டது. செங்கம்! இந்தக் கடிதம் உன் கைப்பட, நீயா எழுதியிருக்கிறாய்? சட்டைப் பையில் மார்போடு அழுத்தமாகச் செருகிக் கொண்டான்.

''யார் தம்பி கடதாசி?'' - தாய் குரல் கொடுத்தாள்.

''தெரிஞ்சவங்க, அம்மா. மெட்றாசிலிருந்து எழுதியிருக்காங்க. நான் இன்னைக்கே போகணும்,'' என்றவன், ''பாலாஜி நகர். மூன்றாவது தெரு, பள்ளிக்கூடம்,'' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.





## பதினான்கு

**கா**ரின் கதவைத் திறந்து கை நீட்டிப் பிரியத்துடன் காத்திருக்கும் மகனையும், தோளிலே புத்தகப் பை ஊஞ்சலாட ஆர்வத்துடன் ஓடிவரும் பேத்தியையும் கண்ட ஜனார்த்தனத்துக்கு, உலகத்தின் மற்ற இயக்கங்களனைத்தும் அப்படியே நின்று விட்டாற்போலவும், இது ஒன்று மட்டுமே உயிர்த் துடிப்புள்ள ஒரு நிகழ்ச்சி போலவும் தோன்றியது. இருவரையும் சேர்த்து நெஞ்சார அணைத்துக் கொண்டால் எப்படி இருக்கும்! வேகத்துடன் முன்னே பாயவிருந்த கால்களைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

பொறு, பொறு. மணிகண்டனின் முன்னே அப்படித் திடுதிப்பென்று போய் நிற்கக் கூடாது. கிராமத்துக்கு அனுப்பினேனே குத்தகைக்காரனைப் பார்க்கும்படி, பார்த்தீர்களா, என்று கேட்பான். இல்லை, பார்க்கவில்லை என்று சொல்ல வேண்டும். இன்னும் இரண்டு நாள் தங்கிப் பார்ப்பது தானே, இங்கே வெட்டி முறிக்கிற காரியம் என்ன பாழாய்ப்போய் விடுமென்று ஓடி வந்தீர்களாம் என்று கேட்பான். அங்கே இருக்க முடியவில்லை என்று சொல்ல வேண்டும். ஏன், என்ன கஷ்டம் என்று கேட்பான். கையிலே ஒரு பைசா இல்லை, பட்டினி கிடக்க எனக்குத் தாளவில்லை என்று சொல்ல வேண்டும். ஏன், சாரதா உங்கள் செலவுக்குக் கொடுத்தனுப்பவில்லையா என்று கேட்பான். கொடுத்தாள் என்றம் சொல்ல முடியாது. கொடுக்கவில்லை என்றும் சொல்ல முடியாது. மழுப்ப வேண்டும். அவன் மனக் கஷ்டப்படுவான்.

வேண்டாம். இன்னும் கொஞ்சம் நிதானம் செய்து கொண்டு, காரண காரியங்களைப் பொருத்தமாகக் கற்பனை பண்ணிக் கொண்ட பிறகு மணிகண்டனின் முன் போய் நிற்கலாம்...

"குட் ஈவினிங் டாடி," என்று கணீரெனக் கூவிய வண்ணம் ரேகா தந்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கன்னத்தில் பளிச்சென்று முத்தம் கொடுப்பதை அவர் கண்டார். அடுத்து அவள் கேட்ட கேள்வி அவர் உள்ளத்தில் புல்லரிப்பு ஏற்படுத்தியது.

"தாத்தா இன்னிக்கு வந்திட்டாரா அப்பா?"

"நாளைக்குக் கட்டாயம் வந்து விடுவார்," என்றான் மணிகண்டன்.

"உக்கும்! தெனம் இப்படித்தான் சொல்றே!" என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள் ரேகா.

அப்படியானால் தினம் தினம் நான் வந்துவிட்டேனா என்று நச்சரித்துக் கொண்டேயிருக்கிறாள் குழந்தை! 'நான் இதோ இருக்கிறேனம்மா!' என்று கூவுவதற்கு ஆதங்கம் பிறந்தது அவருக்கு.

"ஏறிக்க ரேகா. நேரமாகிறது. உன்னைக் கொண்டுபோய் வீட்டில் விட்டுவிட்டு நான் வெளியே போகணும்," என்றான் மணிகண்டன்.

தோளில் மாட்டியிருந்த பையைக் கழுத்தைச் சுற்றிக் கழற்றி, பின் ஸீட்டில் எரிச்சலுடன் எறிந்தாள் ரேகா. அவளுடைய ரோஜாப் புஷ்பமான வதனம், மிளகாய் வற்றலாகக் கடுகடுத்திருந்தது. அப்பாவிடம் ஏதாவது முரண்டு பிடிக்க வேண்டுமென்று எண்ணியவள்போல், "எனக்குப் பாத்ரூம் போயிட்டு வரணும்," என்றாள் முகத்தைத் திருப்பியபடி.

"சரி. சீக்கிரமாய்ப் போய்விட்டு வாயேன்."

அவள் ஸ்கர்ட்டைத் தூக்கிக் காட்டி, "ஜட்டியைக் கழட்டிக் கொடு. முடிச்சு அவிழ்க்க முடியல்லே," என்றாள்

"வரவர நீ ரொம்பக் கெட்டு விட்டாய்," என்று முணுமுணுத்தபடி ஜட்டியின் நாடா முடிச்சைப் பிரிக்க



முனைந்தான் மணிகண்டன். ரேகா வேண்டுமென்றே அவனுக்கு வைத்த அந்த வேலையைப் பார்க்கப் பார்க்க ஜனார்த்தனத்துக்குச் சிரிப்பு வந்தது. 'பொல்லாதது! பொல்லாது!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

"சுளுக்கு முடிச்சை நீ கோணல் மாணலாய் இழுத்து விட்டிருக்கிறாய்," என்று மணிகண்டன் குற்றம் சாட்டுவது அவருக்குக் கேட்டது. "வீட்டுக்குப்போய்ப் பாத்ரூம் போய்க் கொள்ளலாம். அம்மாவை அவிழ்த்து விடச்சொல்றேன்."

"அம்மா ஒண்ணும் அவிழ்த்துவிட வேண்டாம். எனக்கே செஞ்சுக்கத் தெரியும்," என்று முனகிய வண்ணம் அவள் காரில் தந்தைக்குப் பக்கம் உட்கார்ந்து கொண்டு கதவை ஓங்கிச் சாத்திக் கொண்டாள்.

சட்டென அவர் ஒளிந்து கொள்ளக்கூட நேரமிருக்கவில்லை. அவரைத் தாண்டிக்கொண்டு கார் சென்று மறைந்தது.

சில வினாடிகளுக்குப் பிறகுதான் அவருக்குச் சுய உணர்வுகள் மீண்டன.

பேத்தியின் குறும்புத்தனத்தை எண்ணி உதட்டிலே புன்னகை பூத்திருந்த போதிலும், உள்ளத்திலுள், மணி கண்டனின் அந்தஸ்து திடீரென்று மாறியது எப்படி என்ற கேள்வி வதைத்தது. ஏதாவது தப்பு வழியில் பணம் சேர்க்கிறானோ என்று சந்தேகப்பட்டார்.

வீடுகூட அனேகமாய் மாற்றியிருப்பான். பழைய வீட்டில் ஸ்கூட்டர்தான் நிறுத்த முடியுமே தவிர, கார் நிறுத்த வசதி கிடையாதே? அல்லது வீட்டுக்குப் பக்கத்திலேயே எங்காவது காரேஜ் மட்டும் குடக் கூலிக்கு எடுத்திருப்பானோ?

பெட்ரோல் துளிகள் ஆவியாவது போல அவர் கண் முன்னாலேயே கிடுகிடுவென்று பள்ளிக்கூடம் காலியாகிக் கொண்டிருந்தது.

என்ன அது?

கார் சற்றுமுன் நின்றிருந்த இடத்தில், தரையில் வெளுப்பாக ஒரு சிறிய பொருள் கிடந்தது.

அருகில் சென்று எடுத்தார்.

ரேகாவின் பிளாஸ்டிக் கலர் பாக்ஸ். பையைக் காருக்குள் எறிந்தபோது விழுந்திருக்க வேண்டும்.

குழந்தை வீட்டுக்குப் போனதும் தேடுவாளோ யாரிடமாவது கொடுத்தனுப்பினால் தேவலை. சுற்றுமுற்றும் பார்த்தார்.

பள்ளிக்கூடத்தின் நீண்ட வெராந்தாவின் கோடியிலுள்ள தலைமையாசிரியரின் அறையை ஒரு வேலைக்காரி பூட்டிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது.

இளம் வயதுடைய ஒரு வேலைக்காரி வந்து கொண்டிருந்தாள்.

''இந்தாம்மா, ரேகா என்று ஒரு குழந்தை இப்போது காரில் போகவில்லை? நீலக் கார். அந்தக் குழந்தை இதைப் போட்டுவிட்டது; நாளைக்குக் கொடுத்துவிடு.''

''நீங்க யார்?''

''நான் அந்தக் குழந்தையோட தாத்தா,'' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டுவிட்டார்.

''அப்ப நீங்களே போய்க் கொடுத்திடுங்களேன்!''

''அதுவா, வந்து... நான் அந்த வீட்டுக்குப் போகிற மாதிரி இல்லேம்மா...'' தலையைக் குனிந்தபடி சொல்ல வேண்டியதாயிற்று.

அவள் போனதும் காலைத் தொங்கவிட்டுக்கொண்டு, தூணில் சாய்ந்தாற்போல வெராந்தாவில் உட்கார்ந்தார் அவர். வெய்யில் வீசிக் காய்ந்திருந்த இடமாகையால் கதகதவென்று தரையின் வெப்பம் உறைத்தது.



இத்தனை நேரமாய் மறைந்திருந்த பசி வேதனை குபுக்கெனப் படமெடுத்தது. மீண்டும் முன் போலவே கண்கள் இருட்டிக் கொண்டு வருவதையும் கை கால்கள் தளர்ச்சியுறுவதையும் உணர்ந்தார்.

''சார்! என்ன சார் இங்கே உட்கார்ந்திருக்கீங்க? சார்! இப்படிப் பாருங்க! என்னைப் பாருங்க! தெரியலே? நான்தான் சார்!'' என்று யாரோ அவரை உலுக்கியெடுத்தார்கள்.

வெகு பிரயாசையுடன் விழிகளைத் திறந்து அவனை நோக்கினார். பிடிக்கப் பிடிக்க வழுக்கியோடும் ஈரச்சோப்புத் துண்டுபோல, அவர் பார்வை, நிமிர்த்த நிமிர்த்தக் கீழே விழுந்துகொண்டேயிருந்தது. அவன் இளம் பிராயத்தவன் என்பது மட்டுமே அறிந்தார். ''யார், யாரப்பா? தெரிய வில்லையே?'' என்றார்.

''நான்தான் சார். என் முகத்தைப் பாருங்க. நல்லா பாருங்க, ஆ! தெரியுதில்லே!'' அவர் மோவாயைக் கையால் நிமிர்த்தியபடி ஆவலுடன் கேட்டான் அவன்.

கிழவரின் கண்ணில் பிரகாசம் வந்தது. அவனை அடையாளம் கண்டு கொண்டதோடு மட்டுமல்லாமல், அவனும் தானும் பொதுவாக அடைந்த அனுபவங்கள், உறவுகள், பாசங்கள், பந்தங்கள், சோதனைகள், அச்சங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள், போராட்டங்கள் - அத்தனையும் அடுப்பில் வைத்த பாலைப்போல் பொங்கி வந்து விளிம்பிலே வழிந்தன. ''மருது! மருதய்யா!'' என்று குழந்தையைப்போல், பைத்தியக்காரனைப் போல், அவனைக் கட்டிக் கொண்டு சிரித்தார். ''எந்த இடத்திலே நாம் பிரிந்தவர்கள், அந்த இடத்திலே சந்திக்கிறோம் பாரேன்! சௌக்கியமாயிருக்கிறாயா, அப்பா? வேலை ஏதாவது கிடைத்ததா? உன் குழந்தை படிக்கிறதா? ஆனால் நீ கல்யாண மாகாதவன் இல்லே? நீ வேலை செய்கிறவர்கள் வீட்டுக்

குழந்தை படிக்கிறதா?'' என்று அடுக்கடுக்காகக் கேள்விகளை வீசினார்.

''சார்! ரொம்பக் களைப்பாயிருக்கீங்க. அதிகமாப் பேசாதீங்க,'' என்ற மருதய்யன் வாசலுக்கு ஓடி, டீ வாங்கி வந்து தந்தான். அதை அவர் பருகுகையில் பரிவோடு கைக்குட்டையினால் விசிறினான்.

அவர் முகத்தில் களை பிறந்தது. ''நீ எப்படி இருக்கிறாய் என்று சொல்லவில்லையே?''

''உங்க புண்ணியத்திலே நல்லாத்தான் இருக்கேன் சார்,'' என்றான் மருதய்யன். ''இப்ப கிராமத்திலே எங்க அம்மாவோடு இருந்துட்டிருக்கிறேன். கல்யாணம் பண்ணிக்கன்னு அம்மா கட்டாயப் படுத்துறாங்க... பொண்ணு பார்த்து வச்சிருக்காங்க... கல்யாணத்துக்குச் சில சாமான்கள் வாங்குவதற்காக மெட்றாஸ் வந்தேன், சார்.''

''அடி சக்கை! அப்புறம்?'' என்றார் ஜனார்த்தனம். உற்சாகத்துடன் பேசுவது போல் நடிப்பது உயிரைப் பணயம் வைக்கும் போராட்டமாயிருப்பதை அவர் உணர்ந்தார்.

மருதய்யன் அவரைக் காலோடு தலை பார்த்தான். நெற்றியிலே எத்தனை வேதனைக் கோடுகள்! கண்களில் எவ்வளவு சோர்வு! சட்டையிலும் வேட்டியிலும் என்னென்ன அழுக்குக் கறைகள்! காலிலும் கையிலும் கணக்கற்ற கருக்கங்கள். பொத்தானில்லாத அந்தச் சட்டை! ஒரு வார் கிழிந்து போன செருப்பு!

''ஏன் சார், உங்களுக்கு ஒரு மகன் இருக்கிறான், உங்களை நல்லா கவனிச்சுப்பான்னு நீங்க சொல்லிக் கிட்டிருந்தீங்களே...''

''மணிகண்டனைச் சொல்கிறாயா? அவன் காரும் பங்களாவுமாய் ஓகோவென்று இருக்கிறான். அவனுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை. ரேகா என்று பெயர். ஒரு நிமிஷம்கூட



என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாள். மருமகள் சாரதா தங்கக்கட்டி. 'அப்பா அப்பா' என்று என் மேலே உயிர். நான் கடுகத்தனை வேலை செய்தால்கூட அவள் கண்ணில் ரத்தம் வந்துவிடும். கிராமத்துக்கு வேலையாய் அனுப்பினான். போனேன். பர்ஸ் திருட்டுப் போய்விட்டது. நடந்தே வந்தேன் பார், அந்தக் களைப்பிலே... களைப்பிலே... மயக்கம்... வழந்து...''

''சார்! சார்! என்னைப் பாருங்க!'' என்று மருதய்யன் கூவிய அதே வினாடி அவர் அவன் மீது சாய்ந்து விட்டார். மார்பிலே அவரைத் தாங்கிக் கொண்டவன், ''ஐயையோ! இந்தப் பெரியவர் மயக்கமா விழுந்திட்டாரு. கொஞ்சம் வாங்க,'' என்று கையைத் தட்டி, போய்க் கொண்டிருந்த இரண்டு பியூன்களைக் கூப்பிட்டான். உடனே அவர்களும் இரண்டு மூன்று ஆசிரியர்களும், மைதானத்தில் கிரிக்கெட் ஆடிக்கொண்டிருந்த சில சிறுவர்களும் ஓடிவந்து சூழ்ந்து கொண்டார்க்ள.

''அடடே! கொஞ்சம் முன்னே நல்லாயிருந்தாரே? கலர் பாக்ஸ் கீழே கிடந்திச்சுன்னு எடுத்துக் கொடுத்தானே, என்ன ஆச்சுது?'' என்ற பெண் குரலொன்று கேட்டதும், பிரமித்துத் தலை நிமிர்ந்தான் மருதய்யன். ''செங்கம்!''

பெண்ணாகையால், ஜனார்த்தனத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டாள் போலும்.

''முதல்லே பெரியவரைப் பிடி. ரூமுக்குள்ளே கொண்டுபோய், நாற்காலியிலே உட்கார்த்தி வைச்சு, விசிறியைப் போடலாம்,'' என்றவள், ''இந்தாய்யா! பெரிய வருக்கு ஒரு காப்பி வாங்கி வா,'' என்று தன் இடுப்பிலிருந்து ஒற்றை ரூபாயைக் கொடுத்து ஒரு பியூனை விரட்டி விட்டாள். பிறகு, சுற்றி நின்றவர்களிடம், ''எங்களுக்குத் தெரிஞ்சவர்தான். பாவம், வயசான காலத்திலே கஷ்டப்படறாரு. நாங்க

பார்த்துக்கிறோம். நீங்க போங்க,'' என்று கூறி, கூட்டத்தைக் கலைத்தான்.

அவனுடைய மனோதிடம் அவனுக்கு இருக்கவில்லை. சஞ்சலம் நீங்காத குரலில், ''செங்கம்! இவருக்கு ஒன்னு மில்லையே? ரொம்ப நாள் கழிச்சு இப்பத்தான் ஒருத்தரை யொருத்தர் பார்க்கிறோம். ரொம்ப நல்ல மனுசன். எதுவும் நேராமல் இருக்கணும்,'' என்று புலம்பினான்.

''யாரைப் பார்த்தாலும், மொதல்லே அவங்க சாப்பிட்டாங்களா, கொண்டாங்களான்னு கவனிக்கணும். இவர் எத்தினி நாள் பட்டினியோ என்னவோ. நீ பாட்டுக்கு வளவளன்னு பேச வைச்சிருக்கிறே. டவுனாயிட்டாரு.''

''ஆமாம், செங்கம். நான் ஒரு அறிவில்லாத முட்டாள்,'' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் மருதய்யன். செங்கம்மாவிடம் தன் தவறை ஒப்புக் கொள்கிறோம் என்பதில் அவனுக்கு ஒரு விநோதமான மகிழ்ச்சி ஏற்பட்டது.

''சரி, சரி. நீ அந்தப் பக்கம் பிடி.''

இரு புறமும் கைத் தாங்கலாகக் கிழவரைத் தூக்கினார்கள். சருகு போல கனமற்று அவர் இருப்பதை அறிகையில் மருதய்யனுக்குக் கண்ணில் நீர் வந்தது. ''சார்! நீங்க எவ்வளவோ துன்பப்பட்டுட்டீங்க. இனிமேயும் படக் கூடாது. பட்டால் அது ஆண்டவனுக்கே அடுக்காது,'' என்று சொன்னபடி கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

நாற்காலியில் சரிந்தாற்போல் அவரைக் கிடத்தி, விசிறியையும் போட்டாள் செங்கம்மா. பியூனும் காப்பியுடன் வந்து சேர்ந்தான். ''பெரியவரே! கொஞ்சம் காப்பி குடியுங்க. கண்ணைத் திறவுங்க. மயக்கமாய் இருந்திச்சா? வயசுக் காலத்திலே ஊட்டிலே படுத்திருக்க வேணாம்? ஏன் இப்படி ஊர்கோலம் வர்றீங்க?'' என்று உரிமையுடன் செங்கம்மா அதட்டிய அதட்டலில் ஜனார்த்தனம் கண்ணைத் திறந்தார்.



சூடாக வாயில் ஊற்றப்பட்ட காப்பியை மடக் மடக்கென்று விழுங்கினார்.

''நல்லவேளை, செங்கம்! கண்ணைத் திறந்து பார்க்கிறார். இவரைக் காப்பாத்திட்டே செங்கம்!'' என்று உற்சாகத்துடன் பேசினான் மருதய்யன்.

அவர் இன்னும் நன்றாக, தெளிவாக அவர்களைப் பார்த்து, ''என்ன, எனக்கு என்ன நேர்ந்தது?'' என்று கேட்டதோடு, ஓர் அசட்டுச் சிரிப்பும் சிரித்துத் தன் நிலைமையை மறைக்க முயற்சி செய்தார்.

''அலட்டிக்காம இப்படியே இருங்க, பெரியவரே,'' என்றாள் செங்கம்மா. ''கொஞ்சம் பசி மயக்கமா இருந்திங்க. வேறே ஒண்ணுமில்லே. நாங்க போய், துன்றதுக்கு எதினாச்சும் வாங்கியார்றோம். காத்து போதுங்களா? இன்னும் கொஞ்சம் வேகமாய் வைக்கட்டுமா?''

''போதும் அம்மா.''

இருவரும் வெளியே வந்து கதவை மேலோடு சாத்தி வைத்தார்கள். ''அவரோட பிள்ளை நல்லா வசதியா, காரும் பங்களாவுமா இருக்கிறாராம். பேத்திக் குழந்தை இருக்குதாம். மருமகளுக்கு இவர் பேரிலே உசிராம். அவங்க எங்கே இருக்கிறாங்கன்னு தெரிஞ்சால் கொண்டுபோய் விட்டிட லாம்,'' என்றான் மருதய்யன்.

செங்கம்மா சிரித்தாள். ''நான் பார்த்தாலும் பார்த்தேன், உன்னைப் போல் அப்பாவியை பார்த்ததேயில்லை.''

''ஏன்?''

''பிறகென்ன? அப்படிப்பட்ட மனுசாளுங்க இருந்துதான் இவரு பசியிலே சாகவிருந்தாராமா?'' என்றாள் அவள். ''விசயம் இன்னான்னு என்னைக் கேள், சொல்றேன்.''

''என்ன?''

''அந்த மவனும் பேத்தியும் வந்தப்போ இவர் ஒளிஞ்சுக்கினு ஏக்கமா பார்த்துட்டு நின்னிட்டிருந்தார். அவங்க வூட்டிலே இவரைச் சேர்க்கிறதில்லே போலிருக்கு. 'நான் அங்கே போறதுக்கில்லேம்மா'ன்னு இவரே சொன்னார். கண்ணிலே தண்ணி தளும்பிச்சு, பாவம்!''

மருதய்யனுடைய கண்களில் சிவப்பேறிற்று.

## பதினைந்து

செங்கம்மாவின் ஊகத்தைக் கேட்டதும் மருதய்யனுக்கு ஏற்பட்ட முதல் எண்ணம், அப்படிக்கூட இருக்குமா என்பதுதான். உலகத்திலே நம்ப முடியாதவை என்னென்னவோ நடக்கலாம். சந்திர மண்டலத்துக்குப் போய் இறங்கி, பத்துத் தப்படி நடந்து திரும்பிப் பூமிக்கு வரலாம். இருக்கிற இடத்திலிருந்து இம்மியும் அசையாமலே ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள ஊரைப் பூண்டோடு ஒழிக்கலாம். ஒருத்தருடைய இருதயத்தைப் பார்ட் பார்ட்டாய்க் கழற்றி வைத்துவிட்டு வேறொருத்தருடைய இருதயத்தைக் கொண்டுவந்து செட்அப் பண்ணலாம். இதெல்லாம் அவனால் நம்ப முடியும். ஆனால் பெற்ற தகப்பனை ஒரு மகன் தள்ளி வைக்க முடியுமென்றோ, வயதான ஒரு மனிதர் தன் பிள்ளையின் குடும்பத்துடன் சேர்ந்திருக்க ஆசைப்பட்டு அது முடியாமல் ஏங்கிக் கொண்டிருக்க முடியுமென்றோ அவனால் நம்ப முடியவில்லை.

ஜனார்த்தனம் இருந்த அறைக்குத் திரும்பி, ''பலகாரம் வாங்கிட்டு, அப்படியே உங்க மகனையும் பார்த்துச் சொல்லிட்டு வர்றேன் சார்,'' என்றான்.

கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்திருந்தவர் சுரீலென எறும்பு கடித்த மாதிரி நிமிர்ந்து கண் விழித்தார். ''என் பிள்ளையிடமா? ஏன்? எதற்கு?''



செங்கம்மா, 'நான் என்ன சொன்னேன்?'' என்கிற மாதிரி மருதய்யனைப் பார்த்தாள்.

''கார் எடுத்துக்கினுவந்து உங்களை அழைச்சிக்கினு போவாரில்லை?'' என்றான் மருதய்யன். ''அப்பாரு உடம்பு சொகமில்லாமல் இருந்ததை ஏம்பா என் கையிலே சொல்லல்லேன்னு அப்பாலே கோவிச்சுக்கிட்டார்னா?''

''அவன் ஒன்றும் கோபிக்க மாட்டான். நீ பேசாமல் இரு. இப்போது அவன் ஆபீசில் ஏகப்பட்ட வேலை இருக்கும். என்னைப்பற்றிய கவலை வேறே எதுக்கு அனாவசியமாய்?'' பிரயாசையுடன் முகத்தை மலர்ச்சியாய் வைத்துக் கொண்டார் அவர். ''எனக்கு உடம்பும் ஒன்றுமில்லை. நீ டிபன் வாங்கிக் கொண்டு வந்ததும் சாப்பிட்டுவிட்டு ஜம்மென்று பீமசேனன் மாதிரி ஆகி விடுவேன். பிறகு நானாகவே போய்க் கொள்வேன் வீட்டுக்கு.''

''இல்லீங்க சார். நீங்க நினைக்கிற மாதிரி உங்க உடம்பு இல்லை,'' என்று மீண்டும் சொன்னான் மருதய்யன்.

''சரி. உன்னிடம் உண்மையைச் சொல்லாவிட்டால் விடமாடடாய்,'' என்றார் ஜனார்த்தனம் புன்சிரிப்புடன்.

''சொல்லுங்க.''

''என் பையன் இருக்கிறானே கொஞ்சம் கோபக்காரன். பணத்தைக் கெட்டுப் போக்கிவிடடு இப்படிக் கஷ்டப்பட்டு ஊர் வந்து சேர்ந்தேன் என்ற தெரிந்தால் ரொம்பக் கோபிப்பான். 'கிராமத்திலேயிருந்து ஒரு தந்தி கொடுக்க வேண்டியது தானே? நான் கார் எடுத்துக்கொண்டு வந்து அழைத்துப் போவேனில்லையா?'' என்று சத்தம் போடுவான். அதனாலே, எனக்குத் தெரிந்த வேறு சிலரிடத்திலே ரகசியமாய்ப் பணம் வாங்கிச் சேர்த்துக் கொண்டு, பிறகு அவனிடம் போய்க் கொள்கிறேன்.''

''அப்ப உங்க மருமகள் கையிலே மட்டும் தகவல் சொல்லிடறேன் - நீங்க ஊருக்கு வந்தாச்சுன்னு,'' என்றான் மருதய்யன். ''அவங்க கோபிக்க மாட்டாங்களே?''

''யார் சாரதாவா? சொன்னாயே ஒரு வார்த்தை!'' என்று சொன்னபோது, அந்த வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டிருந்த புன்னகையை மேலும் பெரிதாக்கிக் கொள்வது ஜனார்த்தனத்துக்கு அரும்பாடாக இருந்தது. ''வேண்டாமப்பா. அவள் இன்னும் பதறிப் போவாள். பாவம், நடிக்கத் தெரியாத பெண். பதற்றத்தில் எதையாவது உளறி, புருஷனிடம் மாட்டிக் கொள்வாள்.'' திடீரென்று இன்னொரு ஞாபகமும் வந்ததைப் போல, ''அத்தோடு, அவர்களுடைய வீட்டைக் கண்டு பிடிப்பது உனக்கு ரொம்பக் கஷ்டம். சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற காலனி. கன்னாபின்னாவென்று நம்பர் கொடுத்திருக்கிறார்கள். அதையும் வீட்டு வாசலில் எழுதியிருக்க மாட்டார்கள். கரெக்ட் அட்ரஸ் வைத்திருந்தால் கூடக் கண்டுபிடிக்க இரண்டு நாளாகும்,'' என்றார்.

செங்கம்மா குறுக்கிட்டு, ''எனக்குத் தெரியுமுங்க ஊடு,'' என்றாள்.

ஆயாசத்துடன் கண்களை மூடிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்தார் ஜனார்த்தனம். 'என்னவோ செய்து கொள்ளுங்கள்' என்று சலிப்புடன் விட்டுவிட்ட பாவனை அவர் முகத்தில் தெரிந்தது. 'போகலாம்' என்று செங்கம்மா சாடை காட்ட, அவளைப் பின்தொடர்ந்து மருதய்யன் வெளியே வந்தான்.

ஸ்கூல் காம்பவுண்டைக் கடந்ததும், ''நிசமாகவே உனக்குப் பெரியவரோட மகன் ஊடு எங்கே இருக்குதுன்னு தெரியுமா?'' என்றான்.

''இங்கே மூணாவது தெருதான். போகலாம், வரியா?''

''பின்னே?''

ஒருவரையொருவர் உராய்ந்தாற்போல் இருவரும் நடந்தார்கள். இருட்டிக் கொஞ்ச நேரம்தான் ஆகியிருந்ததால்,



பகல் வெளிச்சத்தோடு தெரு விளக்குகளின் ஒளி கலந்து, சாலைக்கு ஒரு சாம்பல் நிறத்தைக் கொடுத்துக் கொண்டு இருந்தது. செங்கம்மா திரும்பித் திரும்பி அவனைப் பக்கவாட்டாகப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவன் கை தன் கையை இடிக்கும்போது, மெதுவாய், ரகசியமாய், விரல்களைப் பிடிப்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு, அப்படியேதும் நடைபெறாததால் ஏமாற்றம் ஏற்பட்டது. ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அடுத்த தெருவையும் அவர்கள் தாண்டிவிட்டபோது அவளால் பொறுக்கக் கூடவில்லை.

''லெட்டரைப் பார்த்திட்டுத்தானே வந்தே?'' என்றாள்.

''லெட்டரா? எந்த லெட்டர்?''

''நான் போட்டிருந்த லெட்டர்,'' என்றாள் செங்கம்மா சற்று ரோஷத்துடன். ''இந்த ஸ்கூலில் நான் ஆயாவா இருக்கிறேன்னு எழுதியிருந்தேனில்ல? அதிலே இருந்த அட்ரஸை வைத்துத்தானே இப்ப வந்தியாம்? இல்லியா?''

''ஆமாம், ஆமாம்.''

''பின்னே எந்த லெட்டர், யார் போட்டாங்கன்னு கேட்கிறியே? மருது, நான் உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா? கடைசிலே, உன் தோஸ்து கண்ணன்தான் சொன்னாரு, நீ ஊருக்குப் போயிருக்கிறதாய். லெட்டர் போட்டால் நல்லாயிருக்குமோ இருக்காதோன்னு நினைச்சேன். ஆனால் இந்த டீக்கடைக்காரரோடே எனக்குக் கொஞ்சம்கூட - இந்தா, நான் பேசிக்கினே போறேன், நீ எங்கியோ கவனமாயிருக்கியே! என்னை என்ன ஊகன்னு நினைச்சியா?''

அவள் குரலில் திடீரென்று தென்பட்ட சீற்றம் அவனைக் கிள்ளிவிட்டு எழுப்பியது. ''இல்லியே, செங்கம். நீ சொல்றதெல்லாம் கேட்டுக்கினுதான் வர்றேன். உன் கார்டைப் பார்த்தவுடனே, அடுத்த மெட்றாஸ் பஸ்ஸைப் பிடிச்சு இங்கே ஓடி வந்துட்டேனாக்கும்! அம்மாகூடக் கேட்டிச்சு, என்னடா

மருது அப்படித் தலை போற சங்கதின்னு. நான் யார் கைலேயும் சொல்லல்லே.''

''உக்கும்!'' என்று செங்கம்மா சிணுங்கினாள், அவன் பதிலில் திருப்தி அடையாதவளாக. ''ரொம்ப ஆசைதான் என் மேலே! வந்ததே மொதல் என்னை ஒரு பேச்சுக் கேட்டியா? ஏன், என் முகத்தைக்கூட முழுசா நல்லா ஒரு வாட்டி நீ பார்க்கலே! இந்தா, இப்படி லெஃப்ட்டிலே திரும்பணும். எங்கியோ போறியே?''

அவளை மனம் புண்பட வைத்துவிட்டோம் என்று மருதய்யனுக்கு உறைத்தது. ''உன் முகம்தான் என் மனசுக்குள்ளே எப்பவும் இருக்குதே செங்கம்? தனியாய் வேறே பார்க்கணுமா?'' என்று சிரித்துச் சமாளித்தான். ''உன் கடதாசியைப் பார்த்துட்டுத்தான் மனசு தாங்காமே ஓடியாந்தேன். ஆனால் வந்த இடத்தில் அந்தப் பெரியவரைப் பார்ப்போம்னு நான் கனாவிலேகூட நினைக்கல்லே. பார்த்ததும், அதுவும், அந்த நிலையிலே பார்த்ததும் மத்த எல்லாம் எனக்கு மறந்தே போச்சு.''

அவளுடைய கோபம் சற்றுத் தணிந்தது. ''நீயும் அவரும்...'' தயங்கினாள். பிறகு, ''சேர்ந்து இருந்தீங்களா?'' என்றாள்.

''ஆமாம் செங்கம். நானும் அவரும் ஜெயில்லே சேர்ந்து இருந்தோம்,'' என்றான் அவன்.

'எவ்வளவோ பேர் உன்னோடு இருந்திருப்பாங்களே? இந்தக் கிழவர் என்ன ஸ்பெஷல்?''

''ஆமாம், செங்கம். ஸ்பெஷல்தான்,'' என்றான் அவன் ஒரு பெருமூச்சுடன்.

கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததுமே வலக் கைப்புறத்தில் ஒரு கார் ஷெட் தெரிந்தது. கதவுகள்



இரண்டும் திறந்து கிடந்தன. உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

ஒரு சிறுமி, எதையோ எட்டிப் பிடிப்பதற்காக எம்பி எம்பிக் குதித்துக் கொண்டிருந்தாள். சிறிது நெருங்கிக் கவனித்தபோது, ஷெட்டின் உயரத்தில் ஒரு மச்சு இருப்பதும், அதிலே பழைய டயர்கள், பெட்ரோல் டின்கள், கந்தல் துணிகள் ஆகியவற்றோடு பல கண்டான் முண்டான்களும் எறியப்பட்டிருப்பதும் புலப்பட்டது.

மருதய்யனைக் கண்டதும் அந்தச் சிறுமி, ''சார், கொஞ்சம் அதை எடுத்துக் கொடுக்கிறீங்களா?'' என்று கெஞ்சினாள்.

தன்னை அவள் 'சார்' என்றழைத்தது மருதய்யனுக்குச் சிரிப்பேற்படுத்தியது. ''என்ன மேடம் எடுத்துத் தரணும்?'' என்றான்.

''அது,'' என்று அவள் கை காட்டிய இடத்தில் ஒரு துணிப்பொம்மையின் தலை மட்டுமே தெரிந்தது. ''எங்க தாத்தா எடுத்திட்டுப் போய் ரிப்பேர் பண்ணித் தர்றேண்ணு சொன்னார். ஆனால் எதுக்காகவோ ஊருக்குப் போயிட்டார்.''

ஜனார்த்தனத்தின் பேத்தி இவள் என்று மருதய்யன் ஊகித்துக் கொண்டான். ''தாத்தா எங்கேம்மா போயிருக்காரு?''

''வில்லேஜுக்கு,'' என்றாள் குழந்தை. ''அரிசி மூட்டையெல்லாம் வாங்கி, ரயில்லே ஏத்தி அனுப்பிச்சிட்டு, வரவேண்டிய பணமெல்லாம் வசூல் பண்ணிக்கிட்டு வருவார்,'' என்று அவள் சொன்னது, ஜனார்த்தனம் சொன்னதற்குப் பொருத்தமாகத்தான் இருக்கிறது என்று மருதய்யன் நினைத்துக்கொண்டான். ஆனால் அப்பாவோ அம்மாவோ சொல்லித் தந்ததை அப்படியே ஒப்பிக்கிறாள் என்று செங்கம்மா புரிந்து கொண்டாள்.

''சார், அந்தப் பொம்மையை எடுத்துக் கொடுங்க ளேன்,'' என்று ரேகா நினைவூட்டினாள்.

மருதய்யனுக்கும் எட்டவில்லை. ஒரு கோலை எடுத்துத் தள்ளினான். பொத்தென்று விழுந்தது பொம்மை. ஆசையுடன் அதையெடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள் ரேகா.

''அழகான சோல்ஜர் பொம்மை. ஆனால் கையில்லாமல் இருக்குதே?'' என்றான் அவன்.

''எங்க தாத்தா வந்ததும் ஒரு செகண்ட்லே கை வைக்கக் கொடுத்திடுவார்,'' என்று குழந்தை பெருமையடித்துக் கொண்டிருந்தபோது தோட்டத்தில் வெளிச்சம் பாய்ந்து, வளைந்து திரும்பி, ஷெட்டை நோக்கி விரைந்து வந்தது ஒரு கார். ஷெட்டினுள் ஏற்கெனவே இருந்த விளக்கின் ஒளியோடு கலந்து அவர்களுடைய நிழல்களை வினோதமாக அசையச் செய்தது.

''அவர்தான்,'' என்று செங்கம் கிசுகிசுத்தாள்.

வண்டியை நிறுத்துவதற்காக அவர்கள் வெளியே வந்தார்கள். ஆனால் ஷெட்டுக்குள் செலுத்தாமல் காரை வெளியிலேயே நிறுத்திக் கொண்டு மணிகண்டன் திகைப்புடன் கேட்டான், ''என்ன, யார் நீங்க?'' என்று.

''என் பொம்மை அப்பா. இங்கே ஷெட்டு மேலே தூக்கிப் போட்டுட்டாங்க. இவர்தான் எடுத்துத் தந்தார்,'' என்றாள் ரேகா.

''வணக்கம் சார். ஜனார்த்தனத்தோட ஸன்தானே நீங்க?'' என்று மருதய்யன் விசாரித்ததும் மணிகண்டனின் திகைப்பு மாறி முகத்தில் இருளடைந்தது. ''ஆமாம், ஏன்?''

''உடம்பு சுகமில்லாமல், குழந்தை படிக்குதே அந்த ஸ்கூல்லே படுத்திருக்காருங்க. உங்க கையிலே சொன்னால் நீங்க வருவீங்கன்னு...''



''அடடே! அப்படியா? கிராமத்துக்குப் போயிருந்தவர் எப்போது திரும்பி வந்தார்? எனக்குத் தெரியாதே? உடம்பு சரியில்லாமலா படுத்திருக்கார்?'' என்று அவன் சங்கடத்துடன் அடுக்கடுக்காக வினைவியபோது, ''நான் என்ன சொன்னேன்?' என்பதுபோல செங்கம்மாவை அவன் பார்த்தான்.

''வண்டியை எடுக்கறீங்களா சார்? இப்பவே போய் அவரை இட்டாந்திடலாம்?'' என்றான் மருதய்யன்.

''ஆமாம். அழைத்துக்கொண்டு வர வேண்டியதுதான். ஆனால்...'' என்று மணிகண்டன் ஏதோ கூற முற்பட்டபோது, ''அக்கா உங்களை ஒரு நிமிடம் வரச் சொல்கிறாள், அத்தான்,'' என்று ஒரு டீனேஜ் பெண் வந்து தெரிவித்துவிட்டு, குழந்தை ரேகாவிடம், ''அஸைன்மெண்ட் செய்யப் போகிறேன் என்று சொல்லிவிட்டு இங்கேயா விளையாடிக் கொண்டிருக்கிறாய்? வா,'' என்று அழைத்துக் கொண்டு சென்றாள்.

''இதோ வருகிறேன்.'' மணிகண்டன் காரிலிருந்து இறங்கி வீட்டை நோக்கிச் சென்றான். தூரத்தில் வெராந்தா படிக்கட்டில் நின்றிருக்கும் மனைவியிடம் அவன் பேசுவது தெரிந்தது. சில நிமிடங்களில் திரும்பினான். ''சரி, நீங்கள் முன்னே போங்கள். கொஞ்ச நேரத்தில் நான் வருகிறேன்.''

''ஆமாங்க, இப்பவே வந்தீங்கன்னா...''

''என் சினேகிகதர் ஒய்ஃப்புக்கு டெலிவரி டயம். அவளை இப்போதுதான் நர்ஸிங்ஹோமில் சேர்த்துவிட்டு வருகிறேன். துணைக்கு என் மனைவி போக வேண்டும். அவளைக் கொண்டு போய்விட்டுவிட்டு நேரே அங்கிருந்தே வந்து விடுகிறேன். பாலாஜி நகர் ஸ்கூல்தானே?'' என்றவன் பர்சைத் திறந்து, பத்து ரூபாய் நோட்டொன்று தந்தான். ''ஏதாவது செலவுக்கு வேண்டுமானாலும் வைத்துக்கொள்'' என்றான்.

மருதய்யன் மகிழ்ச்சியுடன் ''சீக்கிரமாய் வந்துடுங்க, சார். பாவம் பெரியவர்,'' என்றான்.

''ஷ்யூர், ஷ்யூர்.''

பள்ளிக்கூடத்தக்குத் திரும்புகையில் மருதய்யன் உற்சாகமாக இருந்தான். ''என்னென்னவோ சொன்னியே, செங்கம்? பார்த்தியா? எத்தினி நல்ல மனுசன்?''

''ஆமாம், தங்கக் கட்டி. மைசூரிலே சுரங்கம் இல்லை. அங்கே இப்பத்தான் வெட்டியெடுத்தாங்க!'' என்று சிரித்தாள் செங்கம்மா.

''என்ன செங்கம்?''

''ஒன்னுமில்லே. யாரோ ஒரு அம்மாளுக்கு நோவு கண்டிருக்குது இல்லே? அவங்களை ஆஸ்பத்திரியிலே இப்பத்தான் சேர்த்திட்டு வந்திருக்காராம் இல்லே?'?''

''ஆமாம், மறுபடி போகப்போறேன்னு கூடச் சொன்னாரே?''

''சொல்லுவார், சொல்லுவார். உன்னைப் போலக் காதிலே பூ வைச்ச ஆள் கிடைச்சால் இதுக்கு மேலேயும் சொல்லுவார்!'' என்றவள், உள்ளங் கையில் சுருட்டி வைத்திருந்த ஒரு சிவப்புக் காகிததததை காட்டினாள். பிய்த்தெடுக்கப்படடிருந்ததால் அதன் முனைகள் பிசிறு பிசிறாகக் கிழிந்திருந்தன.

''என்ன இது செங்கம்?''

''இங்கிலீஷ் தெரியாது உனக்கு? இது கார் பாஸ். மவுண்ட்ரோடிலே ஒரு சினிமா விழா இன்னைக்கு. ஐயா அதுக்குப்போயிட்டு வந்திருக்காரு. காரை நிறுத்தறதுக்காகக் கொடுத்த பாஸ் இது. காரிலே ஒட்டியிருந்திச்சு. நீ அந்தப் பெரிய மனுசனோடு பேசிட்டிருக்கிறப்ப இதைப் பிய்ச்சு வைச்சுக்கினேன். புரியுதா? அப்பாவைப் பார்க்க அவர் வரவே மாட்டாரு. அதான் பதது ரூபா கொடுத்திட்டாரே, பெத்த கடனைத் தீர்க்க!''



அவனுடைய கடகடவென்ற நகைப்பு அவன் ரத்தத்தைப் பொங்கியெழச் செய்தது. தான் அப்பாவித்தனமாக இருந்திருக்கிறோமே என்று புரிந்ததால் ஏற்பட்ட அவமானத்தைக் காட்டிலும், தன் மதிப்புக்குரிய ஜனார்த்தனம் இப்படிச் சிறுமைப்படுத்தப்படுகிறாரே என்ற ஆத்திரம் அவனைத் தீக்கொழுந்து போல் சுட்டது.

இரண்டு மூன்று வீடு வரை தாண்டி வந்து விட்டவன் கட்டெனத் திரும்பினான். அந்த வேகத்தைக் கண்டதும் செங்கம்மாவுக்கே பயம் வந்துவிட்டது. ''இந்தா, இந்தா. எங்கே போறே?'' என்று தடுக்க முயன்றாள். ஆனால் அது அவன் காதில் விழவில்லை.

''இந்தாய்யா பெரிய மனுசா! இப்படி வா,'' என்று அவன் போட்ட கூச்சல் கேட்டு, வீட்டுக்குள்ளிலிருந்து மணிகண்டன் மட்டுமின்றி சாரதாவும் விரைந்து வந்தாள்.

''ஏம்பா என்ன?'' என்று மணிகண்டன் திகைத்த கணத்தில், அவன் முகத்தில் அந்தக் கார் பாஸ் காகிதமும் பத்து ரூபாய் நோட்டும் பந்தாக உருண்டு வந்து விழுந்தன. ''ஏம்பான்னு என்னையா கேட்கிறே! உன் மனசையே கேட்டுக்க! இல்லாட்டி எல்லாருக்கும் மேலே ஒருத்தன் இருக்கிறான் பாரு, அவன் உன்னைக் கேட்டிடுவான்! அடச் சீ! பெத்த தகப்பனை நடு ரோட்டிலே விட்டுட்டு, நாடகமாய்யா ஆடறே?''

ஜிவு ஜிவுவென்று மணிகண்டன் முகம் சிவக்க, பின்னாலேயே வந்து நின்ற சாரதா, 'என்ன இது? யார் இந்த ஆள்?'' என்று பதற, சற்று முன்னால் நல்லவனாகத் தெரிந்த இவன் ஏன் திடீரென்று இப்படி ஆகிவிட்டான் என்பது புரியாமல் பயந்தவளாகக் குழந்தை ரேகா அம்மாவின் கால்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு எட்டிப் பார்க்க, ''தே, வாய்யா இப்பாலே. ஊர்ச் சண்டையெல்லாம் இழுத்துப்

போட்டுக்கினு!'' என்று அவனைத் தடுக்க முயன்றாள் செங்கம்.

''நீ விடும்மே என்னை!'' என்று அவளிடமிருந்து திமிறி விடுபட்டுக் கொண்டு, மணிகண்டனை மோதுகிற மாதிரி நேர் எதிரே போய் நின்று கொண்டான் அவன். ''என் மூஞ்சியைப் பார்த்துச் சொல்லு - உன் அப்பாவை இங்கே அழைச்சிக்கிட்டு வந்து வைக்கிறதாகத்தான் இருக்கிறியா?''

மணிகண்டன் இதற்குள் சுதாரித்துக் கொண்டு விட்டான். இமையைக்கூடப் படபடக்காதவனாக, திண்டலாக, ''யார் சார் நீங்க? என் அப்பாவிடம் ஏன் உங்களுக்கு இத்தனை அக்கறை?'' என்றான்.

''என்னை - நான் யாருண்ணா கேட்கிறே? நான்... நான்... - '' மருதய்யனுக்கு வார்த்தைகள் சிக்கின - 'நானும் அவரும் ஜெயிலில் ஒன்றாக இருந்தவர்கள்' என்று சொல்வது, இந்தச் சந்தர்ப்பத்தில் கேலிக்கிடமாக இருக்கும் எனத் தோன்றியதால்.

மணிகண்டன் தன் ஆடைகளை உதறிவிட்டுக் கொண்டான் - மருதய்யன் கை பட்டுவிட்டதற்காக.

''சொல்லேன்? யார் நீ.''

இயலாமை - சொல்லிக் கொள்ள முடியாத அந்தத் தர்மசங்கடம் அவனை வாளாய் அறுத்தது. ''யாருண்ணா கேட்டே? உன்னைத் தட்டிக் கேட்க வந்திருக்கிற தர்மராசண்டா நான்! புரியுதா? ஆறடி உயரத்திற்கு குட்டும் கோட்டுமாய் இன்னைக்கு நீ இருக்கிறியே, இந்த அளவுக்கு உன்னை ஊட்டி வளர்த்து ஆளாக்கினாரே, அவரோட கண் கலங்கற மாதிரி செய்திட்டே இல்லே? உன்னைச் சும்மா வுடமாட்டேண்டா டேய்!'' என்று சொல்லும்போதே, மணிகண்டனின் கழுத்திலே அவன் விரல்கள் பதிந்துவிட்டன.

''ஐயோ!'' என்று சாரதா அலறிய அதே வினாடி, செங்கம்மா ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, தன் சக்தியனைத்தை



யும் செலுத்தி மருதய்யனைப் பின்னே இழுத்துத் தரதரவென்று தள்ளிக் கொண்டு சென்றாள். அவன் மேனி பதறிக் கொண்டிருந்தது.

''சே, சே! இத்தனை பட்ட பிறகும் உனக்கு அறிவு வல்லியே? கொஞ்சம் விட்டிருந்தால் கொலையே செஞ்சிருப்பே போலிருக்கு?'' என்றபோது, அவள் குரல் அச்சத்தினால் நடுங்கியது.

## பதினாறு

**ம**ருதய்யனுக்கு உடம்பு இன்னும் பதறிக்கொண்டு தான் இருந்தது. 'என் தகப்பனை என்னோடு வைத்துக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. முடியாது,' என்று எடுத்த எடுப்பிலேயே மணிகண்டன் ஒளிவு மறைவின்றிச் சொல்லி யிருந்தால் அவன் மன்னித்திருப்பான். கோழைப் பேர்வழி. பொய்யும் பித்தலாட்டமுமாய் என்னென்னவோ நடித்து ஏமாற்றப் பார்த்தானே!

''என்னை எத்தனை மடையண்ணு நினைச்சுட்டான் பாரேன்,'' என்று அவன் வாய்விட்டுப் புலம்பியதைக் கேட்டுச் செங்கம்மாவுக்குக் கோபம் வந்தது. ''அட, வுடுவியா? சும்மா ஒரே பேச்சுப் பேசிக்கினு!''

''வுடறதா! ஸ்கூல்லே இப்ப காத்துக்கினு இருக்கிறாரே பெரியவர் அவரை வுடச் சொல்றியா செங்கம்? நல்ல மனுசன், வயசானவரு, ஈ எறும்புக்குக் கெடுதி நினைக்காதவர் - அப்படிப்பட்டவர் எப்படியோ போவட்டும்னு வுடச் சொல்றியா?''

''வேணாம், கெட்டிமாப் புட்சுக்க,'' என்றாள் செங்கம் சலிப்புடன். ''வெறும் கையாலேயே புட்சிக்கிறியா, இல்லாட்டி, கவுறு ஏதாச்சும் வேணுமா?''

ஸ்கூலைத் திரும்ப அடைத்தார்கள்.

பேச்சுக் குரல் கேட்டதும் மெதுவாய்ச் சுவரைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டார் ஜனார்த்தனம். இரண்டு பேராய்ப் போனவர்கள் இரண்டு பேராகவே திரும்பி வந்திருப்பதைப் பார்த்ததுமே போன காரியம் என்ன ஆயிற்று என்று புரிந்துவிட்டது அவருக்கு. தர்ம சங்கடமான மௌனம் நிலவியது அவர்களிடையில். மகனைப்பற்றித் தான் சொன்னதெல்லாம் வெறும் அளப்பு என்பதை இவர்கள் கண்டிருப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் அதைக் கண்டு விட்டாரென்று அவர்களும் உணர்ந்தார்கள். ஆகவே அதைப்பற்றிப் பேச வேண்டாமென்று தீர்மானித்தார்கள்.

''இட்டலியும் பக்கடாவும் இருக்குதுங்க. சாப்பிட்டுட்டு, இங்கேயே படுத்தக்குங்க,'' என்ற செங்கம்மா, ஸ்கிரீனுக்குப் பின்னால் மடக்கிச் சாத்தப்பட்டிருந்த ஒரு ஈஸிசேரைப் பிடித்துப் போட்டாள். ''எங்க ஹெட் கிளார்க்கும் உங்களைப் போலப் பெரியவர்தான். ராவு வேலை செய்யற மாதிரி இருந்திச்சின்னா இங்கேயே படுத்தப்பார். நிம்மதியாத் தூங்குதுங்க,'' என்றவள் அவருக்காக டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள். ''அவர் மெதுவா சாப்பிடட்டும். நீ வா,'' என்று மருதய்யனை அழைத்துவிட்டு வெளியே சென்றாள்.

ஆனால் மருதய்யன் அவளைப் பின்தொடர்ந்து செல்லவில்லை. ஜனார்த்தனத்தின் நிர்க்கதியான நிலைமை அவன் இதயத்தைக் கொக்கி போட்டுக் குடைந்து கொண்டிருந்தது. ஜனார்த்தனத்தின் முன்னே வைத்த பொட்டலம் அப்படியே பிரியாமல் இருக்கவே, ''சாப்பிடுங்க சார்,'' என்று தொண்டை கமறச் சொல்ல வேண்டியதாயிற்று.

ஜனார்த்தனம் ''இட்டிலி மட்டும் போதும், மருது. பக்கோடாவை நீயும் அந்தப் பெண்ணும் எடுத்துக்குங்க,''



என்றார். பிறகு, அவன் மணிகண்டனைப் பற்றி ஏதாவது சொல்லிவிடுவதற்கு முன்னால் பேச்சைத் திருப்பிவிட வேண்டுமென்று எண்ணியவராக, ''அந்தப் பெண்ணை எனக்கு நீ அறிமுகப் படுத்தவேயில்லையே?'' என்றார்.

''அதுவா சார்,...வந்து... எனக்கு உறவுதான்...''

''தங்கை முறையாக[illegible]''

''ஆமாம் சார்.''

இட்டிலியை விண்டு வாயில் போட்டுக் கொண்டு, ''அதுதான் பார்த்தேன். கிராமத்திலே உன் அம்மா உனக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கிறதாய்ச் சொன்னாயே? வேறே தப்பு வழிக்கெல்லாம் போக மாட்டாய் இல்லையா?'' என்றார்.

15634

''சே, சே. மாட்டேன் சார்,'' என்றவன், ''பக்கடாவும் நீங்களே எடுத்துக்குங்க சார். நாங்க கொஞ்சம் சாப்பிட்டாயிட்டுது,'' என்றான்.

''த்சு. வேண்டாமப்பா.''

அவர் முகத்தில் படர்ந்த வேதனைகளை அவனால் நன்கு காண முடிந்தது. ''வருத்தப்படாதீங்க சார். நல்லகாலம் கட்டாயம் வரும் - ஆளவந்தார் எத்தினி வாட்டி சொல்லியிருக்கார்? நினைவில்லீங்களா?''

''ஆளவந்தார்தானே? தங்கமான பையன்,'' என்று கண்களை மூடிக்கொண்டு மனப்பூர்வமாய்ச் சொன்னார் ஜனார்த்தனம். ''அவன் அட்ரஸ்கூட என்கிட்டே இருக்கிறது. 'எப்ப உதவி தேவைப்பட்டாலும் என்னிடம் வாருங்கள் சார்,' என்று சொல்லியிருக்கிறான். ஆனால் 'நாங்கள் நல்ல நிலைமையில் இருக்கிறோமப்பா' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டு அவன் முன்னே போய் நிற்க வேண்டும். பிச்சைக்குப் போகக்கூடாது. என்ன சொல்கிறாய்?''

"சாப்பிடுங்க. அப்பாலே பேசலாம்."

"த்சு... போதுமப்பா," என்று இட்டிலியிலே கொஞ்சத்தை மிச்சம் வைத்துவிட்டுத் தண்ணீர் குடித்தார். "மனசே சரியில்லை. வயிற்றுக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது?"

"கிடக்குது விடுங்க கழுதை! பிள்ளையா இவனெல்லாம்! குப்பைத் தொட்டியிலே கிடக்கிற நூறு செருப்போட தூக்கியொண்ணாவது செருப்பு!" என்றான் மருதய்யன் தன்னை மறந்தவனாக.

ஜனார்த்தனம் புன்னகை செய்தார். "இப்போதுதானே நீ கல்யாணமே செய்து கொள்கிறாய்? பிள்ளை குட்டி பிறக்கட்டும். பாசம் என்றால் என்னவென்று தெரியும்," என்றவர், குரலைத் தாழ்த்திக் கொண்டு, "ஏன் மருது, கன்னாபின்னாவென்று உன்னைத் திட்டி விட்டானா? ரொம்பச் சண்டை போட்டானா?" என்று கேட்டார்.

"அதெல்லாம் இல்லே சார். என்னை என்னவோ அடி முட்டாள்னு நினைச்சிக்கிட்டு என்னென்னவோ கட்டுக்கதை அளந்தார். போய்யா நீயும் ஒரு பெரிய மனுசனாட்டம்னு காறித் துப்பிட்டு வந்திட்டேன்."

"அதெல்லாம் மனசிலே வைத்துக் கொள்ளாதே, மருது. இப்போது எனக்கு அவனைப்பற்றித்தான் ரொம்பப் பயமாயும் கவலையாயும் இருக்கிறது."

"கவலையா? அவருக்கென்ன சார் குறைவு? பங்களா, கார், நாலுவேளை விருந்துண்ணு படா தெனாட்டிலே இருக்கிறார் சார் உங்க மகன்!"

"அதுதான் மருது எனக்குக் கவலையாய் இருக்கிறது," என்றார் ஜனார்த்தனம். இவனிடம் சொல்லலாமா வேண்டாமா என்று ஒரு நொடி நேரம் தயங்கியவர், அப்படிப்பட்ட தயக்கம் தன் மனத்தில் உதிக்கலாமா



என்றெண்ணி வெட்கப்பட்டுக் கொண்டார். அவர் குரல் மேலும் தாழ்ந்து கிசுகிசுப்பாக மாறியது. "உன்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப்போகிறேன்? என் பையன் மணிகண்டன் இருக்கிறானே, போர்ட் டிரஸ்டில் நல்ல பதவியில் இருக்கிறவன். ஏதோ ஓரளவுக்குச் சௌக்கியமாக வாழக்கூடிய சம்பளம்தான். ஆனால் திடீரென்று கார், பங்களா இதெல்லாம் எப்படி வந்ததென்று எனக்கு ஒரே பயமாய் இருக்கிறது, மருது. ஏதாவது செய்யக் கூடாததைச் செய்து வைத்தானானால், இவனை நம்பியிருக்கிற சாரதாவும், குழந்தை ரேகாவும் எங்கே போவார்கள்? அவனுக்கு ஏதாவது ஆயிற்றென்றால் அவர்கள் யாரிடம் அண்டி நிற்க முடியும்? மருது, நீ எனக்கு ஒரு ஒத்தாசை செய்யணுமப்பா."

"கட்டாயம் செய்றேன் சார். சொல்லுங்க."

"நான் போய் விசாரித்தால் சரியான தகவல் கிடைக்காது. என்னைப் பலபேருக்குத் தெரியவும் தெரியும். நீதான் மருது ரகசியமாய் அவனைப்பற்றி விசாரிக்கணும். விசாரித்து நான் பயப்படுகிறபடி எதுவுமில்லை, எல்லாம் நேர்வழியில் நாணயமாய்ச் சம்பாதித்ததுதான் என்று நீதான் நல்ல சேதி கொண்டு வந்து என் வயிற்றில் பால் வார்க்கணும்." உணர்ச்சி மிகுதியினால் அவன் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார் அவர்.

"நிச்சயமா நீங்க பயப்படற மாதிரி எதுவும் இருக்காது, சார். என்னவோ உங்க கையிலே ஒரு இதுவா நடக்கிறாரே தவிர, வேறே கெட்ட வழிக்கெல்லாம் போற மனுசனாத் தெரியலே. கவலைப்படாமல் கொஞ்ச நேரம் தூங்குங்க. மணி பன்னிரண்டாகுது," என்று கூறிவிட்டு, கதவைச் சாத்திக் கொண்டு வெளியே வந்தான்.

செங்கம், வெராந்தாவில் உள்ள கைப்பிடிச் சுவரில் அமர்ந்து கொண்டு, நிலவின் குளுமையையும் வெண்மையையும் ரசித்துக் கொண்டிருந்தாள். காலடியோசை கேட்டதும்.

''பெரியவரைத் தூங்கச் சொல்லிவிட்டு வருவியாக்கும்னு பார்த்தால் தொணதொணன்னு பேசிக்கிட்டேயிருக்கியே?'' என்று சிணுங்கினாள். ''இந்தா, இப்படி உட்கார்.''

அவன் ஒரு பெருமூச்சுடன் உட்கார்ந்து கொண்டு, கையோடு எடுத்து வந்திருந்த பகோடா பொட்டலத்தை அவள் மடியில் போட்டான்.

அவனை உராய்கிற மாதிரி அவள் ஒட்டி உட்கார்ந்து கொண்டாள். அவள் கண்களில் ஆசை பளபளத்தது. ''மருது, அம்பத்தூரிலே என் கையிலே சோறு வாங்கித் துன்றப்போ, பக்கத்திலே யாருமில்லாட்டி என்ன செய்வே, நினைவிருக்கா?'' என்று கொஞ்சினாற்போல் கேட்டபோது அவள் தோள்கள் நெகிழ்ந்தன. உதட்டின் இரண்டு இதழ்களும் ஏக்கசிவுடன் மின்னின.

''நினைவில்லை?'' என்று இரண்டாம் முறையும் அவள் கேட்ட பிறகே அவன் விழித்தக் கொண்டான். ''என்னது? எதைச் சொல்றே?''

அவள் பகோடா பொட்டலத்தைப் பிரித்து அவன் உள்ளங்கையில் வைத்தாள். பிறகு தன் வாயைத் திறந்து 'ஆ' என்றாள். அவன் சும்மா இருக்கவே, ''உன்னைத்தான் ஆண்ணேனே, தெரியல்லே?'' என்றாள்.

''என்னை மன்னிச்சிடு, செங்கம்,'' என்று உண்மையை ஒப்புக் கொண்டான் மருதய்யன். ''எனக்கு இதிலெல்லாம் இப்ப அறிவு போக மாட்டேங்குது. அந்தப் பெரியவரோட பிள்ளை என்ன ஒரு திமிரா நம்மை வெரட்டிட்டான்? அதை நினைக்க நினைக்க எனக்கு ஆறவேயில்லை. செங்கம்.''

அவனை வெறுப்புடன் ஒரு மோதல் மோதிவிட்டு விலகிக் கொண்டாள் அவள். ''சரி, உன் இஷ்டப்படியே செய். அந்த ஆளைக் கொலை செய்யறதாய் இருந்தே. நான் தடுத்திட்டேன். போ. கத்தியை எடுத்து ஒரு கிழி கிழிச்சிட்டு



நேரா ஸ்டேஷனுக்குப் போய்க் காப்பு மாட்டிக்க! அவ்வளவு தானே?''

''அடேம்மா! என்ன கோபம் வருது உனக்கு!''

அவள் கீழுதட்டைப் பற்களால் மெல்ல நெருடிக் கொண்டு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். வெப்பத்துடன் வெளிப்பட்ட மூச்சுக் காற்று, அவன் கழுத்தைத் தடவி, அவள் வாயால் சொல்ல முடியாத ஏக்கங்களையெல்லாம் விவரித்துச் சொல்லியது. ''விடிகாலை நேரமாயிருக்கு, மருது. குளிராயில்லே? வீட்டுக்குப் போகலாம் வா,'' என்று எழுந்து கொண்டாள் அவசரமாய்.

அவள் கைகளைக் கோத்துக் கொண்டு கூடவே ஓடவேண்டும்போல் மருதய்யனுக்குப் பரபரத்தது. அதே வினாடி ஜனார்த்தனம் சற்று முன் சொன்னது - அவர்களுடைய உறவில் தப்பாக எதுவும் இருக்காதென்று அவர் தெரிவித்த நம்பிக்கை - அவனுக்கு ஞாபகம் வந்தது.

''நீ போய்ப் படுத்துத் தூங்கிட்டு, காலையிலே வா செங்கம். நேரம் ரொம்பத்தான் ஆயிடுச்சு,'' என்றான்.

''நீ வர்றியா இல்லியா?''

''ஊகூம்.''

''அடச் சே!'' என்று அவள் சீறிவிட்டுப் புறப்பட்ட போது மறுநாள் அவள் வரமாட்டாள் என்றுதான் மருதய்யன் நினைத்தான்.

ஆனால் காலையில் அரையிருட்டு இன்னும் தயங்கிக் கொண்டிருந்த வேளைக்கு, மாடுகளும், பால் வண்டிகளும் சஞ்சரித்துக் கொண்டிருந்த நேரத்துக்கு, செங்கம வந்து விட்டாள். மருதய்யனுடன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நேரே ஜனார்த்தனம் படுத்திருந்த அறைக்குச் சென்று அவரை எழுப்பினாள். குழாயடிக்கு அழைத்துச் சென்று பல் விளக்கச்

செய்தாள். எப்படியோ ஒரு பிளாஸ்க் சம்பாதித்துக் கையோடு வாங்கி வந்திருந்த காப்பியை அவருக்கு ஊற்றிக் கொடுத்தாள். "பின் பக்கத்திலே ஒரு ஷெட் இருக்குது. அங்கே போய் இருந்துகிடுங்க. ஹெட்மாஸ்டர் வந்ததும், உங்களுக்கு ஒரு வேலை போட்டுத்தரச் சொல்லிக் கேட்கப் போகிறேன்," என்றாள்.

"நீ நன்றாயிருப்பாயம்மா," என்றார் ஜனார்த்தனம்.

மருதய்யன் அவளை இரண்டு வார்த்தையாவது பேச வைத்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன், "செங்கம் எப்பவுமே பெரிய பெரிய ஐடியாதான் போடும் சார்," என்று அவரிடம் சொல்லிவிட்டு, "நானும் இவரோட போய் இருந்துக்கவா?" என்றான்.

செங்கம் கழுத்தை வெட்டிக் கொண்டு போய்விட்டாள்.

ஜனார்த்தனம் மருதய்யனும் பள்ளிக்கூடத்தின் பின்புறத்திற்குச் சென்றார்கள்.

பத்தரை மணிவரை மற்ற வேலைகளைக் கவனித்த செங்கம்மா, மெதுவே தலைமையாசிரியரின் அறையில் எட்டிப் பார்த்தாள். அவரருகே ஓர் இளைஞன் நின்றவண்ணம் ஒரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருப்பது தெரிந்ததும், பிறகு வரலாம் என்று பின்வாங்க நினைத்தாள்.

அதற்குள், "செங்கம்! இப்படி வா! நானே உன்னைக் கூப்பிட்டனுப்ப நினைத்தேன்," என்றார் தலைமையாசிரியர்.

"குட்மார்னிங் சார்," என்றாள் அவள்.

"ஒரு மார்னிங்கும் வேண்டாம் எனக்கு. நீ என்ன உன் இஷ்டத்துக்கு யாரையெல்லாமோ அழைத்துக் கொண்டு வந்து இங்கே குடியேற்றுகிறாய்? வாச்மேன் சொன்னான்..."

"இல்லிங்க... வயதானவர் பாவம். திடுதிப்புனு வந்திட்டார்..."



"வந்தால் உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போ!" என்று சிடுசிடுத்தார் ஹெட்மாஸ்டர். "இப்போதுகூடப் பின்பக்கம் ஷெட்டில் வைத்திருக்கிறாரே அவர்களை! ஹெட்கிளார்க் பார்த்தாராம். சொன்னார். நல்லாயில்லேம்மா நீ செய்வது..."

"சார்... அவர் வந்து..."

"ஒரு சமாதானமும் தேவையில்லை எனக்கு. முதலில் அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, பிறகு வந்து பேசு," என்றவர் மணியடித்து ஒரு பியூனை வரவழைத்தார். "செங்கத்தின் கெஸ்ட்டுகள் வெளியே போனார்களா என்று வாசல்வரை போய்ப் பார்த்துவிட்டு வந்து எனக்குச் சொல்லணும்!" என்று கட்டளையிட்டார்.

செங்கமும் பியூனும் போன பிறகு அவருடைய முகத்தில் சற்று இனிமை பிறந்தது. அவரருகே நின்றிருந்த இளைஞன், "ரொம்பக் கண்டிப்பானவராக இருக்கிறீர்களே?" என்று முறுவலித்தான்.

"டிஸிப்ளின் முக்கியமில்லியா?" என்றார் ஹெட்மாஸ்டர். "நின்று கொண்டே பார்க்கிறீர்களே? உட்காருங்கள் மிஸ்டர் ஆளவந்தார். நன்கொடை கொடுப்பதற்கு முன்னால் எங்கள் ஸ்கூலைப்பற்றி நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டாமா? சாவதானமாய்ப் பாருங்கள். எல்லா ஆக்டிவிடீசும் அதில் இருக்கிறது."

ஆளவந்தார் நாற்காலியில் உட்கார்கையில் பியூன் உள்ளே வந்து, "அவங்க போயிட்டாங்க சார்," என்று தலைமையாசிரியரிடம் தெரிவித்தான்.

"தட்ஸ் குட்," என்றார் அவர்.

## பைதினேழு

''**ச**ரியான நியூசென்ஸ்!'' என்று அலுப்புடன் சொன்னபடி சட்டையைக் கழற்றி ஸ்டாண்டின்மீது எறிந்து விட்டு, சோபாவில் சாய்ந்தான் மணிகண்டன்.

''எங்கே நீங்கள்...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்த சாரதா, சமையற்காரன் காப்பி எடுத்துக் கொண்டுவரவே, பேச்சை நிறுத்திக்கொண்டாள். சமீப காலமாக அந்தஸ்து உயர்ந்திருந்ததால், எதெதை வேலைக்காரர்கள் முன்னிலையில் பேசலாம். எதெதைப் பேசக்கூடாது என்றெல்லாம் கவனமாகப் பயின்று வந்தாள் அவள். சமையல் கூடம் சென்ற பிறகு ''எங்கே நீங்கள் அந்த ஆள் சொன்னான் என்பதற்காக, உங்கள் அப்பாவை மறுபடி இங்கே வரச் சொல்லிடுவீர்களோ என்று பயந்து கொண்டிருந்தேன்,'' என்றாள்.

''இருக்கிற தலைவலி போதாதாக்கும்? அவர் வேறே எதுக்கு?'' என்றான் மணிகண்டன்.

''ஏன் என்னவோ போல் பேசுகிறீர்கள்?''

''ஒன்றுமில்லை... ஆபீசில்தான்... லேசாய்ப் புகைய ஆரம்பித்திருக்கிறது. எந்த நிமிஷத்தில் வெடிக்குமோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்...''

கலவரம் படர்ந்தது சாரதாவின் முகத்தில். ''என்னது, என்னென்னவோ சொல்கிறீர்கள்?''

அவன் பதில் கூறுமுன் ''கலாட்டாவெல்லாம் சமாளித்தாச்சா?'' என்று கேட்ட வண்ணம், கையில் கல்லூரிப் புத்தகத்துடன் சாரதாவின் தங்கை மனோ வர, ''அம்மா, டிபன் அம்மா,'' என்று அவள் பின்னாலேயே ரேகாவும் வந்தாள்.

''இவளை அழைத்துக் கொண்டு போய், வயிற்றுக்கு ஏதாவது கொடு மனோ,'' என்று இருவரையும் அனுப்பி



வைத்தாள் சாரதா. அவர்கள் தலை மறைந்ததும், ''சொல்லுங்கள். என்ன விஷயம்?'' என்றாள், கணவனிடம் நெருங்கி அமர்ந்து கொண்டு.

''ஒரு வழிதான் இருக்கிறது... அதுகூட...''

''வழியை அப்புறம் யோசிக்கலாம். பிரச்னை என்னவென்று முதலில் சொல்லுங்கள்,'' என்று அவன் கையைப் பற்றிக் கொண்டாள் சாரதா.

மணிகண்டன் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தான்.

**ஊ**சியையும் நூலையும் வைத்துக் கொண்டு மேல் துண்டின் கிழிசலுடன் மன்றாடிக் கொண்டிருந்தார் ஜனார்த்தனம்.

இடம் : செங்கம்மாவின் குடிசை வாசல்.

முந்தின தினம், ஜனார்த்தனத்துக்குத் தன் பள்ளிக் கூடத்திலேயே ஒரு வேலை வாங்கித் தருகிறேன் என்னும் அளவுக்குப் பெருமையடித்துக் கொண்ட பிறகு, சிறிது நேரம் ஒண்டியிருக்கக்கூட அனுமதிக்கப்படாமல் விரட்டப் பட்டதை எண்ணி செங்கம்மா உள்ளுக்குள் அவமானப்பட்டுக் கொண்டிருந்தாள்.

ஆகவே, ''என் வூடு அதோ இருக்குது. இப்பத்திக்கு அங்கே வாங்க. நாளைக்கு மத்தது பேசிக்கலாம்,'' என்ற ஜனார்த்தனத்தை அழைத்தாள்.

மருதய்யனும், ''நீங்க இன்னைக்கு ஒருநாள் இவள் வீட்டிலேயே இருந்துக்குங்க, சார். நான் அம்பத்தூர் போய், பழைய வேலை கிடைக்குமான்னு விசாரிச்சுட்டு வர்றேன்,'' என்றவன், ''பார்த்துக்க செங்கம்,'' என்று அவளிடமும் கேட்டுக் கொண்டுவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான்.

''ஏனம்மா உனக்கு வீண் சிரமம்? கஷ்டமோ நஷ்டமோ என் பிள்ளையுடனேயே அனுபவித்துக் கொள்கிறேன்,'' என்று சொல்லிப் பார்த்தார் ஜனார்த்தனம்.

''அட, சும்மா இருங்க சார். ரெண்டே நாளில் உங்களுக்கு விஷம் வைச்சுக் கொலை செய்திடுவாங்க உங்க பிள்ளையும் மருமகளும். அதான் பார்த்திட்டமே, நெஞ்சை எப்படிப் பஞ்சு போட்டுத் துடைச்சிருக்குதுன்னு!'' என்று அதட்டிச் சொல்லிவிட்டாள் செங்கம்மா.

நாளையிலிருந்து என்ன செய்யப் போகிறோம்? ஜனார்த்தனத்துக்குப் புரியவில்லை.

எதிரே நிழலாடியது.

மார்போடு கை கட்டிக்கொண்டு, மரியாதையுடன் நின்றிருந்தான் ஓர் ஆள்.

''யாரப்பா?''

''தோட்டக்காரன், சார். உங்க மகனோட வீட்டிலே வேலை செய்யறேன், சார்.''

''அப்படியா? நான் உன்னைப் பார்த்ததில்லையே அப்பா?''

''நான் உங்களைப் பார்த்திருக்கிறேன், சார். இப்படி உங்களை... இந்த நிலைமையிலே... அவங்க... ஊகூம். நான் சொல்லக் கூடாது, சார். என்னவோ தற்செயலாய் இந்தப் பக்கம் போயிட்டிருந்தேன். பார்த்தேன். மனசு பொறுக்கலை. ஊம்...வர்றேன், சார்.''

அவன் திரும்பினான்.

''இரப்பா,'' என்று அவனை நிறுத்தினார் அவர். ''ரேகா - என் பேத்தி - நல்லா இருக்குதாப்பா?''



''ஹூம்! அது ஒரு கண்ணராவிங்க.''

''ஐயையோ! என்னப்பா சொல்கிறாய்?'' என்று ஜனார்த்தனம் பதைத்தார். ''குழந்தைக்கு உடம்பு ஒன்றுமில்லையே?''

''நேற்று ராவிலேயிருந்து நல்ல காய்ச்சலுங்க. 'தாத்தா தாத்தா'ன்னு வாய் ஓயாமே புலம்பிட்டேயிருக்குது.''

''அப்புறம்?'' எழுந்துவிட்டார் அவர்.

''உங்க மகன்கூடப் பரவாயில்லீங்க. 'குழந்தை இவ்வளவு தூரம் புலம்புது. அப்பாவை எங்கேயாவது தேடிப் பிடிச்சுக் கூட்டியாரலாம்'னு சொல்லிப் பார்த்தார். உங்க மருமகள் - சே, சே! பொம்பிளையா அவங்க? 'என்ன ஆனாலும் சரி, அவரைக் கூப்பிட வேண்டாம்'னு கண்டிப்பா சொல்லிட்டுதுங்க.''

''இதெல்லாம் எப்போது நடந்த சமாசாரம் என்கிறாய்? நேற்றா? இன்று காலையில் குழந்தையைப் பார்த்தாயா?''

''இல்லீங்க, சார். போரிங்பைப்புக்கு ஒரு வால்வு வாங்க வேண்டியிருந்திச்சு. அது சரியான சைசிலே கிடைக்கலே. காலையிலேயிருந்து அலைஞ்சுக்கிட்டேயிருக்கிறேன். இப்ப குழந்தைக்கு எப்படி இருக்குதோ எனக்குத் தெரியாதுங்க.''

''இதோ பாரப்பா,'' என்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டார் அவர். ''ஒரே ஒரு தரம் என் பேத்தியைக் கண்ணாலே பார்க்க நீ ஒத்தாசை பண்ணு. எனக்கு வீடு தெரியாது. அழைத்துக்கொண்டு போனாயானால்...''

வெடுக்கென்று அவருடைய கையை உதறினான் அந்த ஆள். ''ஏன் சார், ஏதோ ரெண்டு காசு சம்பாரிச்சு என் பெண்டாட்டி புள்ளைங்களுக்குக் கஞ்சி ஊத்திட்டிருக்கிறேன், அது பிடிக்கலையா உனக்கு? என் வேலைக்கில்ல வேட்டு வைக்கச் சொல்றே?''

"இல்லையப்பா. அப்படியெல்லாம் நேராது."

"உங்க மருமகளுக்கு விசயம் தெரிஞ்சதோ, அந்த மினிட்டே எனக்குச் சீட்டுதான்."

அவனுக்கு ஏதாவது கொடுத்துச் சரிப்படுத்தலாமென்று சட்டைப் பைக்குள் கையை விட்டுத் துழாவினார் ஜனார்த்தனம். ஓட்டையின் வழியே விரல்கள் வெளிப்பட்டன. "செங்கம்! செங்கம்மா!" என்று தேடிப் பார்த்தார். அவள் எங்கே போயிருக்கிறாள் என்றே தெரியவில்லை. அதற்குள் அந்த ஆள் போய்விடுவானோ என்று பயம் ஏற்படவே, திரும்பிப் பழைய இடத்துக்கே வந்தார்.

"சார்! என்னை விட்டுடு. அனாவசியமா டேஞ்சரிலே மாட்ட வைச்சிடாதே. உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன்," என்றான் அவன்.

"நீ துளிகூட அகப்படாதபடி நான் பார்த்துக் கொள்கிறேனப்பா," என்று உறுதி கூறினார் ஜனார்த்தனம். "என் மகனோட வீடு எங்கே இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. குழந்தை எந்த இடத்திலே படுத்திருக்கிறது என்றுகூடத் தெரியாது. ரகசியமாய் என்னை அழைத்துக் கொண்டுபோய் அந்த இடத்தைக் காட்டு. ஜன்னல் வழியாய்க் குழந்தையை ஒரே ஒரு தரம் பார்த்துவிட்டு உடனேயே போய்விடுகிறேன்."

அந்த ஆள் கையைப் பிசைந்தான். "சார்! இப்ப அப்படிச் சொல்றீங்க. ஆனால் பேத்தியை நேரிலே பார்த்தால் கம்மா இருக்கமாட்டீங்க. 'கண்ணே! மூக்கே'ன்னு எதினாச்சம் கூச்சல் போட்டு, நீங்களும் மாட்டிக்கிட்டு, என்னையும் மாட்ட வைச்சிடுவீங்க!"

"மாட்டேனப்பா, மாட்டவே மாட்டேன். தயவு பண்ணிப் புறப்படு. நான் எப்போதும் இப்படிப் பிச்சைக்காரனாகவே இருக்கமாட்டேன். என்றைக்காவது



ஒருநாள் நல்லகாலம் வரும். அப்போது நீ செய்த உதவிக்காக நூறோ ஆயிரமோ பரிசு தராமல் போகமாட்டேன்."

"சார், காசு எவனுக்கு சார் வேணும்? உங்க மகனைப்போல இதயம் இல்லாத ஆளுங்களுக்குத்தான் அதெல்லாம். நான் உங்க மேலே இரக்கப்பட்டு இதைச் செய்யறேன். என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருந்தா போதும்."

அவன் முன்னே நடக்க, ஜனார்த்தனம் பின்னே சென்றார். அவன்மீது அவருக்குக் கோபம் வந்தது. 'இத்தனை இளம் பிராயமாயிருக்கிறான். கிழவன் என்னுடைய வேகத்துக்கு ஈடாய் நடக்க முடியவில்லையோ?' என்று எண்ணிக் கொண்டவர், 'வாப்பா வேகமாய்' என்று அதட்டவிருந்தார். ஆனால் அவன் முறைத்துக் கொண்டு போய்விடப் போகிறானே என்று அஞ்சியவராக, "இன்னும் கொஞ்சம் வேகமாய்ப் போகலாமேப்பா?" என்றார் கெஞ்சும் குரலில்.

தெருமுனையில் அவரை நிறுத்திவிட்டான் அவன். "சார், இங்கேயே வெயிட் பண்ணுங்க. வீட்டிலே யார் என்ன செய்திட்டிருக்காங்கன்னு ஒரு நெகா பாத்திட்டு வாரேன்."

"குழந்தைக்கு எப்படி இருக்கிறதென்றும் பார்த்து வந்து சொல்லப்பா," என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, நிழலென்றும் வெய்யிலென்றும் பாராமல் குறுக்கும் நெடுக்குமாய் அலைந்து கொண்டிருந்தார் அவர்.

இருட்டும் நேரத்துக்கு அவன் வந்து சேர்ந்தான்.

"என்னப்பா, குழந்தை எப்படி இருக்குது?"

"ஒருத்தரும் ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறாங்க சார். ஆனால் நல்ல வேளையாய், கீழ் ரூமிலேதான் படுக்க வைச்சிருக்கிறாங்க. ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தேன். தூங்கிட்டிருக்கிற மாதிரி தெரிஞ்சுது."

''இல்லையப்பா. அப்படியெல்லாம் நேராது.''

''உங்க மருமகளுக்கு விசயம் தெரிஞ்சுதோ, அந்த மினிட்டே எனக்குச் சீட்டுதான்.''

அவனுக்கு ஏதாவது கொடுத்துச் சரிப்படுத்தலாமென்று சட்டைப் பைக்குள் கையை விட்டுத் துழாவினார் ஜனார்த்தனம். ஒட்டையின் வழியே விரல்கள் வெளிப்பட்டன. ''செங்கம்! செங்கம்மா!'' என்று தேடிப் பார்த்தார். அவள் எங்கே போயிருக்கிறாள் என்றே தெரியவில்லை. அதற்குள் அந்த ஆள் போய்விடுவானோ என்று பயம் ஏற்படவே, திரும்பிப் பழைய இடத்துக்கே வந்தார்.

''சார்! என்னை விட்டுடு. அனாவசியமா டேஞ்சரிலே மாட்ட வைச்சிடாதே. உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன்,'' என்றான் அவன்.

''நீ துளிகூட அகப்படாதபடி நான் பார்த்துக் கொள்கிறேனப்பா,'' என்று உறுதி கூறினார் ஜனார்த்தனம். ''என் மகனோட வீடு எங்கே இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. குழந்தை எந்த இடத்திலே படுத்திருக்கிறது என்றுகூடத் தெரியாது. ரகசியமாய் என்னை அழைத்துக் கொண்டுபோய் அந்த இடத்தைக் காட்டு. ஜன்னல் வழியாய்க் குழந்தையை ஒரே ஒரு தரம் பார்த்துவிட்டு உடனேயே போய்விடுகிறேன்.''

அந்த ஆள் கையைப் பிசைந்தான். ''சார்! இப்ப அப்படிச் சொல்றீங்க. ஆனால் பேத்தியை நேரிலே பார்த்தால் கம்மா இருக்கமாட்டீங்க. 'கண்ணே! மூக்கே'ன்னு எதினாச்சும் கூச்சல் போட்டு, நீங்களும் மாட்டிக்கிட்டு, என்னையும் மாட்ட வைச்சிடுவீங்க!''

''மாட்டேனப்பா, மாட்டவே மாட்டேன். தயவு பண்ணிப் புறப்படு. நான் எப்போதும் இப்படிப் பிச்சைக்காரனாகவே இருக்கமாட்டேன். என்றைக்காவது



ஒருநாள் நல்லகாலம் வரும். அப்போது நீ செய்த உதவிக்காக நூறோ ஆயிரமோ பரிசு தராமல் போகமாட்டேன்.''

''சார். காக எவனுக்கு சார் வேணும்? உங்க மகனைப்போல இதயம் இல்லாத ஆளுங்களுக்குத்தான் அதெல்லாம். நான் உங்க மேலே இரக்கப்பட்டு இதைச் செய்யறேன். என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருங்க. போதும்.''

அவன் முன்னே நடக்க, ஜனார்த்தனம் பின்னே சென்றார். அவன்மீது அவருக்குக் கோபம் வந்தது. 'இத்தனை இளம் பிராயமாயிருக்கிறான். கிழவன் என்னுடைய வேகத்துக்கு ஈடாய் நடக்க முடியவில்லையே?'' என்று எண்ணிக் கொண்டவர், 'வாப்பா வேகமாய்' என்று அதட்டவிருந்தார். ஆனால் அவன் முறைத்துக் கொண்டு போய்விடப் போகிறானே என்று அஞ்சியவராக, ''இன்னும் கொஞ்சம் வேகமாய்ப் போகலாமேப்பா?'' என்றார் கெஞ்சும் குரலில்.

தெருமுனையில் அவரை நிறுத்திவிட்டான் அவன். ''சார், இங்கேயே வெயிட் பண்ணுங்க. வீட்டிலே யார் என்ன செய்திட்டிருக்காங்கன்னு ஒரு நெகா பாத்திட்டு வர்றேன்.''

''குழந்தைக்கு எப்படி இருக்கிறதென்றும் பார்த்து வந்து சொல்லப்பா,'' என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, நிழலென்றும் வெய்யிலென்றும் பாராமல் குறுக்கும் நெடுக்குமாய் அலைந்து கொண்டிருந்தார் அவர்.

இருட்டும் நேரத்துக்கு அவன் வந்து சேர்ந்தான்.

''என்னப்பா, குழந்தை எப்படி இருக்குது?''

''ஒருத்தரும் ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறாங்க சார். ஆனால் நல்ல வேளையாய், கீழ் ரூமிலேதான் படுக்க வைச்சிருக்கிறாங்க. ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தேன். தூங்கிட்டிருக்கிற மாதிரி தெரிஞ்சுது.''

''நான் உன்னோடு வருகிறேனப்பா. எப்படியாவது பின்பக்கமாய் உள்ளே நுழைந்து...''

''வேணாம் சார், வேணாம்!'' என்று பதறினான் அவன். ''உங்க மகன், மருமகள் ரெண்டு பேருமே காவல் காத்திட்டு உட்கார்ந்திருக்கிறாங்க.''

''நீ பார்த்த மாதிரியே நானும் ஜன்னல் வழியாய்ப் பார்த்துவிட்டு உடனே போய்விடுகிறேன். தயவு பண்ணப்பா.''

''சே, சே! உங்களைப் பார்த்ததே தப்பாய்ப் போச்சு!'' என்று அலுத்துக்கொண்டவன், ''சரி, சத்தம் போடாமல் என் பின்னாலேயே வாங்க, என்று அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

பெரிய ஆடம்பரமான வீடுதான் அது. வாசலைப் பார்த்தவுடனேயே அவருக்குப் புலப்பட்டது. ஆனால் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்க வில்லை. ''குழந்தை எந்த ரூமிலே இருக்கிறாள்?'' என்றார் கவலையுடன்.

உதட்டில் விரல் வைத்து, அவன் அவரை அழைத்துச் சென்றான்.

தோட்டத்தின் ஓரமாக, காம்பவுண்டு சுவரை ஒட்டினாற்போல் நடந்தபோது தன் இதயத்தின் ஓசையே வெளியே ராட்சச சப்தமாக ஒலித்துவிடுமோ என்ற அச்சம் உதித்தது அவருக்கு. அப்போதுதான் தண்ணீர் பாய்ச்சியிருந்ததால் ஈர மண்ணில் கால் உள் வாங்கியது. கூட்டப்படாதிருந்த பூமியில் கல்லும் முள்ளும் பாதத்தைக் குத்தின.

அடிமேலடி வைத்து நடந்த அந்த ஆள், ''இப்படி வாங்க,'' என்று சாடை காட்டி அழைத்துச் சென்றான் ஓர் அறையை நோக்கி. வெளிப்புறம் அதன் ஜன்னல்



சாத்தியிருந்தது. உள்ளே எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளி தோட்டத்தில் ஒரு கோடாக விழுந்திருந்தது.

ஜன்னல் கதவை மெல்லத் திறந்த அந்த ஆள், ''பாருங்க,'' என்று கிசுகிசுத்தான்.

உள்ளே கட்டிலின் மீது போர்வைக் குவியல் தெரிந்தது.

குழந்தை ரேகாவின் பிஞ்சுக் கால்கள் மட்டும் போர்வைக்கு வெளியே தெரிந்தன. ''நன்றாய்ப் போர்த்தக் கூடாதா குழந்தையை? கொசு கடிக்கிறது, பார். ஏனப்பா, தொட்டுப் பார்த்தாயோ? ரொம்ப அனல் அடிக்கிறதா?'' என்று ரகசியமான குரலிலேயே அடுக்கடுக்காய்க் கேள்விகளை வீசினார்.

''சரி சரி. வாங்க போகலாம்,'' என்று அவசரப் படுத்தினான் அவன்.

ஜன்னல் கம்பியோடு கம்பியாய் முகத்தை வைத்துக்கொண்டு பார்த்தவாறிருந்தார் அவர். உள்ளே மணிகண்டனையோ, சாரதாவையோ காணோம். குழந்தையை விட்டுவிட்டு எங்கேதான் போனார்கள்?

யாரோ, தடதடவென்று அவரை நோக்கி வந்தார்கள். திரும்பினார்.

''மாமா! நீங்களா? நிஜமாகவே நீங்களா? எங்கெல்லாம் உங்களைத் தேடினேன்! இனிமேல் என் குழந்தை கட்டாயம் பிழைத்து விடுவாள். ரேகா நிச்சமாய்ப் பிழைத்து விடுவாள்!'' என்று ஹோவென அழுத வண்ணம் எதிரே நின்றாள்அவர் மருமகள் சாரதா.

தான் காண்பதும் கேட்பதும் உண்மைதானா என்று புரியாமல் குழம்பினாராயினும், குழந்தை ரேகாவைப் பற்றிய கவலைதான் ஜனார்த்தனத்தின் மனத்தில் மேலோங்கி நின்றது. எனவே சாரதாவின் திடீர் மன மாற்றத்துக்குக் காரணத்தைப் பற்றி அவர் கேட்டுக்கொண்டிருக்கவில்லை. ''குழந்தை

இப்போது எப்படியம்மா இருக்கிறது. என்ன உடம்பு? எப்போது பிடித்து?'' என்றுதான் கேட்டார்.

''நேற்று சாயந்தரம் ஸ்கூலிலேயிருந்து வரும்போது லேசாய் ஜுரம் இருந்தது...'' என்று சொல்லத் தொடங்கிய சாரதா, உடனே, ''ஐயோ! சொந்தப் பேத்தியைக் கூடத் திருட்டுத் தனமாய்ப் பார்க்கிற மாதிரி உங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டேனே, அந்தப் பாவம் தான் என்னை வதைக்கிறது... என்ன, உங்களைத்தானே இங்கே வந்து பாருங்கள், யார் வந்திருக்கிறது என்று!'' என வாசல்புறம் நோக்கிக் குரல் கொடுத்தாள்.

மணிகண்டன் டார்ச் விளக்கை அடித்துக் கொண்டு அங்கே வந்து, ''யார்... யார்? அப்பாவா?'' என்று கேட்டுவிட்டு, தலையைக் குனிந்து கொண்டு ஒரு பெருமூச்சை வெளியேற்றி, ''என்னவோ நடந்தது நடந்து விட்டது. எதையும் பெருந்தன்மையாய் மன்னிக்க உங்களுக்கு தெரிந்திருக்கிறது... உள்ளே வாருங்கள்,'' என்றான்.

தோட்டத்தைக் கடந்து முன் பக்கமாகப் பங்களாவுக்குள் நுழைந்த ஜனார்த்தனம், ரேகா படுத்திருந்த அறையின் பக்கமாகத்தான் திரும்பினார். ஆனால் மணிகண்டன் அவரைத் தடுத்து, ''இப்போதுதான் தூங்கினாள். தூங்கட்டும். அப்பப்பா! தாத்தா தாத்தா என்று என்ன புலம்பல்!'' என்றான்.

''டாக்டர்கூட 'குழந்தை இவ்வளவு தவிப்பதால் நீங்கள் இதன் தாத்தாவை அழைத்து வந்துதான் தீரவேண்டும்' என்றார். உங்களை எங்கே தேடுவது? காலை முதல் நான் பட்டபாடு! நல்ல வேளை, வந்தீர்கள்,'' என்ற சாரதா, ''இப்படி ஹாலில் வந்து உட்காருங்கள், மாமா,'' என்று சோபாவைக் காட்டினாள்.

''எனக்கென்னவோ குழந்தையை முதலில் பார்த்துவிட்டால்தான் மற்றதிலே புத்தி செல்லும்,'' என்றார் ஜனார்த்தனம்.



''ஆண்டவன் புண்ணியத்தில் இப்போது தேவலை, அப்பா, அரை மணி முன்னால் டாக்டர் இஞ்செக்ஷன் போட்டார். நன்றாய்த் தூங்குகிறது. காலையில் பார்த்துக் கொள்ளலாம்,'' என்றான் மணிகண்டன்.

மனோ உள்ளேயிருந்து வந்து ''ஃப்ரிட்ஜிலிருந்து கூலாய் ஏதாவது தரட்டுமா?'' என்று கேட்டாள்.

''அப்பாவுக்கு அது ஒத்துக் கொள்ளாது, மனோ. ஹாட்டாகவே ஏதாவது எடுத்து வா,'' என்றான் மணிகண்டன்.

அதற்குள் சமையற்காரர் வந்து, ''சாப்பாடு சூடாய் ரெடியாய் இருக்கிறது. இலை போடட்டுமா?'' என்ற விசாரித்தார்.

திடீரெனக் கிடைத்த புதிய உபசாரத்தில் திக்கு முக்காடினார் ஜனார்த்தனம்.

## பதினெட்டு

ஜெம் க்ளிப் கோத்துக் கோத்து ஒருமார் நீளத்துக்கு மேல் மாலையாகிவிட்டது. டப்பாவும் காலி. ஒவ்வொன்றாகப் பிரித்துப் போட்டுக் கொண்டே தோட்டத்தை நோட்டமிட்டான் ஆளவந்தார்.

பல நாட்களுக்கு முன்பு தோட்டக்காரனுக்கு விடைகொடுத்துவிட்ட தோட்டம். தலைவாரப்படாத குடிசைக் குழந்தை போல புதரும் செடியுமாக இருந்தது.

சாளரத்தின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே பார்த்தபோது, பிற்பகல் வெய்யிலின் மந்தம் சூழ்நிலையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. நாள்பூரா வேலை செய்த களைப்புடன் வீடு திரும்புகிறமாதிரி வெய்யிலின் பிரகாசம் இறங்கிக் கொண்டிருந்தது.

கார் ஷெட்டின் கூரைமீது ஓர் அணில் குட்டி எம்பி எம்பி விழுந்து கொண்டிருப்பது அவன் கண்ணில் பட்டது. நாலடிதூரம் டகடகவென்ற ஓசையுடன் ஓடும். திரும்பி வந்து, தாழ்ந்தாற் போலிருந்த புளியங் கிளையொன்றைப் பிடிப்பதற்காக மேலெழும்பும். எட்டாது. கோபம் கொண்ட மாதிரி திரும்பிச் செல்லும். கொஞ்சம் போனதும் பழைய ஆசை கிளைக்க மீண்டும் அதே இடத்துக்கு வந்து, அதே போலவே எம்பிப் பார்த்துத் தோல்வியடையும். அது பிடிக்க நினைப்பது ஒரு பழுப்பு நிறப் புளியம்பழத்துக்காக என்று அவன் கண்டான். அணில் புளியம்பழத்துக்கு ஆசைப்படுமா என்ன என்று அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. கூடவே அதன் விடாமுயற்சி - அல்லது வீண் முயற்சியோ? - அவன் உதட்டில் புன்னகை வரவழைத்தது.

அறையை விட்டு வெளியே வந்தவன் ஷெட்டை அடைந்து, துரட்டியொன்றை எடுத்தான். அணில் குட்டிக்கு எட்டுகிற மாதிரி அந்த நுனிக்கிளையை வளைத்துப் பிடித்த அதே நேரம் -

வீட்டுக்குள் ஒரு மோட்டார் பைக் மிக வேகமாயும் மிகப் பதற்றமாயும் வருவது தெரிந்தது. வருகிறவரைர வரவேற்க அவன் செல்லவில்லை. தொடர்ந்து தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தான்.

மோட்டார் பைக்கைச் சரியாய்க்கூட நிறுத்தாமல், அந்த நபர் வேகமாக வந்தபோதுதான் அவனால் அவரைச் சரியாய்க் கவனிக்க முடிந்தது. நாற்பது வயதிருக்கும். தலையின் முன்பாதி மட்டும் நரைத்திருந்தது. ஸ்லாக்கும் பாண்ட்டும் அணிந்து, சற்றுக் குண்டாகக் காணப்பட்டார். ஆனால் உயரமானவராகையால் பருமன் தெரியவில்லை.

வரும்போதே ஆளவந்தாரைக் கவனித்து விட்டதால், ''டாக்டர் ஆளவந்தார்...?'' என்றார். அவர் குரலில் பதைப்பும் கவலையும் தென்பட்டன.



''வெறும் ஆளவந்தார்,'' என்று அவன் புன்னகை செய்தான்.

வந்தவர், ''ஐ நோ, ஐ நோ,'' என்றாரே தவிர, அவனுடைய மறுப்பினால் பின்னடைந்து விடவில்லை. ''டாக்டர், பழைய விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். தெரிந்துதான் வந்திருக்கிறேன். முன்பு நீங்கள் என் ஒய்ஃபுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கிறீர்கள் - அல்ஸருக்காக.''

''பெயர்?''

''அம்புஜம்,'' என்றார் அவர். ''ஆனால், அவள் இரண்டே இரண்டு நாள்தான் உங்களிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டாள். அதனால் அவளை உங்களுக்கு நினைவிருக்க நியாயமில்லை.''

''சொல்லுங்கள்.''

''ஒரு வருஷமாய் ஒரு தொந்தரவும் இல்லாமல் இருந்தாள். இப்போது மறுபடி பதினைந்து நாளாய் ரொம்பக் கஷ்டப்படுகிறாள். உணவு, தண்ணீர் எதுவும் வாயில் விட முடியவில்லை. எப்படியாவது உங்களை அழைத்து வரும்படி என்னை அனுப்பினாள். வேறு பல டாக்டர்களிடம் காட்டிவிட்டேன். நீங்கள் கொடுத்த மாதிரி எஃபெக்டிவான மருந்து யாருக்குமே தெரியவில்லை. ப்ளீஸ்...''

துரட்டியை ஷெட் சுவரில் சாய்த்துவிட்டு, கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான் ஆளவந்தார். ''மன்னிக்க வேண்டும். நான் யாருக்கும் வைத்தியம் செய்வதில்லை என்று உறுதி வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

''அது எனக்குத் தெரியும், டாக்டர்,'' என்றபோது, அந்த மனிதரின் குரல் தாழ்ந்திருந்தது. சட்டைப் பையிலிருந்து எதையோ எடுத்தார். ''கையோடு செக் புத்தகம் கொண்டு

வந்திருக்கிறேன். இல்லை, கேஷாகத்தான் வேண்டுமென்றால் அப்படியே செய்கிறேன். நீங்கள் என் மோட்டார் பைக்கில் வருவது நன்றாயிருக்காது. போய் டாக்ஸி அழைத்து வரட்டுமா?''

''உள்ளே வாருங்கள்,'' என்றான் அவன்.

''தாங்ஸ், தாங்ஸ்.'' அவர் மகிழ்ச்சி குரலில் வெளிப்பட்டது.

டிராயிங் ரூமை அடுத்திருந்த அறைக்கு அவரை அழைத்துச் சென்றான் அவன். மேஜையடியில் உட்கார்ந்து கொண்டு அவரையும் உட்காரச் சொன்னான். மேஜைக்குள்ளிருந்து ஒரு குறிப்புப் புத்தகத்தைப் புரட்டியபடி, ''என்ன மருந்துகள் கொடுத்தேனென்று உங்களுக்கு நினைவில்லையா?'' என்றான்.

''இல்லையே? அதனாலென்ன, டாக்டர்? இப்போது எப்படி இருக்கிறாள் என்று பார்க்க வாருங்களேன், போதும். பிறகு இப்போதைய நிலைமைக்குத் தகுந்தபடி மருந்து கொடுங்கள். என் ஒய்ஃப் என்ன சொல்கிறாள், தெரியுமோ? உங்கள் கையால் ஒரு மண்ணாங்கட்டியைக் கலக்கிக் கொடுத்தால்கூடத் தனக்குக் குணமாகிவிடும் என்கிறாள்...''

''நான் வருவது அப்புறம் இருக்கட்டும். முதலில் ப்ரிஸ்கிரிப்ஷன் எழுதித் தருகிறேன்.'' அவன் மேஜை மீது தேடினான் பேனாவுக்காக.

வந்தவர் சட்டெனத் தன் பால்பாயிண்ட் பேனாவை எடுத்துத் திறந்து கொடுத்தார்.

ஆளவந்தார் புன்சிரிப்புடன் ரொம்ப மெதுவாக ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி அவரிடம் கொடுத்தான்.

''சாப்பிடுகிற மருந்து மட்டும்தானா? அல்லது ஊசி...'' என்று கேட்ட வண்ணம் காகிதத்தைக் கண்ணுற்ற நபர், அடுத்த



வினாடியே திடுக்கிட்டவராக, ''என்ன டாக்டர் இது?'' என்று கூவினார்.

''ஏன்? 'டாக்டர் ராம்மோகன்' என்று எழுதித் தந்திருக்கிறேன். அவர்தான் இன்று ஸிடியிலேயே அல்ஸர் ஸ்பெஷலிஸ்ட். உங்கள் மனைவிக்காக இதைக் காட்டிலும் சிறந்த ப்ரிஸ்க்ரிப்ஷன் எழுதித் தரமுடியாது. டெலிபோன் நம்பரும் குறித்திருக்கிறேன்; எங்கேஜ்மெண்ட் செய்து கொண்டு பிறகு போங்கள்.''

''இல்லை... நீங்கள்...'' என்று அவர் ஆட்சேபித்துக் கொண்டிருக்கையில் ஒரு சிறிய கார் நுழைந்து வருவது தெரிந்தது. அது வேகமில்லாமல் மெதுவாக வந்ததைப் போலவே, அதை ஓட்டி வந்த இளைஞனும் அவசரம் காட்டாமல் காரிலிருந்து இறங்கினான். புஸ்ஸென்று மீசை இருந்ததே தவிர, யாரும் எதிர்ப்படாமல் இருந்தால் தேவலை என்பதுபோல் அவன் தயங்கித் தயங்கி நின்று பார்த்துவிட்டு, கூச்சத்துடன் உள்ளே வந்தான். ''மிஸ்டர் ஆளவந்தாரைப் பார்க்க வேண்டும்,'' என்று அறைக்குள் தலையை நீட்டி விசாரித்தான்.

''வாருங்கள். நான்தான்.'

''வந்து... பரவாயில்லை. அவரை அனுப்பி விட்டுக் கூப்பிடுங்கள். தனியாய்ப் பேசனும்...'' என்று அவன் சொன்னதைச் சிரமத்துடன் தான் கேட்க முடிந்தது. அவ்வளவு தாழ்வான குரல்.

முதலாமவர், ''நான் வெளியே போய் உட்கார்ந் திருக்கிறேன், டாக்டர்,'' என்று சொல்லிவிட்டு வெளியேற, இளைஞன் உள்ளே வந்து, ஆனால் உட்காராமல், கையைப் பிசைந்தபடி நின்று கொண்டேயிருந்தான்.

''டாக்டர், என் சிநேகிதன் ஒருவன் உங்களைப்பற்றிச் சொன்னான்... என்று அவன் ஆரம்பித்ததுமே, ''நான் டாக்டர் இல்லை,'' என்று ஆளவந்தார் மறுத்தான்.

''அது தெரிந்துதான் வந்தேன், டாக்டர்,'' என்றவன் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு, தலையைக் குனிந்து கொண்டு பேசினான். ''வெளியே சொல்லிக் கொள்ள முடியாத வியாதி எனக்கு... அதனால்தான் என் சிநேகிதன் 'அசல் டாக்டர்களிடம் போகாதே' என்று சொல்லி உங்கள் அட்ரஸைக் கொடுத்தான். சார், எப்படியாவது என்னை இந்த அவமானத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்...''

''டிராயிங் ரூமில் உட்கார்ந்திருங்கள்,'' என்று அவனை அனுப்பினான் ஆளவந்தார்.

சமையலறைக்குச் சென்றவன் அலமாரிகளைத் திறந்து பார்த்தான். இரண்டு எலுமிச்சம்பழம்தான் இருந்தது. தானே ஜூஸ் பிழிந்து சர்க்கரை சேர்த்துக் கலக்கி, இரு டம்ளர்களில் எடுத்துக் கொண்டு முன்னறைக்கு வந்தான்.

''சமையற்காரன் இல்லை. அதனால், இரண்டு ஸி.ஐ.டி. அதிகாரிகளையும் என்னால் சரியானபடி உபசரிக்க முடியாதிருக்கிறது. மன்னிக்க வேண்டும்,'' என்றபடி கிளாஸ்களை நீட்டினான்.

குபுக்கென்று இருவரும் ஒரே சமயத்தில் எழுந்து கொண்டார்கள். ''டாக்டர்... நீங்கள்...''

இருவரில் பெரியவரின் தோளைத் தட்டி, ''பதறாதீர்கள்,'' என்றான் ஆளவந்தார். ''யார் யாருக்கு முன்பு ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கிறேன் என்று - தலைவலிக்கு ஒரு தைலம் தந்திருந்தால்கூட - பெயர்களை அன்றே குறித்து வைத்திருந்தேன். அம்புஜம் என்ற பெயரை அதில் காணோம்...''

''டாக்டர்... சார்...''

''ஒரு அட்வைஸ்: உங்கள் பால்பாயிண்ட் பேனாவை இவ்வளவு பகிரங்கமாய் யாருக்கும் தராதீர்கள். 'ஸிடி போலீஸ்



க்ரைம் பிராஞ்ச்' என்று அதில் போட்டிருக்கிறது.'' அவருடைய குழப்பத்தையும் தோல்வியையும் பொருட்படுத்தாதவனாக, இளைஞனின் பக்கம் திரும்பினான். ''நீங்கள் ரொம்பப் புதிக போலிருக்கிறது. உங்கள் பொய் மீசை சரியாய் ஒட்டவில்லை என்பது மட்டுமல்ல, 'நான் சரியாய்த்தான் நடிக்கிறேனோ?' என்று கேட்கிற மாதிரி அடிக்கடி சீனியரைப் பார்த்துக் கொண்டீர்களே, அதுவும் தப்பு...''

இருவரும் கோபமாக வெளியேறுகையில் அவன் சிரித்துக் கொண்டே சொன்னான்: ''ஆனால், ஒன்று, நண்பர்களே! நீங்கள் எனக்காக ரகசிய விசாரணைகள் செய்வதும் கண்ணி வைப்பதுமாகக் கஷ்டப்பட வேண்டாம். நான் தலைமுழுகியாகி விட்டது என் பழைய தொழிலுக்கு. நிச்சயமாக நம்பலாம்.''

மோட்டார் பைக்கும் அதன் பின்னே காருமாகத் தெருவில் இறங்கி மறைய, அவன் பழையபடி கார் ஷெட்டை அடைந்து, அண்ணாந்து பார்த்தான். இன்னும் அந்த அணில் தாவிக் கொண்டுதான் இருந்தது. துரட்டியை எடுத்து வளைத்தபோது, உடனே அது பற்றிக் கொண்டு, கிளைகளின் வழியே குடுகுடுவென்று ஓடி, புளிய இலைகளின் அடர்த்தியில் மறைந்துவிட்டது. அவன் மெல்லச் சிரித்துக் கொண்டே தரையைப் பார்த்தவாறு நின்றிருந்தான். கால் பெருவிரல் தரையில் கீறிக் கொண்டிருந்தது. தன்னையும் அறியாமல் 'ஏ-என்-யு-' என்ற ஆங்கில எழுத்துக்களைக் கால் கீறுவதைக் கவனித்து அவனுடைய புன்னகை விரிந்தது. துரட்டியை வீசி எறிந்துவிட்டு, ஒரு திமர் உற்சாகத்துடன் வீட்டுக்குள் நுழைந்தான். வேகமாய் டெலிபோனைப் பற்றி, கிறுகிறுவென்று டயலைச் சுழற்றினான்.

''அனுபமா ஹியர்,'' என்று குரல் வந்தது.

''ஆளவந்தார் பேசுகிறேன் - டாக்டர் ஆளவந்தார்,'' என்றான் வேண்டுமென்றே.

சில வினாடிகளுக்கு நிசப்தம் நிலவியது. பிறகு: ''பிராக்டிஸை ஆரம்பித்து விட்டீர்களா? சந்தோஷம், டாக்டர். ஆனால் அத்தைக்கு இப்போது நல்ல குணம். தங்கள் சர்வீஸ் தேவையில்லாமல் போய்விட்டது.''

''அப்படியா? எனக்கும் சந்தோஷம். ஆனால் நான் கூப்பிட்டது உனக்குத் தாங்ஸ் சொல்வதற்காக.''

''எதற்கு நன்றி?''

''இரண்டு விருந்தாளிகள் வந்திருந்தார்கள் - போலீஸ் அதிகாரிகள் - நான் குற்றம் செய்கிறேனா என்று ரகசியமாகத் துப்பறிந்து கொண்டு போவதற்காக.''

''யாராவது வேண்டாதவர்கள் எழுதிப் போட்டார்களோ என்னவோ?''

அவன் நகைத்தான். ''தற்சமயம் எனக்கு வேண்டாதவர் ஒருவர்தான் உண்டு. அவர் அழகானவர். இளம் வயது. கொஞ்சம் சுர்ரென்று கோபம் வரும். ஆனால் அதுவும் ஒரு தனிக் கவர்ச்சி. பெயர் 'ஏ'யில் ஆரம்பிக்கும். அவர்தான் போலீசைத் தூண்டி விட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?''

''எதுவும் நினைக்கவில்லை.''

''சரி, அத்தைக்கும் குணமாகிவிட்டது. நானும் போலீசில் மாட்டிக் கொள்ளவில்லை. இரண்டையும் செலிப்ரேட் செய்கிற மாதிரி நாம் சந்தித்தால் என்ன?''

''அத்தை தூங்கிக் கொண்டிருக்கிறார். நான் எங்கும் வருவதற்கில்லை. ஸாரி.''



''நாம் சந்திக்க வேண்டும் என்று தானே சொன்னேன்? உன்னையா வரச் சொன்னேன்? என்னை வரவேற்க ரெடியாய் இரு. ஓ.கே?''

'ஓ.கே' என்று அவள் பதில் கூறவில்லை. அவளுடைய கோபம் இன்னும் பூராவாய்த் தணியவில்லை என்று ஊகித்துக் கொண்டவனாக, அவன் காரை எடுத்தான். காற்றிலே ஒரு சீட்டி கலந்தது உல்லாசமாக.

''நீங்கள் வரப்போகிறீர்கள் என்று அனுபமா சொன்னாள். உடனே எழுந்து ஹாலுக்கு வந்து உட்கார்ந்து கொண்டுவிட்டேன்,'' என்று அனுபமாவின் அத்தை கூறினாள், போர்ட்டிகோவில் காரை அவன் நிறுத்திவிட்டுப் படியேறியதுமே. நோயாளியானாலும், குணமாகிக் கொண்டுவரும் அறிகுறி அவள் முகத்தின் மலர்ச்சியில் தென்பட்டது.

''முப்பது வயசு மாதிரி இருக்கிறது இப்போது உங்களைப் பார்க்க,'' என்று பாராட்டிவிட்டு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டான் அவன்.

தேனீர்க் கோப்பைகளைத் தட்டில் வைத்து எடுத்து வந்த அனுபமா, ''அவருடன் நீங்கள் பேசவே கூடாது, அத்தை! எவ்வளவு கெஞ்சினேன் தெரியுமா? ட்ரீட்மெண்ட்டுக்கு வரமாட்டேன் என்றார்!'' என்றாள்.

''இருந்தாலும் இவரால்தான் என் ஆஸ்துமா குணமாயிற்று,'' என்றாள் அத்தை.

''இவராலா! சரிதான்! மருந்து தர வேண்டாமாம், சும்மா உங்களைப் பார்த்தால் கூடப் போதுமாம் என்று மன்றாடினேன், அத்தை! இந்த வீட்டுப் படியைக்கூட மிதிக்கமாட்டேன் என்றார். நல்லவேளை, வேறு எந்தெந்த டாக்டர்களோ உங்களைக் காப்பாற்றினார்கள். இப்போது நீங்கள் குணமானது தெரிந்த பிறகு வந்திருக்கிறார்.''

அத்தை புன்னகை புரிந்தாள். ''இவர் முகத்தைப் பார்த்தால் போதும் என்று சொன்னேனில்லையா? பார்த்துக் கொண்டுதான் மருந்து சாப்பிட்டேன்,'' என்றவாறு எழுந்தவள், ''வா,'' என்று கூறி அவளையும் ஆளவந்தாரையும் தன் அறைக்கு அழைத்துச் சென்று, ''அந்த அலமாரியைத் திறந்து பார்,'' என்றாள்.

கதவின் உட்புறத்தில் ஆளவந்தாரின் பழைய போட்டோ ஒன்று ஒட்டப்பட்டிருந்தது.

''வேறு டாக்டரின் மருந்தானால் என்ன? இந்த டாக்டரைப் பார்த்துக் கொண்டுதான் சாப்பிட்டேன். என் பிள்ளை மாதிரி - முகத்தைப் பார்த்தால் எந்த வியாதியும், எந்தக் கவலையும் பஞ்சாய்ப் பறந்துவிடும்!''

அனுபமாவின் முகத்துக்கு நேர் எதிரே குனிந்து, உற்றுப் பார்த்தான் ஆளவந்தார். ''அப்பா! சரியான எஃகு மூக்குத்தான் உனக்கு! கொஞ்சம்கூட உடையக் காணோமே!''

அனுபமாவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. ''போங்கள் அத்தை! என்னை இப்படிக் காலைவாரிவிட்டு விட்டீர்களே?'' என்றாள்.

''அத்தை! மருந்தை நான் கொடுத்தால் என்ன, என் படம் கொடுத்தாலென்ன? பீஸ் கட்டாயம் தந்தாக வேண்டும்,'' என்றான் அவன்.

''ஓ! எது வேண்டுமானாலும்!''

''ஒரு மணிநேரம் அனுபமாவை அழைத்துக் கொண்டு வெளியே போகப் பர்மிஷன்.''

''தாராளமாய்.''

அனுபமா சட்டெனக் குறுக்கிட்டு, ''என்ன அநியாயம்! என் ஒருத்திக்கு இதிலே வாய்ஸே இல்லைபோல் நீங்களே தீர்மானிப்பதா?'' என்றாள்.



''உன் வாய்ஸைக் கேட்பதற்காகத்தான் கூப்பிடுகிறேன். பேசலாம், வா,'' என்று காரை நோக்கி நடந்தான் அவன்.

வெகு நேரம் வரை மௌனத்திலேயே கார் ஓடிக்கொண்டிருந்தது.

எதையோ நினைத்துக் கொண்டவனாக அவன் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தான். சாலையின் ஓரமாகக் காரை நிறுத்திவிட்டு, அந்தக் காகிதத்தைச் சுக்கலாகக் கிழித்து வெளியே எறிந்தான்.

''என்ன அது?'' அனுபமாவினால் கேட்காதிருக்க முடியவில்லை.

''என் வீட்டை விற்பதென்று தீர்மானித்து, பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கவிருந்தேன். இனி வேண்டாமென்று தோன்றிவிட்டது.''

''எதனால்?''

''என் பக்கத்தில் ரொம்ப நெருக்கமாக, சந்தன நிறமும் சந்தன மணமுமாக, தலையை ஒயிலாகச் சாய்த்து, கண்களை அழகாகச் சுழற்றி, உதட்டைக் கவர்ச்சியாய்த் திறந்து, 'எதனால்?' என்று கேட்கிறாளே, அந்தப் பெண்ணினால்.''

''அந்தப் பெண் அப்படி என்ன செய்துவிட்டாள், உங்கள் மனம் மாறும்படி?''

''சொல்லட்டுமா அனுபமா?'' என்று தாபம் நிறைந்த குரலில் பேசினான் அவன். ஸீட்டின் முதுகிலே நீண்டிருந்த அவன் கை, அவளுடைய தோளைத் தொட்டு, புடவையின் மடிப்பை நெருடிக் கொண்டிருந்தது.

''உண்மையாகத்தான் சொல்கிறேன், அனுபமா. என் சொத்துக்களைப் பலபேர் ஏப்பம் விடப் போகிறார்கள் என்று தெரிந்தது. போனால் போகட்டும் என்று விட்டு விட்டு, எனக்கென்று இருப்பவைகளையும் விற்றுத்

தலைமுழுகிவிட்டு, பொறுப்பில்லாமல் ஊர் சுற்றலாம் என்று இன்று காலைவரையில் தீர்மானித்திருந்தேன். இப்போது எனக்குத் திடீரென்று உலக ஆசைகள் வந்துவிட்டது. என் உடைமைகளைக் காப்பாற்றிக் கொள்ளப்போகிறேன். நியாயமான பிஸினஸ் என்ன உண்டோ அதை ஆரம்பித்து, வெற்றிகரமாய் நடத்தி, நானும் மனிதன்தான் என்று நிரூபிக்கப் போகிறேன்...''

அவனுடைய வேகத்தையும் ஆர்வத்தையும் பேச்சையும் கேட்டு அவளுக்குப் பிரமிப்பு ஏற்பட்டது. அவன் அப்படி இருந்து பார்த்ததில்லை யாதலால் சிறிது அச்சமும் ஏற்பட்டது. அவனுடைய வேகத்தைச் சிறிது மட்டுப்படுத்த எண்ணியவளாக, வேடிக்கையாய், ''ஐயோ பாவம்! எத்தனை பேர் உங்களுடைய நன்கொடைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ? அவர்களுக்கெல்லாம் நெற்றியில் சாத்தப் போகிறீர்களா?'' என்றாள்.

''யாருக்கும் நான் வாக்களிக்கவில்லை. ஒரே ஒரு ஸ்கூல்தான்,'' என்றவாறு காரை ஸ்டார்ட் செய்தான் ஆளவந்தார். ''ஒரு வாரம் முந்தி அங்கே போயிருந்தேன். நன்றாய் நடத்துகிறார்கள். இன்று வருவதாய்ச் சொல்லி யிருக்கிறேன். ஒரு சிறு தொகைக்கு செக் கொடுக்க மட்டும் தயவு செய்து அனுமதி கொடு. என்ன?''

''சாங்ஷன்ட்,'' என்றாள் அவள் சிரித்துக் கொண்டே.

மணியடித்து, அப்போதுதான் குழந்தைகள் கும்பல் கும்பலாய் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். காரை நிறுத்திய இடத்தில், ஒரே ஒரு சிறுமி மட்டும் மூக்கை உறிஞ்சிக் கொண்டு நின்றிருந்தாள்.

''ஹலோ! உன் டாடி வரவில்லையா?'' என்று ஆளவந்தார் அவள் கையைக் குலுக்கினான்.

''தெரிந்த குழந்தையா என்ன?'' என்று அனுபமா திகைத்தாள்.



''அழுகிற குழந்தைகள் எல்லாரும் தெரிந்த குழந்தைகளே,'' என்று விளக்கியவன், ''என்ன பாப்பா, வீட்டுக்குப் போகணுமா? டாடி வரவில்லையென்று பயப்படுகிறாயா?'' என்று மறுபடி கேட்டான்.

''டாடி வருவார். தாத்தாதான் வரமாட்டார்,'' என்று அந்தக் குழந்தை சிணுங்கினாள். ''அஞ்சாறு நாளாய் வந்தார்... இன்னிக்கு வரமாட்டார்...''

''ஏன், ஊருக்குப் போயிருக்கிறாரா?''

அந்தச் சிறுமியின் முகத்தில் ஆத்திரம் கொப்புளித்தது. ''ஊருக்குப் போகல்லே. அவரைத் தொரத்திட்டாங்க எங்க அப்பாவும் அம்மாவும்,'' என்றாள் பல்லைக் கடித்துக் கொண்டு. அவள் கண்கள் சிவப்பேறி நின்றன.

அவளைத் தூக்கி எடுத்துக் கொண்டு கண்ணைத் துடைத்தான் ஆளவந்தார்.

## பத்தொன்பது

குழந்தைகளின் தேகத்துக்கே உரிய நறுமணத்தை ரசித்தவண்ணம், ரேகாவின் கண்களின் ஈரத்தைத் துடைத்து விட்டான் ஆளவந்தார். ''தாத்தாவைத் துரத்திவிட்டார்களா? அடடா! ஏன்? என்ன செய்தார்?''

அனுபமாவுக்கு அவனுடைய பரிவு வேடிக்கையா யிருந்தது. ''நன்றாய்த்தான் இருக்கிறது, நீங்கள் ஊர்க் குழந்தைகளுடன் கொஞ்சுகிற அழகு!'' என்று சிரித்தாள்.

''என்ன செய்ய? சொந்தக் குழந்தை வருகிற வரையில் ஊர்க் குழந்தைகளைத்தான் கொஞ்ச வேண்டும்,'' என்று அவளுக்குப் பதிலளித்தவன் ''ஏம்மா, என்ன பண்ணினார் உன் தாத்தா?'' என்று திரும்பவும் கேட்டான்.

''எனக்குத் தெரியாது,'' என்றாள் சிறுமி. ''என்னவோ கேட்டார் அப்பா. தாத்தா மாட்டேன்னார். அப்படின்னா வீட்டிலே இருக்க வேண்டாம்னு அப்பா சொன்னார். சரி, நான் போறேன்னு போயிட்டார் தாத்தா. நான் அவர் காலைக் கட்டிக்கிட்டு அழுதேன். அம்மா என்னைத் தரதரன்னு உள்ளே இழுத்துக்கிட்டுப் போயிட்டாள்.''

''த்லொ, த்லொ. தாத்தாவோட பேர் என்ன?''

''தாத்தா.''

ஆளவந்தார் வாய்விட்டுச் சிரித்தான். ''அப்படியா? தாத்தா பேர் தாத்தா. உன் பேர் என்ன? பாப்பாவா?''

''இல்லை. ரேகா.''

''ரேகா! பரவாயில்லையே? இப்ப எத்தனை படங்களில் நடிக்கிறீர்கள்?'' என்று அவன் கேட்டான். அவள் புரிந்து கொள்ளவில்லை. ''விடுங்க,'' என்று கூச்சத்துடன் சொல்லி, அவன் தோளினின்றும் இறங்கிக் கொண்டாள்.

''தாத்தா வந்துவிடுவார். அழக்கூடாது. எவ்வளவு பெரிய பெண் நீ! பால் குடிக்கிற குழந்தை மாதிரி அழலாமோ?'' என்றான் அவன். ''அடேயப்பா! உன் புத்தகப் பை எவ்வளவு பெரியதாயிருக்கிறது! நிறையப் படிப்பாயா?''

அவள் தன் பையைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டு, ''அதிலே ராஜு இருக்கான்,'' என்றாள்.

''ராஜுவா?''

''ராஜுவைத் தெரியாது?'' என்றவள் பைக்குள்ளிருந்து அந்தப் பொம்மையை வெளியே எடுத்துக் காட்டினாள்.

அவன் அதை வாங்கிக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்தான். ''அட! பிரமாதமான சோல்ஜராக இருக்குதே? நிறைய வீர சக்கரம், பரம வீர சக்கரம் மெடல் எல்லாம் வாங்கியிருப்பான் இல்லை?''



ரேகாவின் முகம் பெருமையினால் பளபளத்தது.

''ஆமாம். பெரிய்ய சோல்ஜர்.''

''ஆனால் பாவம், ஒரு கைதான் இல்லை. பாகிஸ்தான் வார்லே போய்விட்டது போலிருக்கிறது?''

அவள் தலையாட்டிவிட்டு, ''தாத்தா சரி பண்ணித் தரேன்னு சொல்லியிருந்தார்...'' என்றாள்.

''நான் செய்து தருகிறேன்,'' என்று ஆளவந்தார் சொல்லிக் கொண்டிருக்கையில் கார் டிரைவர் போல் யூனிபாரம் அணிந்த ஓர் ஆள் பதற்றத்துடன் அவர்களிடம் வந்தான். ''ரேகாம்மா, நீ இங்கேயா இருக்கிறே? நான் எங்கெல்லாம் தேடறேன். வாம்மா, வூட்டுக்குப் போகலாம்.''

''டாடி வரல்லே?'' என்றாள் அவள்.

''இன்னைக்கு வரமாட்டார். வூட்டிலே ஒரே ரகளை. அம்மா அழுதுக்கினு இருக்கிறாங்க. வா, வா,'' என்று அவன் ரேகாவுடன் கிளம்பினான்.

போகிறவனைத் தடுத்து, ''ஏம்பா என்ன விஷயம்? என்ன ரகளை?'' என்று ஆளவந்தார் கேட்டான்.

''இந்தக் குழந்தையோட அப்பா ஹார்பரிலே ஆபீசர் சார்...'' அவன் குரலைத் தணித்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான். ''அங்கே ஏதோ லஞ்சக் கேஸ். அவரை ஸஸ்பெண்ட் பண்ணியிருக்கிறாங்க. எல்லாம் பெரிய இடத்து சமாசாரம். நமக்கு ஏனுங்க வம்பு?'' என்றபடி அவன் ரேகாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

''பாவம், ஒரு சின்னக் குழந்தையின் வாழ்க்கையில் எத்தனை பிரச்னைகள்!'' என்றான் ஆளவந்தார், அவர்கள் செல்வதையே பார்த்தவாறு.

''அதற்கு ஏற்கெனவே இருக்கிற பிரச்சினைகள் போதாதென்று உங்களாலே வேறே ஒன்று!'' என்றாள் அனுபமா.

''என்னாலா!''

''ஆமாம். உங்கள் கையில் என்ன இருக்கிறது பாருங்கள், அந்தக் குழந்தையின் பொம்மை.''

''அடடே!'' என்றவன் அவர்களைக் கூப்பிட நினைப்பதற்குள் கார் கிளம்பிவிட்டது. தன் ப்ரீஃப்கேசுக்குள் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டான். ''அந்தத் தாத்தா செய்யாததை நானாவது செய்து குழந்தையிடம் சேர்ப்பிக்கிறேன்.''

அனுபமா எதுவும் பேசவில்லை. அவனைப் பார்த்துக் குறும்புத்தனமாகப் புன்னகைத்தாள்.

''என்ன சிரிக்கிறாய்?''

''ஒன்றுமில்லை.''

''சும்மா சொல்லு.''

''பத்தே நிமிடத்துக்குள் நீங்கள் கிடுகிடுவென்று குடும்பஸ்தர் மாதிரி ஆகிவிட்டதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் கையில் பையும் டின்னும் கொடுத்து, ரேஷன், மண்ணெண்ணெய், கறிகாய் எல்லாம் வாங்கி வாருங்கள் என்று சொல்லலாம் போலிருக்கிறது!''

''ரெடி!'' என்றான் அவன். ''அதெல்லாம் வாங்கி வந்து கொடுப்பதோடு நிற்பேனென்று நினைத்தாயா? உன் பக்கத்தில் உட்கார்ந்து அரிசியில் கல் பொறுக்குவேன். கறிகாய் நறுக்குவேன். எதெதில் மண்ணெண்ணெய் ஊற்றச் சொல்கிறாயோ, அதிலெல்லாம் ஊற்றுவேன்.''

''ஐடியல் பார்ட்னர்!'' என்று அவள் சிரித்தாள். ''தயவு செய்து நாம் இன்னும் எத்தனை நேரம் இங்கே நின்று கொண்டிருக்க வேண்டும் என்பதைச் சொல்கிறீர்களா?''

''ஸாரி! ஐந்து நிமிடம்,'' என்றவன், தலைமையாசிரியரின் அறையில் நுழைந்து, பள்ளிக்கூடத்துக்கு



நன்கொடையாக இருபதாயிரம் ரூபாய்க்கான செக்கைத் தந்து, அவர் நன்றியைப் பெற்றுக்கொண்டு காருக்குத் திரும்ப வந்ததும் கேட்டான்: ''உன்னை வீட்டிலே விட்டு விடட்டுமா?''

''விட்டுவிட்டு?''

''அம்பத்தூரில் ஒரு கல்யாண ரிசெப்ஷன். ஒரு முன்னாள் நோயாளி, இந்த முன்னாள் டாக்டரை ஞாபகம் வைத்துக் கொண்டு தன் பெண்ணின் திருமணத்துக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார்.''

''நானும் வருகிறேன். என்னவோ தெரியவில்லை. இன்றைக்கு உங்களை ஐந்து நிமிடம்கூடப் பிரிந்திருக்க மனம் வரவில்லை.'' என்று கூறுகையில் அவள் முகம் லஜ்ஜை காரணமாகப் பின்னும் அழகுற ஒளிர்ந்தது.

''இன்றைக்கு நரி முகத்தில்தான் விழித்திருக்கிறேன்,'' என்ற வண்ணம் காரைக் கிளப்பினான் அவன். ''சலோ அம்பத்தூர்!''

''நோ! நடுவே இரண்டு நிமிடம் என் வீடு. டிரெஸ் மாற்றிக் கொள்ளணும்.''

அவன் அவளை காலோடு தலை பார்த்தான். ''ஏன், வனதேவதை மாதிரி ஜொலிக்கிறாயே! இதற்கு மேல் என்ன?''

''இது சும்மா ஷாப்பிங் டிரெஸ். ரிசெப்ஷனுக்குப் போவதென்றால் வேறுவிதமாய் இருக்க வேண்டாமா?''

''மை காட்! நான் என்னவெல்லாமோ தெரிந்து கொள்ள வேண்டும் போலிருக்கிறதே?''

''என் அத்தையிடம் சொல்லி ஒரு தேதி நிச்சயம் பண்ணுங்கள். அன்றிலிருந்து பாடம் ஆரம்பிக்கிறேன்!''

அவள் சொல்வதன் உள்ளர்த்தம் என்னவென்பதைப் புரிந்து கொண்டபோது அவனுக்குத் தேகத்தினுள் பரவசமானதொரு போதை பரவியது. வீட்டை அடைந்ததும்,

அவள் ஷவர் பாத்தில் குளித்த பின்னர், ஒரு மின்னல் நேரத்துக்குத் தன் பொன்மேனியைக் காட்டிவிட்டு மறைந்தபோது, அது தற்காலிகமான போதையல்லவென்பதையும், நிரந்தரமாகத் தன் வாழ்வில் இணைந்திருக்கப் போகும் ஓர் அம்சம் என்பதையும் அவன் உணர்ந்தான்.

கையில் எடுத்திருந்த டைம் பத்திரிகையை ஷெல்பில் திரும்ப வைத்தவன், ''பெண்களின் டிரெஸ்ஸைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னாயல்லவா, அனுபமா?'' என்றான்.

பாத் டவலை இன்னும் இறுக்கமாகப் போர்த்துக் கொண்டு, ''ஊகூம், இங்கேயா வழி மறிப்பது?'' என்று சிணுங்கினாள் அவள்.

''எந்தெந்த டிரெஸ்ஸுக்கு என்னென்ன பெயர் என்று தெரிந்து கொள்ளலாமென்று பார்க்கிறேன்,'' என்றான் அவன் விடாப்படியாக.

''அதற்காக நீங்களொன்றும் என் பின்னால் வரவேண்டாம்.''

''உன் பின்னால் வரக்கூடாதா? தமிழ் இலக்கணத்தையே மாற்றுகிறாயே?''

''இலக்கணமா?''

''ஆமாம் 'அ'வுக்குப் பின்னால்தானே 'ஆ' வரும்? அனுபமாவுக்குப் பின்னால்தானே ஆளவந்தார் எப்போதும் இருப்பான்?''

''ஆகா! என்ன பிரமாதமான ஆராய்ச்சி!'' என்று உதட்டைச் சுழித்துச் சிரித்தாள் அவள்.

**அ**ம்பத்தூரின் பெரிய சாலையில் புதிதாகக் கட்டப்பட்ட பெரிய வீடு அது. சுவர்களை ஒட்டி நின்றால் டிஸ்டெம்பரின் மணத்தைக்கூட நுகர முடியும். ரிசெப்ஷன் ஹால் நிரம்பி வழிந்து கொண்டிருந்த அந்த நேரத்திலும்



இரண்டொரு எலக்ட்ரீஷியன்கள் இங்குமங்கும் தொற்றிக் கொண்டு விளக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்தனர். மேடையில், மெல்லிசைக் குழுவின் வாத்தியங்கள் உற்சாகத்துடன் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தன.

கிரஷ் புட்டிகளும் பழக்கூடைகளும் வெற்றிலைக் குவியல்களும் பிரளயமாய்க் கலந்து கிடந்த ஸ்டோர் ரூமை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான் மருதய்யன். அவன் வேலை செய்துகொண்டிருந்த பாக்டரி முதலாளியின் வீட்டுத் திருமணம் அது. அங்கிருந்தவாறே வாசலில் யார் யார் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தபடி இருந்தவன் -

திடீரென்று ஒரு துள்ளல் துள்ளினான். கண்ணைக் கசக்கிவிட்டுக்கொண்டு பார்த்தான். ''ஆளவந்தார்! எங்க ஆளவந்தார் சார்!''

அவனுடன் கூடப் புட்டிகளை எண்ணிக் கொண்டிருந்த மற்றவன். ''யோவ்! கணக்கைக் கவனிய்யா? நூத்தி முப்பத்தெட்டு பாட்டில் கோக், தொண்ணூத்தேழு லிம்கா.. யோவ்! உன்னைத்தான் ஐயா!''

''அட சும்மா இரய்யா!'' என்று அவனை அப்பால் தள்ளிவிட்டு ஆளவந்தாரிடம் ஓடினான் அவன். ''சார்! நல்லாயிருக்கீங்களா சார்? கண்ணாலம்கூட ஆயிட்டுதா? என்னைத் தெரியல்லே? மருதய்யன் சார்!'' எந்று அவர்கள் முன்னால் போய் நின்றான். ஓட்டமாய் ஓடிவந்தபோது அவனால் தள்ளப்பட்டவர்களும் இடிபட்டவர்களும் மிதிபட்டவர்களுமாகப் பலர், 'யாரடா அவன் மடையன்!' என்று வாய்விட்டுத் திட்டுவது அவன் காதில் விழவில்லை.

ஆளவந்தாரின் விழிகளில், அவனை அடையாளம் தெரிந்துகொண்ட மகிழ்ச்சி ஒரே ஒரு கணத்துக்குத் தென் பட்டது. அதற்குள் கல்யாண வீட்டுக்காரர்கள் அவனையும் அனுபமாவையும் முன்வரிசைக்கு அழைத்தார்கள்.

மருதய்யனுக்கு, தான் எங்கிருக்கிறோம் என்பதோ, என்ன நிலைமையில் இருக்கிறோம் என்பதோ, என்ன உரிமை இருக்கிறது என்பதோ எதுவும் நினைவுக்கு வரவில்லை. ஆளவந்தார் வந்திருக்கிறார்! ஆளவந்தார் வந்திருக்கிறார்! அது ஒன்றுதான் அவன் மனத்தில் வியாபித்திருந்தது.

நாகுக்கு சிறிதும் இல்லாத உரத்த குரலில், ''நீங்க உட்காருங்க சார், இதோ ட்ரிங்க் எடுத்து வர்றேன்,'' என்று அறிவித்துவிட்டு, ஸ்டோர் ரூமுக்கு ஒரே பாய்ச்சலில் திரும்பினான். எரிச்சலுடன் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த நபரை, 'நகரய்யா!' என்று தள்ளினான். இரண்டு கோக் புட்டிகளை கையில் எடுத்துக் கொண்டான். ''ஒப்பனர் எங்கே? ஸ்டிரா இல்லே? ஸ்டிரா எங்கேய்யா?'' என்றான்.

அந்த ஆளுக்குக் கோபம் உச்சத்தை அடைந்தது. ''யோவ்! நானும் அப்போ பிடிச்சு போனால் போவுதுன்னு பார்க்கிறேன். அதிகாரம் தூள் பறக்குதே! வையய்யா அந்த பாட்டில்களைக் கீழே!'' என்றான்.

''இப்ப ஒப்பனர் கொடுக்கறியா, இல்லே, உன் தலையிலேயே அடிச்சு உடைக்கட்டுமா? நான் குடிக்கிறதுக்காகக் கேட்கலேய்யா! எங்க சார், ஆளவந்தார் வந்திருக்கிறார்!''

''ஆளவந்தாருமாச்சு, கீளவந்தாருமாச்சு! வைய்யய்யா பாட்டிலை!'' என்று அவைளைப் பறிக்க முயன்றான் அந்த ஆள். அவ்வளவுதான். ஒரே உதையில் அவன் காலை இடறிவிட்டான் மருதய்யன். அவன் விழுந்த இடத்தில் பல எவர்சில்வர் டம்ளர்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததால் அவை பெரும் ஓசையுடன் மடமடவெனச் சரிந்தன. விழுந்த ஆள் எழுந்து வருவதற்குள் மருதய்யன் புட்டிகளுடன் புறப்பட முனைந்து, எதிரே வந்தவர்களுடன் மோதி, இரண்டொருவரைப் பலாத்காரமாகத் தள்ளி -



மூன்று பேர் தேவைப்பட்டது அவனை அடக்கி மடக்க. ''அதோ வந்திருக்கார் பாருங்க, ஆளவந்தார். அவருக்காக எடுத்து வந்தேங்க,'' என்று அவன் சொன்னதை யாரும் நம்பத் தயாராயில்லை. ஆளவந்தாரின் முன்னே அவனைக் கொண்டுபோய் நிறுத்தினான் ஒருவன்.

''இவன் உங்க பேரைச் சொல்கிறான்.''

ஆளவந்தார் அவனை ஏற இறங்கப் பார்த்தான். அவன் உதட்டின் ஓரத்தில் ஒரு புன்னகை படர்ந்தது. ''ஏதாவது ஒரு பேரைச் சொல்ல வேண்டியதுதானே? ஏதோ பசிக்காக எடுத்திருப்பான். பாவம், விட்டுவிடுங்கள்.''

''சார்! என்னைத் தெரியல்லே உங்களுக்கு? மருதய்யன் சார். உங்க மருது.''

அவனைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் அவன் முதுகில் ஒரு குத்து விட்டார். ''இவர் பெரிய மினிஸ்டர்! இவரைத் தெரியாமல் இருக்குமோ? சீ, போடா நாயே! உன்னைத் தெரியும் என்றால் தெரியும் என்று சொல்லமாட்டாரோ? சார் சொல்கிறாரே என்று போலீசில் ஹாண்ட் ஓவர் பண்ணாமல் விடுகிறோம். நடடா!''

திக்பிரமை அடைந்தவனாக, கண்டதையும் கேட்டதையும் பட்டதையும் நம்ப முடியாதவனாக, கல்யாண வீட்டுக்கு நாலு வீடு தள்ளி, இருட்டின் அணைப்பில் நின்றிருந்தான் அவன். அவமானமும் அடியும் அவனைச் சுட்டெரித்தன. எப்படித்தான் நம்மை மறந்து போனார்? ஒருவேளை இவர் ஆளவந்தாரே இல்லையோ?...

## இருபது

மருதய்யனுக்கு எல்லாப் புலன்களுமே செயலற்று மரத்துவிட்டன. தள்ளாடி நடந்தான். விஷயம் தெரியாத சிலர், கல்யாண வீட்டில் அவன் ஏதோ சுருட்டப் பார்த்து அகப்பட்டுக் கொண்டான் போலிருக்கிறது என்று எண்ணி அவனைப் பார்த்துத் தலையை அசைத்துக் கொண்டே சென்றார்கள். அதை உணர்கையில் அதிர்ச்சி ஆத்திரமாக மாறியது அவனுக்கு. 'ஆளவந்தார் சார்! நிஜம்மா சொல்லுங்க. உங்களுக்கு என்னை யாருன்னு தெரியல்லே?' என்று மீண்டும் மீண்டும் தன்னுள் புலம்பிக் கொண்டான்.

பாக்டரியில் வேலை கிடைத்து நாலு நாளாகவில்லை. அதற்குள் முதலாளி வீட்டுக் கல்யாணத்தில் ரகளை செய்துவிட்டதால் இனி வேலைக்கும் தலையை வலிக்கப் போகிறது...

ஒரு டீ குடித்தால் நல்லது என்று எண்ணியபடி அவன் நடப்பதற்கும், சர்சர்ரென்று டீ ஆற்றப்படும் சத்தம் அவனை நிறுத்துவதற்கும் சரியாயிருந்தது.

''ஒரு சிங்கிள் போடு,'' என்றான். கல்யாண வீட்டிலிருந்து இந்த டீக்கடை நாலைந்து தெரு தள்ளியிருந்த போதிலும்அ தான் அங்கே வெளியே தள்ளப் பட்டதைப் பார்த்தவர்கள் யாரேனும் இங்கே வந்திருக்கக் கூடுமோ என்று அஞ்சியவனாகப் பார்வையை நிமிர்த்தாமலே உட்கார்ந்திருந்தபோது, டீ கிளாஸுடன், ''என்னய்யா, நல்லாயிருக்கியா?'' என்ற விசாரணையும் சேர்ந்து வந்தது.

சில வினாடிகள் பிடித்தன. அந்த டீக்கடைக்காரன் யாரென்று அடையாளம் புரிந்து கொள்ள.

கோவாலி - செங்கம்மாவின் புருஷன்.



''வராதவன் வந்திருக்கிறே. வெறும் டீயா குடிக்கிறது?'' என்றவன் தட்டில் பன் கொண்டுவந்து வைத்தான்.

ஆளவந்தாரைப் பின்தொடர்ந்து சென்றிருந்த எண்ணங்களைத் திருப்பியிழுத்த பிறகே மருதய்யனுக்கு முழு உணர்வு ஏற்பட்டது. ''அட, நீயாய்யா? மூர் மார்க் கெட்டிலே இல்லே கடை வைச்சிருந்தே? இங்கே பிராஞ்ச் ஆரம்பிச்சிருக்கியா?'' என்றான்.

''ஆமாம்,'' என்று அவன் சொன்னானே தவிர, அந்தப் பதில் அழுத்தமாக வரவில்லை. இன்னும் இரண்டும் பேர் டீ அருந்திக் கொண்டிருந்ததால் அவர்கள் செல்லட்டும் என்று காத்திருப்பது போல் தோன்றியது.

மருதய்யன் கோவாலியைக் கண்களால் அளவெடுத்தான். செங்கம்மாவுக்கும் நமக்கும் உள்ள ரகசிய உறவு இவனுக்குத் தெரிந்திருந்தால் இப்படி டீயும் பன்னும் கொடுத்து உபசரிப்பானா என்று நினைத்துக் கொண்டான்.

டீக்கான காசைத் தந்துவிட்டு மற்றவர்கள் எழுந்து சென்றார்கள். பாய்லரின் அனல் தட்டை ஒருமுறை சலித்துவிட்டு, கடையின் உட்புறம் எரிந்து கொண்டிருந்த விளக்கை அமர்த்தியபின் மருதய்யனின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான் கோவாலி. எப்படி ஆரம்பிப்பது என்பதைப் போலத் தரையைக் காலால் தேய்த்துக் கொண்டேயிருந்தவன், கடைசியில், ''மத்தவங்க எதிரிலே நீ கேட்டுட்டே. சொல்ல வெட்கமாயிருந்திச்சு,'' என்றான்.

''என்ன கேட்டேன்?''

''இது பிராஞ்ச்சான்னு கேட்டியே?'' அவன் பேச்சில் வேதனை தெரிந்தது. ''மூர் மார்க்கெட் கடையை மூடிட்டேன். இது புதிசு.''

மருதய்யன் திடுக்கிட்டான். ''என்னய்யா, சுத்தப் பைத்தியக்காரனா இருக்கிறே? அங்கே ஆகாத வியாவாரமா

இங்கே ஆகப் போகிறது! எப்படிப்பட்ட சென்ட்ரலான இடம் அது?''

''இடத்திலே என்னண்ணே இருக்கு? மனசில்லே பொருந்தணும்?''

''ஏன், மனசு பொருந்தாமே என்ன?''

கோவாலி உடனே பதிலளிக்கவில்லை. கொஞ்ச நேரம் தலையைக் குனிந்து உட்கார்ந்திருந்தான். பின்னர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டவன் போல, ஊடுருவும் கண்களால் மருதய்யனை நோக்கினான். ''கடவுளுக்குப் பொதுவா சொல்லு, மருதய்யா. ஏன் எனக்கு மனசு நிம்மதியில்லாம போச்சுன்னு உனக்குத் தெரியாது?''

மருதய்யனுக்குச் சங்கடமாக இருந்தது. அவனாகவே பேசட்டுமென்று மௌனமாயிருந்தான்.

''செங்கம்மா ஒருத்திக்காகத்தான் நான் மனுசன்னு உயிர் வாழ்ந்துகினு டீக்கடைத் தொழிலும் நடத்தினு வந்தேன். என்னைக்கு அது என்னோட வாழ முடியாதுன்னு புறப்பட்டுப் போச்சோ, அன்னைக்கே எனக்கு எல்லாம் வெறுத்துப் போச்சு. பல்லைக் கடிச்சுக்கினு கொஞ்சநாள் கடை நடத்தினேன். முடியல்லே. நஷ்டத்துக்கு வித்திட்டேன்.''

அப்போதும் பேசாமலே இருந்தான் மருதய்யன்.

''இங்கே மட்டும் கடை நடத்தலியான்னு நினைக்கிறே, இல்லே?'' என்று கோவாலி தொடர்ந்தான். ''வியாபாரத்துக்காக இந்தக் கடையை நடத்தலே, மருது. செங்கத்துக்கு இது பழைய இடம். என்னைக்காச்சும் ஒருநாள் இங்கேதான் அவள் வருவாள்னு தேடிட்டு இருக்கிறேன். இப்ப செங்கம் எங்கே இருக்குதுன்னு உனக்குத் தெரியுமா?''

டீ கிளாசுக்குள் பார்வையைப் புதைத்தபடி மருதய்யன், ''எனக்கா... எனக்கென்ன தெரியும்?'' என்றான்.



கோவாலி அவன் கையைப் பிடித்துக் கொண்டான். ''மருதண்ணே, நான் உன்னைக் காட்டிலும் வயசிலே பெரியவன். இருந்தாலும் உன் காலைப் பிடிக்கக்கிற மாதிரி இந்தக் கையைப் பிடிச்சுக்கினு கேட்கிறேன்: செங்கத்தை என் கையிலே ஒப்படைச்சிடு...''

அவசர அவசரமாக மறுத்தான் மருதய்யன். ''ஊகும்... எனக்கும் செங்கத்துக்கும் என்ன சம்பந்தம்? நான் அவளை அழைச்சுக்கினு போய் இருக்கிறேன்னு யார் சொன்னாங்க?''

''நீ அழைச்சுக்கினு போகலை, அவளாத்தான் உன்னைத் தேடிக்கினு கிளம்பிட்டாள்,'' என்றான் கோவாலி. ''என் கையிலே மறைக்கப் பார்க்காதே, மருது. எனக்கு எல்லாம் தெரியும். பாதி நானாகவே ஊகிச்சிட்டிருக்கிறேன். பாதி செங்கமே சொல்லிட்டுது. மருது, நான் யாருக்கும் எந்தவிதமான துரோகமும் செய்ததில்லே, கெடுதி நினைச்சதில்லே...''

''அது சரி... ஆனால்...''

''நினைச்சுப்பார். முதல் தடவையாய் நீ மூர்மார்க்கெட் கடைக்கு வந்தப்போ என்ன நடந்தது, ஞாபகம் இருக்குதா? ஒரு பழைய பிளாஸ்டிக் பர்சை நீ வைச்சிட்டுப் போனதாய்ச் சொன்னே. வூட்டிலே எடுத்து வைச்சிருக்கிறேன், வாய்யான்னு சொல்லி உன்னைக் கூட்டிக்கினு போய் எடுத்துத் தந்தேன்...''

''இல்லேன்னா சொன்னேன்?''

''அவ்வளவு நாணயமாய் யோக்கியமாய் நடந்துக்கினவன் நான். அப்படியிருக்க, என்னையும் என் பெண்சாதியையும் பிரிக்க நீ நினைக்கலாமா? மனச்சாட்சியைத் தொட்டுப் பதில் சொல்லு, மருது. உனக்கே இது நல்லாயிருக்கா? நியாயமா?''

'கோவாலி, நீ என்னைத் தப்பா நினைச்சிருக்கிறே. செங்கம்மாவை நான் கூட்டிக்கினு போகல்லே. எங்கேயாச்சும் கண்ணிலே பட்டால் கண்டிப்பா உன் கையிலே அழைச்சிக்கினு வந்து ஒப்படைக்கிறேன்...''

''இன்னொரு பன் சாப்பிடு,'' என்று கண்ணாடி ஜாடியிலிருந்து எடுத்து வந்து தட்டில் வைத்தான் கோவாலி. ''பிறர் சொத்துக்கு நான் எண்ணைக்குமே ஆசைப்பட்டது இடையாது. அதே மாதிரி என் சொத்துக்கும் யாரும் ஆசைப்படக் கூடாது. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.''

**செ**ங்கம்மாவின் குடிசையில் வாசல்கதவு சிறிய பூட்டுப் போடப்பட்டு மூடியிருந்தது.

சுற்று முற்றும் பார்த்தான் மருதய்யன். எப்படியும் அவளைச் சந்திக்காமல் செல்வதில்லை என்ற உறுதி அவன் மனத்தில் இருந்தது.

இரவு மணி பத்துக்கு மேலாகிறது. இந்த வேளையில் எங்கே போனாள்? அத்துடன் ஜனார்த்தனம் எங்கே காணோம்?

''மருது! எப்ப வந்தே நீ?'' என்ற உற்சாகமான குரல் அவனை வரவேற்றது.

இடுப்பில் ஒரு கூடையுடன் சிரித்த வண்ணம் நின்றிருந்தாள் செங்கம்மா. ''ரெண்டு நாளாய் உன்னை எதிர்பார்த்து எதிர்பார்த்து...'' அவன் முகத்துக்கு மிக அருகே தன் முகத்தைக் கொண்டு வந்தாள் அவள். ''என் கண்ணைப் பார். எப்படிச் சிவந்திருக்கு, கவனிச்சியா? தூக்கமே இல்லை.''

''பெரியவர் எங்கே?'' என்றான் அவன், அவளுடைய சரசத்துக்கு இடம் கொடுக்காமல்.

''அவர் சமாசாரம் என்னாண்ணு விசாரிக்கத்தான் இப்பப் போயிட்டு வர்றேன். அவரோட மகன் ஊட்டிலே ஒரு டிரைவர்



இருக்கான், பொம்பிளைங்களைக் கண்டால் சன்னு இளிக்கிற சோதா, கொஞ்சம் பேச்சுக் கொடுத்து விசயத்தைப் பறிச்சேன்.''

அவன் கோபமாகச் சொன்னான்: ''செங்கம், நீ கல்யாணமான, கௌரவமான பெண். கண்டவங்ககிட்டே, கண்ட நேரத்தில் போய்ப் பேசிக்கிட்டிருக்கிறது நல்லாவா இருக்கு?''

''அட, என்ன கோபம் வருதய்யா உனக்கு?'' என்று சிரித்தாள் அவள். ''சரியான பொறாமைக்காரப் பேர்வழி நீ. ஒண்ணும் தப்பாய் நடந்திடலை. பயப்படாதே. இந்தச் செங்கம் எண்ணைக்கும் உன் செங்கம்தான். மாறமாட்டாள்.''

தான் நினைத்துச் சொன்னதென்ன, அவள் அர்த்தம செய்து கொண்டு பதிலளிப்பதென்ன! ''இதோபார், அந்தப் பழைய கதையெல்லாம் இனிமேல் வேணாம். அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் நான் வந்திருக்கிறேன்.''

''உள்ளார வா, பேசலாம்,'' என்று குடிசையின் கதவைத் திறந்தாள் அவள். உள்ளே கும்மிருட்டாய் இருந்த போதிலும் விளக்கை ஏற்ற முயலக் காணோம். தெரு விளக்கின் வெளிச்சம், குடிசையின் வாசலைத் தாண்டிச் சற்று உள்ளேயும் கசிந்து கொண்டிருந்தது. வாசலில் பாதியும் உள்ளே பாதியுமாக அவன் படியருகே உட்கார்ந்து கொண்டான்.

''டீ போடவா?'' என்று கேட்டாள் அவள்.

''வேண்டாம்.''

''சோறு இருக்குது. துன்றியா?''

''ஊகூம். நீ விசயத்தைச் சொல்லு.''

''அட, உள்ளாரத்தான் வாயேன். வாசப்படியிலேயே குந்திக்கிணே?'' என்றாள்.

''நல்லா காத்து வருது,'' என்றான் அவன்.

''இங்கே வந்தியானால் நான் விசிறுவேன்.'' இருட்டில் இருந்தபடி அவள் சிரிக்கிற ஒலி அவன் சினத்தை அதிகப்படுத்தியது.

''ஏன் கம்முனு இருக்கிறே? தூக்கம் வருதா?'' என்று சீண்டினாள் அவள். ''உள்ளே வந்து படுத்துக்க. ஆனால் தலைகாணி கிடையாது. என் மடியிலேதான் தலையை வைச்சுக்கணும். உனக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ?'' மறுபடியும் ஒரு களுக்கென்ற சிரிப்பு இருட்டுக்குள்ளேயிருந்து மிதந்து மிதந்து வந்து அவனைக் கவ்வியது.

''செங்கம், நீ பேசற பேச்சு கொஞ்சமும் நல்லாயில்லே...'' கோபத்தால் மேல் சொல்ல முடியாமல் திணறினான்.

''தண்ணி வேணுமா!'' என்று கேட்டுவிட்டு, அவன் பதிலை எதிர்பாராமலே பானையைச் சரித்தாள் அவள். அப்போதும்கூட விளக்கை ஏற்றவில்லை. சில நிமிடம் குவளையைத் தேடுவதாகத் தோன்றியது. தண்ணீரை நீட்டுகையில் அவளுடைய செழுமையான கை மட்டும் வெளிச்சத்தில் தெரிந்தது.

மடமடவென்று குடித்தவன் ''ஏன் என்னவோ போலிருக்குது தண்ணி?'' என்றான்.

''குழாய்த் தண்ணியில்லே? நெறைய மருந்து போடறாங்க,'' என்று அவள் பதிலளித்தபோது, தன் உடம்புக்குள் ஒரு கிறுகிறுப்பும் திமிரும் பரவுகிற மாதிரி இருந்தது அவனுக்கு.

''என்ன மருது, உடம்பு நல்லாயில்லியா?'' என்று அருகே நகர்ந்து வந்து, தன் மீது அவனைச் சாய்த்துக் கொண்டாள் அவள். மெத்தென்ற அவளுடைய தோளில் அவன் தலை பதிந்த அதே நேரம் தன் புலன்களில் வெறி ஏறுவதை உணர்ந்தான். தன்னைத் தானே உலுக்கிவிட்டுக்



கொண்டான். ஒரு சந்தேகம் உதித்தது. ''செங்கம், தண்ணிதான் கொடுத்தியா? இல்லே, வேறே ஏதாச்சும்...'' என்று உறுமினான்.

''வேறே ஏதாச்சுமா?'' அவள் சிரித்துக் கொண்டே மருதய்யனின் தலையை இரு கைகளாலும் பற்றித் தன் முகத்தை நோக்கித் திருப்பிக் கொண்டாள்.

''அடடே! இப்பத்தான் நினைவு வருது!'' என்று திடுக்கிட்டாற்போற் சொன்னவள், அதே சாக்கில், அவனைத் தன் மடி மீது தள்ளிக்கொண்டு அவன் எழுந்திராதபடி அவன் மீது கவிழ்ந்து கொண்டாள்.

''என்ன நினைவு வருது?'' என்று சீறினான் அவன்.

''வந்து... போன வாரம் உடம்பு சுகமில்லாம இருந்தேன், சோணாசல வைத்தியர், உடம்புக்கு நல்லதுன்னு நாலு வேளைக்குப் பட்டைத் தண்ணி கொடுத்திருக்கார்... அதிலே கொஞ்சம் பாக்கி வைச்சிருந்தேன் பார். அது நினைவில்லாமலே உனக்கு ஊத்திக் கொடுத்திட்டேன் போல் இருக்குது...''

திமிறிக் கொண்டு அவளைத் தள்ளிவிட்டு எழுந்தான் அவன். ''சாராயமா? உன் ஆசைக்கு என்னை இணங்க வைக்கிறதுக்காக, சாராயமா கொடுத்தேன் என்கிறே? தூ! நீ ஒரு பொம்பளையா?''

அந்த டீக்கடைக்காரனின் பரிதாபமான கெஞ்சல் அவன் ஞாபகத்தில் எழுந்து நின்றது. 'நீ தப்பு வழிக்கெல்லாம் போகமாட்டாய், இல்லையா?' என்று ஜனார்த்தனம் தன் மீது நம்பிக்கை தெரிவித்தது காதில் எதிரொலித்தது.

ஒரே தள்ளாகச் செங்கம்மாவைப் புரட்டித் தள்ளியவன், திடுக்கிட்டு எழுந்திருக்க முயன்றவளை, கன்னத்தில் பளீர் பளீரென்று அறைந்தான். ஒவ்வோர் அறையும் ஒரு கனல்

துண்டமாய் அவள் கன்னத்தைச் சிவக்க வைத்தது. அ இருட்டிலும்கூட மினுமினுக்கிற மாதிரி இருந்தது.

"ஐயோ, ஐயோ! என்னைக் கொலையே செய்றி போலிருக்குதே!" என்று அவள் அலறினாள்.

"ஆமாம், கொலைதான். இன்னொரு வாட்டி நீ இ மாதிரி என் அறிவைத் தடுமாறச் செஞ்சியோ, அந்த மினிட் உனக்குச் சமாதி வைச்சிடுவேன். புரிஞ்சுக்க!" தடுமா கொண்டே எழுந்து நின்றான். "அந்தக் கோவாலி, பாவ அம்பத்தூரிலே உனக்காகக் காத்துக்கினு இருக்கிறா மரியாதையா அவன் கையிலே போய்ச் சேர்ந்து ஒழுங் குடும்பம் நடத்து."

விடுவிடுவென்று நடந்தான் அவளைத் திரும்பி பார்க்காமல்.

**கா**லடியில் சலசலத்தோடும் சிற்றோடை போ இரவுப் பொழுது அவனை உராய்ந்து கொண்டே ஓ மறைந்து, காலை வெளிச்சத்தைக் கொணர்ந்தது. யாரோ அவனைக் கூப்பிடுகிற மாதிரி ஓர் உணர்வு அவனை எழுப்பியது.

ஈயக் குண்டுகளைக் கட்டிவிட்டாற் போல் கனத் கொண்டிருந்த கண்ணைச் சிரமத்துடன் திறந்தான். ஏதோ ஒ வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடியே தான் தூங்கி விட் தெரிந்தது.

"வண்டியில் ஏறு," என்ற ஆளவந்தாரின் குரலை அவ கேட்டான். எட்டத்தில் அவனுடைய கார் நிற்பது மசமசவென்று தெரிந்தது.

ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது அவனுக்கு. 'நே அந்தக் கல்யாண வீட்டில் அத்தனை அவமானத்துக்கு நம் ஆளாக்கிவிட்டு, இப்போது ஒன்றும் தெரியாதவர் போ கூப்பிடுகிறாரே!' என்று எண்ணி ஆத்திரம் கொண்டவனா



'நீங்க யாருன்னு எனக்குத் தெரியலியே?" என்று பதிலளித்துவிட்டு நடையைக்கட்ட முயன்றான்.

ஆனால் இரண்டெட்டு வைக்குமுன் ஆளவந்தாரின் வலுவான கரம் அவன் புஜத்தைப் பிடித்து நிறுத்தியது.

"விடுங்க சார் என்னை!"

"கை கால் உருப்படியாக இருக்க வேண்டுமென்றால் என் பின்னால் வா."

"என்ன சார் ரொம்பத்தான் மெரட்டறீங்க?" என்ற பலவீனமான பதிலுடன் அவனைப் பின்தொடர்ந்தான் மருதய்யன்.

காரின் பக்கத்தில் அவனை அமர்த்திக்கொண்டு ஓட்டினான் ஆளவந்தார். ஆனால் ஒரு வார்த்தையும் பேசவில்லை. பங்களாவுக்குள் நுழைந்ததும், "வா," என்று மட்டுமே கூறி மாடிக்கு அழைத்துச் சென்றான். வார்ட்ரோபிலிருந்து சலவைச் சட்டையும் பாண்ட்டும் துவாலையும் பனியனும் எடுத்துத் தந்து, ஷவர்பாத்தும் தொட்டியும் இருந்த குளியலறைக்கு அழைத்துச் சென்று, "சீக்கிரமாய் வா," என்று மாத்திரமே கூறிவிட்டுக் கதவைச் சாத்தினான்.

குளித்துவிட்டுத் திரும்பியபோது டைனிங் மேஜையின் வகைவகையான சிற்றுண்டி தயாராயிருப்பதைக் கண்டான் மருதய்யன். புதிதாக வேலைக்கு அமர்த்தியிருந்த சமையற்காரனுக்கு "நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போ," என்று விடை கொடுத்து அனுப்பினான் ஆளவந்தார். பிறகு மருதய்யனை டைனிங் மேஜையடியில் உட்கார்த்தி வைத்து, தட்டில் கேசரியும் இட்டிலியும் உப்புமாவும் சட்டினியும் தானே பரிமாறலானான்.

கேசரியில் ஒரு ஸ்பூன் எடுத்தான் மருதய்யன். ஆனால் வாயில் போட்டுக் கொள்ளவில்லை. அவன் கண்ணில் கண்ணீர் தளும்பி நின்றது. குரல் கமற, ''நேத்துப் பார்த்த ஆளவந்தார் சார் வேறே, இன்னைக்குப் பார்க்கிற ஆளவந்தார் சார் வேறேயா இருக்குது,'' என்றான்.

கடுமையாகப் பதில் வந்தது ஆளவந்தாரிடமிருந்து.

''நான் ஒரே ஆளவந்தார்தான். மருதய்யன்தான் நேற்று இருந்தவன் வேறு, இன்று இருப்பவன் வேறு.''

''ஏன் சார் அப்படிச் சொல்றீங்க?''

மிளகாய்ப் பொடிக்கு நெய் ஊற்றியபடி ஆளவந்தார் சொன்னான்:

''நேற்று இருந்த மருதய்யன் பக்கா மடையன். பொறுப்பில்லாதவன். அற்பத்தில் உணர்ச்சி வசப்படுகிறவன். இருக்கிற நிலைமையை மறந்து கன்னாபின்னாவென்று கலாட்டா செய்கிறவன். மறுபடி ஜெயிலுக்குப் போகக்கூடாது என்று நானும் அவனும் ஜனார்த்தனமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அடியோடு மறந்தவன். அப்படிப்பட்ட மருதய்யன் என் சினேகிதன் இல்லை. அவனுடன் நான் பேசவோ சினேகம் பாராட்டவோ நான் தயாரில்லை.''

மருதய்யன் கடகடவென்று சிரித்து, ''சார்! உங்களை நேருக்கு நேர் கண்டப்பாலே எப்படி சார் என்னாலே சும்மா இருக்க முடியும்? உங்களுக்குச் சாப்பிட ஏதாச்சம் கொடுக்கணும்னு கைகால் எல்லாம் துடிச்சுது சார்! பூட்டியிருந்தால்கூட எடுத்துட்டு வந்திருப்பேன் சார்!''

''ஓ! அவ்வளவுக்கு வந்து விட்டாயா?'' என்று கேட்டபோது ஆளவந்தாரின் குரலில் கடும் சினம் தென்பட்டது. ''அதாவது, அடிதடி வம்பில் அகப்பட்டுக்கொண்டு ஜெயிலுக்குப் போகவும் தயாராயிருக்கிறாய்?''



''ஜெயில் என்ன சார் பிரமாதம்! நாலு நாள் இருந்திட்டு வந்தால் போச்சு!''

''முட்டாள்!'' நெருப்புத் துண்டம்போல் ஆளவந்தாரிடமிருந்து வார்த்தைகள் வெடித்து வந்தன. ''என்ன சோதனை வந்தாலும் சரி, மறுபடி ஒருமுறை இந்த ஊர் ஜெயிலுக்குள் நுழைவதில்லை என்று நீ, நான், ஜனார்த்தனம் மூன்று பேரும் எதற்காக உறுதி எடுத்தக்கொண்டோம் என்பது மறந்துவிட்டதா? நம் மூன்று பேரில் யார் உள்ளே போனாலும், அங்கேயே நமக்குச் சமாதிகட்ட அந்த முத்துரங்கத்தின் கும்பல் காத்திருக்கிறது என்பது மறந்துவிட்டதா? சொல்லு மருது, சொல்லு.''

மருதய்யனுக்கு பீதியினால் உடம்பெல்லாம் வியர்த்தது. ''இல்லிங்க சார்... நான் மறக்கலே...'' என்றான். நாக்கு உலர்ந்து போயிற்று.

## இருபத்தொன்று

**சு**ழலும் மின்சார விசிறியில் பட்டுவிடாமல் வெகு சாமர்த்தியமாகக் குறுக்கும் நெடுக்கும் படபடத்துப் பறந்து கொண்டிருந்தது ஒரு சிட்டுக் குருவி. டைனிங் மேஜை மீது பரப்பி வைக்கப்பட்டிருந்த விதவிதமான பலகாரங்கள் மெல்ல மெல்ல ஆறி நிறம் மாறிக் கொண்டிருந்தன. சற்றுமுன் காப்பிக் கோப்பையிலிருந்து மிகக் கெட்டியாகப் புறப்பட்டுப் பரவிக் கொண்டிருந்த ஆவி, கொஞ்சம் கொஞ்சமாக மெலிந்து நலிந்து அடங்கிவிட்டது.

ரத்தமனைத்தும் கண்டிவிட்ட மாதிரி வெளுத்தப் போயிருந்தது மருதய்யனின் முகம். ''சார்... அந்த முத்துரங்கம்... அவங்க எல்லாம் இன்னும் அங்கேதான் இருக்கிறாங்களா?'' என்று கேட்கையில் அவனுடைய உதடுகளும் கண்களும் அச்சத்தால் துடித்தன.

''இருக்கிறதோடில்லை. நம்மில் ஒருவனாவது வர மாட்டோமா என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்,'' என்றான் ஆளவந்தார். ''உப்புமா இன்னும் கொஞ்சம் போட்டுக் கொள்ளேன், மருது?''

தட்டில் கை கழுவி விட்டு, எழுந்து கொண்டான் மருதய்யன். அவனிடமிருந்து பேச்சே புறப்படவில்லை.

முத்துரங்கத்தையும் அவனுடைய தோழர்களையும் நினைக்கையிலேயே அவனுக்குக் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. ஆறடி உயரமும் முன்னூறு பவுண்டுக்குக் குறையாத எடையும் கொண்டவனாக, பிடரியில் மரவட்டை போல வெட்டுத் தழும்புடன் இருக்கிறவன் முத்துரங்கம். ஹோசூரில் பத்து வயதுச் சிறுமி ஒருத்தியைக் கற்பழித்துச் சித்திரவதை செய்ததற்காகச் சிறைக்கு வந்தவன். குஞ்சிலாலோ, தோற்றத்தில் அவனுக்கு நேர் எதிரிடை. மதுரையில் ஒரு பெரிய நகைக் கடையில் வாட்ச்மேனாக இருந்தவன். ஒருநாள் இரவு தன்னை யாரோ அடித்துப் போட்டுவிட்டு முப்பதாயிரம் ரூபாய் ரொக்கமும், மூன்று லட்ச ரூபாய் பெறுமானமுள்ள நகைகளும் திருடிக் கொண்டு போனதாகப் புகார் செய்து, ஆனால், நாடகத்தைச் சாமர்த்தியமாக ஆடத் தெரியாமல் மாட்டிக் கொண்டு சிறைக்கு வந்தவன். நாராயணப்பா, அரசியல் கிளர்ச்சி என்கிற சாக்கில் ஒரு போஸ்டாபீசுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்தியதோடு, அதை அணைக்க வந்த போஸ்ட் மாஸ்டரை அதே தீயில் தள்ளி, குற்றுயிரும், குலையுயிருமாக ஆக்கியவன். பெற்ற தகப்பனை அரிவாளால் வெட்டிய செங்கோடன்; சைக்கிள்கள் திருடுவதைத் தவிர வேறெந்தக் குற்றமும் அறியாத கமால் - இப்படியே ஒன்பது பேர் கொண்ட அந்த கும்பலை எப்படி அவன் மறந்து போயிருந்தான்?

''மறுபடி ஒருமுறை ஜெயிலுக்குப் போகும் நிலைமைய ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று நான் சொன்னது வெறும்



தர்மோபதேசம் இல்லை, மருது. நேர்மையாயும் யோக்கியமாயும் பிழைக்க வேண்டுமென்று சொன்னது நாம் திருந்த வேண்டும் என்பதற்காக மட்டும் இல்லை. உயிர் மருது, உயிர்! இந்த உடம்பிலே உயிர் என்று ஒன்று இருக்க வேண்டுமில்லையா, அதுக்காக!'' என்று ஆளவந்தார் மேலும் சொன்னபோது, மருதய்யனால் தலை குனிந்திருக்கத்தான் முடிந்தது.

15624

''இப்போது சொல்லு, அந்தக் கல்யாண வீட்டில் நீ ரகளை செய்து மாட்டிக் கொண்டது, எவ்வளவு பெரிய முட்டாள்தனம்! எவ்வளவு பெரிய அபாயம்!''

''ஆமாம் சார்,'' என்றான் மருதய்யன்.

தெருவிலே ஒரு நாய் திடீரென்று குரைத்தது.

அந்தச் சாதாரண ஒலிகூட அவனைத் திடுக்கிடவைத்தது. செங்கம்மாவின் பக்கத்துக் குடிசைக்காரன் அவனை அடித்து நொறுக்கியபோது இருந்த மனோதிடம் எங்கே போயிற்று? பெரியவர் ஜனார்த்தனத்துக்குப் பரிந்துகொண்டு அவருடைய மகன் மீது பாய்ந்தானே அந்த ஆங்காரம், செங்கம்மா வலுக்கட்டாயமாக அவனைக் கொஞ்ச வந்தபோது பொங்கியெழுந்த சீற்றம் - எல்லாம் ஆவியாய்த் தேய்ந்து மறைய, பூனையிலும் சூடுபட்ட பூனையாக, பயந்து நடுங்கும் கோழையாக ஏன் மாறினோம் என்று அவனுக்கே புரியவில்லை. எந்தப் பழி பாவத்துக்கும் அஞ்சாத கொலைகாரர்களிடம் சிக்கிவிடக் கூடிய அபாயம் இருப்பது ஞாபகம் வந்தவுடன் எப்படித்தான் மனம் புத்தி எல்லாம் மாறுகிறதோ! சே! அவனுக்குத் தன்மேலேயே வெறுப்பு ஏற்பட்டது.

''நான் இருக்கிறேன். அளவுக்கு மீறிப் பயப்படாதே.'' மருதய்யன் உட்கார்ந்திருந்த நாற்காலியின் கைப்பிடியில் தொற்றிக் கொண்டு அவன் தோள்மீது கை போட்டுக்

கொண்டான் ஆளவந்தார். "முதலாவது உனக்கு ஒரு நல்ல நிரந்தரமான வேலை வேண்டும். இப்போது எங்கே வேலை பார்க்கிறாய்?"

மருதய்யன் பரிதாபமாகப் புன்னகை செய்தான். "அந்தக் கல்யாண வீட்டுக்காரர்தான் என் பாக்டரி முதலாளி. நாலு நாள் வேலை பார்த்திருக்கிறேன்."

"அதற்குத்தான் தலை முழுகியாகி விட்டதே?" ஆளவந்தார் எழுந்து கொண்டான். "சரி, புறப்படு."

"எங்கே சார்?"

ஆளவந்தார் விடையளிக்கவில்லை.

காரில் செல்லும்போது மருதய்யன் மறுபடியும் கேட்டான்: "எங்கே சார் என்ன அழைச்சிக்கினு போறீங்க?"

ஆளவந்தார் காரைச் செலுத்தியபடியே சொன்னான்: "சுதந்திரமே! உனது மைந்தர்கள் அடிமைத் தளைகளில் சிக்கித் தவிக்கும்போது, ஈரமான இருண்ட பாதாளச் சிறைகளில் அடைபட்டு வாடும்போது, அவர்களுடைய உயிர்த் தியாகத்தினால் அவர்களது நாடு வெற்றி பெறுகிறது. சுதந்திரத்தின் கீர்த்தி ஒவ்வொரு காற்றிலும் சிறகடித்துச் செல்கிறது - இது யார் பாடினது தெரியுமா மருது?"

"தெரியாது சார்."

"லார்டு பைரன். ஷில்லான் கோட்டை என்று ஜெனிவாவில் ஒரு கொடிய சிறை. அதை ஒருநாள் பார்த்தார் பைரன். பொலீவார் என்ற சுதந்திர வீரன் ஆறு வருடகாலம் அங்கே அடைபட்டுக் கிடந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டார். அன்று ராத்திரியே அவர் இருதயத்திலிருந்து வெடித்துக் கொண்டு வந்தது, 'ப்ரிஸனர் ஆஃப் ஷில்லான்' என்ற ஒரு பெரிய கவிதை. ஒய்வாக இருக்கும்போது ஒருநாள் வா. முழுவதும் படித்துக் காட்டி அர்த்தம் சொல்கிறேன்."



மருதய்யன் மௌனமாகவே இருந்தான். ஆளவந்தாரின் பேச்சோ, காரின் ஓட்டமோ, அவனுடைய மனத்தைக் கப்பியிருந்த பயத்தை அகற்றக் காணோம்.

"ஜனார்த்தனத்தை எங்காவது பார்த்தாயா மருது?" ஆளவந்தார் விசாரித்தான். "அவர் உன்னைப்போல் இல்லை. சாதுவாய், நல்லபடியாய் இருந்து கொண்டிருப்பார்."

"சார், என்னைப் போலக் கெட்டவனாயும் பொல்லாதவனாயும் அவர் இருந்தால் எத்தினியோ நல்லா இருந்திருக்கும் சார். பாவம், நல்ல மனுசன், என்ன கஷ்டப்படறார் தெரியுமா?"

"நிஜமாகவா? எங்கே பார்த்தாய் அவரை?"

"பார்க்கிறதா? என்னோடத்தான் சார் அவரும் அல்லாடிக்கிட்டிருந்தார் போன வாரம் வரையில்," என்றவன், பாலாஜிநகர் பள்ளிக்கூடத்தில் தானும் அவரும் சந்தித்ததையும், அவர் மகனைப்பற்றியும் விவரித்தான். "செங்கம்னு எனக்குத் தெரிஞ்ச பொண்ணுங்க. அதோட குடிசையிலேதான் இருந்துக்கினு இருந்தார். நேத்து ஒரு ஆளை அனுப்பி என்ன செஞ்சிக்கினு இருக்கார், பார்த்திட்டு வாண்ணு சொன்னேன். மகனோட வீட்டுக்குப் போயிட்டாராம்."

"பார்த்தாயா? நல்ல மனிதர்களுக்கு நல்லபடிதான் நடக்கும்."

"அட ஏன் சார் நீங்க ஒரு பக்கம் வயித்தெரிச்சல்! அவன் படா இல்லாடி சார். ஆபீஸிலே எந்த விஷயத்திலோ மாட்டிக்கினு இருந்தானாம். அதிலேயிருந்து தப்பிக்க இவர் கையிலே கெஞ்சினானாம். பெரியவர் முடியாதுன்னுட்டார். தொரத்திட்டான் பழையபடி. பாவம், இப்ப எங்கே அலைஞ்சிட்டிருக்காரோ?"

ஆளவந்தாரின் நினைவிலே ஒரு பொறி தட்டியது. அன்று பாலாஜி நகர் பள்ளிக்கூடத்திலே சந்தித்த குழந்தை - தன் தாத்தாவை அப்பாவும் அம்மாவும் விரட்டியது பற்றி அது அழுது கொண்டே சொன்ன தகவல் - அந்த உடைந்த பொம்மை - குழந்தையின் தந்தை லஞ்சக் கேசினால் சஸ்பெண்ட் ஆகியிருக்கிறாரென்று கார் டிரைவர் கூறிய செய்தி...

''இதோ பார், மறுபடி உன்னிடம்தான் அவர் வருவார். வந்தால், அடுத்த நிமிடமே நீ என்னிடம் அவரை அழைத்து வந்துவிட வேண்டும். தெரிகிறதா? எத்தனை நல்ல மனிதர்! எவ்வளவு பெரிய மனிதர்! அவர் கண் கலங்கும்படி விட்டால் நாமெல்லாம் மனிதர்களில்லை.''

''ஆமாம் சார். நான் ஏதோ என்னால் ஆன உதவியைச் செஞ்சேன் சார். ஆனால் நானே லாட்டரி அடிக்கிறப்போ அவருக்கு என்ன சார் செய்ய முடியும்?''

ஒரு பெரிய பார்மஸியின் வாசலில் கார் நின்றது. ''வண்டியில் இரு,'' என்று சொல்லிவிட்டு, ஆளவந்தார் தோல் பையைத் திறந்து, கற்றை நோட்டுக்களை எடுத்து ஒரு கவருக்குள் போட்டு எடுத்துக் கொண்டு பார்மஸிக்குள் நுழைந்தான். கொஞ்ச நேரத்தக்கு அவன் எங்கே மறைந்தான், யாருடன் பேசினான்என்பது தெரியவில்லை.

சில நிமிடங்களில் காருக்குத் திரும்பி வந்தான். ''இங்கே வேலை போட்டுத் தரச் சொல்லியிருக்கிறேன். இருநூறு ரூபாய் சம்பளம் தருவார்கள். இறங்கி வா.''

''சார், எனக்கு... இந்த வேலைக்காக... எக்கச்சக்கமாய்த் துட்டு கொடுத்தீங்க போலிருக்குதே? சார், உங்க அன்பு இருந்தால் போதும் சார்.'' மருதய்யனின் குரல் தழுதழுத்தது.

''சில சந்தர்ப்பங்களில் சில உபாயங்கள்,'' என்று முறுவலித்தான் ஆளவந்தார்.



பார்மஸியில் விட்டு விட்டு அவன் சென்றதுமே மருதய்யனைப் பழைய பீதி சூழ்ந்து கொண்டது.

அன்று பூரா அவனுக்குக் காரணமில்லாமல் திக்திக்கென்றிருந்தது.

சின்ன விஷயங்களிலெல்லாம் அவன் அதிர்ச்சியுற்றான். பின்புறமிருந்த கோடவுனிலிருந்து ஒரு கோணியை எடுத்தபோது, குபுக்கென்று ஒரு சுண்டெலி அவன் மீது விழுந்து ஓடியது. ஏதோ காட்டு விலங்கு தன் மீது பாய்ந்துவிட்டாற்போல மிரண்டு பின்வாங்கினான். உடம்பின் நடுக்கம் நீங்க வெகு நேரமாயிற்று. பிறகு, யாரோ மருந்துக் குப்பிகளை வெளியே எடுத்து வைத்துவிட்டு, அட்டைப் பெட்டியை தட்டினார்கள் லொட் லொட்டென்று. துள்ளித் திடுக்கிட்டுவிட்டான். ஏதோ கேட்பதற்காக ஓர் ஆள் அவன் முதுகில் கை வைத்தபோது, நெருப்புத் துண்டம் பட்ட மாதிரி அலறிவிட்டான்.

''அந்த முத்துரங்கம் கும்பல் எங்கேயோ ஜெயிலுக்குள் அல்லவா இருக்கிறது? இங்கே வந்தா என் உயிரைப் பறிக்கப் போகிறது? ஏன் நான் இப்படிப் பயந்து சாகிறேன்?' என்று தன்னுள் வெட்கப்பட்டுக் கொண்டானேதவிர, இரும்புக் கவசம்போல் தன்னை இறுக்கிப் பிடித்திருக்கும் அந்தப் பீதியிலிருந்து விடுபடும் வழி புலப்படவில்லை.

''இந்தாப்பா, இதை அலமாரியில் எடுத்து வை,'' என்று ஒரு புட்டியை - நீல லேபிளும் சிவப்பு எழுத்துமாக இருந்த ஒரு சிறிய புட்டியை - அவனிடம் கொடுத்தார் சேல்ஸ்மேன்களில் ஒருவர். அதை வாங்கிக் கால் சராய்ப் பையில் போட்டுக் கொண்டான். அந்த அளவுக்கு ஒரு பயப் பிராந்தி அவனைக் காலோடு தலை மூடிக்கொண்டிருந்தது.

நல்ல வேளை, மாலை ஐந்து மணிக்கு, ட்யூட்டி முடிந்ததாகச் சொல்லி அவனை அனுப்பிவிட்டார்கள்.

வெளியே வந்தான். பார்மஸியின் நான்கு சுவர்களுக்குள்ளே இதுவரை பாதுகாப்பாக இருந்தது போலவும், இப்போது திடுதிப்பென்று வெட்ட வெளியில் நிராயுதபாணியாக நிற்பது போலவும் அவன் உள்ளத்தில் அச்சம் நிரம்பியது.

யாரோ தன்னைத் துரத்திக் கொண்டு வருகிறாற் போல ஓர் அனாவசியமான பிரமை அவனை விரட்டிக் கொண்டே வந்தது. வேறெவர் கண்ணுக்கும் தெரியாமல் தன் கண்ணுக்கு மட்டுமே ஒரு பயங்கர உருவம் தென்பட்ட மாதிரி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓட்டமும் நடையுமாக விரைந்தான். ஆளவந்தார் ஞாபகப்படுத்திவிட்ட மரணத்தின் பயம், எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதைக்கூட உணராதபடி அவனைத் தடுத்தது.

''சார்!'' என்று ஒரு குழந்தையின் குரல் அவனுடைய ஓட்டத்தைத் தடுத்தது. திரும்பிப் பார்த்தான். பள்ளிக்கூடம் முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த நாலைந்து பெண் குழந்தைகளில் ஒன்றுதான் அவனைக் கூப்பிட்டது.

''என்னைத் தெரியல்லே? அன்னைக்குக்கூட என் வீட்டுக்கு வந்திருந்தீங்களே, தாத்தாவைத் தேடிக்கிட்டு? என் அப்பாவோடேகூடச் சண்டை போட்டீங்களே?'' என்று சாதாரணமாகத்தான் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள் ரேகா.

அவள் யாரென்று அவனுக்கு ஞாபகம் வந்துவிட்டது. பாலாஜி நகர் பள்ளிக்கூடத்தின் பக்கமாக வந்திருக்கிறோம் என்பதும், அருகிலேதான் செங்கம்மாவின் குடிசை இருக்கிறது என்பதும் அவனுக்குத் தெரிந்தது. ஆனாலும்கூட, அந்த அன்பான குழந்தையின் மழலைக் குரல்கூட, அந்தச் சமயத்தில் அவனுக்குக் கலவரத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. 'சண்டையா? உன் அப்பாவோடா? இல்லையே? நான் போடலியே?' என்று குழறிய வண்ணம் இன்னும் வேகமாக ஓடினான்.



ஒரு வெற்றிலை பாக்குக்கடையின் நிழல் அவனை அழைத்தது. சில நிமிடம் ஒண்டினான். மரத்தொட்டியில் குளித்துக் கொண்டிருந்த சோடா புட்டிகள் நாவின் வறட்சியை ஞாபகப்படுத்தின. ''ஒரு சோடா கொடுங்க,'' என்றான் கடைக்காரனிடம். வெகு நேரமாகப் பேசாமலிருந்து இப்போது பேசியதால் அவன் குரல் அவனுக்கே புதியதாயிருந்தது.

சோடாவைக் கையில் வாங்கியிருப்பான். அவனுடைய பழைய சினேகிதன் கிட்டன் எங்கிருந்தோ வந்து சேர்ந்தான். ''நீ இந்த வட்டாரத்திலே சுத்திக்கினு இருப்பேன்னு இன்னைக்குத்தான் தோணிச்சு. இது தெரியாம எங்கெங்கியோ தேடிட்டிருந்தேன் இத்தினி நாளா!''

''ஏன்... எதுக்குத் தேடினே?''

''பேயைக் கண்ட மாதிரி ஏன் மருது இப்படி மிரள்றே? அதை மொதல்லே சொல்லு.''

''மிரள்றேனா? இல்லியே?'' என்று மருதய்யன் முதலில் மறுத்தான். பிறகு ஒப்புக் கொண்டான். ''என்னவோ தெரியலே. மனசிலே ஒரே பயமாக இருக்குது. ஏன்னு புரியல்லே...''

''அப்படியானால் என்னாத்துக்கு உனக்கு சோடாவும் தண்ணியும்?'' கண்ணைச் சிமிட்டினான் கிட்டன். ''என்ன கடைக்காரய்யா, பின்பக்கம் போகலாமில்லே?''

கடைக்காரர் அசட்டுச் சிரிப்புடன், ''எல்லாம் தெரிஞ்சு வைச்சிருக்கீங்களே?'' என்றான்.

''வா,'' என்று மருதய்யனை அழைத்துச் சென்றான் கிட்டன்.

பத்திரமாக எந்த மூலையிலாவது பதுங்கிக் கொண்டால் போதுமென்றிருந்தது மருதய்யனுக்கு. கடையின் பின்புறம்,

சிறிய அறை, ஓலைக்கூரை போட்டதாக அமைந்திருந்தது. பட்டப்பகல் வேளையிலும் இருட்டு கப்பிக் கிடந்தது. கண்கள் கொஞ்சநேரம் பழக்கப்பட்ட பின், அறையின் மூலையில் அடுக்கடுக்காகச் சில பானைகள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். இன்னும் சற்று நிதானித்த பிறகு, அந்த இடத்துக்கு உரிய தனியான நாற்றத்தையம் அவன் நாசி உணர்ந்தது.

அது என்ன நாற்றம் என்பதைப் புரிந்து கொண்டவுடன் ஒரு வினாடி பின்னடைந்தான். வெற்றிலைப் பாக்குக் கடை என்கிற போர்வையில் கள்ளச் சாராயம் விற்கும் கடை அது!

''இதைச் சாப்பிடுவியா! அதை விட்டுட்டு, சோடாவாம்! ஊம்! குடி அப்பாலே பயமாவது வெங்காயமாவது! எல்லாம் பறந்திடும்!'' என்று சொன்னபடி கிட்டன் அவன் முன்னே கலயத்தை வைத்தான்.

மருதய்யனின் மனத்துக்குள் ஒரு பகுதி வேண்டாம், வேண்டாம் என்று தடுத்தது. இன்னொரு பகுதியோ 'உன் உடம்பெல்லாம் நடுங்குகிறது. பயத்தினால் உன் உயிரில் பாதி போய்விட்டது. தெம்பை வரவழைத்துக் கொள்ள, இந்தச் சரக்குக் கொஞ்சம் வேண்டியதுதான்,' என்று சொல்லியது.

அன்று செங்கம்மா கொடுக்க முன்வந்தபோது எது விஷமாகத் தோன்றியதோ, அது, இப்போதைய மனநிலையில் அமிர்தமாகத் தெரிந்தது. இரு கைகளாலும் கலயத்தைப் பிடித்துக்கொண்டு, வெளேரென்றிருந்த பானத்தை உற்றுப் பார்த்தான். நாடி நரம்புகள் முறுக்கேறின.

உறிஞ்சலானான்.



# இருபத்திரண்டு

''ரொம்பப் பயமாய் இருக்குது, கிட்டா. இன்னும் கொஞ்சம் ஊத்து,'' என்றான் மருதய்யன்.

''பயம் பயம்னு சொல்றியே கண்டி, என்ன பயம், யார் கையிலே பயம்னு சொல்ல மாட்டேங்கறியே? இப்ப என்ன ஆயிட்டுதுன்னு இப்படி நடுங்கறே?'' என்று அவன் நண்பன் வினவினான்.

மருதய்யனின் விழிகள் இமைக்குள் செருகிச் செருகி மீண்டன. சிறையும் சிறை வாழ்க்கையும், முத்துரங்கமும் அவனுடைய வெறித் தாண்டவமும் அடுக்கடுக்காக அவனுக்கு நினைவு வந்துவிட்டதால், மேற்கொண்டு சொல்ல முடியாமல் தடுமாறினான்.

அன்று சிறையில் விஸிட்டர்கள் தினம். கைதிகளைப் பார்க்க உறவினர்களும் நண்பர்களும் எழுத்து மூலம் அனுமதி பெற்றுக்கொண்டு வந்திருந்தார்கள். ஜெயிலின் முன் பகுதியில், வாசலுக்கு ஒட்டினாற்போல் நீண்ட ஹால் அதற்கென்றே அமைக்கப்பட்டிருந்தது.

ஆளவந்தாரும் ஜனார்த்தனமும் பி வகுப்புக் கைதிகளாகப் பக்கத்துப் பக்கத்து அறைகளில் இருந்து வந்தார்கள். அவர்களுடைய அறைக்குள் கட்டில், நாற்காலி முதலிய வசதிகள் உண்டு. ஸி வகுப்புக் கைதி என்ற முறையில் மருதய்யன் அவர்களுடைய குற்றேவல்களைச் செய்துதரும் பணியாளாக இருந்து வந்தான்.

''நீங்க வரலியா சார்?'' என்று ஆளவந்தாரைக் கேட்டான் மருதய்யன்.

''நான் வருவதற்கில்லை. என் உற்ற நண்பன் என்னைத் தேடிக்கொண்டு இன்று வந்திருக்கிறான்,'' என்று கூறிய

ஆளவந்தார், தபாலில் வந்திருந்த 'டைம்' பத்திரிகையை எடுத்துக் காட்டினான். "பெரியவரைக் கூப்பிட்டாயா?"

"நான் ரெடி," என்று உற்சாகமாகக் குரல் கொடுத்தார் ஜனார்த்தனம். "போகலாமா மருது?"

அவருடைய சுறுசுறுப்பும் உற்சாகமும் மருதய்யனுக்கு ஆச்சரியம் தந்தன.

ஜனார்த்தனம் ஒரு பெரிய கம்பெனியில் பெரிய பதவியில் இருந்தவர். செலவாளியாகவும், சிநேகிதர்கள் நிறைய உள்ளவராகவும், யாரையும் எளிதில் நம்பக் கூடியவராகவும் இருந்ததுதான் அவருடைய பெரிய குறை. சிறு வயது முதலே சித்திரம் எழுதுவதில் அவருக்குத் தேர்ச்சி உண்டு. குறிப்பாக, கையெழுத்து மிக நன்றாயிருக்கும். அத்துடன் நிற்காமல் எப்படிப்பட்டவருடைய கையொப்பத்தையும் அப்படியே அச்சாகப் போடக் கூடிய திறமை தனக்குண்டு என்று பெருமை அடித்துக் கொள்வார். அந்தப் பெருமைதான் அவர் தலைக்கு ஆபத்தை வரவழைத்தது.

ஆபீசில் அவருக்குக் கீழே வேலை பார்த்த ஒரு நயவஞ்சகன் - அவர் ஒழிந்தால்தான் தனக்குப் பிரமோஷன் என்பதை மனதில் வைத்துக்கொண்டு - அவரைச் சீண்டி விட்டான். மேலதிகாரியொருவரின் கையெழுத்தைப் போல் அவர் போட முடியுமா என்று அவன் சவால் விட்டதற்கு, அவர் போட்டுக் காட்டினார். 'நீங்க என்னை ஏமாற்றலாம். ஆனால் பாங்க்காரர்களின் கண்ணில் மண் தூவ உங்களால் முடியாது. அவர்கள் கண்டு பிடித்து விடுவார்கள்!' என்று மேலும் அவரைத் தூண்டிவிட்டு, ஒரு செக்கில் பெரும் தொகைக்குக் கையெழுத்துப் போடும்படி பண்ணிவிட்டான். அந்தக் கள்ளக் கையெழுத்திட்ட செக் பாங்க்கில் ஏற்கப்பட்டு, பணமும் பட்டுவாடா ஆகிவிட்டது. அதை வைத்து அவர் பதவியைப் பறித்துவிட்டான் அந்த உதவியாள்.



விளையாட்டாகச் செய்த காரியம் வினையாயிற்று என்று கோர்ட்டில் ஜனார்த்தனம் எவ்வளவு வாதாடியும் எடுபடவில்லை. இதெல்லாம் மருதய்யனுக்குத் தெரியுமாகையால், தன்னைத் தானே நொந்து கொண்டு, அவமானத்துடன் முடங்கிக் கிடக்கும் அவரை அவன் தப்பாக எண்ணியதில்லை. அப்படிப்பட்டவர் இன்று என்ன ஒரு தனிக்குஷியுடன் இருக்கிறார் என்று ஆச்சரியமாயிருந்தது.

விஸிட்டர்கள் ஹாலில் ஜனார்த்தனத்தைப் பார்க்க வந்திருந்தவன் யாரோ ஒரு பியூன் போல இருந்தான். பழைய விசுவாசத்தை மறக்காமல் வந்திருந்தான் போலிருக்கிறது. தடுப்புக் கம்பிக்கு இப்பால் இவரும் அப்பால் அவனுமாகச் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். கைதிகளைப் பார்க்க வருகிறவர்கள் அதிகாரிகளின் அனுமதியில்லாமல் எதுவும் கொண்டு வரக்கூடாது, கொடுக்கவும் கூடாது என்பது சட்டம். இருந்தாலும், ஏதாவது பொருள் வந்து கொண்டுதான் இருக்கும்.

அதே போல், ஜனார்த்தனத்தைப் பார்க்க வந்தவனும் ஏதோவொரு சின்ன உறையை அவரிடம் கொடுப்பதை மருதய்யன் கவனித்தான். அதைப் பெற்றுக் கொள்ளும்போது ஜனார்த்தனத்தின் முகத்தில் என்றுமில்லாத பிரகாசம் பளபளப்பதைக் கண்டான்.

விஸிட்டர்கள் நேரம் முடிந்து, தங்கள் பிளாக்குக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, முத்துரங்கத்தின் கை அவர்கள் வழியை மறித்தது.

"த்சு, த்சு, த்சு," என்று வருத்தத்துடன் தலையை அசைத்தான் அவன். "ஒரு பழக்க வழக்கம், நடைமுறைன்னு முன்னெல்லாம் பெரியவங்கதான் மதிப்புக் கொடுத்து நடந்துப்பாங்க. இப்பல்லாம் அவங்கதான் முதல்லே மீறுறாங்க."

''நீ என்னப்பா சொல்கிறாய்?'' என்றார் ஜனார்த்தனம் பயத்துடன்.

''வெளியிலேயிருந்து இங்கே யாருக்கு எது வந்திச்சுன்னாலும் இந்த ஏழை முத்துரங்கத்துக்கு ஒரு பங்கு உண்டுங்கிறது அவ்விடத்திலே தெரிஞ்சிருக்கும். இன்னைக்கு சமூகத்துக்கு ஏதோ வந்ததா தெரியுது. ஆனால் என் பங்கு இன்னும் வந்து சேரல்லே. சமூகத்திலே மறந்துட்டாப் போலிருக்கு,'' என்று கையை நீட்டி, கன்னகரேலென்ற பற்கள் அத்தனையும் தெரிய இளித்தான் முத்துரங்கம்.

ஜனார்த்தனத்தின் முகம் வெளிறிப்போயிற்று. ''அது ஒன்றுமில்லையப்பா... ஒரு கவர்தான்...''

''ஒரு சாதாரணக் கவரை நான் பார்கக் கூடாதுன்னு தாங்கள் தடுக்கிறது நல்லாவாயிருக்கு?'' என்று நீட்டி முழக்கிக் கொண்டு, அதிகாரமாக அவர் கையை முறுக்கி, அந்தக் கவரைப் பறித்துக் கொண்டு போயே போய் விட்டான்.

இருவரும் திரும்பிவந்த கோலத்தைக் கண்டதும் ஆளவந்தாருக்குத் துணுக்கென்றது. ''என்ன நடந்தது?'' என்று துருவித் துருவிக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

''அந்தக் கவர்... அதிலே ஒன்றுமில்லை... விட்டுத் தள்ளு,'' என்றார் ஜனார்த்தனம். ஆனால் அவர் இதயம் சுக்கு நூறாக உடைந்திருப்பதை அவர் குரலே காட்டிவிட்டது.

''வா என்னோடு மருது,'' என்று அழைத்துக் கொண்டு ஆளவந்தார் கிளம்பி விட்டான்.

சிறை இடது பகுதியின் பின்புறத்தில் பினாயில் தயாரிப்பு அறை இருந்தது. அங்கே தன் தோழர்கள் மத்தியில் பீடி புகைத்துக் கொண்டிருந்த முத்துரங்கம், ஆளவந்தாரைக் கண்டதும் பீடியை விட்டெறிந்துவிட்டு, ''டாக்டர் ஐயாவெல்லாம் இங்கே வரலாங்களா? ஒரு சொடக்குப்



போட்டீங்கண்ணா இந்த நாயிங்க அங்கேயே வந்திருப் போமே? யாருக்கு என்னங்க உடம்பு இங்கே? ஐயாவுக்குச் சொல்லியனுப்பினாங்களா?'' என்றான், கிண்டலாக.

''கவரைக் கொடு,'' என்று மட்டுமே சொன்னான் ஆளவந்தார்.

''கவரா!'' தோழர்களை நோக்கித் திரும்பினான் முத்துரங்கம். ''டாக்டர் ஐயா என்னப்பா சொல்றார்? இந்த மரமண்டைக்குப் புரியல்லே. உங்களுக்கு யாருக்காச்சும் புரியுதா?''

''ஜனார்த்தனத்திடமிருந்து பறித்து வந்தாயே, அந்தக் கவரைச் சொல்றேன்.''

''ஓ, அதுவா?'' இடுப்பில் செருகியிருந்த காகித உறையை வெளியிலெடுத்தான் அவன். ''பொதுவா எனக்குப் பங்கு கொடுக்காமல் ஒரு பொருளை எடுத்துக்கினு போனால், மொத்தத்தையுமே பறிமுதல் செய்திடறதுதான் என் வழக்கம். இருந்தாலும், டாக்டர் ஐயா இந்த விஷயத்திலே மௌனக் கெட்டிருக்கிறதாலே, பாதிப் பங்கு நான் எடுத்துக்கிறேன்.''

ஆளவந்தாரோ மருதய்யனோ குறுக்கிட்டுத் தடுக்குமுன் சர்ரென்று அந்த உறையை இரு பாதியாகக் கிழித்து விட்டான்.

ஒரு பாதி தன் கையில் வந்த பிறகுதான் அது என்னவென்று தெரிந்தது ஆளவந்தாருக்கு.

கவருக்குள் இருந்தது ஒரு சிறுமியின் புகைப்படம். சரிபாதி முகத்திலும் உடம்பிலும் நீளவாட்டாகக் கிழிக்கப்பட்டு விட்டது.

மருதய்யனுக்குத் தொண்டையில் எதுவோ அடைத்துக் கொண்ட மாதிரி இருந்தது. அந்தப் புகைப்படம் ஜனார்த்தனத்தின் பேத்தியினுடையது என்று அவனுக்குப்

புரிந்தது. பாவம், கிழவர். என்ன கஷ்டப்பட்டு அதை வரவழைத்தாரோ!

ஆளவந்தார் மௌனமாகத் திரும்பி நடந்தான், அந்தக் கிழிந்த புகைப்படத்தைக் கசக்கி எறிந்துவிட்டு ''பெரியவரிடம் எதுவும் சொல்ல வேண்டாம். படம் கிழிந்தது என்றால் வேதனைப்படுவார்,'' என்பதைத் தவிர எதுவும் பேசவில்லை.

ஒரு வாரத்துக்கெல்லாம் ஜனார்த்தனத்துக்கு ஒரு பெரிய கவர் வந்தது. ஆச்சரியத்துடன் பிரித்தார். ஒரு புகைப்படம் - அவருடைய பேத்தி பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் கோலத்தில் ஜம்மென்று காட்சி தந்தாள்! ஜனார்த்தனத்தின் கண்ணில் கரகரவென்று நீர் கொட்டி விட்டது.

ஆளவந்தார்தான் ஆள் ஏற்பாடு செய்து செலவும் பண்ணி, ஸ்பெஷலாகப் படம் எடுத்திருக்கிறான் என்பதை மருதய்யன் ஊகித்துக் கொண்டான். பிறகு ஒரு நாள்...

அன்று வினாயக சதுர்த்தி பண்டிகை என்பது மருதய்யனுக்கு நன்றாய் நினைவிருந்தது. பிற்பகல் நாலுமணிக்கு, ஒரு சாமியாரின் சொற்பொழிவு நடந்தது. சமூக சேவாசங்கமொன்று, பண்டிகை நாட்களில், அம்மாதிரியான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, கைதிகளுக்குப் புத்தகங்களும் இனிப்புகளும் வழங்குவது வழக்கம்.

ஜெயிலரின் அலுவலக அறைக்கும் பூட்டிய கொட்டடிகளுக்கும் இடையே இருந்த திறந்த முற்றத்தில் சொற்பொழிவு நடைபெற்று முடிந்தது. இனிப்புக்கள் வழங்கப்பட்டன.

''அண்ணாத்தையோட பங்கு,'' என்று வசூலுக்குக் கை நீட்டினான் ஒரு கைதி.

அண்ணாத்தை என்று குறிப்பிட்டது முத்துரங்கத்தைத் தான்.



ஜனார்த்தனம் ஆட்சேபணை சொல்லாமல் தன் கையிலிருந்த கேக்கில் பாதியை அந்தக் கைதியிடம் தந்தார். மருதய்யனும் கொடுத்துவிட்டான்.

ஆளவந்தார் கையை உதறினான். ''அடடே, என் ஸ்வீட்டை இப்போதுதான் ரூமில் வைத்துவிட்டு வந்தேன். போய் எடுத்து வருகிறேன்,'' என்று தன் அறைக்குச் சென்றவன், ஒரு பொட்டலத்தைக் கொணர்ந்து அந்தக் கைதியிடம் கொடுத்தனுப்பினான்.

ஐந்து நிமிடம் சென்றிருக்கும்.

முத்துரங்கம் வெகு அமைதியாக வந்தான். ''இங்கே யாரப்பா என் உயிர் சிநேகிதன்? ரொம்பப் பிரியமாய் இதைக் கொடுத்தனுப்பியிருக்கிறானே?'' என்று ஆளவந்தார் அனுப்பிய பொட்டலத்தைப் பிரித்துக் காட்டினான்.

கடகடவென்று அத்தனை பேரும் சிரித்து விட்டார்கள்.

காகிதப் பொட்டலத்தில் ஒரு செங்கல் துண்டு இருந்ததுதான் காரணம்.

ஆளவந்தார் நிதானமாகச் சொன்னான்: ''போனால் போகிறதென்று இந்தக் கல்லைக் கையில் கொடுத்தேன். இன்னொரு தரம் என்னிடம் வாலாட்டினால், இது உன் தலைக்கு வரும் - இன்னும் கொஞ்சம் வேகமாக!''

மீண்டும் சிரிப்பலை.

ஆனால் முத்துரங்கம் ஒரு முறைப்பு முறைத்ததுமே எல்லாரும் கப்சிப்பென்று வாயைப் பொத்திக்கொண்டு விட்டார்கள் - ஒருவனைத் தவிர. சோணையன் என்று ஓர் அப்பாவி. அவனுக்கு மட்டும் முத்துரங்கத்தின் சீற்றம் உறைக்கவில்லை. விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே, ''அண்ணாத்தே, உடைச்சாலும் உடைச்சாரு. இந்த ஆள் உடைச்ச மாதிரி உன் மூக்கை எவனும் உடைச்சதில்லே! செம்மியா கொடுத்திட்டார்!' என்று திரும்பத் திரும்பச் சொல்லி மகிழ்ந்து விட்டான்.

அத்துடன் இருந்தாலும் பரவாயில்லை.

அடுத்த விஸிட்டர்கள் தினத்தன்று முத்துரங்கத்தின் 'காதலி' வந்திருந்தபோது, அவள் காதிலும் போட்டு விட்டான் விஷயத்தை. அவளும் சிரித்து விட்டாள்.

நாலு நாள் சென்றிருக்கும். தச்சுப் பட்டறையில் வேலை நடந்து கொண்டிருந்த சமயம்.

இழைப்பதும் அறுப்பதும் தட்டுவதும் வெட்டுவதுமாக அந்தத் திறந்த வெளியில் பல கதம்ப ஓசைகள் நிறைந்திருந்த சந்தர்ப்பத்தில் -

''ஐயோ! என் வயித்திலே என்னவோ பிறாண்டுதே?'' என்று ஓர் அலறல் கேட்டது.

அனைவரும் திடுக்கிட்டுக் திரும்பிப் பார்த்தபோது, சோணையன், கையிலிருந்த இழைப்புளியைத் தூர வீசிவிட்டுத் தரையிலே விழுந்து துடித்துப் புரண்டு கொண்டிருந்தான். ''ஐயோ! ஐயோ! தாங்கலியே! வயத்திலே எதுவோ பூந்திடுச்சுங்க!'' என்று அவன் கதறிய கதறல் அத்தனை பேரின் முகத்திலும் பீதியைப் பரப்பியது - ஒரே ஒருவனைத் தவிர. முத்துரங்கம் மட்டுமே, தன் பாட்டுக்கு ஒரு மர பீரோவுக்குக் கதவு பொருத்திக் கொண்டிருந்தான் அமைதியாக.

சோணையனைச் சிறைச்சாலைக்குள் இருந்த மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். பிறகு அங்கிருந்து பெரிய ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தினார்கள். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து, வயிற்றைக் கிறி ஆபரேஷன் செய்வதற்குள், குடலின் முக்கியப் பகுதிகள் அறுபட்டு, அவன் உயிரைப் பலி கொண்டுவிட்டது.

வயிற்றுக்குள்ளிருந்து நாலங்குல நீளமுள்ள ஒரு ஸ்டீல் ஸ்பிரிங்கை வெளியேடுத்தார்கள். அதை ஏன், எப்படி, எப்போது அவன் விழுங்கினான் என்று யாருக்கும் தெரியவில்லை.



## இருபத்து மூன்று

கலையத்துக்கு மேல் கலயமாகக் காலியாகிக் கொண்டிருந்தது. கிட்டனுக்குப் பயம் ஏற்பட்டு விட்டது. மருதய்யனின் குடிவேகத்தைக் கண்டு.

''மருது, போதும் நிறுத்திக்க,'' என்றான்.

''நீ ஷும்மா இரப்பா. இப்பத்தான் மனசிலே ஒரு நிம் ஏற்படுது,'' என்ற மருதய்யன், கதவருகே எட்டிப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த 'கடைக்காரரிடம்,' ''நீ ஊத்தய்யா,'' என்றான்.

அவன் இன்றைய சுதந்திர உலகத்தில் பாதியும் நேற்றைய சிறை உலகத்தில் பாதியுமாக இருந்தான். இருந்தாலும், முத்துரங்கத்தின் கொடூரமான தண்டனைகள் பிசிறில்லாமல் நினைவுக்கு வந்தன.

அதுவும் அந்தச் சோணையனின் மர்மமான, திகில் நிறைந்த மரணம்..., வயிற்றிலே எப்படி ஒரு ஸ்பிரிங் சுருள் வந்தது? திடீரென்று எப்படி அவன் குடல் நரம்புகளை அது கிழித்தது? ஆபரேஷன் செய்த சர்ஜன்கள் அதைப்பற்றி விளக்கத் தெரியாமல் விழித்தார்கள்.

''இப்படிக்கூட நடக்குமா என்ன?'' என்று மருதய்யனும் ஜனார்த்தனமும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுக்கு ஆளவந்தார் சொன்னான்:

''எஸ்கிமோக்களின் சித்திரவதை அது. ஒருவகைக் குச்சியைக் கூர் சீவிச் சுருட்டித் தின்பண்டத்துக்குள் அழுத்தி வைத்து அப்படியே விழுங்க வைப்பார்கள். வயிற்றுக்குள் தின்பண்டம் கரையக் கரைய, ஸ்பிரிங் விரிய ஆரம்பிக்கும். விரிவதற்கு இடமில்லாதபோது குடலை அறுத்துக் கொண்டு வெளிப்படும். அதே முறையில் முத்துரங்கம் ஒரு ஸ்பிரிங் சுருளைச் சோணையனுக்குக் கொடுத்திருக்கிறான்...''

''என்னப்பா அக்கிரமம்! அவனைப் பார்த்துச் சிரித்தான் என்பதற்காகக் கொலை - அதுவும் இப்படிச் சித்திரவதையாக - பண்ணுவதா? கொலைகாரப் பாவி!'' என்று காதைப் பொத்திக்கொண்டார் ஜனார்த்தனம்.

''சார்! இதைச் சும்மா விடலாமா?'' என்று மருதய்யன் பொருமினான்.

ஜெயிலுக்குப் புதிய ஆபீசரொருவர் வந்திருந்த சமயம் அது. கண்டிப்பும் கறாரும் நிறைந்த அவரிடம் ஆளவந்தாரும் அவனது இரு சினேகிதர்களும் சென்று முத்துரங்கம்தான் ஸ்பிரிங் வைத்திருக்க வேண்டும் என்று கூறிவிட்டு வந்தார்கள். அவர் தீவிரமாக விசாரணை நடத்தினார். முத்துரங்கத்துக்கு எதிராக ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

அன்று ஆளவந்தாருக்காகப் படுக்கையைத் தட்டிப் போட்டுக் கொண்டிருந்தான் மருதய்யன். ஆளவந்தார் பாத்ரூமுக்குப் போயிருந்தான்.

''அண்ணாத்தை ஆளவந்தாரைக் கூப்பிடறார்,'' என்று ஒரு கைதி வந்து தெரிவித்தான்.

''ஏன், எதுக்கு?''

''சும்மா கூப்பிடுவாரா? விருந்து ஏதாச்சும் தயார் பண்ணியிருப்பார்,'' என்று கண்ணைச் சிமிட்டினான் வந்தவன்.

''உங்க அண்ணாத்தை எங்கே இருக்கார் இப்ப?'' மருதய்யன் புறப்பட்டான்.

''ஸ்டோர் ரூமில்,'' என்று பதில் கிடைத்தது.

''அவர் கையிலே பேசறதை என் கையிலேதான் பேசட்டுமே?'' என்ற மருதய்யன், என்ன ஆபத்து காத்திருக்கிறதோ என்று சிறிதும் யோசிக்காமல் கிளம்பிவிட்டான்.



ஆட்டா மாவு மூட்டைகளின் மீது துண்டை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்திருந்தான் முத்துரங்கம். பக்கத்திலேயே ஒரு கைதி அன்றைய தினசரியைக் கொண்டு அவனுக்கு விசிறிக் கொண்டிருந்தான்.

''எசமான் வந்திட்டாரே? ஏம்பா, சர்க்கரை தேன் எல்லாம் ரெடியா இருக்குதா?'' என்று முத்துரங்கம் கேட்டான் அந்த ஆளிடம். பிறகுதான் திரும்பிப் பார்த்தான். மருதய்யனைக் கண்டதும், ''இந்தக் கழுதையை ஏண்டா அழைச்சிட்டு வந்தீங்க? அந்த ஆளவந்தாரையில்ல கூட்டியாரச் சொன்னேன்?'' என்றான்.

''அண்ணாத்தை, கொஞ்சம் நாக்கை அடக்கியே பேசு,'' என்றான் மருதய்யன் கோபத்துடன்.

''ஐயா மரியாதை கேட்கிறாரப்பா, கொடேன்,'' என்று முத்துரங்கம் சிரித்ததும், எண்ணெய் டின்களுக்குப் பின்னாலிருந்த ஓர் ஆள் எழுந்து வந்து மருதய்யனின் உச்சந்தலையில் புறங்கையால் ஒரு தட்டுத் தட்டினான். இரும்புத் தடியால் அடித்த மாதிரி வலி உயிர் போயிற்று.

முத்துரங்கம் சொன்னான்:

''அந்த ஆளவந்தாரோட ஜமாவிலே சேர்ந்தவன்தானா நீயும்? அப்ப அவனுக்குக் கொடுக்கிறதா இருந்த மரியாதையை உனக்குத் தர வேண்டியதுதான்!''

''எல்லாம் தயாராய் வைச்சிருக்கேன் அண்ணே'' என்றான் விசிறிக் கொண்டிருந்தவன்.

முற்ற முழுபக்க நிசப்தம் நிலவிய அந்த வேளையில் மருதய்யனின் அடி வயிற்றில் எதுவோ பிசைந்தெடுத்தது. ''அண்ணாத்தை, நான் எதுவும் தப்பா சொல்லலீங்க. சொல்லியிருந்தா மன்னிச்சிடுங்க,'' என்று நடுக்கத்துடன் சொன்னான்.

''தப்பாவா! நீயா! சொன்னியா! எந்தக் கழுதை சொன்னது?'' என்று முத்துரங்கம் சிரித்தான். ''அந்தச் சோணையனுக்குத் தின்னக் கொடுத்து, அவன் வயித்துக்குள்ளே ஸ்பிரிங் வைச்சது நான்தான்னு நீங்க மூணு பேரும் போய் அதிகாரிங்கிட்டே வத்தி வச்சதா யாரோ சொன்னாங்க. நான் அதையெல்லாம் நம்புவேனா என்ன? செச்சே! நீ நல்ல புள்ளையாச்சே!''

ஓர் ஆள் கையில் ஒரு பெரிய தேன் புட்டியையும், சற்றுச் சிறிய டின்னில் சர்க்கரையும் கொண்டு வந்து வைத்தான். ''சர்க்கரையைத் தண்ணிவிட்டுக் கரைச்சிடு. பூசுவதற்குச் சௌகரியமாயிருக்கும்,'' என்றான் விசிறிக்காரன்.

மூட்டை மீதிருந்து இறங்கி வந்தான் முத்துரங்கம். கழுத்தைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்த கட்டம் போட்ட துவாலையை அவிழ்த்து எடுத்தான். ''உனக்கு ரொம்ப நல்ல குரல், மருது. சினிமாவிலே பிளேபாக் பாடினால் லட்சம் லட்சமாய்ச் சம்பாதிப்பே. ஆனால் இப்ப அதை நாலு பேர் கேட்கக் கூடாது. உனக்கும் நல்லதில்லே, எனக்கும் நல்லதில்லே,'' என்று சொன்னவாறு, மருதய்யனின் வாயைச் சுற்றிக் கட்டினான்.

''நான்... நான்...'' என்று மருதய்யன் சொல்லத் திணறிக் கொண்டிருந்த போதே, மற்ற இருவரும் அவனுடைய சட்டையையும் நிக்கரையும் சரக்கென்று கிழித்தார்கள். அதைக் கொண்டே அவன் கை கால்களைக் கட்டிப் போட்டார்கள்.

ஒருவன் தேனையும் மற்றவன் சர்க்கரையும் நீரையும் மருதய்யனின் உடம்பெங்கும் பூசத் தொடங்கினார்கள்.

''ஜெயில் சரக்கானாலும் ரொம்ப உசத்திச் சரக்கு, மருது! அருமையான தேன். அருமையான சர்க்கரை,'' என்றான் முத்துரங்கம். ''இப்பத் தெரியாது உனக்கு. ராவு வரட்டும், பாரேன். இந்தக் கிடப்பிலே இருக்கிற நூத்துக்கணக்கான



எலிகளும், பெருச்சாளிகளும் லட்சக்கணக்கான எறும்புகளும் பல்லி பாச்சை பூரான்களும் வந்து உனக்கு முத்தம் முத்தமாய்க் கொடுக்கிறப்போ தெரியும், ஜெயில் சரக்கு எவ்வளவு தரமானதுன்னு!''

''ஐயோ!'' என்று மருதய்யனின் அடி வயிற்றிலிருந்து ஒரு கூச்சல் புறப்பட்டு, வாயிலிருந்த துணியிலே சிக்கி நின்று விட்டது.

உதவிக்கு யாரும் வரமாட்டார்கள் - தற்செயலாக வருகிறவர்கள்கூட இது முத்துரங்கத்தின் ஏற்பாடு என்று தெரிந்ததும் கண்டு கொள்ளாதது மாதிரி விலகி விடுவார்கள்......

''யார் அங்கே?'' என்று முத்துரங்கம் திடீரென்று அதட்டினான்.

மூவரும் நோக்கினார்கள். மருதய்யனுக்குத் திகைரென்றது. கிடங்கின் வாசல் கதவருகே நிற்பவர், ஜனார்த்தனம் அல்லவா!

ஸ்டோர் கிடங்கு இருட்டாக இருந்ததால், ஜனார்த்தனம் கண்ணைக் கசக்கிவிட்டுக் கொண்டு கூர்ந்து கவனித்தார். ''மருதய்யன் இங்கே வந்தானா?'' என்று கேட்டபடியே அருகே வந்து விட்டார்.

கீழே கிடப்பவன் மருதய்யன் என்று கண்டதுமே, ''என்னய்யா அநியாயம் இது? என்ன பண்ணுகிறீர்கள் இவனை?'' என்று உரத்த குரலில் கேட்டுவிட்டார்.

முத்துரங்கம் அவர் தோளில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டிச் சிரித்தான். ''பெரியவரே, உங்க வயசு என்ன?'' என்றான்.

அவருக்குப் புரியவில்லை. அவன் மீண்டும் வினவினான். ''வயசு என்னான்னு கேட்டேன். அறுபது இருக்குமா?''

''ஆகப் போகிறது. எதற்கப்பா கேட்கிறாய்?'' என்றார் ஜனார்த்தனம் திகைப்புடன்.

''அதாவது பெரியவரே, வயசு அறுபது ஆயிடுச்கன்னா கன்னு சரியா தெரியக்கூடாது. காது சரியா கேட்கக்கூடாது. இல்லீங்களா?'' ஜனார்த்தனத்தின் மோவாயை வருடிக் கொடுத்தபடி பேசினான் முத்துரங்கம்.

''என்னப்பா சொல்கிறாய் நீ?''

''புரியலீங்களா? இங்கே நீங்க எதுவும் பார்க்கவு மில்லை. கேட்கவுமில்லே. அப்படி நீங்க பார்த்ததாகவோ கேட்டதாகவோ யாராச்சும் சொன்னாங்கன்னு வைச்சுக்குங்க. அப்பாலே மெய்யாவே நீங்க எதையும் பார்க்கவும் முடியாமே போயிடும்; கேட்கவும் முடியாமே போயிடும். தெரிஞ்சுதுங்களா?'' விசிறிக்காரனிடம் திரும்பினான் அவன். ''பெரியவர் வழி தெரியாமல் வந்துட்டாரு. மறுபடி வழி தெரியாம வேறே எங்காச்சும் போயிடப் போறாரு. பாவம் பத்திரமாய்க் கொண்டுபோய் விட்டுவிடு. வணக்கம் பெரியவரே. போய்வாங்க.'' தலைக்குமேல் கையை உயர்த்திப் பெரிதாய்க் கும்பிடு போட்டான் முத்துரங்கம்.

ஆத்திரத்தினால் ஜனார்த்தனத்தின் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. ''என்னய்யா, இது ஜெயிலா இல்லை உன் சொந்த வீடா? கேள்வி முறை கிடையாதா இங்கே? அந்தக் சோணையனை ஸ்பிரிங் கொடுத்துக் கொலை பண்ணினாய். இப்போ இன்னொரு வகை தண்டனையா?'' என்று கூச்சலிட்டதும், முத்துரங்கத்தின் முகம் கறுத்தது.

''ஆளவந்தாருக்கு ஒரே ஒரு கூட்டாளிதான்னு நினைச்சேன். கிழவனார் வேறே இருக்காரா? இவரையும் கவனிக்க வேண்டியதுதான்,'' என்று அவன் சொன்னதும்,



''நீங்க போயிடுங்க! போயிடுங்க!'' என்று சொல்கிற மாதிரி மருதய்யன் கையைக் காலை உதைத்து, அடித் தொண்டையில் உறுமி, எச்சரிக்கை செய்தான்.

பிறகுதான் தன்னுடைய அசட்டுத்தனத்தை அவர் உணர்ந்து கொண்டார் போலும். முத்துரங்கத்தின் ஆள் தன்னைப் பிடிக்குமுன் வாசலுக்கு ஓடி விட்டார்.

மற்றவர்களும் போய்விட்டார்கள். எங்கோ ஒரு கதவு சாத்திக் கொள்ளும் சத்தம் கேட்டது. முள்ளைப்போல் இருட்டு உறுத்தத் தொடங்கியது.

கொஞ்சம் கொஞ்சமாய் எறும்புகள் கடிக்கதர் தொடங்கின. மருதய்யன் தரையோடு தரையாக உடம்பைத் தேய்த்தான். ஆனால் ஓரிடத்தில் கடிப்பது நின்றால் இன்னோரிடத்தில் ஆரம்பமாயிற்று எலிகளும் எறும்புகளும் தன்னைக் கொன்றுவிடுமோ விடாதோ, ஆனால் அந்தச் சித்திரவதையால் தனக்குப் பைத்தியம் பிடிக்கப் போவது மட்டும் நிச்சயம் என்று நினைத்துக் கொண்டான். உருண்டு புரண்டான்... கண்கள் செருகின...

அங்கே, ஜனார்த்தனம் தான் கண்ட கோரத்தைச் சொல்லவும் முடியாமல், மறைக்கவும் முடியாமல் தவித்தார். அதற்குள் ஆளவந்தாரே கேட்டுவிட்டான்.

தினம் படுக்கப் போகுமுன் ஆளவந்தாருக்கு உ போட்டுக் கொடுக்க மருதய்யன் வருவது வழக்கம். அன்று மணி பதினொன்றாகியும் வரவில்லை. ''என்ன சார் ஜனார்த்தனம், மருது ஏன் இன்னும் வரவில்லை?'' என்று ஆளவந்தார் சாதாரணமாகத்தான் விசாரித்தான்.

ஜனார்த்தனம் விம்மிவிட்டார். ''அவனை... அவனை... அந்தப் பாவி முத்துரங்கம் கொலை செய்து கொண்டிருக் கிறானய்யா,'' என்று தன்னை மறந்து கதறிவிட்டார்.

''நிதானமாகச் சொல்லுங்கள்.''

அவர் சொல்லி முடித்தார். ''சரி, நீங்கள் போய்ப் படுங்கள்,'' என்றான் ஆளவந்தார்.

''எப்படியப்பா...''

''காலையில் நீங்கள் மருதய்யனை ஒரு தீங்கும் இல்லாமல் உருப்படியாய்ப் பார்ப்பீர்கள். போங்கள்,'' என்று அவன் அழுத்தமாகச் சொன்ன பிறகே அவர் சென்றார்.

பரபரப்பு ஏற்படுத்துவது ஒன்றுதான் இப்போது செய்யக் கூடாத காரியம் என்று அவன் உணர்ந்திருந்தான். குற்றுயிரும் குலையுயிருமாய் கிடக்கக் கூடிய மருதய்யன் ஏதாவது சொல்லிவிடப் போகிறானே என்பதற்காக, முழுக்கவே வாய் திறக்க முடியாதபடி முத்துரங்கம் செய்து விடுவான்...

ஆளவந்தார் ஆபீசரைப் போய்ப் பார்த்ததும் யாருக்கும் தெரியாது. அவர் ஸ்டோர் ரூமைச் செக் பண்ண வேண்டுமென்று நடு நிசியில் புறப்பட்டதும் எவருக்கும் தெரியாது. காதும் காதும் வைத்த மாதிரி எல்லாம் நடந்தது.

இரண்டு நாள் கழித்து, மயக்கம் தெளிந்து ஆஸ்பத்திரியில் கண் விழித்தபோதுதான் மருதய்யனுக்கு ஆளவந்தார் செய்த வேலைகள் தெரிந்தது.

இந்தத் தடவை முத்துரங்கத்தின் மீது குற்றம் ருசுவாகிவிட்டது. மேற்கொண்டும் இரண்டு வருடம் அவன் சிறைவாசம் அனுபவிக்க வேண்டும் என்று அதிகாரிகள் தண்டனை தந்தார்கள்.

''நீங்க மூணு பேரும் என் கையிலேயிருந்து தப்ப முடியாது கண்ணு,'' என்று ஆளவந்தாரிடம் கறுவினான் முத்துரங்கம்.

''அடுத்த வாரம் ஜனார்த்தனம் விடுதலையாகிறார். அதற்கு மறுநாள் மருதய்யனும், அதற்கடுத்த நாள் நானும் விடுதலையாகிவிடுகிறோம்,'' என்று சிரித்தான் ஆளவந்தார்.



''ஜெயிலைப்பத்தி உனக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான், தம்பி! ஒரு தடவை இங்கே வந்தவன் திரும்பித் திரும்பி வந்துக்கிணேதான் இருப்பான். எப்ப நீங்க வந்தாலும் சரி, நான் காத்துக்கிணு இருப்பேன்!'' என்று முத்துரங்கம் உறுமினான்.

''வந்தால் பார்த்துக்கொள்,'' என்றான் ஆளவந்தார்.

சாராயக் கலயத்துடன் உட்கார்ந்திருந்த இந்த வேளையில், அன்றைய ஸ்டோர் ரூம் பயங்கரமும், முத்துரங்கத்தின் அச்சுறுத்தலும் மருதய்யனுக்குப் பளிச்சென்று நினைவு வந்தன. ஆனால் தலையிலே போதை ஏறியிருந்ததால் சற்றுமுன் இருந்த பயத்தை இப்போது காணவில்லை.

''போதும் மருது, எழுந்திரு,'' என்றான் கிட்டன், அவனுடைய மாறுதலைக் கண்டு அச்சத்துடன்.

''டாய்! இவன் யார்ரா இவன், போறும் போறும்னு! போடா அப்பாலே!'' என்று கூச்சலிட்ட மருதய்யன் அவனைப் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளிவிட்டான்.

மல்லாந்து விழுந்த கிட்டன் எழுந்து கொண்டு திகைப்புடன் நோக்கினான் தோழனை. ''மருது! வேணாம். பேசாமே வா. ரொம்பப் பயந்து போயிருக்கியேன்னு கொஞ்சம் சரக்குப் போடவைச்சேன். இப்ப நேர் எதிராப் போச்சு. சண்டைக் காளை மாதிரி இருக்கிறியே?''

''ஆமாண்டா! சண்டைக் காளைதான்! அந்த முத்துரங்கம் மட்டும் வரட்டும்! ஒரே வெட்டு!''

கிட்டனுக்குத் திகில் ஏற்பட்டது. ''சரி, சரி. இங்கேயே படுத்துக்க,'' என்று கூறிவிட்டு, இனிமேல் கொடுக்காதீர் என்று கடைக்காரரை எச்சரிக்கை செய்தபின் வெளியே வந்தான்.

தெருக்கோடிக்குப் போயிருக்க மாட்டான். ''அண்ணே! கிட்டண்ணே!'' என்று ஒரு பெண் குரல் அவனை அழைத்தது.

செங்கம்மாதான் வந்து கொண்டிருந்தாள். ''எங்கண்ணே இத்தினி தொலை? மருது வந்திருக்குதா உன்னோடே?'' என்றாள்.

''ஆமாம். குடிச்சிட்டு ஆடுகிறான். நீ போய் நல்ல புத்தி சொல்லி, வீட்டுக்கு அனுப்பு! அதோ அதுதான் கடை!''

செங்கம்மா அந்தக் கள்ளச் சாராயக் கடையை நோக்கி நடந்தாள் ஆசையுடன்.

## இருபத்து நான்கு

**ம**ருதய்யன் போதையில் இருக்கிறான் என்று கேள்விப்பட்டதும் செங்கம்மாவுக்கு ஏற்பட்ட முதல் உணர்ச்சி மகிழ்ச்சிதான். தன்னுடைய சாகசங்களுக்குக் கட்டுப்படாமல் விலகிப் போய்க் கொண்டேயிருப்பவன், இன்று தன்னை மறந்த வெறியில் தானாகவே மண்டியிட்டுக்கொண்டு அவளிடம் வருவான் என்று எதிர்பார்த்தாள். என்றாலும் உடம்பில் கிளர்ச்சியும் உள்ளத்தில் பரபரப்புமாக அவள் கிட்டன் காட்டிய கடையை அடைந்தபோது மருதய்யன் அவ்வளவு அட்டகாசமாய்ச் சத்தம் போட்டுக் கொண்டிருப்பான் என்று நினைக்கவில்லை.

''என்னா இது ரகளை, மருது! நல்லாவா இருக்குது? எந்திரி,'' என்று அவன் கையைப் பற்றினாள்.

மருதய்யன் அவளை உறுத்து நோக்கி, ''ஏய், செங்கம்! நீ குறுக்கே வராதே. போயிடு!'' என்றான்.

கடைக்காரர் செங்கம்மாவிடம் கெஞ்சினார்: ''ஏம்மா, உனக்கு வேண்டிய ஆளா இவர்? புண்ணியம் உண்டு உனக்கு. புத்தி சொல்லிக் கூட்டிக்கினு போம்மா.''

''ஏய்! எவண்டாவன் எனக்குப் புத்தி சொல்றவன்?'' என்று செங்கம்மாவின் பிடியிலிருந்து திமிற முயன்றான் மருதய்யன்.



ஆனால் செங்கம்மா உடும்புப் பிடியாய் அவனைப் பிடித்திருந்தாள். ''மருது, கிடக்கிறாரு இவரு. ககமாலத்தோடே உனக்கு என்ன பேச்சு? ராசா இல்லே; என்னோட ஊட்டுக்குப் போகலாம் வா,'' என்று அவனை அணைத்துக் கொண்டு ஒருவழியாய் வெளியேறினாள்.

நல்ல காலமாய், அந்தக் கடைக்கும் அவள் குடிசைக்கும் தூரம் குறைவாய்த்தான் இருந்தது. இல்லாவிட்டால் நடுச் சாலையில் அவள் பிடிக்கு அகப்படாமல் திமிறி முரண்டிக்கொண்டு நடைபோடும் மருதய்யனும் அவனுக்கு உடந்தையாயிருக்கும் செங்கம்மாவும் எந்தப் போலீஸ்காரர் கண்ணிலேனும் பட்டு, ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டி நேர்ந்திருக்கும். அந்தக் குறைந்த தூரத்தை வேகமாகக் கடந்தபோது, அவனைத் தாங்கிக் கொண்டதாலும், பிடித்துக் கொண்டதாலும், சில சமயம் தன் மீது சாய்த்துக் கொண்டதாலும், செங்கம்மாவின் ஆசைகள், கிளறி விடப்பட்ட நெருப்பாக அவளுள் பரவி, மருதய்யனைப் பார்க்கும்தோறும் பார்க்கும்தோறும் புதிய புதிய வேட்கைகளைக் கொழுந்து விட்டெரியச் செய்தன.

ஆனால் குடிசையை அடைந்தபோது அவனுடைய போக்கு, இன்னும் முரட்டுத்தனமாக முறுக்கேறியிருந்ததைக் கண்டு அவளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. ''ஏ, கழுதை! சரக்கு பாக்கி இருந்திச்சே, எங்கே அது? கொண்டாரல்லே?'' என்று கூச்சல் போட்டான் அவன்.

அவள் கொண்டு வரவில்லை. அதைச் சொல்லி அவனைக் கோப மூட்ட வேண்டாமென்று, ''கொஞ்ச நேரம் தூங்கு, மருது,'' என்று சமாதானப்படுத்த முயன்றவளாக, பாயை விரித்துப் போட்டாள்.

காலால் ஒரு கெந்து கெந்தி அந்தப் பாயைப் பறக்க வைத்தான் அவன். ''தூங்கவா சொல்லுறே என்னை?

மாட்டேன். இந்த மருது தூங்க மாட்டான். தெரியுதா? தூங்கவே மாட்டான். எப்பத் தெரியுமா அவனுக்குத் தூக்கம்?''

''எப்ப?'' என்றாள் அவள் - ஏதாவது பேச்சுக் கொடுத்து அவனைச் சாந்தப்படுத்த வழியேற்படாதா என்ற அரை நம்பிக்கையுடன்.

''அந்தக் கடைக்காரன் என்னா பேச்சு சொல்லிட்டான் என்னை! புத்தி சொல்லணுமாமில்லே எனக்கு! அவனை ஒரே வெட்டா வெட்டிப் போடணும்! அப்பாலேதான் எனக்குத் தூக்கம்!''

அவனுடைய வெறித்த கண்களையும் வீராப்புப் பேச்சையும் கண்டு அவளுக்கு அச்சம் ஏற்பட்டது. அவனை இந்தக் குடிசைக்கு அழைத்து வந்ததே தப்போ என்று எண்ணிக் கொண்டாள். ஒரே நிமிடத்தில் அவனை வெளியேற்றி விடலாம். அது ஒன்றும் கஷ்டமில்லை. ஆனால் இந்த நிலையில் அவன் வெளியே போனால் ஏதாவதொரு சிக்கலில் மாட்டிக் கொள்வது நிச்சயம் என்று அவளுக்குப் புலப்பட்டது. அதற்கு அவள் மனம் இடம் தரவில்லை.

''மருது, என் கண்ணில்லே? கொஞ்சம் கம்முனு படு.'' என்று கொஞ்சியவள், அவன் வீசியெறிந்த பாயை மறுபடி விரித்து, அவனை அழுத்திப் பிடித்துப் படுக்க வைத்தாள். குடிசைக்குள் நிலவிய புழுக்கத்தினால் அவன் முகத்திலும் மார்பிலும் வியர்த்து நனைந்திருந்தது. புடவைத் தலைப்பால் முகத்தை ஒற்றியவள், சட்டைப் பித்தான்களை விலக்கி, மார்புக்குள்ளும் துடைத்து விட்டாள். சட்டைப் பையில் ஒரு பால் பாயிண்ட் பேனாவும், ஒரு பழைய பர்சும் இருந்தன. அவனது முகத்தை ஆசையுடன் பார்த்தபடியே பர்சைப் பிரித்தாள். அவனுடைய மார்பைத் தடவிக் கொடுத்ததால் கொஞ்ச நேரமாய் மறைந்திருந்த தாபம் மறுபடியும் அவளுள் துளிர்த்திருக்கவே, 'உக்கும்! பெரிய லட்சாதிபதி!' என்று அவன் மோவாயைச் செல்லமாகத் திருகிவிட்டபடி



பர்சிலிருந்த இரண்டொரு காசுகளைக் கீழே தட்டினாள். கூடவே ஒரு தபால் கார்டும் விழுந்தது.

அவனை வரச் சொல்லி அவள் எழுதிப் போட்ட தபால் கார்டு. அதை அவன் இத்தனை பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கிறானென்பதில் அவளுக்கு ஆச்சரியமும் நம்பிக்கையும் குதூகலமும் ஏற்பட்டன.

''மருது, எத்தினி ஆசையா இதை வைச்சுக்கினு இருக்கே?'' என்றாள்.

''நான் எது வேணா வைச்சுப்பேன். நீ என்ன கேட்கிறது?''

''இந்தக் கார்டு. நீ கிராமத்துக்குப் போயிருந்தப்போ நான் எழுதிப் போட்டேனே, அது.''

அரைக் கண்களைத் திறந்து அந்தக் கார்டை வாங்கிப் பார்த்தான் அவன்.

கிராமத்தில் எந்தச் சந்தர்ப்பத்தில் அது வந்து சேர்ந்தது என்பது சொப்பனத்தில் காணுகிற மாதிரி அவனுக்கு நினைவு வந்தது.

மறுநிமிடம், ''வுடு! வுடு என்னை!'' என்று அவளைத் தள்ளிவிட்டு எழுந்து கொண்டான். ''இப்பவே ஊருக்குப் போகணும்! அந்தப் பொண்ணு காத்திட்டிருக்கும்!''

அவனிடம் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஒரு வினாடி மறந்துவிட்டாள் செங்கம்மா.

''தா, என்ன பொண்ணு கிண்ணுன்னு பினாத்தறே?'' என்றாள்.

''யார் பினாத்தறாங்க? காவேரியைப் பார்த்திருக்கியா நீ? பச்சைக் கிளி!''

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''மெய்யாலுந்தான் சொல்றியா? யார் அந்தக் கசமாலம்?''

''செங்கம், மரியாதையாய்ப் பேசு!'' என்று அவள் கையை முறுக்கினான் அவன். ''காவேரியைப் பத்தி என் காதுபட எதுனாச்சும் சொன்னியோ, ஆமாம்! நான் என்ன செய்வேண்ணு எனக்கே தெரியாது.''

நிஜமாகவே அவன் ஒரு பெண்ணைப் பற்றித்தான் பேசுகிறான் என்பதும், உண்மையாகவே அவளிடம் பிரியம் காட்டுகிறானென்பதும் புரிந்தபோது அவளுக்கு ரத்தம் கொதித்தது. இத்தனை நாள் பழக்கத்தில் அவள் அவனிடம் அந்த ஒரு சந்தேகம் மட்டும் கொண்டதில்லை. விலகி விலகிப் போனாலும் தன்பால் திரும்பி விடுவான் என்று நம்பியிருந்தாளே தவிர, தன்னைத் தவிர இன்னொருத்தியிடம் அவன் மனம் செல்லக் கூடும் என்று அவள் எண்ணியது கிடையாது. குடி மயக்கத்தில் அவன் ஏதோ உளறுகிறான் என்று தள்ளிவிடவும் அவளால் முடியவில்லை.

''மருது! யாரு அந்தக் காவேரி?'' என்று ஆத்திரம் ஒருபுறம் இதயத்தைப் பிசைய, துயரம் மறு பக்கம் தொண்டையை அடைக்க, கேட்டாள்.

''வுடம்மே என்னை! எனக்கும் அதுக்கும் கண்ணாலம் நடக்கப் போவுது! எங்க அம்மா பார்த்து நிச்சயம் செஞ்சிருக்குது! இன்னைக்கே கிளம்பணும். எத்தினி மணிக்குப் பஸ்? பஸ் இல்லாட்டி டாக்ஸி!''

கால்களின் தள்ளாட்டம் அப்படியே இருந்தபோதிலும், எழுந்து புறப்பட்டு விடுகிற மாதிரி அவன் ஆயத்தம் செய்தான்.

செங்கம்மாவினால் சும்மா இருக்க முடியவில்லை. ''அடச் சீ! உட்காரு!'' என்று அவனைக் கையைப் பிடித்து இழுத்தாள் கீழே. அந்த வேகத்தில் அவன் மல்லாந்து விழுந்து, பின்னர் எழுந்து உட்கார்ந்தான்.

''ஏய், என்னைத் தடுக்காதே! தடுக்காதேன்னா தடுக்காதே!'' என்று அவன் சத்தமிட்டான்.



''குறுக்கே விழுந்து மறிப்பேன்!'' என்றாள் செங்கம்மா ஆங்காரம் தாங்காமல். ''நான் உயிரோட இருக்கிற வரைக்கும் இன்னொரு பொண்ணு உன்னைத் தொட்டிடுவாளாங் காட்டியும்? இப்பவே உன் ஊருக்குப் போய் அந்தப் பொம்பளையைப் பார்த்து, 'இந்தாடி, என் வழிக்கு வந்தியோ, கொலை விழுந்திடும்'னு சொல்லிட்டு வராட்டி என்பேரு செங்கம்மா இல்லை!''

''என்ன, என்ன? கொலையா விழும்? அங்கே இல்லேடி! இங்கே!'' பொங்கி வந்த சீற்றத்துடன் அவளது அடர்ந்த முடியைப் பற்றினான் அவன் ராட்சதத்தனமாக. ''போயிடுவியா நீ? காவேரியும் நானும் கண்ணாலம் கட்டிக்கிறதை நிறுத்திடுவியா?''

''நிச்சயமா! கண்டிப்பா!'' என்றாள் அவள். ''வுடு என் முடியை! வுடறியா இல்லையா?''

''நீ ஊருக்குப் போவே?'' என்றான்.

''போவேன்.'' என்றாள் அவள்.

''காவேரி கையிலே சொல்லுவே?''

''சொல்றதென்ன, அவள் முகரையைப் பேர்த்திட்டு வருவேன்.''

''பேர்ப்பேடி பேர்ப்பே!'' என்று கத்தியவன், புறங் கையால் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

அந்த அடி அவள் கன்னத்தில் படாமல், சற்று விலகி, நெற்றிப் பொட்டில் பட்டது. அடுத்த வினாடி, பேச்சு மூச்சற்று, துளியும் ஓசை இல்லாமல், வெட்டிய வாழை மாதிரி அவள் கீழே சாய்ந்தாள். கண்கள் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தன. திறந்த வாய் திறந்தபடியே நின்று விட்டது.

தான் செய்த காரியத்தின் விளைவை முற்றிலும் உணராதவனாக அவன், ''போறேன்னியே? போயேண்டி, போயேன்,'' என்றான் அவளைப் பார்த்து.

அவனிடமிருந்து பதில் எதுவும் வரக் காணோம்.

பயங்கரமான சந்தேகம் உதித்தது. அவன் மார்பில் கை வைத்துப் பார்த்தான். இருதயம் துடிக்கவில்லை. மூக்கில் கை வைத்துப் பார்த்தான். சுவாசம் வரவில்லை.

ஜனார்த்தனம் சந்தோஷமாயிருந்தார். மடியில் படுத்திருந்த பேத்தியின் பட்டுக் கூந்தலை அவர் கைகள் கோதிக் கொண்டிருந்தன. மனத்தில் எல்லையற்ற நிம்மதி.

உள்ளே மகன் மணிகண்டன் மேஜை டிராயரைத் திறந்து மூடும் ஓசையும், சமையலறையில் சாரதா அடுப்பிலிருந்து பாத்திரத்தை இறக்கி வைக்கும் ஒலியும், மாடியறையில் அவன் தங்கை மனோ படித்துக் கொண்டே குறுக்கும் நெடுக்கும் நடக்கும் சத்தமும் அவர் காதுக்குக் கேட்டுக் கொண்டிருந்தன. ஒழுங்கான, முறையான குடும்பத்துக்கு எந்த ஓசைகளெல்லாம் தூய்மை சேர்க்குமோ அவற்றை அவர் செவிமடுத்து, இந்த நிலைமையை ஏற்படுத்தித் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருந்தார்.

நாலு நாள் முன்பு அவர் நினைத்திருப்பாரா இதையெல்லாம்?

துறைமுக வேலை சம்பந்தப்பட்ட காண்டிராக்டில் லஞ்சம் வாங்கிவிட்டதாக மணிகண்டன் பேரில் குற்றச்சாட்டு வந்தவுடன், மேலே உள்ளவர்களும் அதற்கு உடந்தை என்று ஜோடிக்க அவன் முயன்றான். மேலதிகாரியைப் போல் பொய்க் கையெழுத்திட்டு ஒரு கடிதம் தயாரிக்கத்தான் அப்பாவின் உடந்தை அவனுக்கு மிகவும் தேவைப்பட்டது. ஆனால் என்ன தாஜா செய்து பார்த்தும் அவர் கைகொடுக்க மறுக்கவே, ''அடுத்த வேளைச்சாப்பாட்டை வேறு எங்காவது பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று ஈவிரக்கமில்லாமல் விரட்டிவிட்டார்கள் மகனும் மருமகளும்.



அனாதைபோல் திரிந்த இரண்டு நாளும் அவர் தன் நிலைமையைப்பற்றிக் கவலைப்படவில்லை. மகனைக் காப்பாற்ற வேறே வழியே இல்லையா என்றுதான் தவித்தார். ஒரு யோசனை - அவனுடைய மேலதிகாரியைத் தானே நேரில் சென்று சந்தித்து, அவர் காலைப் பிடித்துக்கொண்டு, தன் ஒரே மகன்மீது இரக்கம் காட்டும்படி மன்றாடினால் என்ன?

அப்படித் தோன்றிய வேளை மணிகண்டனின் யோகமான வேளை.

பலமணி நேரம் காக்க வைத்த பின்னரே, அவரை உள்ளே வரச்சொன்ன அந்த அதிகாரி, கதவைத் தாண்டி அவர் நுழைந்ததுமே திடுக்கிட்டெழுந்து அவரைக் கூர்ந்து கவனித்தார். ''சார்... நீங்கள் ஜனார்த்தனம் இல்லை?... திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் கந்தசாமி ஸ்டோர்ஸில் குடியிருந்தீர்கள் இல்லை?'' என்றார்.

ஜனார்த்தனத்துக்கு அவரை நினைவு வரவில்லை. முப்பது வருடங்களுக்கு முன்பு இந்த அதிகாரி சிறுவனாயிருந்தபோது, தந்தையற்ற அவனுக்குத் தானே பள்ளிக்கூடச் சம்பளம் கட்டி ஒரு வருட காலம் படிக்க வைத்தது அவருக்கு மறந்தே போயிருந்தது. ஆனால் இன்று நல்ல நிலைமையில் முன்னுக்கு வந்திருக்கும் அந்த அதிகாரி அதை மறக்கவில்லை.

விளைவு: மணிகண்டனின் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று. சிறைக்குப் போகாதபடி தடுத்து, டிபார்ட்மெண்ட்டல் தண்டனையோடு அவனை விட்டுவிட்டார்கள். ''உன் அப்பாவின் முகத்துக்காகத்தான் இந்த மன்னிப்பு. இனிமேலாவது புத்தியோடு பிழை,'' என்று எச்சரித்து அனுப்பினார் மேலதிகாரி.

பொய்க் கையெழுத்துப் போடாவிட்டாலும், வேறு விதத்தில் அவனைக் காப்பாற்றிவிட்டாரே! அந்தத் தந்தையை

எப்படி இனிமேல் ஒதுக்க முடியும்? தலை குனிந்துகொண்டு அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றான் மணிகண்டன்.''

''என்னை மன்னியுங்கள் அப்பா!'' என்று பிள்ளை அவர் காலில் விழுந்துவிடவில்லைதான்; 'நாங்கள் உங்களை ரொம்பக் கொடுமைப்படுத்திவிட்டோம்' என்று மருமகள் கண்ணீர் உகுக்கவில்லைதான். 'எதையும் மனசில் வைத்துக் கொள்ளாதீர்கள் மாமா,' என்று மனோ சொல்லவில்லைதான்.

ஆனால் இந்தக் குடும்பத்தில் ஒருவராக அவரைச் சேர்த்துக் கொண்டுவிட்டார்கள். மன ஒட்டுதல் மெள்ள மெள்ள ஏற்பட்டாலும் பரவாயில்லை.

அவர் மனத்தில் நிறைவு உண்டாகிவிட்டது.

தங்கப் பதுமை போல் மடியில் படுத்திருக்கும் பேத்தியைப் பாசத்துடன் நோக்கினார். தூக்கத்தில் சிரித்துக் கொண்டபோது அதன் கன்னத்தில் அழகுக் குழி விழுந்தது.

''சாரதா, குழந்தை தூங்கி விட்டாளம்மா. உள்ளே எடுத்துப்போ,'' என்று குரல் கொடுத்தார். மருமகள் வந்து குழந்தையை அணைத்து எடுத்துக் கொண்டு சென்றாள்.

''கொஞ்சம் வெளியே போய் வருகிறேன்,'' என்று ஜனார்த்தனம் தெருவில் இறங்கினார்.

தன்னுடைய நிம்மதியான வாழ்வை, சந்தோஷத்தை, உடனே மருதய்யனிடம் தெரிவிக்க வேண்டும் என்று அவருக்குத் துடிப்பாயிருந்தது. அவன் எங்கே இருப்பானோ? எங்கே இருந்தாலும் சரி, செங்கம்மாவைத்தான் சுற்றிக் கொண்டிருப்பான்...

அந்தப் பாலாஜிநகர் பள்ளிக் கூடத்துக்குப் பக்கம்தான் அவள் குடிசை. நினைவு இருக்கிறது.

அதை நோக்கி நடந்தார்.



## இருபத்தைந்து

பரபரவென்று மருதய்யன் கண்ணைத் தேய்த்துக் கொண்டு மறுபடி நோக்கினான் கீழே கிடக்கும் உடம்பை. கடுகத்தனையும் அசைவில்லாதவளாகக் கிடந்தாள் அவள். கிடப்பது ஒரு பெண் என்கிற உணர்வும், அந்தப் பெண் செங்கம்மாதான் என்ற அறிவும் அவன் மூளையில் பதியச் சில வினாடிகள் கழிந்தன.

ஏன் இவள் பேசா மடந்தையாகி விட்டாள் என்று ஆச்சரியப்பட்டான். நாம் ஏதோ சொன்னோம்... இல்லை, அடித்தோம்... செய்யக்கூடாத ஒன்றைச் செய்து விட்டோம்... கிறுகிறுவென்று திகில் அவன் மனத்தில் படர்ந்து பரவியது, பிளாட்டிங் காகிதத்தில் மசிப் பொட்டுப் பரவுவது போல.

''செங்க... செங்கம்மா... இப்படிப் பாரு! என்னைப் பாரேன். நான்தான மருது. நான் உன்னை ஒண்ணும் சொல்லலே. இனிமே சொல்ல மாட்டேன். நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன். கண்ணைத் தொறந்து ஒரு தபா பாரேன்...'' என்று மன்றாடிக் கொண்டே அவளை உலுக்கியெடுத்தான். ஆனால் அவன் குரல் நெஞ்சக் குழிக்கு மேலே வந்து நாக்கில் உருவாகும் போதே சிதைந்து, சீரழிந்து வெறும் கிசுகிசுப்பான உளறலாக வெளிப்பட்டது. தன் குரலைத் தானே கேட்கக் கூட அவனுக்கு அச்சமாயிருந்தது.

அவளை உலுக்குவதை நிறுத்திவிட்டு எழுந்து கொண்டான். குடிசையின் மூலையில் பானையில் தண்ணீர் இருந்தது. சில்லென்ற அந்தக் குளிர்ந்த நீரைத் தன் முகத்தில் அறைந்து கழுவிக்கொண்டான். நினைவுகள் நன்றாகத் திரும்பின. சலனமற்றுக் கிடக்கும் செங்கம்மாவைப் பார்த்ததும், பழையபடி போதையிலேயே அமிழ்ந்திருக்கப்

கூடாதா என்று எண்ணுமளவுக்குத் திகில் அவனை ஆட்டிப் படைத்தது. அண்டை அசலில் யாரையேனும் கூப்பிடலாம் என்றெண்ணியவனாக வாசல் வரை சென்று விட்டான். கழுத்துக்குச் சுருக்கு வர அதைக் காட்டிலும் சுருக்கு வழி கிடையாது என்று அறிவு இடித்துரைத்தது. குடிசைக்குள் திரும்பிச் சுவரோடு சுவராகப் பதுங்கிக் கொண்டான். திறந்த விழிகளுடன் கிடக்கும் செங்கம்மா, 'உன் மேலே கொள்ளை ஆசை வைச்சேனே, அதுக்காகவா என்னைக் கொலை செஞ்சிட்டே மருது?' என்று குற்றம் சாட்டுவது போலிருந்தது. அவனுடைய இறுகிய முகத்தின்மீது ஓர் ஈ சுற்றிச் சுற்றிப் பறந்துவிட்டு உட்கார்ந்து கொண்டது. நடுங்கும் கையை ஆட்டி அதை விரட்டினான். ''செங்கம்... நான் வேணும்னு செய்யல்லே. தெரியாத்தனமா, கோவத்திலே, குடி வெறியிலே என்னவோ செஞ்சிட்டேன்...'' என்று வாயை இரு கைகளாலும் பொத்திக் கொண்டு விம்முகையில் -

வெளியே யாரோ வருகிற மாதிரி காலடியோசை கேட்டது. சரேலெனப் பாய்ந்து கதவின் மறைவில் ஒடுங்கிக் கொண்டான். காலடிச் சத்தம் அருகே அருகே கேட்டுக் கொண்டே வந்து, வாசலுக்கு நேரே டக்கென்று நின்று விட்டது. மருதய்யன் மூச்சு விடுவதைக்கூட அடக்கிக் கொண்டான். படபடவெனத் துடிக்கும் இருதயத்தின் மீது அவனுக்கு அடங்காச் சினம் உண்டாயிற்று.

''செங்கம்... செங்கம்மா...''

அந்தக் குரல்! இரண்டொரு வினாடிகள் பிடித்தது, அது யாருடையதெனக் கண்டு கொள்ள.

''செங்கம்மா! உள்ளே இருக்கிறாயா?'' என்று இரண்டாம் தடவையும் குரல் ஒலித்தபோது மருதய்யனுக்குத்



தன்னை அடக்கிக் கொள்ள இயலவில்லை. ''சார்!'' என்று உரக்கவே பதில் அளித்தான். உடனே நிலைமையைப் புரிந்து கொண்டவனாகக் குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''சார்... உள்ளே வாங்க...'' என்று அழைத்தான். வெளியே தலை நீட்டும் அளவுக்கு இன்னும் தைரியம் பிறக்க வில்லையாயினும், தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருந்தவனுக்கு ஒரு கப்பலே கிடைத்த மாதிரி அசாத்தியமான தெம்பு ஏற்பட்டது.

ஜனார்த்தனம் உள்ளே வந்தார். ''நினைத்தேன். அப்படியே நடந்திருக்கிறது!''

எதையும் விபரீதமாகவே அர்த்தம் செய்து கொள்ளக் கூடிய நிலையில் இருந்தானாகையால், அவன், ''என்ன சார் நினைக்கிறீங்க?'' என்று கலவரத்துடன் கேட்டான்.

ஜனார்த்தனம் சிரித்தார். ''நீ இங்கேதான் சுற்றிக்கொண்டிருப்பாயென்று நினைத்தேன்.'' குடிசைத் தரையில் உட்கார்ந்து கொண்டார் அவர். ''உன்னிடம் ஒரு நல்ல சேதி சொல்லத்தான் இப்போது வந்தேன். கேட்டால் ரொம்பச் சந்தோஷப்படுவாய்.''

மருதய்யன் எதுவும் பேசவில்லை.

''ஏன் மருதய்யா என்னவோ போலிருக்கிறாய்?'' என்று கேட்டவர், அவன் பார்வை தன்மீது பதியாமல் கலவரத்தோடு வேறிடத்தில் நிலை குத்தி நிற்பதைக் கவனித்தார். அதே திசையில் அவரும் பார்த்தபோதுதான் செங்கம்மா கிடப்பது தெரிந்தது. அவள் வெறுமே தூங்கிக் கொண்டிருக்கவில்லை என்பதும், பயங்கரமாய் என்னவோ சம்பவித்திருக்கிறது என்பதும், அதற்கு மருதய்யன்தான் காரணம் என்பதும் அவருக்கு உடனே விளங்கி விட்டது. துவளும் கால்களுக்குத் தைரிய மூட்டிக்கொண்டு இம்மி இம்மியாக எழுந்து

கொண்டார். செங்கம்மாவை அணுகினார். அவள் முகத்தருகே கையைக் கொண்டு போனபோது விரல்கள் வெடவெடத்தன. மூக்கிலும் நெஞ்சிலும் ஸ்பரிசித்துப் பார்த்தார்.

''மருது... மருதய்யா! என்னப்பா இது! என்ன காரியம் செய்து விட்டாய்?'' என்று அழுத்தமாகக் கேட்ட போதிலும், கிணற்றின் ஆழத்திலிருந்து வருகிற மாதிரி அவர் குரல் ஒலித்தது.

சுவரில் முட்டிக் கொண்டான் மருதய்யன். ''ஐயோ! குடிச்சேன். சார்! குடிச்ச வெறியிலே கொலைகாரனாகிட்டேன் சார்!''

மீண்டும் அவளுடைய கைகால்களை அசைத்துப் பார்த்தார் ஜனார்த்தனம். பயனில்லை என்று தோன்றியது. 'எத்தனை பெரிய விபரீதம்! ஈ எறும்புக்குக் கெடுதி நினைக்காதவளாச்சே இந்தப் பெண்? அன்றைக்குப் பள்ளிக்கூடத்தில், என் உயிர் போயிருக்க வேண்டிய சமயத்தில் இவளல்லவா காப்பாற்றினாள்! தங்கை என்று சொன்னாயே? ஒரு தங்கையை அண்ணன் காப்பாற்றுகிற அழகா இது!'' சிறிது சிறிதாக அவருக்குக் கோபம்கூட ஏற்படலாயிற்று.

''நான் தெரியாமல் செஞ்சிட்டேன், சார்! புத்தி கெட்டுப் பண்ணிட்டேன் சார்!'' சுவரில் மோதிக் கொண்டான் அவன். ''தங்கைண்ணு உங்க கையிலே சொன்னதெல்லாம் பொய் சார். எனக்கும் இவளுக்கும் ஒரு இது. ஆனால் நான் ஜெயில்லே இருந்தப்போ இவளுக்குக் கண்ணாலம் ஆயிட்டுது. அப்படியும் உறவை வெட்டிக்க முடியாமல் திண்டாடிட்டிருந்தோம். நான் நிதானத்திலே இல்லாத போது, அம்மா எனக்குக் கிராமத்திலே ஒரு பொண்ணு பார்த்திருக்காங்கள்ள, அந்தப் பேச்சு வந்தது. நான் என்ன சொன்னேன், இவள் என்ன சொன்னாள்னு சரியா ஞாபகம்



இல்லை. ஆத்திரமா ஒரு அறை அறைஞ்சேன் சார்... அவ்வளவுதான்...''

''சரி, இரைந்து பேசாதே,'' என்று அவனை அடக்கினார் அவர். ''இனிமேல் நடக்க வேண்டியதை அமைதியாய்க் கவனிப்போம்.''

''நடக்கிறதாவது சார் - நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு நடக்க வேண்டியதுதான்.''

''உளறாதே!'' என்று அசாதாரண உறுதியுடன் கண்டித்தார் ஜனார்த்தனம். ''போலீஸ், ஜெயில் என்ற வார்த்தையைச் சொல்லாதே. அது மட்டும் கிடையவே கிடையாது!''

அவன் அவரை வெறிக்க நோக்கினான். ''பின்னே சார்?''

சட்டென்று அவருக்கு வேறொரு எண்ணம் உதித்தது. ''ஏன் மருது, இவள் தற்கொலை செய்து கொண்டாள் என்று நினைக்கும்படி பண்ணிவிட்டால்?''

மனத்தில் அதை வாங்கிக் கொள்ளக் கொஞ்சநேரம் பிடித்தது அவனுக்கு. ''சார்... அது எப்படி சார் முடியும்?''

யோசனையுடன் தலையைத் தாழ்த்திக் கொண்டு மௌனமானார் அவர்.

என்ன அது? செங்கம்மாவின் கால் மாட்டில் கிடந்த தபால் கார்டு அவருக்குக் குறுகுறுப்பு ஏற்படுத்தியது. கையை நீட்டி எடுத்தார். ஒரு மிநிடத்துக்குள் அவர் முகம் மாறியது. ''மருது, இது செங்கம்மா எழுத்து அல்லவா?'' என்றார்.

அவன் பார்த்தான். ''ஆமாங்க. இதைப் பார்த்திட்டு நான் கிராமத்திலிருந்து புறப்பட்டு வந்ததுதாங்க இத்தனை நெருக்கடிக்கும் காரணம்...''

''இதோ, இங்கே கையெழுத்திட்டிருப்பது செங்கம்மா தானே?''

''ஆமாங்க.'' எதற்காக இப்படிப் பரபரப்படைகிறார் என்று புரியாமல் அவன் திகைத்தான்.

''க்விக்! ஒரு பென்ஸிலும் வெற்றுக் காகிதமும் இருக்கிறதா பார்! சீக்கிரம்!''

''சார்... என்ன செய்யப் போறீங்க?''

உள்ளத்துக்குள் நிகழ்ந்த போராட்டத்தை அடக்கிக் கொண்ட பிறகே அவர் பேசினார்: ''புரியவில்லையா உனக்கு? 'வாழ்க்கையிலே வெறுப்பு ஏற்பட்டுத் தற்கொலை செய்து கொண்டேன்' என்று செங்கம்மா எழுதியது மாதிரி ஒரு லெட்டர் தயார் பண்ணிவிட்டால் போதும்.''

''சார்... எனக்காக நீங்க...''

''ஆமாம், மருது என் திறமை மொத்தத்தையும் பிரயோகித்து, எப்படிப்பட்ட நிபுணன் வந்தாலும் கண்டு பிடிக்க முடியாதபடி, செங்கம்மா எழுதியது போலவே எழுதப் போகிறேன். இதுவரை அந்த வழிக்குப் போவதில்லை என்று முடிவு செய்து வைத்திருந்தேன். உண்மை. ஆனால் அதெல்லாம் இப்போது பார்த்தால் முடியாது...'' எழுந்து வந்து அவன் தோளைப் பாசத்துடன் தட்டிக் கொடுத்தார் அவர். ''மருது, இது என் உயிர் சிநேகிதனைக் காப்பாற்றுகிற சமாசாரம். உலகமெல்லாம் என்னை வெறுத்தபோது, எந்த மருது என் மீது அன்பு காட்டி, வாழ்க்கையில் ஆறுதல் ஏற்படுத்தினானோ, அந்த மருதுவைக் காப்பாற்றுவதற்காக எதுவும் செய்யலாம்.''

''சார்... வேண்டாம் சார். அப்புறம உங்க உயிருக்கே ஆபத்து வரும் சார்! முத்துரங்கமும் அவன் ஆட்களும்...''



ஜனார்த்தனம் தானாகவே ஒரு பென்ஸிலும் காகிதமும் தேடிக் கண்டு பிடித்தார். செங்கம்மாவின் கையெழுத்தைப் பார்த்துப் பார்த்து, அதே போன்ற எழுத்துக்களில் எழுதலானார்:

''போலீஸ் ஐயா சமூகத்துக்கு, செங்கம்மா தாழ்மை யுடன் தெரிவித்துக் கொள்வது: எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டதால் தற்கொலை செய்து கொள்கிறேன். என் சாவுக்கு வேறு யாரும் காரணமில்லை...''

ஆளவந்தாரின் பங்களாவில், சாத்தியிருந்த சமைய லறைக்கு வெளியே, பின்கை கட்டிய வண்ணம் குறுக்கும் நெடுக்கும் உலாவிக் கொண்டிருந்தாள் அனுபமா. இரண்டு நடைக்கு ஒரு முறை அவள் நிற்பதும் ஆட்காட்டி விரல் முட்டியால் கதவை டொக்டொக்கென்று தட்டுவதும், 'இதோ! இன்னும் ஒரே நிமிடம்!' என்று உள்ளேயிருந்து பதில் வருவதும், நாற்காலியில் அமர்ந்து ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருந்த அனுபமாவின் அத்தைக்குச் சிரிப்பை வரவழைத்தது. பழைய நோயாளிக் களை முழுவதும் அகன்று விட்டதால், செல்வத்தின் செழுமை அவள் முகத்தில் சோபை தந்திருந்தது.

''கொஞ்சம் பொறுமையாய்த்தான் இரேன் அனு,'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கையில் கதவின் தாள் நீக்கப்படும் ஒலி கேட்டது. காலால் கதவைத் திறந்து கொண்டு இரண்டு கையிலும் இரண்டு எவர்சில்வர் தட்டும் ஸ்பூனும் ஏந்தி வெளியே வந்தான் ஆளவந்தார். மூடிய அறைக்குள் காஸ் அடுப்பினருகே வெகு நேரம் நின்றிருந்த தால் ஆண்மை நிறைந்த கரங்கள் வியர்த்திருந்தன. புன்னகையுடன், ''திடீர் ரசகுல்லா. பாக்கெட் வாங்கி, குறிப்பைப் படித்து, நானே தயாரித்தது,'' என்று கூறி அவர்களிடம் நீட்டினான்.

''இரண்டு ரூபாய் கொடுத்தால் லாலா கடையில் ஒரே நிமிடத்தில் வாங்கிவிட்டுப் போகலாமே?'' என்றாள் அனுபமா.

அத்தை முகம் சுளித்து, ''பண்பாடில்லாத பெண்ணம்மா நீ,'' என்று அவளைக் கடிந்து கொண்டபின், அவன் தந்த ஸ்விட்டை ருசித்தாள். ''ரொம்ப நன்றாய்ப் பண்ணியிருக் கிறீர்கள் டாக்டர்.''

''அந்தப் பட்டம் மட்டும் வேண்டாம், அத்தை. வெறும் ஆளவந்தார் என்றே கூப்பிடுங்கள் தயவுபண்ணி,'' என்றான் அவன்.

அனுபமா குறும்புத்தனமாக ஸ்பூனைப் பல்லால் கவ்விப் பிடித்தபடியே, ''இழுநாழு ழுபாய் கொழுத்தாலும் எந்ழ லாலா கடையிலும் இழு மாதிரி கிழைக்காழு,'' என்றாள்.

''ழாங்ஸ், ரொம்ப ழாங்ஸ்,'' என்று சிரித்த ஆளவந்தார், ''அத்தை, இன்றைக்கு நல்ல நாள் தானே?'' என்றான்.

''தெரியவில்லையே? என்ன விசேஷம்?''

''புரோகிதரைக் கேட்டுவிட்டேன். இதுதான் நல்லவேளை. உங்களிடம் யாசிக்கப் போகிறேன்,'' என்றவன் அனுபமாவைப் பார்த்தான்.

அத்தை புரிந்துகொண்டாள். ''அனுபமாவைத் தவிர வேறு எது வேண்டுமானாலும் கேளுங்கள்,'' என்றாள் சீரியஸான குரலில். ஆனால் முகத்தில் படர்ந்த மகிழ்ச்சியை மறைக்க முடியவில்லை.

அவள் காலைத் தொட்டுக் கும்பிட்டான் ஆளவந்தார். ''இந்த மாதமே ஒரு முகூர்த்தம் பார்த்துவிடுங்கள் அத்தை,'' என்றவனை வியப்புடன் பார்த்தாள் அனுபமா. எப்போதும்



மிடுக்கும் தோரணையுமாக இருப்பவன் இப்போது சில நாட்களாக ஸென்ட்டிமென்ட்டலாயும் நெகிழ்ச்சியுள்ளவனு மாக மாறி விட்டது ஏன் என்று அவளுக்குத் திகைப்பு ஏற்பட்டது. காதல் ஒரு ரசவாத மூலிகை. யாரை எப்படி வேண்டுமானாலும் மாற்றும்போலிருக்கிறது.

ஹாலை நோக்கிக் கை தட்டினான் அவன். மூன்று ஆட்கள் உள்ளே வந்தார்கள். ''இவர்கள் என் முன்னாள் தோட்டக்காரனும், சமையல்காரனும். ஏனப்பா நீ யார்?'' டிரைவர் உடுப்பில் இருந்தவனைக் கேட்டான்.

''ராஜப்பா வேறிடத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டான். என்னை அனுப்பி வைத்தான் சார்,'' என்றான் அவன்.

''உன் பெயர்?''

''தங்கராசு.''

அத்தையிடம் தெரிவித்தான் ஆளவந்தார்: ''எனக்காகக் காவி வெட்டிக்கு ஆர்டர் கொடுத்த கையோடு இவர்களுக்கு வாசலைக் காட்டி விட்டிருந்தேன். ஆனால் அடுத்த மாதத்திலிருந்து மறுபடி அமர்த்தலாமென்று எண்ணம்.'' அவர்கள்பால் திரும்பி, ''புது எஜமானியம்மாள்,'' என்று அனுபமாவை அறிமுகம் செய்வித்தான். அவர்கள் கை குவித்தபோது அவள் முகத்தில் லஜ்ஜை பரவிற்று.

ஒரு கையால் ஸ்டீரிங்கைப் பிடித்துக் காரைச் செலுத்தியபடி, மறு கையை ஸீட்டின் குறுக்கே நீட்டிப் போட்டிருந்தான் ஆளவந்தார்.

அது அனுபமாவின் கழுத்திலிருந்த மெல்லிய செயினை வருடிக் கொண்டிருந்தது. அவள் அந்தக் குறுகுறுப்பை அனுபவித்த வண்ணம் தலையைச் சாய்த்து, தோளுக்கும்

கன்னத்துக்குமிடையே அவனது விரல்களை அழுத்திக் கொண்டாள்.

''அந்தக் கையை விடுவிக்காவிட்டால் ஆக்ஸிடெண்ட நிச்சயம்,'' என்று பயமுறுத்தினான் அவன்.

''மை காட்!'' என்று திடுமென்று வியப்புடன் கூவினாள் அவள். ''நீங்கள் படா கற்பனைக்காரர் என்று தெரியும். ஆனால் பொம்மை வாங்கும் அளவுக்கு...'' அவள் குரலில் வெட்கம் தொனித்தது.

''என்ன சொல்கிறாய்?'' அவள் கையைப் பார்த்தான் அவன். டாஷ் போர்டு பெட்டிக்குள் வைத்திருந்த அந்தச் சோல்ஜர் பொம்மையை - ரேகாவின் பொம்மையை - அவள் தற்செயலாகக் கண்டு எடுத்து வைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அது தன்னிடம் வந்த சந்தர்ப்பத்தைச் சொன்னபின், ''அன்றைக்கே இந்தப் பொம்மையைச் சரி செய்துவிட்டேன். நல்லவேளை, அந்த ஸ்கூலுக்குப் பக்கமாகத்தான் வந்திருக்கிறோம். அந்தக் குழந்தை ஏங்கிக்கொண்டிருக்கும், பாவம். கொடுத்துவிடலாம்,'' என்றவன் காரைத் திருப்பினான்.

ஆனால் அப்போது பள்ளிக்கூடம் விட்டு வெகு நேரமாகியிருந்தது. ரேகாவைப் பற்றி அவன் விசாரித்தபோது, வாட்ச்மேன், ''எந்தக் குழந்தையோட வீடு எங்கே இருக்குதுன்னு ஆயாவுக்குத்தான் தெரியுங்க,'' என்றான்.

''ஆயா யார்? எங்கே இருக்கிறாள்?''

''செங்கம்மாண்ணு பேர். அதோ அங்கே ரைட்டிலே திரும்பினீங்கண்ணா மூணாவது குடிசை,'' என்று சுட்டிக் காட்டினான் வாட்ச்மேன்.



# இருபத்தாறு

''அந்த வாட்ச்மேன் சொன்ன ஆயாவின் குடிசை இதுவாகத்தான் இருக்கும்,'' என்று சொன்னபடி காரை நிறுத்தினான் ஆளவந்தார்.

இறங்கவிருந்த போது அவன் தொடையில் மெல்லக் கை வைத்தாள் அனுபமா. ''ஹாரன் அடியுங்களேன். வருவார்கள். மெனக்கெட்டு இறங்கிப் போக வேண்டுமாக்கும்?''

''புரிகிறது,'' என்றான் அவன்.

''என்ன?''

''அந்த ஒரு நிமிடப் பிரிவைக்கூட நீ தாங்கிக் கொள்ளத் தயாரில்லை?'' வெட்கமும் புன்னகையும் படர்ந்த அவள் முகத்தையும், கியரில் விஷமம் செய்யும் விரல்களையும் நோக்கியபோது அவனுக்கும் அந்தச் சொர்க்கத்திலிருந்து இறங்கிச் செல்ல மனம் வரவில்லை. ஹாரனை அழுத்தினான். ஒருமுறை, இரண்டு முறை - யாரும் வரவில்லை. தெருப் புழுதியில் விளையாடிக் கொண்டிருந்த பெண் குழந்தையொன்று எழுந்து வந்து, காரின் பளபளப்பில் தன் பிரதிபிம்பத்தைப் பார்த்து மகிழ்ந்துபோய் டான்ஸ் ஆடத் தொடங்கியது.

''பார்த்துவிட்டு வருகிறேன்.'' - இறங்கினான் ஆளவந்தார்.

''சீக்கிரம்.''

துளிகூடச் சத்தத்தைக் காணோமே? இந்தக் குடிசையைத் தான் சொன்னானா அந்த வாட்ச்மேன்? நின்றான். உள்ளே யாரோ இருக்கிறார்கள். அசைவுகள் கேட்கின்றன. வேண்டுமென்றே சத்தம் காட்டாமல் இருக்கிறார்கள். ஏன்?

''சார்! நம்ம ஆளவந்தார் சார்!'' திடுப்பென்று அந்தப் பதற்றமான கூவல் வந்தது. நிமிர்ந்தவன், மருதய்யனை மட்டுமின்றி, அவர் பின்னாலே ஜனார்த்தனமும் நிற்பதைக் கண்டான். சிறையில் பிரிந்த பிறகு இப்போதுதான் ஜனார்த்தனத்தைச் சந்திக்கிறானாகையால் அவன் உள்ளம் விம்மிப் பூரித்தது. ஆனால்... யாரோ ஒரு பள்ளிக்கூட ஆயாவின் குடிசையில் இந்த இரண்டு பேருக்கும் என்ன வேலை?

அவனுடைய உற்சாகத்திலும் சந்தோஷத்திலும் பங்கு கொள்ள அவர்கள் தயாராயில்லை என்பது உடனேயே புரிந்தது. அந்த முகங்களில் ஏன் அவ்வளவு கலவரம்? எதற்காக அவ்வளவு பீதி? என்ன தப்புக் காரியம் செய்துவிட்டு இப்படிக் கையைப் பிசைந்து கொண்டு தவிக்கிறார்கள்?

வழிமறித்தாற்பேல் நின்றிருந்த இருவரையும் விலக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

இருட்டாயிருந்த போதிலும், பேச்சு மூச்சற்றுக் கட்டையாய்க் கிடக்கும் அந்தப் பெண் அவன் கண்களுக்குத் தெள்ளத் தெளிவாய்ப் புலப்பட்டாள். பார்த்த மாத்திரத்திலேயே நிலைமை புரிந்தது. அவள் நாசியைத் தொட்டான். இருதயத்தைப் பரிசோதித்தான். நாடியைப் பிடித்தான்.

உயிர் இன்னும் பிரியவில்லை என்பது அவனுடைய பழக்கப்பட்ட அறிவுக்குத் தெரிந்தது.

''முட்டாள்தனமான காரியமொன்று இங்கே நடந்துவிட்டது,'' என்றார் ஜனார்த்தனம். ''மருதய்யனின் காதலி இந்தப் பெண். வேறிடத்தில் கல்யாணமாகிவிட்டது. ஆனால் இவளுக்கு அவன்மீது மையல் போகவில்லை. அதனாலே தகராறு. இந்த முட்டாள் கொஞ்சம் முன்னால்



குடிவெறியில் இவளை ஓர் அறை அறைந்திருக்கிறான். பொட்டென்று உயிர் போய்விட்டது.''

மருதய்யன் தடாலென்று ஆளவந்தாரின் கால்களைப் பிடித்துக் கொண்டான். ''சார்! செங்கத்தைக் காப்பாத்த முடியும்னா எப்படியாச்சும் காப்பாத்திடுங்க. ஐயோ! கொலையல்லவா பண்ணிட்டேன் போலிருக்கு. என்னை ஜெயிலுக்குப் போகாதபடி தப்பிக்க வைச்சிடுங்க சார்! சத்தியமாய் இன்னொரு வாட்டி இவள் வழிக்கு நான் போக மாட்டேன். செங்கம் ஒரு பாவமும் அறியாத பெண், சார். அது நல்லபடியா உயிரோடு சந்தோஷமாய் இருக்கணுங்க.''

ஆளவந்தார் செங்கம்மாவின் கைகளை வேகமாக நீட்டியும் மடக்கியும் மஸாஜ் கொடுக்க முயன்று கொண்டிருந்தான். மற்றவர்கள் பேச்சு அவன் காதில் விழவில்லை.

''அது செத்துடுச்சுங்க சார். செத்துடுச்சுங்க,'' என்று முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டு வாய்விட்டு அழுதான் மருதய்யன். ''என் மேலே ஆசை வைச்சதைத் தவிர வேறே ஒரு தப்பும் பண்ணலீங்க அவள். தங்கமான பொண்ணுங்க. என் கையாலே நானே அவளைக் கொலை பண்ணிட்டேனே சார், கொலை பண்ணிட்டேனே!''

''சும்மா இருக்கமாட்டாய் மருது?'' என்றார் ஜனார்த்தனம்.

''சும்மா இருக்க வேண்டிய டயத்திலே இல்லாமல், இனிமேல் என்ன சார்?'' என்று தன் முகத்தில் அறைந்து கொண்டான் அவன். ''நானே போலீசுக்குப் போய் உண்மையை ஒப்புக்கிறேன், சார். விடுங்க என்னை. உயிருக்குயிராய் ஆசை வைச்ச பெண்ணைக் கொலை

செஞ்சதுக்காக எனக்கு என்ன தண்டனை வேணுமானாலும் கொடுக்கட்டும். நான் ஜெயிலுக்குப் போறேன் சார்!''

''முட்டாள்! உட்கார்!'' என்று மருதய்யனின் கையை இழுத்துப் பிடித்த அழுத்தினார் ஜனார்த்தனம். ''ஆளவந்தார்! முதலில் இவனைப் பத்திரமாய் வேறெங்காவது அழைத்துக் கொண்டு போங்கள். நான் எல்லா ஏற்பாடும் பண்ணி விட்டேன். இவன் போலீசுக்குப் போகவே தேவை யில்லை,'' என்று அவர் கூறுவதை ஆளவந்தார் கவனிக்க வில்லை. தீவிரமாக முதலுதவியிலேயே அவன் கவனம் சென்றிருந்தது...

அவர் அந்தக் காகிதத்தை எடுத்துக் காட்டினார், ''செங்கம்மா எழுதியது போலவே எழுதி, செங்கம்மா கையெழுத்துப் போடுகிற மாதிரியே போட்டிருக்கிறேன். அவள் தற்கொலை செய்து கொண்டதாக இருக்கட்டும். மருதய்யனுக்கு ஆபத்து வராது...''

ஆளவந்தார் பேசுமுன் வாசலில் நிழலாடியது.

''விருந்து சாப்பிடுகிறீர்களா என்ன? உள்ளேயே உட்கார்ந்து விட்டீர்களே?'' என்று கேட்ட வண்ணம் அனுபமா வந்தாள்.

வந்தவள் திடுக்கிட்டு நின்றாள்.

''ஒரு சின்ன நெருக்கடி, அனு. இந்தப் பெண்ணுக்கு மாரடைப்பு. காப்பாற்றியாக வேண்டும். இவர்கள் பேரில் பழி வந்துவிடக்கூடாது...'' என்று அவளுக்கு விளக்கிவிட்டுஅ மறுபடி செங்கம்மாவைப் பரிசோதித்தான் ஆளவந்தான். மூச்சு வருவதாகத் தெரியவில்லை.

இனி ஒரே கடைசி சான்ஸ், ஆஸ்பத்திரியில் சிகிச்சை கொடுத்துப் பார்ப்பதுதான்.



''விலகுங்கள். காருக்கு எடுத்துப் போகலாம்,'' என்று கூறியவன், செங்கம்மாவைத் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டான். ''இங்கேதான் பக்கத்தில் இருக்கிறது டாக்டர் பலராமின் நர்ஸிங் ஹோம். அவர் ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட். எல்லா எக்விப்மெண்ட்டும் இருக்கும்..''

'நான் இருக்கிறேன் உங்களுக்குக் கைகொடுக்க' என்று சொல்லாமல் சொல்லின அனுபமாவின் விழிகள். ''இன்றைக்கு வெள்ளிக்கிழமை. இரவு நேரம். டாக்டர் பலராம் திருவேற்காடு போயிருப்பாரே?'' என்று மட்டும் கூறினான்.

''பரவாயில்லை, அனு. நானே ட்ரீட்மெண்ட் கொடுப்பேன்.''

''நீங்கள் கைராசிக்காரர். கட்டாயம் இவள் பிழைத்துவிடுவாள்.''

அவன் அவளுடைய ஆழமான கண்களை அசைவற்றுப் பார்த்தவாறு சில வினாடிகளுக்கு மௌனமாயிருந்தான். அனு! என் அனுபமா! நீ என்னை எங்கே அனுப்புவதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நர்ஸிங்ஹோமுக்கு மட்டுமல்ல; மிஞ்சிப் போனால் சிறைச்சாலை என்று நினைத்திருப்பாய். அது மட்டுமல்ல. அதன் கடைசி எல்லையாக, எல்லாவற்றுக்கும் கடைசி எல்லையாக எது உண்டோ அதற்கு அனுப்புகிறாய். இப்போது உன்னைப் பிரிந்து போகிறவன், என்றைக்கும் உன்னிடம் திரும்பி வராமலே போகக்கூடிய அபாயம் இருப்பதை உணராதவளாக அனுப்புகிறாய். பரவாயில்லையா, அனுபமா? அவன் நெஞ்சு புலம்பியது.

நர்ஸிங்ஹோம் வாசலிலிருந்த வாட்ச்மேன், ''டாக்டர் இல்லை, சார்,'' என்று தெரிவித்தான்.

ஆளவந்தார் பதில் சொல்லவுமில்லை. காரை நிறுத்தவுமில்லை. நேரே உள்ளே செலுத்தி, கன்ஸல்டேஷன் அறைக்குப் பின்புறமிருந்த ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே நிறுத்தினான். செங்கம்மாவின் உடலைச் சுமந்தபடி, தியேட்டரின் கதவைக் காலால் உதைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். மணி ஏழு பத்து ஆகியிருந்தது. விலை மதிக்க வொண்ணாத மூன்று நிமிடங்கள் ஓடிவிட்டன.

''யாரும் குறுக்கிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போங்கள்,'' என்றாள் அனுபமா.

தியேட்டரின் கதவை உட்புறம் சாத்துகையில் வெளியே சிலர் ஓடிவருவது தெரிந்தது. செங்கம்மாவைப் படுக்கையில் கிடத்தியவன், மற்றவர்களால் தொல்லை ஏற்படாதிருக்க வேண்டி ஜன்னல்களைச் சாத்தினான். ''யாரய்யா அது? கதவைத் திற!'' என்று அவர்கள் கூப்பாடு போடுவதும் கதவைத் தடதடவென்று தட்டுவதும் அவன் செவிகளை மோதிய போதிலும் அதைப் பொருட்படுத்தவில்லை.

பார்வையை ஒரு சுழற்றுச் சுழற்றி அந்த ஆபரேஷன் தியேட்டரின் அமைப்பையும் உபகரணங்களையும் கிரகித்துக் கொண்டான். முன்பு 'டாக்டரா'கத் தொழில் செய்தபோது இரண்டொரு முறை இங்கே வந்திருந்தானாகையால், என்னென்ன செய்யவேண்டும் என்பது அவனுக்குத் தெளிவாய்ப் புரிந்தது.

மறுபடியும் ஒருமுறை செங்கம்மாவின் வாயோடு வாய் வைத்து அழுத்தமாய்ப் பலமுறை ஊதினான். மார்பை இரு கைகளாலும் அமுக்கித் தேய்த்தான். துளியும் சலனம் தெரியவில்லை. அவள் அசையாமலே கிடந்தாள்.



15624

சுவாசப் பைக்குக் காற்றைச் செலுத்தும் 'மாஸ்'கை அவள் முகத்தோடு பொருத்தினான். பச்சை நிற பலூனை வெகு வேகமாக அழுத்தி அழுத்திக் காற்றைச் செலுத்தினான். பயனில்லை. மாஸ்க்கின் மேல் பகுதியை அகற்றினான். பிராணவாயுக் குழாயையும் மாஸ்க்கையும் இணைத்து, ட்யூபைச் செங்கம்மாவின் மூக்குக் குழாய்க்குள் நுழைத்துப் பொருத்தினான். மீண்டும் பம்ப் பண்ணியபோது பிராணவாயு அவள் சுவாசப் பைக்குள் நேரடியாகச் செல்லத் தொடங்கியது. பிறகும் இருதயம் அடிப்பதாகத் தெரியவில்லை.

படுக்கையின் தலை மாட்டிலேயே பெட் ஸைட் மானிடர் இருந்தது. சாதாரண முறையில் தெரியாத இருதய துடிப்பைக்கூட அந்தக் கருவியில் பார்க்கலாம் என்று அவனுக்குத் தெரியும். மணிக் கட்டினருகிலும் முழங்காலின் கீழேயும் பரபரவென்று அதன் ட்யூப்களைப் பொருத்தினான். குமிழைத் தட்டிவிட்டுப் பார்த்தான்.

ஆஸிலாஸ்கோப்பின் அசைவுகளைக் கவனித்தான். இருதயத் துடிப்பு தாறுமாறாகவும் கோளாறாகவும் இருப்பது. நீலக் கோட்டின் குதிப்பிலும் தாவலிலும் வெளிப்பட்டது. இது ஃபிப்ரிலேஷன் கேஸ் என்று புரிந்து கொண்டான். அதாவது, மின்சார ஷாக் மூலமாகத்தான் இருதயத்தைச் சீர்படுத்த வேண்டும். இரண்டொரு நிமிடங்களுக்குள்...

வெளியே கதவைத் தட்டுவோரின் எண்ணிக்கை அதிகப்பட்டது.

படுக்கைக்குச் சற்றுத் தள்ளி டீ ஃபிப்ரிலேஷன் கன்ஸோல் இருந்தது. ஷாக் சாதனம். கப்போர்டு போன்றிருந்த அதை நகர்த்தி, படுக்கையருகே கொணர்ந்தான். கருங் கருவான வயரின் முனையில், உள்ளங்கை அகலத்துக்கு இரண்டு உலோகத் தகடு இருந்தன. ஒன்றை மார்பின்மீதும் மற்றதை விலாவிலும் பொருத்திவிட்டுக் குமிழை அழுத்தினான்.

மின்சாரம் பாய்ந்தது செங்கம்மாவின் மீது.

படுக்கையிலிருந்து தூக்கியெறியப்படுகிற மாதிரி ஒரு துள்ளுத் துள்ளி இறங்கியது அவள் உடம்பு.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் நாசி நுனி துடிப்பதையும், கொஞ்சம் கொஞ்சமாக முகத்தில் ரத்தத்தின் செம்மை படருவதையும், கொஞ்சம் கொஞ்சமாக மார்பு ஏறித்தாழ்வதையும், கொஞ்சம் கொஞ்சமாக விரல் நுனிகள் அசைவதையும் கண்டபோது, ஆயிரம் போர்க் களங்களில் வெற்றி பெற்ற வீரனைப் போல் அவன் நெஞ்சு பெருமிதத்தால் செம்மாந்தது. இந்த வெற்றிக்கான விலையாகத் தனது உயிரையே கொடுக்க நேரிடும் என்ற எண்ணம் ஒரு பக்கம் எழுந்தது; எனினும், இந்த வினாடி நேரத்து மன நிறைவுக்காக ஆயுள் மொத்தத்தையும் தாரை வார்க்கலாமே என்று சொல்லிக் கொண்டு, நெற்றியில் பொடித்திருந்த வியர்வையை ஒற்றிக்கொண்டான்.

மீண்டும் மீண்டும் குமிழ்களைத் தட்டி, மறுபடி மறுபடி மின்சாரத்தைப் பாய்ச்சினான்.

இப்போது அறைக் கதவு மிகப் பெரிதாகத் தட்டப்பட்டது. அந்தத் தட்டலில் அதிகாரமும் கண்டிப்பும் தொனித்தன.

''போலீஸ் ஹியர், மிஸ்டர் ஆளவந்தார்,'' என்ற மிடுக்கான குரல் கேட்டது. ''சட்டத்தின் பெயரால் சொல்கிறேன், திறவுங்கள் கதவை!''

ஒருமுறை செங்கம்மாவைப் பார்வையிட்டான். அவள் பிழைத்துக் கொண்டுவிட்டாள் என்பது சர்வ நிச்சயமாகப் புலப்பட்டது.

அமைதியாகக் கதவைத் திறந்தான்.



இரண்டு கைகளையும் நீட்டி, ''உங்கள் கடமையைச் செய்யலாம்,'' என்றான் காத்திருந்த இன்ஸ்பெக்டரிடம். ''அந்தப் பெண்ணுக்கு உடனே குளுகோஸ் செலுத்த வேண்டும். அசல் டாக்டருக்குச் சொல்லியனுப்புங்கள்.''

போலீஸ் அதிகாரிகளின் கூட்டத்தில், தெரிந்த முகம் மாதிரி ஒன்று தென்பட்டது... ஆம். தங்கராசு என்ற பெயருடன் டிரைவராகச் சேர்ந்தவன்... ஆக, போலீஸ் உளவாளி யொருவன் அவனைக் கண்காணித்துக் கொண்டே வந்திருக்கிறான்!

மூன்று மாத காலம் வழக்கு நடந்த பின், நீதிபதி தன் தீர்ப்பை வெளியிட்டார்.

''...மாரடைப்பினால் மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்த ஒரு பெண்ணைக் காப்பாற்றியதாகக் குற்றவாளி சொல்லிக் கொள்கிறார். அது எவ்வளவு தூரம் உண்மை என்பது நிரூபணமாகவில்லை. ஆனால் வைத்தியத் தொழிலை மேற்கொள்வதற்குரிய தகுதி பெறாத ஒரு போலி டாக்டர், ஏற்கெனவே சிறை சென்றவர், அதைத் தொடர்ந்து நடத்தத் துணிந்திருக்கிறார் என்பது பற்றியும், பிறருக்குச் சொந்தமான நர்ஸிங்ஹோமுக்குள் அத்து மீறிப் புகுந்து, அங்கிருந்த சாதனங்களைக் கண்டபடி உபயோகித்திருக்கிறார் என்பது பற்றியும் சந்தேகமே இல்லை.

''எந்த நோக்கத்துக்காகச் செய்தாலும் தப்பு தப்புதான். நல்ல நோக்கம் என்பதற்காக ஒரு தப்புக்கு இடம் கொடுத்தால், அது எங்கே போய் நிற்கும் என்று சொல்ல முடியாது. போலி டாக்டராகத் தொழில் செய்ததற்காக ஏற்கெனவே தண்டனை அனுபவித்தார் இவர். இரண்டாம் முறையும் அதே குற்றத்தைச் செய்திருப்பது மன்னிக்கக் கூடியதல்ல.''

கோர்ட்டின் கடைசிப் பெஞ்சில் உட்கார்ந்திருந்த ஜனார்த்தனமும், மருதய்யனும் ஒருவரையொருவர் பார்த்துக்

கொண்டார்கள். மருதய்யன் இரு கைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டு விம்மலை அடக்கியவாறிருந்தான்.

மடியில் கைகளைக் கோத்தவாறு தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள் அனுபமா. ஆயினும் ஓரக் கண்ணால் அடிக்கடி ஆளவந்தாரைப் பார்த்தபடி இருந்தாள்.

''ஆகவே ஓராண்டுக் காலம் கடுங்காவல் விதிக்கிறேன்,'' என்று படித்து முடித்தார் நீதிபதி.

**அ**தே சிறையின் வாசல்.

போலீஸ் வண்டி வந்து நின்றது. கையில் விலங்குடன் இறங்கினான் ஆளவந்தார். தன்னை வழியனுப்பக் காத்திருக்கும் சிறு கூட்டத்தைக் கண்டான். போலீஸ்காரர் அவனை உந்தினார் நடக்கும்படி.

சிறைக் கதவை தாண்டுமுன் அவன் ஒரு நிமிடம் நின்று திரும்பிப் பார்த்தான். ஜனார்த்தனம்... தாத்தாவின் தோளில் சாய்ந்திருந்த ரேகா... டீக்கடைக்காரனோடு ஒட்டிக்கொண்டு நிற்கும் செங்கம்மா... மருதய்யன்...

ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொல்லத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவனால் அந்த வார்த்தைகளை ஊகிக்க முடிந்தது. ஊகூம், நீ செய்தது சரியில்லை ஆளவந்தார். இந்தக் கிழவன்தான் ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டும். நீ வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியவன்... என் பொம்மையை ரிப்பேர் செய்து தந்தீங்களே, மாமா, உங்களை ஏன் ஜெயிலுக்கு அழைச்சிட்டுப் போறாங்க? ...சாமி, என் உயிரைக் காப்பாத்தினீங்க. எனக்குப் புத்தி வந்திட்டுது. இந்த மருதய்யன் பக்கம் தலை வைச்சுப் படுக்கமாட்டேன்... சார்! சார்! மறுபடி உங்களைப் பார்ப்பேனா சார்? அந்த முத்துரங்கம் உங்களை உயிரோடு விட்டு வைப்பானா சார்?...



ஆளவந்தாரின் பார்வை அனுபமாவை அடைந்ததும் நின்றது. அந்த அகன்ற ஆழமான விழிகள் ஈரத்தினால் பளபளப்பதைக் கண்டான். அழுகிறாயா அனு? ஏன்? எனக்கு என்ன நேர்ந்து விட்டது என்று அழுகிறாய்?

நானா? அழுகிறேனா? சந்தோஷத்தினால் சிரிக்கிறேன் டாக்டர். எந்தவிதக் கைம்மாறும் கருதாமல் ஓர் ஏழைக் கூலிப் பெண்ணைக் காப்பாற்ற, அதற்காகச் சிறைக்குக்கூடச் செல்ல, எத்தனை பேருக்கு துணிவு வரும்? அப்படிப்பட்ட மனத் திண்மை கொண்ட ஒரு ஆண்மகனைக் காதலித்தேன் என்கிற மன நிறைவோடு, இதே சிறை வாசலில் எத்தனை காலம் வேண்டுமானாலும் நான் காத்திருப்பேன் டாக்டர். சந்தோஷமாகப் போய் வாருங்கள்.

ஜனார்த்தனத்தின் தோளிலிருந்த குழந்தை ரேகா, கையிலிருந்த பொம்மையை வீசிக் காட்டினாள். ''மாமா! ரொம்பத் தாங்ஸ்! என்பொம்மை சரியாயிட்டுது!''

ஜனார்த்தனம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டே பேசினார்: ''ஆமாம் ரேகா. உன் பொம்மைக்குக் கை கிடைத்துவிட்டது. நாங்கள்தான் இப்போது கையில்லாமல் நிற்கிறோம்.''

ஆளவந்தார் நடந்தான். சிறைக் கதவுகள் அவன் பின்னே சாத்திக் கொண்டன.

''இத்தனைக்கும் நடுவில் ஒரு சின்ன சந்தோஷம்,'' என்றாள் அனுபமா.

''என்ன?'' என்றார் ஜனார்த்தனம்.

''வேறு வெளியூர் சிறைக்கு அனுப்பாமல் அவரை இதே சிறைக்கே அனுப்பினார்களே, அது ஒரு அதிர்ஷ்டம் இல்லை? அடிக்கடி பார்க்கலாமே?'' என்றாள் அவள்.

அவளுக்கு முத்துரங்கத்தைத் தெரியாது. அவன் உள்ளே காத்துக்கொண்டிருக்கிறான் என்பதும் தெரியாது. ஜனார்த்தனமும் மருதய்யனும் வெளிறிப் போன முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டார்கள்.

''என்ன மருது, என்ன சார் ஜனார்த்தனம், ஏன் பதில் சொல்லமாட்டேன் என்கிறீர்கள் இரண்டு பேரும்?'' என்று அனுபமா திரும்பக் கேட்டாள்.

''ஏன் பதில் சொல்ல மாட்டேங்கிறே?'' ரேகா தன் பொம்மையிடம் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

**நிறைந்தது**